THE

TAMIL TUTOR

OR

TAMIL GRAMMAR & LANGUAGE

CONTAINING
VARIOUS INFORMATION ON THE STUDY OF THE LANGUAGE, ARRANGED AND ADAPTED

FOR USE IN

Lower Secondary Classes

BY

DANIEL JESUDHAS,
Head Master, W. M. L. S. S.
KARUR.

NEW EDITION.

Price 8 Annas.
By Post 9 Annas.

TRICHINOPOLY
DR. O'SILVA'S STANDARD PRESS—CANTONMENT.

1901.

All Rights Reserved.

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
3-AUG 190
MADRA

TO

THE REVEREND

HENRY SCHAFFTER, M. A.,

Principal and Manager

C. M. COLLEGE,

TINNEVELLY

TO WHOSE SELF SACRIFICING LABOUR

TINNEVELLY IS HIGHLY INDEBTED,

THIS LITTLE BOOK

IS DEDICATED

AS A MARK OF RESPECT AND ESTEEM

BY HIS GRATEFUL PUPIL

THE AUTHOR.

the form of Questions and Answers. I have also added as an Appendix; The Lower Secondary Examination Papers from 1893 to 1900 with full answers, where necessary and directions to draw their attention to questions where they will be able to find out the answers for themselves.

My thanks are due to the authors of the following works; *viz*, Kandigie Urie; Nevavirivilakkanam; Vakkiakaranam; Vasaga Ilakkanam; Ilakkana Soodamony; Ilakkana Sinthamony; and the manuscript notes of the Author's father.

Any suggestions towards the improvement of the book will be thankfully received. Those who have tasted honey will sure bear testimony to it.

KARUR,
November 1901. D. J.

தமிழ் ஆசிரியன்

அல்லது

தமிழ்
இலக்கணமும் பாஷையும்

இதில்

லோயர் செக்கண்டெரி வகுப்பு

மாணாக்கர்களும் மற்றோர்களும்

தமிழ் பாஷையைக் கற்றறியத்தக்க பற்பல
சங்கதிகளைக் கருதி ஒழுங்[illegible]

இது

உவெஸ்லியன் மிஷன் லோயர் செக்கண்டெரி
பெண்பாடசாலையின் தலைமை உபாத்தியாயராகிய

தானியேல் ஜேசுதாஸ்

என்பவரால் சித்தம் செய்யப்பட்டது.

புது பதிப்பு.

விலை அணா 3.

தபால் கூலி அணா 1.

முகவுரைக்கற்பவை.

1. இலக்கியம் இலக்கணம் இவைகளை [illegible] சணி.

2. வடமொழி தென்மொழி யென்றுலெ ன்ன.

3. தமிழ் எத்தனை வகைப்படும்.

4. கொடுந் தமிழ் வழங்கும் நாடுகளெவை.

5. கொடுந் தமிழ் நாட்டு மொழிகளுக்கு உதாரணம் கற்பி.

6. வேறு பாஷைகளிலிருந்து தமிழ் பாஷைக் க்கு அடுகி வழங்கும வார்த்தைகளுண்டா? [illegible] ரணம்.

எழுத்ததிகாரம்.

7. எழுத்தாவதென்ன? தமிழ் பாஷையில் வழங்கும் எழுத்துகளெத்தனை? அவைகள் எப் படி பிரிக்கப்படும்.

8. மாத்திரை யாவதென்ன? அவைகளின் அளவு என்ன? அளவு கடந்து கடப்பதெப்போ?

9. அளபெடையாவதென்ன? உதாரணங் கொடு.

10. இனவெழுத்தாவது யாது? எவ்வெவ் வெழுத்து எவ்வெவ்வெழுத்துக்கு இனவெழுத் தாகும்.

11. [illegible] மென்றுலென்ன? இதற் குங் குற்றியலுகாரத்திற்கும் பேதமென்ன?

12. குற்றியலுகாரத்தின் பிரிவுகள் யாவை? அதனைப் பகுப்பதெவ்வாறு.

13. நெடிற்றொடர் குற்றியலுகரத்திற்கும் உயிர்த்தொடர் குற்றியலுகாரத்திற்கும் பேத மென்ன?

14. குற்றியலிகரமென்பது யாது?

15. போலி யென்றாலென்ன? அது எத்தனை வகைப்படும்.

16. எழுத்துச் சாரியை யென்றாலென்ன.

17. வினா வெழுத்துக்களவை? அவைகள் வினாப்பொருளை எவ்விடத்திலின்றுணர்த்தும்.

18. சுட்டெழுத்துகள் எவ்வகையாய் பொருள் கொடுக்கும்? அவைகளான உபயோகத்தில் பேதமென்ன?

19. தமிழ் பாஷையில் வழங்கும் சமஸ்கிருத எழுத்துகளெவை? அவைகளுக்குச் சரியாக எந்த தமிழ் எழுத்துகள் உபயோகிக்கப்படும்.

20. குற்றியலுகரத்தின் தொடர்களை யெழுதி அவைகளுக்கெதிரே அடியில் வரும் வார்த்தைகளைக் குறியிடு.

21. அடியில் வருவனவற்றில் பிழைகளைத் திருத்தி யெழுது.

22. பின் வரும் வாக்கியத்தில் கூடிய இடங்களில் போலிகளை யமைத்து, வாக்கியத்தைத் திருப்பி எழுது.

23. பின் வருவதில் குற்றியலுகரங்களைப் பிரித்தெழுது.

24. பின்வரும் வாக்கியங்களில் போலி நீக்கித் திருத்தியெழுது.

25. போலிகளை நீக்கெழுதி, சரியான வார்த்தைகளை வைத்துக் காட்டு.

26. தமிழ் பாஷையில் ஒரு வாக்கியத்தை எழுதுவதில் கவனிக்கவேண்டியதென்ன.

27. பின்வரும் வாக்கியங்களில் வடஎழுத்துகளை நீக்கிவிட்டு, சரியான தமிழ் எழுத்துகளை

அதனை [illegible]தில் அமைத்தெழுது.

28. அடியில் [illegible]வற்றில் பிழை[illegible]த் திருத்து.

29. அடியில் வரும் வாக்கியங்களில் சிறப் பெழுத்துகளுள்ள பதங்களை யெடுத்தெழுது.

30. பின்வருவதில் சொற்பிழைகள், எழுத் துப்பிழைகளைத் திருத்தியெழுது.

பத அத்தியாயம்.

31. பதம் என்றாலென்ன? எத்தனை வகை யாய்ப் பிரிக்கப்படும்.

32. பகுபதம் எத்தெந்த உருபுகளால் அ மைந்[illegible]? அது அமைவதெவ்வாறு?

33. [illegible]பெயர்ப்பகுபதமென்றாலென்ன? வினைப் பகுபதமெ[illegible]லென்ன?

34. பகு[illegible] யென்றாலென்ன? இ[illegible]த் தனை வகைத்து?

35. விகுதி யென்றாலென்ன? அவைகள் எத்தனை வ[illegible]க்கப்படும்.

36. இடைநிலை யென்றாலென்ன? அவை களை எப்படிப் பிரிக்கலாம்.

37. சந்தி யென்றாலென்ன?

38. விகார மென்றாலென்ன?

[illegible] [illegible]யை யென்றாலென்ன? உதாரணங் கொடு.

40. [illegible]லங்காட்டும் உருபுகளெவை.

41. உ[illegible]சர்க்கமென்றாலென்ன? சில உப சர்க்கங்களை யெழுதி உபயோகப்படுத்திக்காட்டு.

42. பின்வரும் வ[illegible]க்கியத்தில் "அ[illegible]" என்ப தற்கு முன்பாக தகுந்த [illegible]ங்களை அமைத்து பொருள் விளங்க வாக்கிய[illegible]த எழுது.

43. பின்வரும் பதங்[illegible]க்கு பல அர்த்தங்

காடு.

44. பின்வரும் பதங்களுக்கு பல அர்த்தம் வா... வாக்கியத்தில் அமைத்துக் காட்டு.

45. பின்வரும் வாக்கியங்களில் ஐதை ஐதையாய் வரும் வார்த்தைகளுக்கு அர்த்தமென்ன.

46. பல அர்த்தமுள்ள சில வார்த்தைகளைச் சொல்லு.

47. பின்வரும் தொடர்களில் கீறிட்டவார்த்தைகளுக்கு அர்த்தமென்ன.

48. பின்வரும் பதங்களுக்கு அர்த்தபேதமென்ன.

49. பின்வரும் வாக்கியங்களில் "என்" என்பதின் அர்த்தமென்ன.

50. பின்வரும் வார்த்தைகளுக்கு வேறுருபம் கற்பி.

51. பின்வரும் சமஸ்கிருத மொழிகளுக்குச் சரியான தமிழ்மொழி யெழுது.

52. ...களுக்கு எதிர் அர்த்தமுள்ள பதங்கள் எப்படி அமைக்கப்படும்.

53. "ப..." என்னும் பதம் பலபொருள் கொடுக்கும்படி உபயோகித்துக்காட்டு.

54. அடியிலுள்ள வாக்கியங்களில் வடமொழிகளுக்குத் தகுந்த தென்மொழியை யமைத்து வாக்கியத்தை யெழுது.

புணர்ச்சி யத்தியாயம்

55. புணர்ச்சியாவதென்ன? அது எத்தனை வகைப்படும். விஸ்தரி.

56. வேற்றுமைப் புணர்ச்சியாவதென்ன.

57. அல்வழிப் புணர்ச்சியாவது யாது.

58. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி இவைகளில் வரும் தொகைநிலை தொகாநிலை யாது.

59. நிலை மொழியீறும் வருமொழி முதலும் உயிராயிருக்குமாயின் எவ்வாறு புணரும்?

60. நிலை மொழி ஈறு உயிரெழுத்தாயும், வருமொழி முதல் மெய்யெழுத்தாயு மிருந்தால், எப்படிப் புணரும்.

61. நிலைமொழி ஈறு மெய்யெழுத்தாயும், வருமொழி முதல் மெய்யெழுத்தாயுமிருந்தால், எவ்வாறு புணரும்.

62. நிலைமொழி ஈறு மெய்யெழுத்தாயும், வருமொழி முதல் உயிரெழுத்தாயு மிருந்தால், எவ்வாறு புணரும்.

63. வடமொழிச் சந்தியாவதென்ன.

64. பின்வருபவைகளைப் புணர்த்தி விதி கூறு.

(12, பலவாறு புணரும் வார்த்தைகள்.)

65. பின்வருபவைகளை 2 விதமாய்ப் பிரிக்கக் கூடும். எப்படிப் பொருளென்ன?

(10, பலவாறாக புணர்ச்சி விதிக்கு ஒவ்வா பிரிக்கக்கூடிய வார்த்தைகள்.)

66. மேலே காட்டிய [illegible] ஈறு நிலைமொழிகளோடு வருமொழிகளை புணர்த்தி, விதிகூறு.

(15 தொடர்கள்.)

67. பின் வரும் வார்த்தைகளைப் பிரித்து, அவைகளின் அர்த்தத்துக்கும், அவ்வார்த்தைகளின் பகுபத உருபுகளின் அர்த்தத்துக்கும், பேதமுண்டு என்று காட்டு.

68. பின்வருபவைகளைப் பிரித்துப் புணர்ச்சி விதி கூறு.

69. பின் வருபவைகளைச் சேர்த்து விதிகூறு.

70. பின் வருவதிலிருக்கும் தொகைகளை எடுத்தெழுதி, இன்னின்ன தொகையென்று [illegible]

றிப்பிட்டு விரித்துக்காட்டு.

சொல்லத்தியாயம்.

71. சொல்லாவதென்ன? அது எத்தனை வகைத்து.

72. தனிமொழி, தொடர்மொழி, பொது மொழி யென்றாலென்ன.

73. சொற்கள் வேறெந்த வகுப்பினதாயுமிருக்கிறது. அவைகளை விரித்துரி.

74. வழக்காவதென்ன? அது, எத்தனை வகைப்படும்? என்னென்ன பொருளை அமைத்து வரும்.

75. அடியிற்கண்ட திசைச் சொற்களுக்குச் சரியான செந்தமிழ் சொற்களெவை.

76. இரட்டைச் சொல்லுக்கும் அடுக்குத் தொடருக்கும் பேதமென்ன.

77. சில மிருகங்கள் பறவைகளின் சப்தத்தை குறிக்கும் மொழிகளை உனக்குத் தெரிந்தவாறு எழுது.

பெயரத்தியாயம்.

78. பெயர்ச் சொற்கள் எத்தனை பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை லட்சணி.

79. தொழிற் பெயர் எத்தனை பிரிவுடைத்து அவைகளின் விகுதி யாது.

80. பண்புப்பெயர் எத்தனை வகைத்து? அதின் விகுதி யாது.

81. சுட்டுப்பெயர் எத்தனை வகைப்படும்.

82. வினாப்பெயர் எவ்வாறு வரும்.

83. பெயர்ச்சொல்லில் எத்தனை காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

84. திணை யாவதென்ன. அதின் கூறுபாடு என்ன?

85. பாலென்றாலென்ன? எத்தனை? எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கிறது.

86. இடமாவதென்ன? அதனைப் பிரித்துக் காட்டு.

87. வேற்றுமையாவதென்ன? அவைகள் எத்தனை வகைப்படும்? அவைகளின் பேர், உருபு, சொல்லுருபு, அவைகளை ஏற்கும் வார்த்தைகள் வருமிடம், கொடுக்கும் பொருளென்ன?

88. பின்வருபனவற்றிற்கு பேதமென்ன?

89. முடிபிலை என்றாலென்ன? என்னென்ன வேற்றுமைகளை யேற்றபெயர்கள் எதெதைக் கொண்டு முடியும்.

90. ஆண்பாற் பெயர்ச் சொற்கள் பெண்பாற் பெயர்ச் சொற்களாவதெப்படி.

91. அடியில் வருவதில் பெயர்ச் சொற்களை எடுத்தெழுதி வேற்றுமை கற்பி.

92. "மகன்" "தந்தை" இவ்விரண்டையும் எட்டு வேற்றுமைகளிலும் உபயோகப்படுத்தி ஒருவாக்கியம் எழுது.

93. மேல் வாக்கியங்களில் "அக்காளை" "மலை" "கடலை" இவைகளை முதலாம்; 2-ம்; வேற்றுமைகளில் உபயோகப்படுத்தி பொருள் பேதத்தைக்காட்டு.

94. இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவான பெயர்களெவை.

95. எட்டாம் வேற்றுமையில் கவனிக்கத் தக்கவைகளெவை?

96. மேலே கண்டதில் பெயர்ச்சொற்களுக்கு அதனதன் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து, பொருள் விளங்க எழுது.

97. பன்மை விகுதிகளாகிய "அர்", "கள்";

இவைகளை எப்படி உபயோகிப்பாய்.

98. நான் என்றதின் பன்மைகளாகிய "நாம்" "நாங்கள்" "எம்" "எங்கள்" இவைகளின் உபயோகத்தில் பேதமென்ன.

99. தொழில் பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் பேதமென்ன.

100. பின்வருபவைகளை முறையே 6-ம், 4-ம், 8-ம், 2-ம், 5-ம், வேற்றுமைகளில எல்லா உருபும் ஏற்க வேற்றுமைப்படுத்து.

101. பின்வரும் பகுதிகளிலிருந்து பெயர்ச் சொற்கள் கற்பி.

102. ஙகர ஈற்றுப்பெயர்கள் 8-ம் வேற்றுமையை ஏற்கும்போது எவ்வாறு மாறும்.

103. பெயரைக்கொண்டு முடியும் சொற்களெவை?

104. துணைக்கருவி, உடனிகழ்ச்சி, பலவினீட்டத்தற்கிழமை, என்னும் பொருட்களில் வரும் உருபுகளெவை.

105. என்னென்ன சொற்கள் எழுவாயாக உபயோகிக்கப்படும்.

106. பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது என்னென்ன மாறுதலடையும்.

107. எட்டாம் வேற்றுமை உருபு ஏற்காத பெயர்களெவை?

108. ஒரு வேற்றுமைச் சொற்கள் வேறு வேற்றுமைகளின் உருபை ஏற்குமோ? காரணங்கொடு.

109. உருபு மயக்கமென்றாலென்ன? அதனைப் பொருள்படுத்தி வேற்றுமை கூறுவதெப்படி.

110. பொருள் மயக்கமென்றாலென்ன?

உதாரணத்தால் விஸ்தரித்துக்காட்டு.

111. இலக்கணை யாவதென்ன?

112. பின்வரும் தொழில் செய்வோரை எப்படி அழைப்பாய்.

113. பெயர்ச் சொற்களுக்கு இலக்கணம் கூறுவதெப்படி.

114. "கை" யென்ற ஒருமொழிப் பெயர் வேறு பதங்களுடன் சேர்ந்துவந்தால் எவ்வாறு பொருள்படும்.

115. பின்வரும் பெயர்களுக்கு பொருள் கூறி அப்பொருள் விளங்க வாக்கியத்திலமைத் துக்காட்டு.

116. பின்வரும் வாக்கியங்களில் பெயர்ச் சொற்களுக்கு வேற்றுமை கூறு.

117. அடைமொழி யென்றாலென்ன?

118. எழுவாய்க்கு அடைமொழிகளாகவ ரும் சொற்களெவை.

119. பின்வரும் பெயர்ச் சொற்றொடர்க ளுக்கு அர்த்தபேதமென்ன.

120. அடியில் வருவன சரியா? நியாயஞ் சொல்லு.

121. பின்வருவதில் வேற்றுமைகளைப் பொருள் பேதமில்லாமல் மாற்றி யெழுது.

122. பின்வருவதைத்திருத்தி நியாயங்கூறு.

123. பகுதிகளிலிருந்து பெயர்ச்சொல் கற்பி.

124. அடியில் வருவது சரியா? பிழையா னால் திருத்து? ஒவ்வொன்றுக்கும் நியாயஞ் சொல்லு.

வினையத்தியாயம்.

125. வினைச்சொல்லாவதென்ன?

126. வினைச்சொல்லில் எத்தனை காலங்

களை அறியவேண்டும்.

127. வினைச்சொற்கள் எத்தனை பாகமாகப் பிரிக்கப்படும்.

128. உனக்குத் தெரிந்தவாறு வினைகளை யெழுதி லட்சணி.

129. வினைச்சொல்லில் எத்தனை காரியங் களைக் கவனிக்கவேண்டும்.

130. பகுதி, விகுதி, சூவிடம், ஐம்பால், ஏவல், வியங்கோள் தொழிற் பெயர், எதிர்ம றை, இவைகளைப்பற்றி உனக்கு என்னதெரியும்.

131. முக்காலங்களெவை.

132. காலங்காட்டும் இடைநிலைகளையும் விகுதிகளையும் குறிப்பிடு.

133. மூன்றுகாலங்களில் ஏதேனும் ஒன்று தன் இயல்பான காலத்தைவிட்டு வேறு காலத் தையும் காட்டுமோ ?

134. எச்சங்களெவை ? அவைகளைப் பற்றி உனக்குத் தெரிந்ததை விபரமாய் கூறு.

135. எச்சமென்றாலென்ன ? தமிழ் பா ஷையில் எத்தனை வகையான எச்சம் உண்டு. அதை லட்சணி. உதாரணங்கொடு.

136. எதிர்மறை குறிப்புப்பெயரெச்சமும் வினையெச்சமும் எவ்வாறு வரும் ?

137. தெரிநிலைவினை, செய்வினை, இவைக ளின் பிரிவு என்ன ?

138. தன்வினை பிறவினையாவதெப்படி ?

139. செய்வினை செயப்பாட்டு வினையாக மாறுவதெப்படி.

140. விதிவினை மறைவினையாவதெப்படி ?

141. செயப்படுபொருள் குன்றியவினைகள் செயப்படுபொருளை ஏற்குமோ ?

142. ஒரு எழுவாய் இரண்டு அல்லது பல பயனிலைகளைக் கொண்டு முடிக்கால் எவ்வாறும்.

143. பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு எவ்வாறு முடியும்.

144. முற்றுவினைக்கும், முற்றெச்சத்துக்கும், பேதமென்ன ?

145. இடைபிரவரல் என்றலென்ன.

146. ஏவல் வினைமுற்றுக்கும், முன்னிலை வினைமுற்றுக்கும், பேதமென்ன.

147. வினையைக்கொண்டு முடியும் சொற்களெவை.

148. பயனிலைக்கு அடைமொழிகளாக வரும் சொற்களெவை.

149. (—) பிறவினைப் பகுதியாக்கு.

150. (—) செயப்பாட்டு வினைப்பகுதிகளாக்கு.

151. இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவான வினைகளெவை?

152. (—) அர்த்த பேதமென்ன ?

153. அடியிலவரும் வினாக்கள் பொருள் வேறுபடத்தக்கான விடைக்கு யேற்குமெனக் காட்டு.

154. பின்வருபனவுக்கு எழுவாய், பயனிலை, கற்பி.

155. வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், இவ்வகளுக்கு எப்படி இலக்கணம் கூறலாம்.

156. (—) இவைகளுக்கு இறந்த கால பெயரெச்சம், எதிர்கால வினையெச்சம், நிகழ்கால வியங்கோள் வினைமுற்று எழுது.

157. (—) எழுவாய் பயனிலை, இன்னதெனக் காட்டு.

158. (—) இப்பகுதிகளைக்கொண்டு பிறக்கும் வினைமுற்றுகளை, உடன்பாட்டிலும் எதிர்மறையிலும், இருதிணை ஐம்பால் மூவிடம் முக்காலம் துலங்க எழுது.

159. ஏதேது வினைப்பகுதியினின்று பிறக்கும்.

160. வியங்கோள்வினை முற்றுகள் ஏதேது விகுதிகளை ஏற்கும்.

161. வினையெச்சங்கள் முக்காலத்துக்கும் பொதுவாய் வருமோ ?

162. உம்மைத்தொகைக்கும், உம்மையெச்சத்துக்கும், பேதமென்ன ?

163. "வெல்" என்னும் பகுதியடியாய்ப்பின் வருவதைக்கற்பி.

இடையத்தியாயம்.

164. இடைச்சொல்லாவதென்ன ?

165. ஏதேது இடைச்சொற்கள்.

166. இடைச்சொற்கள் என்னென்ன பொருள்களில் வரும்.

167. தத்தம் பொருளை உணர்த்தும் இடைச்சொற்களெவை.

168. ஆகாரம், எத்தனை பொருளில்வரும்.?

169. ஏகாரம், எத்தனை பொருளில் வரும்.?

170. ஓகாரம், எத்தனை பொருளில் வரும்.?

171. உம், எத்தனை பொருளில்வரும்.?

172. என, எத்தனை பொருளில் வரும்.?

173. என்று, எத்தனை பொருளில் வரும்.?

174. மன், எத்தனை பொருளைத் தரும்.

175. மற்று, எத்தனை பொருளை யுணர்த்தும்.

176. கொல், எத்தனை பொருளைத் தரும்.

177. பற்பல பொருட்களில் வரும் இடைச்

சொற்களெவை.?

178. பின்வருவதால் அறியப்படுவதென்ன?

179. பின் வருபவைகளுக்குப் பேதமென்ன?

180. இடைச் சொற்களுக்கு இலக்கணம் எப்படிக் கூறுவாய்.

உரிச்சொல்லத்தியாயம்.

181. உரிச்சொல்லாவதென்ன ?

182. உரிச்சொல்லுக்கும், பண்புப் பெய ருக்கும், பண்புத்தொகைக்கும் பேதமென்ன ?

183. உரிச்சொல் எத்தனை வகைப்படும்.?

184. பெயருரிகள் எவ்வாறுவரும். ?

185. வினையுரிகள் எவ்வாறு வரும்.?

186. உரிச்சொல் எவ்வாறு நின்று பொருட் பட[illegible]

வாக்கிய அத்தியாயம்.

187. சொற்கள் எவ்வாறுதொடர்ந்துநிற்கு[illegible]?

188. வாக்கியமென்றாலென்ன ?

189. வாக்கியங்கள் எத்தனை வகைப்படும்.? உதாரணங்கொடு.

190. தனிவாக்கியங்கள் எதெது பொருட் களை உணர்த்தும்.

191. வசனக் கிரமம் எவ்வாறு.?

192. எழுவாய், பயனிலை, செயப்படுபொ ருள் என்றாலென்ன ? அவைகளை ஒருவாக்கி[illegible] த்தில் கண்டு பிடிப்பதெவ்வாறு.

193. எழுவாய் என்னென்ன விஷயங்க[illegible]ல் பயனிலையோடு இசைந்து வரும்.

194. விரிவுதல் எத்தனை வகைப்[illegible]ம்.

195. வி[illegible]டையென்றாலென்ன ? எத்தனை வகை[illegible]ய் பொருள் உணர்த்தும்.

196. வ[illegible]யென்றாலென்ன? எப்போ[illegible] அ

வைகள் வழுவமைதியாகும்.

197. மரபு ஆவதென்ன? உதாரணங்கொடு.

198. பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் பிழைகளைத் திருத்தி நியாயங் கற்பி.

199. பின்வருபவைகளைப் பெயராகவும், வினையாகவும் உன் வாக்கியங்களில் உபயோகித்துக்காட்டு.

200. பின்வரும் வாக்கியங்களில் "உம்" இதை எடுத்துப்போட்டு பொருள் கெடாமல் வாக்கியத்தை திரும்ப எழுது.

201. அடியில் வரும் வாக்கியங்களில் கோடிட்டவைகளுக்குப் பதிலாக அதின் எதிர்மொழியை யமைத்து பொருள் கெடாதபடி எழுது.

202. அடியில்வரும் வாக்கியங்களில் ஒவ்வொரு சொல்லுக்கும் சொல்விலக்கணங் கூறி முடிப்பு எழுது.

203. அடியில்வரும் வாக்கியங்களைத் தக்க வினைமுற்றால் முடிக்க.

204. அடியில்வரும் வாக்கியங்களிலுள்ள எதிர்மறை வினைமுற்றை உடன்பாடாக்கி பொருள் கெடாமல் எழுது.

205. அடியில் வருவதில், செய்வினை வாக்கியங்களை செயப்பாட்டுவினை வாக்கியங்களாகவும்; செயப்பாட்டுவினை வாக்கியங்களை செய்வினை வாக்கியங்களாகவும் மாற்றி யெழுது.

206. அடியில்வரும் வாக்கியங்கள் சரியா? இல்லையானால் திருத்து. ஒவ்வொன்றுக்கும் நியாயங் கற்பி.

207. பின்வரும் வாக்கியங்களில் மறைந்து விளங்கும் வேறொரு சங்கதி என்ன?

208. (1—2) இவ்விரண்டிற்கும் பேதமென்ன.

209. அடியில் வருவது மறைபொருளாகக் காட்டுவதென்ன.

210. (—) இவைகளைத் தகுந்தபடி ஒவ்வொன்றை ஒவ்வொரு வாக்கியத்தில் அர்த்தம் பொருந்த அமைத்துக்காட்டு.

211. தன்வினை வாசகத்தைப் பிறவினை வாசகமாக எழுது.

212. ஒரு எழுவாய், ஒரு செயப்படுபொருள், 2 பெயருரி, ஒரு வினைமுற்று, ஒரு வினையுரி, ஒரு பெயரெச்சம், ஒரு வினையெச்சம், ஒரு இடைச்சொல் வர ஒரு வாக்கியம் கற்பி.

213. (—) இவ்வார்த்தைகளைக் கொண்டு ஒரு வாக்கியம் அமைத்துக்காட்டு.

214. ஓரே மொழியால் தெரிவிக்கக்கூடிய பலதொடர்களை உனக்குத்தெரிந்தவாறு எழுது.

215. (—) இவைகளின் பொருள் நன்றாய்ப் பொருந்தும்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்திலமைத்துக் காட்டு.

216. (—) இவ் வாக்கியத்தில் ஒவ்வொன்றும் என்ன சொல்லென்று கூறி முடிபிலக்கணம் சொல்லு.

217. அடியில் வருவதை ஓரே வாக்கியமாக எழுது.

218. அடியில் வருவதை ஒன்றாகச் சேர்த்தெழுது.

219. பின் வருவதைக்கொண்டு ஒரு தொடர் வாக்கியமெழுது.

220. (—) பல வாக்கியங்களாகப் பிரித்துக் காட்டு.

221. பின் வருவதை பல தனிவாக்கியங்களாகப் பிரி.

222. அடியில் கேட்டதற்கு விடைகூறு.

223. (—) இதில் "கொண்டாட்டம்" என்பதை அடியில் கண்டவாறு மாற்று.

224. (—) இந்த வாக்கியத்தை அடியில் கேட்டபடி பலவாறாக மாற்று.

225. (—) இதில் "ரத்தினமணி" என்பது பல பொருள் கொடுக்க வாக்கியங்கள் எழுது.

226. (—)கேட்டிருக்கிற பிரகாரம் மாற்று.

227. (—) கேட்ட கேள்விகளுக்கு ஜவாப் எழுது.

228. (—) அடியில் கேட்டபடி மாற்றிக்கூறு.

229. (—) கேட்ட கேள்விகளுக்குத் தக்கதாய் மாற்றி விடைகூறு.

230. (—) பின்வருமாறு திருப்பி எழுது.

231. கோடிட்ட இடங்களில் தகுந்த சொல் வைத்து வாக்கியத்தைப் பூர்த்திப் படுத்து.

232. கீறிட்ட இடங்களில் தகுந்த சொல் வைக்க?

233. அடியில் வரும் வாக்கியங்களில் கோடு கிழிக்கப்பட்ட இடங்களில் தகுந்த சொல் வைத்து பூர்த்தி செய்.

234. (—) அடியில் வினவியபடி விடையெழுது.

235. உருவகமாவதென்ன?

236. குறிப்புச் சொற்கள் எந்தெந்த பொருட்களைக் கொடுக்கும் பிரிவுளது. அவைகளை விஸ்தரி.

237. பல பொருட்களைக் கொடுக்கும் சொற்களுக்கு அவ்வவ்விடத்தில் தகுபொருள் கொடுக்க கண்டுபிடிப்பதெவ்வாறு.

238. உபமானம், உபமேயம் என்றுலென்ன.

239. ஒரு வாக்கியத்தில் முற்றும்மை என்ன வகையான பொருள்களுக்கு உபயோகப்படும்.

240. சொற்கள் சேர்ந்து நிற்கும்போது ஏற்றயல் மாறுவதுக்கு உதாரணங்கொடு.

241. பின் வரும் செய்யுள்களை வாசக ரூபமாய் எழுது.

242. தமிழ் பாஷையில் வழங்கும் நிறுத்தல் குறிகளெவை.

243. பின்வரும் வாக்கியங்களில் வினைமுற்றை எதிர்மறையாக மாற்றி வாக்கியத்தை திரும்ப எழுது.

244. பின்வருவதின் பொருளை விரித்து எழுது.

245. அந்வயமாவதென்ன. பின்வரும் செய்யுள்களை அந்வயப்படுத்து.

—○o○—

THE TAMIL TUTOR.

1. இலக்கியம், இலக்கணம், இவைகளை வட்சணி.

வி. இலக்கியம், மனிதர் தமது கருத்தை ஒரு வார்த்தையினாலாவது பல வார்த்தைகளினாலாவது வெளிப்படுத்த உபயோகிக்கப்படும் வார்த்தைகளின் தொகுதியே.

(இதற்கு பாஷை என்பது மறுபேர்.)

இலக்கணம். மனிதர் தமது கருத்தை வெளியிடுவதில், வாசகத்திலாவது பாட்டுகளிலாவது பிழைபற எழுதவும் பேசவும் உபயோகிக்கப்படுகிற விதிகளடங்கிய நூலே.

2. வடமொழி, தென்மொழி, யென்றுலென்ன.

வி. வடமொழி. இந்தியாவுக்கு ஆதியில் வந்து குடியேறினவர்களாகிய ஆரியவம்சத்தாரின் பாஷையே.

(இதற்கு ஆரியம் என்றும், சமஸ்கிருதம் என்றும், பேர்.)

தென்மொழி. இந்தியாவின் தென்கடைசியிலுள்ள ஜனங்களால் பேசப்படும் தமிழ் பாஷையே.

(இதற்கு பாண்டிய நாட்டில் வழங்குவதால் பாண்டிமொழி யென்றும்;—இனிமையான வார்த்தைகளடங்கிய பாஷையாதலால் தேன்மொழி யென்றும்;—அகஸ்தியமாமுனிவர் பொதியமாமலையிலிருந்து அச்சரங் கற்பித்து சீர்திருத்தினபடியால் பொதியமொழி என்றும் பேர்.)

3. தமிழ் எத்தனை வகைப்படும்.

செந்தமிழ், கொடுந்தமிழ், என இருவகைப்படும்.

செந்தமிழ். இலக்கிய இலக்கணங்களுக்கிசைவாய் பாண்டிய நாட்டு மனிதரால் வழங்கப்படும் தமிழே.

(உ-ம்) பசு, தாய், தந்தை.

கொடுந்தமிழ். செந்தமிழ் நாடு ஒழிய, மற்றைய தமிழ் பாஷை வழங்கும் நாடுகளில் வழங்கியும், தமிழுக்கயல் பாஷைகளான தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகளிலிருந்து தமிழ் பாஷைக்கு அருகி வந்ததுமான வார்த்தைகளின் தொகுதியே.

(உ-ம்) பெற்றம், தள்ளை, இளார்.

4. கொடுந்தமிழ் வழங்கும் நாடுகளெவை,

1. தென்பாண்டி.
2. குட்டம்.
3. குடம்.
4. கற்கா.
5. வேணுடு.
6. பூழி.
7. அருவார்நாடு.
8. அருவாவடதலை.
9. சீதநாடு.
10. மலைநாடு.
11. புனல்நாடு.
12. சிங்களநாடு.
13. கொங்கநாடு.

5. கொடுந்தமிழ் நாட்டுமொழிகளுக்கு உதாரணம் கற்பி.

செந்தமிழ்.	கொடுந்தமிழ்.	கொடுந்தமிழ்நாடு.
பசு	பெற்றம்	தென்பாண்டி.
தாய்	தள்ளை	குட்டம்.
தந்தை	அச்சன்	குடம்.
வஞ்சகர்	கையர்	கற்கா.
தோட்டம்	இளார்	வேணுடு.
சிறுகுளம்	பாழி	பூழி.
வயல்	[illegible]	அருவாநாடு.
புளி	[illegible]கின்	அருவாவடதலை.
சிகேகிதன்	எலுவன்	சீதநாடு.
தண்ணீர்	கெள்ளம்	மலைநாடு.

செந்தமிழ்.	கொடுந்தமிழ்.	கொடுந்தமிழ் நாடு.
அம்மான்	அம்மாஞ்சி	புனல்நாடு.
ஐயோ	அந்தோ	சிங்களநாடு.
தாய்.	ஆயி	கொங்கநாடு.

6. வேறு பாஷைகளிலிருந்து தமிழ் பாஷைக்கு அருகி வழங்கும் வார்த்தைகளுண்டா? எங்ஙனம்.

வி. உரிய பாஷை.	மருகிய வார்த்தை.	மருகி தமிழில் வழங்குவது.
ஆரியம்	சம்பகம்	சண்பகம்.
,,	ஆத்மா	ஆன்மா.
,,	தர்மம்	[illegible]
,,	அஸ்தம்	அத்தம்.
,,	சப்தம்	சத்தம்.
,,	புஸ்தகம்	புத்தகம்.
,,	சக்தி	சத்தி.
பாரசீகம்	பந்தர்	பந்து.
பங்காளி	ச்சாத்	சவுத்.
ஆங்கிலியம்	Advance Station	அட்டுவானிஸ் ஸ்டேஷன்.
அரபி	ஸலாம்	சலாம்.
தெலுங்கு	பாண்டில்	எருது.
துளுவம்	கொக்கு	மாமரம்.

I. எழுத்தத்தியாயம்.

7. எழுத்தாவதென்ன, தமிழ் பாஷையில் வழங்கும் எழுத்துகளெத்தனை. அவைகள் எப்படிப் பிரிக்கப்படும்.

யாதாமொரு தனி சப்தத்தைக் குறிப்பிட வழங்கும் வரிவடிவமே எழுத்து.

தமிழுக்குரிய சிறப்பெழுத்து	...	5
தமிழுக்கும் ஆரியத்துக்குமுரிய பொது எழுத்து	...	242
ஆரியத்துக்கே உரியது.	...	5
		252
ஆக எழுத்துக்கள்	...	252

தமிழ் பாஷையின் எழுத்துகள்.

a. உயிரெழுத்து 12. அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ.

b. மெய்யெழுத்து 18. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்.

c. ஆய்தம் 1. ஃ

d. உயிர்மெய்யெழுத்து 216. க, முதல் னௌ, முடிய உள்ளது.

e. வட எழுத்து 5. ஸ, ஜ, ஷ, க்ஷ, ஹ.

இவைகளில்

உயிரெழுத்து

1. தமிழுக்குரிய சிறப்பெழுத்து 2. எ, ஒ.
2. குற்றெழுத்து 5. அ, இ, உ, எ, ஒ.
3. நெட்டெழுத்து 7. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ.
4. சுட்டெழுத்து 3. அ, இ, உ.
5. வினாவெழுத்து 4. ஆ, எ, ஏ, ஓ.
6. போலி எழுத்து 2. ஐ, ஔ.

மெய்யெழுத்து.

1. தமிழுக்குரிய சிறப்பு 3. ற், ழ், ன்.
2. வல்லெழுத்து 6. க், ச், ட், த், ப், ற்.
3. மெல்லெழுத்து 6. ங், ஞ், ண், ந், ம், ன்.
4. இடையெழுத்து 6. ய், ர், ல், வ், ழ், ள்.

5. போலி எழுத்து 5. ச், ஞ், ர், ள், ன்.

உயிர்மெய்யெழுத்து.

1. உயிர்மெய் க, முதல் னௌ ஈறாகிய 216.
2. வினாவெழுத்து 1. யா.

8. மாத்திரையாவதென்ன? அவைகளின் அளவு என்ன? அளவு கடந்து நடப்பதெப்போ?

வி. கண்ணிமைப் பொழுதும் கைநொடிப் பொழுதும் மாத்திரையாம்.

அளவு. *a*. மெய்யெழுத்துக்கும், குற்றியலுகரத்துக்கும், குற்றியலிகரத்துக்கும் ஆய்தத்துக்கும், தனித்தனியே அரை மாத்திரை.

b. உயிரிலும் உயிர்மெய்யிலும், குற்றெழுத்துக்குத் தனித்தனி ஒரு மாத்திரை.

c. உயிரிலும் உயிர்மெய்யிலும் நெட்டெழுத்துக்குத் தனித்தனி இரண்டு மாத்திரை.

d. உயிரளபெடைக்கு மூன்று மாத்திரை.

e. ஒற்றளபெடைக்கு ஒரு மாத்திரை.

அளவுகடந்து நடத்தல். *a*, பண்டமாற்றிலும், கூப்பிடுதலிலும், செய்யுளிசையிலும், புலம்புவதிலும், உயிரும், மெய்யும், உயிர்மெய்யும், தங்கள் அளவைக் கடந்து ஒலிக்கும்.

b. (1) ஐகார குறுக்கத்துக்கும், ஔகார குறுக்கத்துக்கும் ஒரு மாத்திரை.

(2) குறுகிய சப்தமுடைய மகரத்துக்கும், குறுகிய சப்தமுடைய ஆய்தத்துக்கும் தனித்தனி கால் மாத்திரை.

9. அளபெடையாவதென்ன? உதாரணங் கொடு.

செய்யுளில் ஓசை குறைந்த இடங்களில் நெட்டெழுத்துக்கும், ஒற்றெழுத்துக்கும் தங்கள்

மாத்திரையின் அளவு போதாததால் நீண்டு ஒலிக்கும். இது முதலிலும், இடையிலும், கடையிலும் சம்பவிக்கும். நெட்டெழுத்துநீண்டு ஒலித்தால் உயிர் அளபெடையென்றும், மெய்யெழுத்து நீண்டு ஒலித்தால் ஒற்றளபெடையென்றும் வழங்கும்.

(உ-ம்.) உயிரளபெடை. பாஅரினில் பெண்களைக் கொள்வர்—முதலில்.

கோநோற்றிக் கொள்கை மூதாக்குறைவு—இடையில்

நற்றாள் தொழாஅர் எனின்—கடையில்.

இவைகளில் முறையே நெட்டெழுத்து நீண்டு தனக்கினமான எழுத்தை சேர்த்து நிற்கிறது.

(இவைகளுக்கு தனித்தனியே 3 மாத்திரை.)

ஒற்றளபெடை—சங்ங்கு வெண்டாயளாக்கு தந்தை தாய் இரவு தண்ணீர்.

(இதில் ஒற்றெழுத்துக்கு ஒரு மாத்திரை.)

10. இன எழுத்தாவது யாது? எவ்வெழுத்து எவ்வெழுத்துக்கு இன எழுத்து ஆகும்.

வி. எழுத்துகள் பிறப்பிடத்திலும், பொருளிலும், அல்லது வடிவிலும், ஒன்றுக்கொன்று ஏகதேசம் சம்பந்தமாய் இரண்டு இரண்டாய் சேர்ந்து நடக்கிறது. அப்படிப்பட்டவைகள் இனவெழுத்துக்கள்.

(உ-ம்) அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ, இ; ஒ, ஓ; ஔ, உ: உயிரெழுத்துக்கள்.
க, ங; ச, ஞ; ட, ண; த, ந; ப, ம; ய, ர; ல, வ; ழ, ள; ற, ன: உயிர் மெய்யெழுத்துகள்.

11. குற்றியலுகரமென்றாலென்ன? இதற்கும் முற்றியலுகரத்துக்கும் பேதமென்ன?

வி. ஒரு குற்றெழுத்தாயாவது; இரண்டு

குற்றெழுத்துகள் சேர்ந்தாவது வார்த்தைகளின் கடைசியில க், ச், ட், த், ப், ற், என்ற 6 வல்லின ஒற்றுக்களின்மேல் வரும் உகரம் குற்றியலுகர மென்னப்படும்.

(உ-ம்) நாகு, சாடு, விருந்து, கொக்கு, சார்பு சோறு.

பேதம். (1) (கு-உ) தனித்தாவது தனி குற்றெழுத்தைச் சேர்ந்தாவது வராது. (ஆனால்)

(மு-உ) தனித்தும் வரும், தனி குற்றெழுத்தைச் சேர்ந்தும்வரும்.

2. (கு-உ) வல்லெழுத்தின்மேல் மாத்திரம் வரும். (ஆனால்)

(மு-உ) தனிக்குறிலோடு வரும் வல்லெழுத்தின் மேலும், மெல்லெழுத்து, இடையெழுத்துகளின் மேலும் வரும்.

3. (கு-உ) வல்லினத்தின் பேரில் ஏறினதானாலும் மொழிகளின் கடைசியில் மாத்திரமிருக்கும், (ஆனால்)

(மு-உ) எந்த இடத்திலுமிருக்கும்; வல்லெழுத்திலேறினதானால் மொழிகளின் கடைசியில் மட்டுமிராது.

(குற்றுகரமென்றும் முற்றுகரமென்றும் வழங்கும்.)

12, குற்றியலுகரத்தின் பிரிவுகள் யாவை? அதனைப் பகுப்பதெவ்வாறு?

வி. குற்றியலுகரங்கள் 6 வகையாய்ப் பிரிக்கப்படும். இதனை வார்த்தையின் ஈற்றுக்கு அடுத்த எழுத்தை நோக்கி நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர் எனப்பிரிப்பார்கள்.

(உ-ம்) [illegible]கு, மாடு, சோறு, நெடிற்றொடர் கு-உ.

[illegible]வரகு, மருது, வடகு, உயிர்த்தொடர் கு-உ.

[illegible]ட்டு, [illegible]க்கு, பத்து, வன்றொடர் கு-உ.
கு[illegible], [illegible]ருந்து, [illegible]ரும்பு, மென்றொடர்கு-உ.
[illegible]ப்பு, [illegible]ஞ்சு, சா[illegible] இடைத்தொடர் கு-உ.
க[illegible], [illegible]கு, இஃது. ஆய்தத்தொடர் கு-உ.

(வரகு [illegible]யதில் ஈற்றயல் உயிர்மெய்யாயிருக்கிறது அவ்வெழுத்துகளைப் பிரித்தால் முறையே ர் + அ; ர் + உ; ய் + அ; என வருவதில் கடைசி எழுத்து உயிராகையால் உயிர்த்தொடர் என பேர் கொண்டது.)

13. நெடிற்றொடர் குற்றியலுகரத்துக்கும், உயிர்த்தொடர் குற்றியலுகரத்துக்கும் பேதமென்ன?

வி. நெ-கு-உ. உயிரிலும் உயிர்மெய்யிலும் நெடிலோடு கூடிய வல்லின ஒற்றின் மேலேறிய உகரம் சேர்ந்த வார்த்தையாயிருக்கும்—ஆனால்

உ-கு-உ. குறிலுயிரணைந்த மெய்கள் தனித்து வராமல் இரண்டு அல்லது பல வந்து, அதுடன் இறுதியில் வல்லின ஒற்றின் மேலேறிய உகரத்தோடு சேர்ந்து வரும் வார்த்தையாயிருக்கும்.

14. குற்றியலிகரமென்பது யாது?

வி. குற்றியலுகரங்கள் நிலைமொழியாக விருந்து, யகரவரியின் எழுத்துகளோடு துவக்கும் வார்த்தைகள் வருமொழியாய்வந்தால், அந்த குற்றியலுகரமானது இகரமாகத் திரிகிறது, இப்படித் திரிந்த இகரமே குற்றியலிகரம்;

(உ-ம்) நாகு + யாது = நாகியாது.
கா[illegible] யானை = காட்டியானை

செய்வது + ஏன் = செய்வதேன்.

15. போலியென்றாலென்ன? அது எத்தனை வகைப்படும்.

வி. (1) இரண்டு எழுத்துகள் கூடி ஒரு எழுத்துபோல்வழங்குவதும்.

(2) சில மொழிகளின் முதலிலும், இடையிலும், கடையிலும், ஒரு எழுத்துக்குப் பதிலாக மற்றொரு எழுத்து வந்தும், பொருள் மாறாமல இருக்கும் ரூபமே.

அவைகள் எழுத்துப்போலி யென்றும், மொழிப்போலியென்றும் இருபிரிவாம்.

(உ-ம்) (1) வயி = ஐ; | வய் = ஐ; | அய் = ஐ.
பவு = பௌ; | அவு = ஔ; | மய் = மை.

வயித்தியன் = வைத்தியன். | வய்யம் = வையம்.
அவ்வியம் = ஔவியம். | பவுத்தர் = பௌத்தர்.
அவுஷதம் = ஔஷதம். | மய்யல் = மையல்.

(உ-ம்) (2) முதலில். | நாயிறு = ஞாயிறு.
நயம் = ஞயம். | நண்டு = ஞெண்டு.
ஐயம் = அய்யம். | ஔவியம் = அவ்வியம்.
பௌத்தர் = பவுத்தர். | ஔவை = அவ்வை.

இடையில். ஐந்நூறு = ஐஞ்ஞூறு.

பித்து = பிச்சு. வைத்தபொருள் = வைச்சபொருள்.
உய்ந்தனன் = உஞ்சனன். ஐந்து = அஞ்சு.
நீந்தினான் = நீஞ்சினான். மைந்தன் = மஞ்சன்.

கடையில். முகம் = முகன். நிலம் = நிலன்.
கலம் = கலன். பந்தல் = பந்தர்.
சாம்பல் = சாம்பர். அரும்பு = அரும்பர்.
சுரும்பு = சுரும்பர். குடல் = குடர்.

16. எழுத்துச் சாரியை யென்றாலென்ன?

வி. எழுத்துகளைத் தனித்தனிபோர்சொல்லி

யழைக்கும்படி அவைகளுக்குப்பின் ஓர் எழுத்தையாவது, பதத்தையாவது கூட்டிக்கொள்ளு துவழக்கம். அவ்வாறு கூட்டப்பட்ட எழுத்து அல்லது பதம் எழுத்துச்சாரியையாம்.

(உ-ம்) று. என்று, கரம், காரம், கான்.
அ=அஃது. அ=அகரம்.
ஆ=ஆவென்று. ஆ=ஆகாரம்.
ஐ=ஐகாரம். ஐ=ஐகான்.
ஔ=ஔகாரம். ஔ=ஔகான்

17. வினாவெழுத்துகளெவை? அவைகள் வினாப்பொருளை எவ்விடத்துநின்றுணர்த்தும்.

வி. ஆ, எ, ஏ, ஓ, யா, இவ்வைந்து எழுத்துகளும் வினாவெழுத்துகளாம், இவைகள் வினாப்பொருளை யுணர்த்தும் விஷயத்தில்
மொழிக்கு முதலில் நின்று; எ. யா. வும்.
கடையில் நின்று; ஆ. ஓ. வும்.
முதலிலும் கடையிலும் நின்று; ஏயும். வினவும்.

(உ-ம்) முதலில் எவன். யார்.
கடையில் அவனா. ராமனோ.
முதலில் ஏது. கடையில் கொற்றனே.

சில இடங்களில் மேலேகாட்டியபடி அகவினாக்களாக மாத்திரமல்ல புறவினாக்களாகவும் வழங்கும்.

வார்த்தையிலிருந்து வினாவெழுத்தை பிரித்துவிட்டால் பொருள் கொடாதது அகவினா.
வார்த்தையிலிருந்து வினாவெழுத்தைப் பிரித்துவிட்டாலும் யாதேனும் ஒரு பொருளைக் கொடுக்கக்கூடியது புறவினா.

(உ-ம்.) எவன். யார். இவைகளில் எ. யா. என்ற வினாவெழுத்துக்களை எடுத்துப்போட்டால் மிகுதியான அன், ர், என்பது ஒரு பெயர்ச்சொல்

ல்லை யாதலின் அவன், யார் என்பது அகச்சுட்டு. அவனே எல்வீடு என்பதில் ஏ. ஏ. என்ற விகுதியெ ழுத்துகளை எடுத்துவிட்டாலும் மீதியான தி அவன், வீடு, என்று பொருள்படுவதால் புறச்சுட்டு.

18. சுட்டெழுத்துகள் எவை. எவ்வகையாய் பொருள் கொடுக்கும்? அவைகளின் உபயோ கத்தில் பேதமென்ன?

வி. அ. இ. உ. இவைகள் அகத்துருபாகவு. புறத்துருபாகவும் நின்று பொருள் கொடுக்கும்

அகத்துருபு=அகச்சுட்டு. புறத்துருபு=புறச் சுட்டு.

(உ-ம்.) அவன், இவள், உவன், அகச்சுட்டு, அக்கொற்றன், இவ்வீடு, உம்மனிதன் புறச்சுட்டு.

பேதம் (1.) சுட்டெழுத்தை வார்த்தையிலி ருந்து எடுத்துவிட்டால் பொருள் கொ டுக்காதது அகச்சுட்டு.

(உ-ம்.) அவன். இதில் அ என்ற சுட்டை எடுத் துவிட்டால் மீதியானதுக்கு பொருளில்லை.

சுட்டெழுத்தை வார்த்தையிலிருந்து எடுத்துவிட் டாலும் யாதாமொரு பொருள் கொடுப்பது புறச்சு ட்டு.

(உ-ம்.) அக்கொற்றன், இதில் அ என்ற சுட்டை த்துவிட்டால் மீதியானதுக்கு கொற்றன் என பொ ருள் உண்டு.

(2) அகச்சுட்டு, சுட்டெழுத்தோடு சேர்ந்த பதம மாயிருக்கும்,—ஆனால்

புறச்சுட்டோ சுட்டெழுத்தோடு தொடர்ந் து பதமாயிருக்கும்.

19. தமிழ் பாஷையில் வழங்கும் சமஸ்கி

ருத எழுத்துகளெவை? அவைகளுக்குச்சரியா க எந்த தமிழ எழுத்துகள் உபயோகிக்கப்படும்.

விடை. ஸ, ஷ, க்ஷ, ஜ, ஹ என 5.

ஸகரம்.—சகரமாகவும், தகரமாகவும் திரியும்.

(உ-ம்.) மாஸம்=மாசம்=மாதம்.

ஷகரம், ஸகரம் சகரமாகவும், டகரமாகவும் திரியும்.

(உ-ம்.) விஷயம்=விசயம்=விடயம்.

க்ஷகரம்—இரண்டு ககரமாகவும், இரண்டு சகரமாகவும், டகர சகரங்களாகவும் திரியும்.

(உ-ம்.) சாக்ஷி=சாக்கி=சாச்சி=சாட்சி.

ஜகரம். சகரமாகவும், யகரமாகவும் திரியும்.

(உ-ம்.) ஜாமம்=சாமம்=யாமம்.

ஹகரம். அகரமாகவும், ககரமாகவும், ஐகாரமாகவும்திரியும்.

(உ-ம்.) ஹரன்=அரன். கங்ஹா=கங்கா. மோஹம்=மோகம். மால்ஹா=மாலை.

20. குற்றியலுகரத்தின் தொடர்களையெழுதி அவைகளுக்கெதிரே அடியில் வரும் வார்த்தைகளைக் குறிப்பிடு.

கரும்பு—அரசு—வீடு—பெய்து—இரும்பு—மார்பு—கருப்பு—அஃது—விறகு—சுக்கு.

விடை. நெடிற்றொடர்—வீடு.

உயிர்த்தொடர்—அரசு—விறகு.

வன்றொடர்—கருப்பு—சுக்கு.

மென்றொடர்—கரும்பு—இரும்பு.

இடைத்தொடர்—பெய்து—மார்பு.

ஆய்தத்தொடர்—அஃது.

21. அடியில்வருவனவற்றில் பிழைகளைத் திருத்தியெழுது.

(1) னேட்டுமான மிருன்கோத்தடிக்கிறா

ப்போலிறுல தங் மளையே பெயவில்லை.

(2) பயித்தங்கா தோட்டத்தில் ஞய்க்கண்ணு புழிய மறத்துக்குக் கீளே படுத்து தூன்கிராப் போள் சத்துப்போய்ட்டு.

(3) வாளை எலை வேண்டப் போக றாமன் மூவன் இறும்பி பூசணிக்காயி பெத்துக் கிட்டு யோடிவறுகிறானு.

வி. (1) நேத்து வானமிருண்டு காற்றடிக்கிறாப் போலிருந்தும் மழையே பெய்யவில்லை.

(2) பயற்றங்காய் தோட்டத்தில் போன சின்ன நாய்க்குட்டி புளியமரத்துக்குக் கீழ்படுத்து தூங்கிறாப்போல் செத்துப் போயிற்று.

(3) வாழையிலை வாங்கப்போன ராமன் மகன் திரும்பி பூசணிக்காய் பெற்றுக் கொண்டு ஓடி வருகிறான்.

22 பின்வரும் வாக்கியத்தில் கூடிய இடங்களில் போலிகளையமைத்து வாக்கியத்தை திரும்ப எழுது.

வையகத்தில் ஒளவியம்பேசும் அரும்புகளில் சிறந்த ஓர் வைத்தியன் தன் பெலம் இவ்வாறென பித்துப் பிடித்து புலம்ப பௌத்தமதத்தை அனுசரியாத ராஜ மைந்தன் அவன் மையலில் விழுந்து வண்டுகள் ரீங்காரமிடும் ஐந்நூறு கால் பந்தலில் நயமாய் சலாகித்துப் பேசினான்.

வி. வய்யகத்தில் அவ்வியம் பேசும் அரும்பர்களில் சிறந்த ஓர் வயித்தியன் தன் பெலன் இவ்வாறென பிச்சு பிடிச்சுப் புலம்ப, பவுத்த மதத்தை அனுசரியாத ராஜமஞ்சன் அவன் மய்யலில் விழுந்து

வண்டர்கள் ரீங்காரமிடும் அறுநூறு கால் பந்தரில் ஞயமாய் சலாகித்துப் பேசினன்.

23. பின் வருவதில் குற்றியலுகரங்களைப் பிரித்தெழுது. பிரிக்கும்வகை யென்ன?

பசு—காகு—கடு—காசு—வீபு—எழுத்து எது—ஏது—ஆறு—அறு—உரு—கதவு—இஃது—இது—உழு—தேடு—விழுது—மருது மருந்து—பின்னு—உண்ணு—உணவு—காது கடு—கெஞ்சு—சார்பு—குடம்—விக்குள்,

வி. குற்றியலுகரங்கள். நாகு—காசு—எழுத்து—எது—ஆறு—இஃது—தேடு—விழுது—மருது—மருந்து—காது—கெஞ்சு—சார்பு.

பிரிக்தம்வகை. (1) கு—சு—டு—து—பு—று—என்ற ஆறு எழுத்துகளில் முடிகிற வார்த்தைகளைமட்டும் பிரித்துக்கொள்.

(2) அவைகளில் ஒரு குற்றெழுத்தோடுமட்டும் சேர்ந்திருக்கும் வார்த்தைகளை நீக்கிப்போடு.

மீதியாயிருப்பது குற்றிய லுகரங்களே.

24. பின் வரும் வாக்கியங்களில் போலி நீக்கி திருத்தியெழுது.

அய்யர் பிச்சு பிடிச்சு எழுகலன் சாம்பலை பவுத்தன் மஞ்சன் முகனிலிருந்து பந்தர்வரை ஞெண்டுகால் போல் தாவ வயித்தியன் வந்து அரும்பர் அரும்பரா கஞயமான வையகத்து அவுஷதங்களை நாயிற்றுக்கிழமை மூதர் கொடுத்ததால் மரணக்கடலை நீஞ்சினன்.

வி. ஐயர் பித்து பிடித்து எழு கலம் சாம்பலை பௌத்தன் மைந்தன் முகத்திலிருந்து பந்த[…]ா நண்டுக்கால் போல் தாவ, வைத்தியன் வந்து அரும்

பு அரும்பாக நயமான வையகத்து ஔஷதங்களை ஞாயிற்றுக்கிழமை முதல் கொடுத்ததால் மரணக்கடலை நீந்தினேன்.

25. "அவ்வையார் அஞ்சு பாட்டுகளைப் படிச்சு வைச்சார்"!—இதிலுள்ள [illegible]களை எடுத்தெழுதி சரியான வார்த்தைகளை வைத்துக் கட்டு.

வி. அவ்வை—ஔவை.	படிச்சு—படித்து.
அஞ்சு—ஐந்து.	வைச்சார்—வைத்தார்.

"ஔவையார் ஐந்து பாட்டுகளைப் படித்து வைத்தார்."

26. தமிழ் பாஷையின் ஒரு வாக்கியத்தை எழுதுவதில் கவனிக்கவேண்டியதென்ன.

வி. (1) பொருள் தெளிவாக விளங்கும்படி எந்தெந்த இடங்களில் நிறுத்தல் குறிகளை அமைக்கவேண்டுமோ அவ்வவ்விடங்களில் நிறுத்தல் குறிகளை அமை.

(2) ஒவ்வொரு வார்த்தைகளும் தனித்தனியே இருக்கத்தக்கதாகப் பிரித்துப் பிரித்து இடம் விட்டு எழுது.

(3) எந்த வரியையும் ஒற்றெழுத்தைக் கொண்டு தொடங்காதே.

(4) சந்தி சேர்த்தெழுதக் கருதினதாயிருக்குமாயின் ஒவ்வொரு வார்த்தையின் கடைசியையும் திடீரென எழுதாமல் பின் வார்த்தையைக் கவனித்து சந்தி மாறுதல்களைக் கிரகித்து, பின்னர் எழுது.

27. பின்வரும் வாக்கியங்களில் வட எழுத்துகளை நீக்கிவிட்டு சரியான தமிழ் எழுத்துகளை அதனிடத்தில் அமைத்தெழுது.

ஜலம் கொண்டுவர ஜாமத்திலேகின விஷயம் சாஸ்திரத்துக்கு விரோதமென நக்ஷத்திர ஜோஷியன் கண்டு புத்தகத்திலே பதிந்து, சாக்ஷிகளை ஸ்திரப்படுத்தி, மஹா ராஜனிடமனுப்பி, ஜாக்கிறதையாய் இருக்கச் செய்வித்தான்.

வி. சலங்கொண்டுவர யாமத்தி (சாமத்தி) லேகினவிசயம் (விடயம்) சாத்திரத்துக்கு விரோதமென நட்சத்திர (நச்சத்திர) சோதியன் கண்டு, புத்தகத்தில் பதிந்து சாட்சிகளைத் (சாச்சிகளை or சாக்ஷிகளை) திரப்படுத்தி மகா ராசனிடமனுப்பி, சாக்கிரதையாயிருக்கச் செய்தான்.

28. அடியில் வருவனவற்றில் பிழைகளைத் திருத்து.

(1) விருந்து புரந்தாரன் வேழான்மை செய்யரன்.
(2) காதங்மனையாழுண் தானுப.
(3) ஆய்தலரிவுடையாற் கண்ணதே.
(4) துரக்கன் திருப்பமேதார்தாழ்.
(5) தனா துய்ப்பாமென்ணுது.

வி. (1) விருந்து புறந்தான் வேளாண்மை செய்யான்.
(2) காதன் மனையாளுந்தானும்.
(3) ஆய்தலறிவுடையார்க் கண்ணதே.
(4) துறக்கத்திறப்பதோர்தாள்.
(5) தனாது துய்ப்பாமென்றது.

29. அடியில் வரும் வாக்கியங்களில் சிறப்பெழுத்துகளுள்ள பதங்களை எடுத்தெழுது.

(1) கல்வியே பேரழகாகும்.
(2) கற்றோரை எவரும் மதிப்பர்
(3) எல்லோரும் உள்ளும் புறம்பும் ஒத்தொழுகல் வேண்டும்.

(4) கூழேயாயினும் தமது முயற்சியால் கி
டைத்தது அமிர்தமேயாகும்.

(5) தேசத்தோடொத்துவாழ்.

விடை (1) எ. ம்.—கல்வியே—அழகு.

(2) ற்——கற்றோர்.

(3) ற்.. ம்—புறம்பும்——வாழல்.

(4) எ.ம் .ன். ற். கூழே——ஆயினும்——முய
ற்சி——அமிர்தமே.

(5) எ. ம்.——தேசம்——வாழ்.

30. பின் வருவதில் சொற்பிழைகள் எழுத்துப்பிழைகளைத் திருத்தியெழுது.

நம்மட ஊரு ராமன் மவன் சேதுக்கு
கண்ணாலம் வந்துது. அப்போ எங்க
அண்ணென் சுந்தரம் கத்தெரிக்காய்
பொட்டி செமந்துகிட்டுவந்தது ரொம்ப
கமாயிருந்துச்சு. என்னசெஞ்சா யண்
ணெயென்றுகேட்டேன் அவனு கோவப்
பட்டு போடா னம்மெவெரச்சா நன்
மெவெளயுமென்னு ஒனக்கேன் தெ
ரியாமபோச்சி என்னவ் வாகொளரிச்
சொல்றான்.

விடை. நம்முடைய ஊர் ராமன் மகன் சேதுக்கு கலியாணம் வந்தது. அப்போது எங்கள் அண்ணன் சுந்தரம் கத்தரிக்காய்ப்பெட்டி சுமந்து கொண்டு வந்தது ரொம்ப வெட்கமாயிருந்தது. என்ன செய்தாய் அண்ணாவென்று கேட்டேன். அவன் கோபப்பட்டு, போடா! நன்மை விதைத்தால் நன்மை விளையும் என்று உனக்கேன் தெரியாமல்போச்சு என்று வாய் குளறிச்சொன்னான்.

II. பதாத்தியாயம்.

31 பதமென்றாலென்ன, எத்தனை வகையாய் பிரிக்கப்படும்.

வி. எழுத்துகள் தனித்து நின்றாவது; 2 முதல் 9 ஈறாக சேர்ந்து நின்றாவது; ஒரு அர்த்தத்தைக்கொடுத்தால் அது பதமாம்.

(பதம்=வார்த்தை=மொழி.)

பதங்கள், பகாப்பதம் என்றும் பகுபதம் என்றும் இரண்டு வகையாய் பிரிக்கப்படும்.

(உ-ம்.) பகாப்பதம் ஈ, நா } எழுத்துகள் தனித்து நின்று பகாபதமானது.

அணி, அறம், அகலம், அருப்பம், கருப்பணம், உத்திரட்டாதி. } எழுத்துகள் 2-முதல் 7 ஈறாகச்சேர்ந்து பகாப்பதமானது.

பகுபதம். வீணை, கூனன், கண்ணன், கறுப்பன், கடந்தனன், சாங்கத்தான், பத்திரகாமாட்சி, சித்திராரூடத்தான். } எழுத்துகள் 2-முதல் ஒன்பது ஈறாகச்சேர்ந்து பகுபதமானது.

32. பகுபதம் எத்தெந்த உறுப்புகளால் அமைக்தது. அது அமைவதெவ்வாறு?

வி. பகுதி-விகுதி-இடைநிலை-சாரியை-சந்தி-விகாரம்-என்ற 6 உறுப்புகளில் 2 முதல் 6 ஈறாகச் சேர்ந்து பொருள்படும்.

(இப்படிச் சேரும் பகுபதங்கள் பெயர்-வினை-இடை-உரி ஆகிய நாலு சொற்களிலும் உண்டு.)

(உ-ம்) கூனி = கூன்-பகுதி, இ-விகுதி.
அறிஞன் = அறி-பகுதி, ஞ்-இடைநிலை, அன்-விகுதி.
குழையான் = குழை-பகுதி, ய்-சந்தி, ஆன்-விகுதி.
குழையினன் = குழை-பகுதி, ய்-சந்தி, இன்-சாரியை, அன்-விகுதி.

(இவைகள் பெயர் பகுபதங்கள்.)

செய்தேன் = செய்-பகுதி, த்-இடைநிலை, ஏன்-விகுதி
உண்டனன் = உண்-பகுதி, ட்-இடைநிலை, அன்-சாரி[யை, அன்-விகுதி.
படித்தனன் = படி-பகுதி, த்-இடைநிலை, த்-சந்தி, அன்-சாரியை, அன்-விகுதி.
நடந்தனன் = நட-பகுதி, த்-இடைநிலை, த்-சந்தி, அன்-சாரியை, அன்-விகுதி.
(த்-என்ற இடைநிலை ந்-என மாறினது விகாரம்.)

(இவைகள் வினைப்பகுபதங்கள்.)

என்றான் = என்று-பகுதி, ஆன்-விகுதி.
போன்றான் = போன்று-பகுதி, ஆன்-விகுதி.

(இவைகள் இடைப்பகுபதங்கள்.)

சான்றான் = சான்று-பகுதி, ஆன்-விகுதி.
உற்றான் = உறு-பகுதி, ற்-இடைநிலை, ஆன்-விகுதி.

(இவைகள் உரிப்பகுபதங்கள்.)

33. பெயர் பகுபதமென்றாலென்ன? வினைப் பகுபதமென்றாலென்ன?

வி. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலாகிய இவைகள், பகுதியாகவரும் காரணமாய், உண்டாகிற பகுபதங்கள் பெயர்ப்பகுபதங்களாம்.

(உ-ம்) பொன்னன்-பொருட்பகுபதம் பொன்-பகுதி
ஊரான்-இடப்பகுபதம் ஊர்-பகுதி.
ஆதிரையான்-காலப்பகுபதம் ஆதிரை-பகுதி.
கண்ணன்-சினைப்பகுபதம் கண்-பகுதி

கரியன்-குணப்பகுபதம் கருமை-பகுதி.

கொல்லன்-தொழில்பகுபதம் கொல்லு-பகுதி.

வினைச்சொல்லடியாகப் பிறந்து காலத்தைக் காட்டி நிற்கும் ஒவ்வொரு வினைகளும் வினைப் பகுபதங்கள்.

(உ-ம்) நடந்தான் (தெரிநிலைவினை) நட-பகுதி.
பெரிது (குறிப்புவினை) பெரு-பகுதி.
(வினையாலணையும் பேர்களும் இதிலடங்கியது.)

34. பகுதியென்றாலென்ன? இது எத்தனை வகைத்து?

வி. பகுபதங்களுள் அதனின் முதலில் பகுக்கப்படாத பாகங்களாக நிற்கும் பங்குகளே பகுதி.

அது பெயர்ப்பகுதி. வினைப்பகுதி யெனஇருவகை.

(உ-ம்) நடந்தான். நட-பகுதி.
பேசினார். பேசு-பகுதி.

பெயர் பகுதி. 33-ம் கேள்வி உதாரணம் பார்.

வினைப் பகுதி. (a) தெரிநிலை வினைப்பகுதி.

நட, வா, மடி, சீ, விடு, கூ, வே, வை, நோ, போ, வெள, உரிஞ், உண், தின், தேய், பார், செல், வாழ், கேள், முதலியன.

(b) பிறவினைப் பகுதி, மேலேசொன்ன தெரிநிலை, வினைப்பகுதிகளோடு-வி, பி, து, சு, கு, டு, பு, று, என்றவைகள் சேர்ந்து நிற்பன.

(உ-ம்) நடப்பி, விடுவி, தேய்த்து, பாய்ச்சு, போக்கு, உருட்டு, எழுப்பு, பயிற்று.

35. விகுதி யென்றாலென்ன? அவைகள் எத்தனை வகையாய் பிரிக்கப்படும்.

வி. இருதிணை, ஐம்பால், மூவிடங்களையும் காண்பித்து பகுதியின் பொருளை வேறுபடுத்த ஒரு வார்த்தையின் கடையில் நிற்கும் உருபே,

அவைகள்.

(a) வினைமுற்று விகுதிகள்.

அன் — செய்தனன். ஐ — செய்தனை.
ஆன் — செய்தான். ஆய் — செய்தாய்.
அள் — செய்தனள். இர் — செய்தனிர்.
ஆள் — செய்தாள். ஈர் — செய்தீர்.
அர் — செய்தனர். அம் — செய்தனம்.
ஆர் — செய்தார். ஆம் — செய்வதாம்.
து — செய்தது. எம் - செய்தேம்.
அ — செய்தன. ஓம் — செய்தோம்.
ஆ — செய்யா. உம் — செய்யும்.
கு — செய்கு.

b. வினையெச்ச விகுதிகள்.

உ — செய்து. கால் — செய்தக்கால்.
இ — தேறி. கு — செய்யதற்கு.
ய் — போய். மல் — செய்யாமல்.
அ — செய்ய. மே — செய்யாமே.
கு — செய்தற்கு. மை — செய்யாமை.
இன் — செய்யின். து — செய்யாது.
ஆல் — செய்தால். றி — யொன்றி.

c. பெயரெச்ச விகுதி.

அ — செய்த; உம் — செய்யும்.

d. பெயர் விகுதி.

அன் — பொன்னன். மன் — இடமன்.
ஆன் — ஆதிரையான். மான் — சீமான்.
அள் — கரியள். கள் — குருக்கள்.
ஆள் — மங்காள். வை — யாவை.
அர் — வேடர். கை — மங்கை.
ஆர் — நாட்டார். பி — தம்பி.
அ — கற்றன. ன் — பிறன்.
து — இது. ள் — மகள்.
இ — செவிடி. சி — அரசி.

மார்—அநுமார். ஐ—உதை.

௪. தொழிற் பெயர் விகுதி.

தல்—செய்தல். தி—மறதி.
அல்—செயல். சி—புகழ்ச்சி.
அம்—செல்லம். வி—தோல்வி.
ஐ—கொலை. கர்—பொ[illegible]கர்.
கை—செய்கை. உள்—செய்யுள்.
வை—கோர்வை. பாடு—கோட்பாடு.
கு—போக்கு. மை—செய்யாமை.
பு—படிப்பு. காடு—சாக்காடு.
உ—உரவு. அரவு—தேற்றரவு.
து—செய்வது.

௫. பண்புப் பெயர் விகுதி.

மை—தீமை. ஐ—தொல்லை.
சி—காட்சி. றி—நன்றி.
பு—நண்பு. று—நன்று.
கு—நன்கு. அம்—நலம்.
நர்—நன்னர்.

௬. காலங் காட்டும் விகுதிகள்.

(1) இறந்தகாலம்.
டும்—உண்டும். று—சென்று.

(2) எதிர்காலம்.
ஆ—கடவா. கு—உண்கு.
இ—சேறி. கும்—உண்கும்.
இய—உண்ணிய. து—வருது.
இயர்—உண்ணியர். தும்—வருதும்,
உம்—உண்ணும். ப—உண்ப.
க—உண்க. மார்—உண்மார்.
மின்—உண்மின்.

௭. செயப்பாட்டுபொருள் விகுதிகள்.

படு—உதைபட்டு. உண்—மிதியுண்.

இன்—அடிஇன்.

i. எதிர்மறை விகுதிகள்.
அல்—போகலன். ஆ—கடவா.
இல்—செய்யிலன். அற்க—செய்யற்க.

j. வியங்கோள் விகுதிகள்.
க—வாழ்க. இய—வாழிய.
இ—வாழி. இயர்—வாழியர்.
ஆக—வாழ்வதாக.

k. பலபொருட்களை யேந்தும் வேறு விகுதிகள்.

(1) கர்த்தாப்பொருள். ஐ, இ, அம்.
பறவை—அலறி—எச்சம்.

(2) கருவிப்பொருள். இ, ஐ, அம்.
களைகொத்தி—பட்டை—ஏற்றம்.

(3) செயப்படுபொருள். இ, ஐ, அம்.
விதி—நிலை—தொல்காப்பியம்.

(4) துணிவுப்பொருள். இடு, விடு, ஒழி.
நின்றிடு—போய்விடு—போட்டொழி.

(5) தன்மைப்பொருள். மை.
ஆண்மை—பெண்மை.

(6) பகுதிப்பொருள். இரு, இடு,
எழுந்திரு—போட்டிடு.

36. இடைநிலை யென்றாலென்ன. அவைகளை எப்படி பிரிக்கலாம்.

வி. பதங்களை பிரிக்கையில் பகுதி விகுதிகளுக்கு மத்தியில் அதனை இணைப்பதாகநிற்கும் உருபாம்.

(இதனுள் வினையைச்சேர்ந்த இடைநிலைகள் மாத்திரம் காலத்தைக் காட்டும்.)

a. பெயர்ப் பகுபத இடைநிலை. ச், ஞ், வ்.
(உ-ம்) தலை + ச் + இ = தலைச்சி. (ச் இரட்டித்தது)
வரி + ஞ் + அன் = வரிஞன்.
தலை + வ் + இ = தலைவி.

b. வினைப்பகுபத இடைநிலை. (9).

(1) இறந்தகாலம் காட்டுவன த், ட், ற், இன்.

(உ-ம்) செய் + த் + என் = செய்தேன்.
உண் + ட் + ஏன் = உண்டேன்.
பெறு + ற் + ஏன் = பெற்றேன்.
அனுப்பு + இன் + என் = அனுப்பினேன்.

(2) நிகழ்காலம் காட்டுவன கிறு, கின்று, ஆநின்று.

(உ-ம்) செய் + கிறு + என் = செய்கிறேன்.
செய் + கின்று + என் = செய்கின்றேன்.
செய் + ஆநின்று + என் = செய்யாநின்றேன்.

(3) எதிர்காலம் காட்டுவன ப், வ்.

(உ-ம்) உண் + ப் + என் = உண்பேன்.
உண்ணு + வ் + என் = உண்ணுவேன்.

37. சந்தி யென்றாலென்ன.

வி. பகுதிக்கும் விகுதிக்கும் மத்தியில் சந்திக்கும் எழுத்தே.

(உ-ம்) குழையான்—குழை-பகுதி, ய்-சந்தி ஆன்-விகுதி.
படித்தான்—படி-பகுதி, த்-இடைநிலை, த்-சந்தி, ஆன்-விகுதி.

38. விகாரமென்றாலென்ன?

வி. பதங்கள் தொடருமபொழுது நிலைமொழியீற்றெழுத்தும், நிலைமொழி ஈறு வருமொழி முதல் ஆகிய இரண்டு எழுத்துகளும் மாறுகிறதாம்;—

ஒரு வார்த்தையில் பகுதிக்கும் விகுதிக்குமிடையில் சந்திக்கும் எழுத்தானது வேறு எழுத்தாகத் திரிந்து நிற்கும் நிலையுமேயாம்.

இது வாசக விகாரமென்றும், செய்யுள் விகாரமென்றும் இருவகைப்படும்.

வாசக விகாரம். பதங்கள் தொடரும்பொழுது நிலைமொழி வருமொழிகளுக்கிடையில் யாதேனும் ஒரு எழுத்து அல்லது ஒரு சாரியை தோன்றுதலும், நிலைமொழி ஈற்றெழுத்தாவது வருமொழி முதலெழுத்தாவது, அல்லது இரண்டு எழுத்துகளுமாவது வேறு எழுத்தாகத் திரிதலும், நிலைமொழி ஈற்றெழுத்து கெடுதலுமே.

(உ-ம்) வாழை + பழம் = வாழைப்பழம். } [எழுத்து } தோன்றல்
பனை + காய் = பனங்காய். சாரியை }
பொன் + குடம் = பொற்குடம் }
கல் + சிலை = கற்சிலை } திரிதல்.
எள் + நெய் = எண்ணெய் }
மரம் + வேர் = மரவேர் கெடுதல்.

நடந்தனன் = நட-பகுதி, த்-இடைநிலை, த்-சந்தி, அன்-சாரியை, அன்-விகுதி.

(த் என்ற சந்தி ந் என மாறினது விகாரம்.)

செய்யுள் விகாரம். பாட்டுகளில் எழுத்துகள் மாறி நிற்கும் நிலையே.—இது வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை, என 9.

வலித்தல்— மெல்லினமானது வல்லினமாக மாறுதல்.

(உ-ம்) பொற்றொடி குறுத்தாள் பூத்தலும்.
குறுந்தாள்—குறுத்தாள் என வலித்தது.

மெலித்தல்—வல்லினமானது மெல்லினமாக மாறுதல்.

(உ-ம்) சிந்தையி லுவந்த புந்தியுமிலையோ.
புத்தி—புந்தி என மெலிந்தது.

நீட்டல்—குற்றெழுத்து நெட்டெழுத்தாகத் திரிவது.

(உ-ம்) மரத்தடி நீழலில் தரித்திட்ட அவலை.
நிழல்—நீழல் என நீண்டது.

குறுக்கல்—நெட்டெழுத்து குற்றெழுத்தாக மாறுதல்.

(உ-ம்) கருணைக்[illegible]னே பதமே சரணம்.
பாதம்—பதம் என குறுகியது.

விரித்தல்—இல்லாத எழுத்தைச் சேர்த்தல்.

(உ-ம்) இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.
வீழ்க்கும்—வீழ்க்கும்மே—ம் விரிந்தது.

தொகுத்தல்—இருக்கிற எழுத்தை நீக்குதல்.

(உ-ம்) நற்றாள் தொழார் எனின்.
தொழாதார்—தொழார் என தொகுத்தது.

தலைக்குறை—முதலில் உள்ள எழுத்து குறைந்து போகுதல்.

(உ-ம்) மரைமலர். தாமரை—மரை என தலை குறைந்தது.

இடைக்குறை—இடையிலுள்ள ஓர் எழுத்து குறைந்து போகுதல்.

(உ-ம்) பல்லியும் பலத்த ஓதியும் அணியும்.
ஓந்தி—ஓதி என குறைந்தது.

கடைக்குறை—கடையிலுள்ள ஓர் எழுத்து குறைந்து போகுதல்.

(உ-ம்) அம்கண் விசும்பில் அகனிலாகான்றபினிது.
நிலவு—நிலா என கடை குறைந்தது.

39. சாரியை யென்றாலென்ன. உதாரணங்கொடு.

வி. பெயரையும் வினையையும் சார்ந்து அவைகளோடு இசைந்து நிற்கும் ஓர் உருபாம்.

(உ-ம்) அன்—படித்தனன். அத்து—கனத்தை.
ஆன்—ஒருபான். அம்—புளியங்காடு.
இன்—சிறுறல். ஆம்—கொட்டாங்காச்சி
அல்—தூ[illegible]யல் தம்—இவர்தம்மை.
அற்று—இவற்றை. நம்—எல்லார்நம்மையும்

இற்று—பதிற்றுப்பத்து.
றும்—எல்லீர் தம்மையும்
ஏ— ஐந்தேழுக்கால்.
அ—..க்கு.
உ—மன்தனுக்கு.
ஐ—பண்டைக்காலம்.
கு—எய்குவேன்.
ன—ஆன்கன்று.
..—இலவாப்பொருள்
..ன்—மறந்தனை. (வி
..ட்டப்பட்டிருக்கிறது.)

40. காலங்காட்டும் உருபுகளெவை.

வி. a. இடைநிலைகள்.

36 கேள்விவிடை b-யைப்பார்.

b. சிலவினைப் பகுதிகள்.

(இவைகள் விகாரப்பட்டுத் தன் விகுதியைச் சேர்ந்து காலத்தைக்காட்டும்.)

(உ-ம்) தொடு—தொட்டு + ஆன் = தொட்டான்.
விடு—விட்டு + ஆன் = விட்டான்.
பிடு—பிட்டு + ஆன் = பிட்டான்.
உறு—உற்று + ஆன் = உற்றான்.
புகு—புக்கு + ஆன் = புக்கான்.
மிகு—மிக்கு + ஆன் = மிக்கான்.
(என இறந்த காலத்தைக் காட்டினது.)

c. சில விகுதிகள்.

35-ம் கேள்விவிடை ஈ-யைப் பார்.

d. சில பகுதிகள் தங்கள் இயல்பான ரூபத்திலேயே நின்று காலத்தைக் காட்டும்.

(உ-ம்) நட, வா, உண், தின், போ.

41. உபசர்க்கமென்றாலென்ன? சில உபசர்க்கங்களை யெழுதி உபயோகப்படுத்திக் காட்டு.

வி. சில வார்த்தைகளுக்கு முன் சில உருபுகள் நின்று அவைகளின் பொருளைப் பலவாறாக வித்தியாசப்படுத்திக் காட்ட உபயோகிக்கப்படும் எழுத்துகள் அல்லது பதங்களே.

உபசர்க்கங்கள். அ, அந், நி, நிர், கு, வி, சு,

துர், சற், நிஷ், பரி, சம், &c.

தர்மம்	அதர்மம்	அ	உபசர்க்கம்
ஆதி	அநாதி	அந்	,,
மலம்	நிர்மலம்	நிர்	,,
மலன்	நிமலன்	நி	,,
தர்க்கம்	குதர்க்கம்	கு	,,
மலம்	விமலம்	வி	,,
தர்மம்	சுதர்மம்	சு	,,
குணம்	சுகுணம்	சு	,,
	சற்குணம்	சற்	,,
	துர்குணம்	துர்	,,
களங்கம்	நிஷ்களங்கம்	நிஷ்	,,
கிரமம்	அக்கிரமம்	அ	,,
ஆசாரம்	அனுசாரம்	அந்	,,
	(நகரம், னகரமாக மாறினது)		
மூடன்	நிற்மூடன்	நிற்	,,
பட்சம்	விபட்சம்	வி	,,
கடூரம்	நிஷ்கடூரம்	நிஷ்	,,
	(நிஷ்டூரம் என மருகியது.)		
பூரணம்	பரிபூர்ணம்	பரி	,,
	சம்பூரணம்	சம்	,,

42. பின் வரும் வாக்கியத்தில் அகம் என்பதற்கு முன்பாக தகுந்த பதங்களை அமைத்து பொருள் விளங்க வாக்கியத்தை எழுது.

அகத்தை அகத்தில் விதைத்தேன், அகத்தை அகம் தின்றது. அகத்தை அகத்தால் எறிந்தேன் தின்ற அகம் ஓடிவிட்டது, எறிந்த அகத்தைக் காணேனும்.

வி. சீரகத்தைக் கனகத்தில் விதைத்தேன், சீரகத்தை ஒட்டகம் தின்றது, ஒட்டகத்தைக் காண்டகத்தாலெறிந்தேன். தின்ற ஒட்டகம் ஓடிவிட்டது. எறிந்த காண்டகத்தைக்காணேனும்.

43. பின்வரும் பதங்களுக்குப் பல அர்த்தங் கொடு.

படை, ஊர், மதி, அவை, தானம், கோடி, ஈ, காப்பு, பற்று, அமை, கால், பங்கம், கோள், புல், நட்டார், மூட்டு, கோல், நீர், பித்த, கூர், திரு, கூற்று, உடை, பண், பூ.

வி. படை = ஆயுதம்
சேனை
ஒரு [illegible]
உண்டாக்கு
சமர்ப்பி
ஒருவியாதி

ஊர் = சிறுகிராமம்
நகருதல்

மதி = சந்திரன்
புத்தி
விலைமதித்தல்

அவை = சபை
அது என்ற சுட்டின்பன்மை

தானம் = இடம்
கொடை

கோடி = 1 தொகை (10000000)
புதிது
கடைசி

ஈ = ஒரு பறவை
கொடு

காப்பு = கையிலிடும் ஆபரணம்
காவல்
ஆரம்பம்

பற்று = மேல்பூச்சு
ஆசை
தேகத்தில் படரும் ஓர் வியாதி

அமை = மூங்கில்
அடங்கியிருத்தல்

கால் = ஓர் அவயவம்
$\frac{1}{4}$ பாகம்
சமயம்
ஜலம் ஓடும் வழி

பங்கம் = பாகம்
குறைவு

கோள் = கோட்பாடு
அவதூறு பேசுதல்

புல் = ஒரு பூண்டு
அற்பத்தனம்
தடைப்பம்
மெலிய

நட்டார் = சிநேகிதர்
நாட்டினோர்

மூட்டு = ஓர் அவயவம்
தை
மோதுதல்

கோல் = ஒரு கம்பு
[illegible]சாட்டி

நீர் = முன்னிலைப்பெயர்
ஜலம்

	சாம்பல்	உழை =	பிரயாசப்படு
சிதை =	குறைவுபடுத்து		7-ம் வேற்று
	பிணத்தை வைக்க அடுக்கிய கட்டை.		மை உருபு
கூர் =	நிறைந்த	பண் =	உண்டாக்கு
	நுண்ணியமூளை		வீணையின் சுருதி
திரு =	பரிசுத்த	பூ =	மலர்
	செல்வம்		பூமி
கூற்று =	யமன்		இகழ்ச்சி இடைச்சொல்.
	கேளிக்கை, யானை ஆடல், பாடல்		

44. பின்வரும் பதங்களுக்கு பல அர்த்தம் வர வாக்கியத்திலமைத்துக் காட்டு.

ஏற்றமரம், இசை, கூடம், கடை, கலன் மெலியார், அளி, வெள்ளம், ஒற்று, பிழை, கறுப்பு, முடை, புரி, கரி, இரை, மாலை, தாள், மலை, பால், எச்சம், விலங்கு, காண், கவி, கொடி.

வி. ஏற்றமாம்—இது 1. ஏற்றமரத்துக் 2. கேற்ற மரம்.

1. தண்ணீர் இறைக்கும் துலா.

2. தகுதியான மரம்.

இசை—அவன் சபையில் 1. இசைபெற ஓர் 2. இசையை நன்றாய் 3. இசைத்தான்.

1. கீர்த்தி. 2. பாட்டு. 3. சேர்த்தான்.

கூடம்—கொல்லன் 1. கூடத்தால் வீட்டின் 2. கூடம் இடிந்தது.

1. சம்மட்டி. 2. வீட்டின் ஓர் பாகம்.

கடை—1. கடைச் சாமான்களை 2. கடையில் வாங்கலாம்.

1. பலசரக்கு விற்குமிடம் 2. கடைசி.

கலன்—1. கலன் நெல்லை ஓர் 2. கலனில் போடு
1. ஓர் அளவு 2. பாண்டம்.

மெலியார்—1. மெலியார் மழை பெய்ததால் இனி 2. மெலியார்.
1. எளியவர் 2 வறுமையடையார்.

அளி—1. அளிகொடுக்கும் மலரை 2. அளித்தான்.
1. வாசனை 2. கொடுத்தல்.

வெள்ளம்—ஒரு 1. வெள்ள திரவியம் 2. வெள்ளத்தால் சேதப்பட்டது.
1. ஒருபெரும் தொகை 2. நிரண்ட ஜலம்.

ஒற்று—1. ஒற்று வாசித்தவன் வீடுதான் 2. ஒற்றுகள் சந்தித்த இடம்.
1. ஒரு வாத்தியம் 2. வேவுகாரர்.

பிழை—1. பிழையில்லாததால் அவன் 2. பிழைத்தான்.
1. தப்பிதம் 2. ஜீவித்தான்.

கருப்பு—1. கருப்பு நடமாடும் நாட்டில் 2. கருப்பு கொடி பறக்கிறது.
1. பஞ்சம் 2. இருண்டநிறம்.

மூடை—கழி 1. முடை காற்றினால் 2. முடைவீச அந்த வழி நடக்க 3. முடையாயிற்று.
1. மாமிசம் 2. நாற்றம் 3. இடையூறு.

புரி—அவன் மதுரா 1. புரியில் வாசம் 2. புரிந்தான்.
1. பட்டணம் 2. செய்.

கரி—1. கரியால் 2. கரிக்கப்பட்ட மரமே அதற்குக் 3. கரியாயிருந்தது.
1. யானை 2. வெந்துபோன மரம் 3. சாட்சி.

திரை.—நெடுந் 1. திரையில் வந்தவன் 2. திரைக்குள்ளிருக்கிறான்.
1. அலை 2. துணியால் செய்த மறைப்பு.

மாலை.—1. மாலையில் விழுந்தவன் கழுத்தில் இன்கள் 2. மாலையில் 3. மாலையணிந்தான்.
1. முதிர் வயது 2. சாயங்காலநேரம் 3. மலை

ரின் தொடர்ப்பு.

தாள்.—1. தாளாளன் 2. தாள் வைக்க 3. தாளை வீட்டைத் திறந்து கொடுத்தான்.

1. ஈகை தன்மையுடையவன் 2. பயிரின் இதல்கள் 3. திறவுகோல்.

மலே.—1. மலையை தூக்குவது 2. மலையென்று அவன் 3. மலைத்தான்,

1. பருவதம் 2. கஷ்டம் 3. திகை.

பால்.—பசுவின் 1. பாலை அவன் 2. பால் வைத்தான்

1. க்ஷீரம் 2. பக்கம்.

எச்சம்.—1. எச்சமில்லாததால் அவர்கள் 2. எச்சம் 3. எச்சமாயிருந்தது.

1. பிள்ளை 2. பலம் 3. குறைவு.

விலங்கு.—வன 1. விலங்குக்குக்காலில் 2. விலங் கிட்டார்கள்.

1. மிருகம் 2. சங்கிலி.

நாண்.—வில்லே 1. நாணேற்றி 2. நாணலாமா.?

1. அம்பு 2. வெட்கம்.

கவி.—பல 1. கவிகள் 2. கவிபாட ஜனங்கள் 3. கவித்தார்கள்.

1. புலவர் 2. பாட்டு 3. சூழ்ந்துகொள்.

கொடி.—ஒரு 1. கொடியாள் ஒரு 2. கொடியால் 3. கொடி சமைத்தாள்.

1. பெண் 2. கயிறு 3. துவஜம்.

45. பின் வரும் வாக்கியங்களில் ஜதை ஜதையாய்வரும் வார்த்தைகளுக்கு அர்த்தமென்?

(1) நான் செருப்படிக்குப்போய் செருப் படி கொடுப்பேன்.

(2) இன்று அவன் இங்கு வருவதின்று.

(3) அவன் அன்று செய்வது அன்று.

(4) கோக்கிலேறி கோக்கிலிருந்த கொக்கைச்சுட்டான்.

(5) அவள் அந்தி நாளாக அந்தி நடந்தான்

(6) லோகத்துப் பெண்ணுக்கு லோகத்தை உருட்டிக்கொடு.

(7) நகைபோட்டவள் நகைத்தாள்.

(8) சுடுமூஞ்சி அக்காள் சுடு பிடி, மடி பிடி என்றாள்.

(9) வேலையில்லாத ராமன் வேலையை இளைத்தான்.

(10) சுத்த செட்டிகால் சுக்காய்ஒடிந்தது.

(11) அவர் துடி அவர் துடியைக் கெடுக்கும்.

(12) ராஜன் ஆட்டைக் கொன்று ஆட்டை முடித்தான்.

வி. (1) போர்க்களம் —செருப்பினால் அடித்தல்.

(2) இந்த நாள்—இல்லை

(3) அந்த நாள்—அல்ல.

(4) குதிரை—மாமரம்—பறவை.

(5) ஐந்து—பயப்பட்டு.
(விசாரப்பட்டபோவி அஞ்சி.)

(6) பூமி—தாதுவர்க்கம்.

(7) ஆபரணம்—சிறிப்பு.

(8) கோபமுடைய—காங்கை.

(9) அலுவல்—சமுத்திரம்.

(10) உலர்ந்த இஞ்சி—துண்டு.

(11) கள் குடித்தல்—குடிவாழ்க்கை.

(12) ஓர் மிருகம்—கூற்று.

(ஐந்து என்பது—அய்ந்து—அய்ஞ்சு—அஞ்சு—அஞ்சி—என மருவியது அறிக.)

40. பல அர்த்தங்களுள்ள சில வார்த்தைக ளைச் சொல்லு?

வி. பாடு.=1. பாடுதல் 2. கஸ்திப்படுதல் 3. பட் டுப்போகல் 4. ஒருவனுக்குரிய காரியங்கள்.

பூ.=1. பூமி 2. புஷ்பம் 3. இகழ்ச்சியைக்காட் டும் இடைச்சொல்.

மா.=1. பெரிய 2. ஒரு மரம் 3. குதிரை 4 ஒரு தொகை 5. மாவு.

கனி.=1. பழவர்க்கம் 2. கைத்துப்போதல் 3. தா துவர்க்கச் சுரங்கம் 4. பிள்ளை.

தீ.=1. நெருப்பு 2. கெட்ட 3. இனிமையான.

குழல்.=1. கழுத்திலிடும் ஓர் ஆபரணம் 2. து வாரமுள்ள குழாய் 3. பின்னல்கள் 4. மத லைச்சொல்.

ஏறு.=1. ஆண் சிங்கம் 2. உயரப்போ.

திங்கள்.=1. சந்திரன் 2. பகல் 3. ஓர் கிழமை.

கதிர்.=1. தானியத்தின்கொத்து 2. கிரணம்.

எழுத்து.=1. அட்சரம் 2. விதி அல்லது தெய்வ நிர்மாணம் 3. பாஷை.

மெய்.=1. உண்மை 2. தேகம்.

வண்ணம்.=1. விதம் 2. அழகு.

கல்.=1. சிலை 2. பருவதம் 3. படித்துக்கொள் 4. நீக்கு.

கலை.=ஆண்மான் 2. குலைத்து விடுதல் 3. உ யர்ந்த கல்வி 4. வஸ்திரம் 5. சந்திரனி ன் $\frac{1}{16}$ பாகம்.

வரை=1. ஒரு கோடு 2. மலை 3. எல்லை 4. எழுது.

புலம்.=1. நிலம் 2. உணர்ந்தறியும் சக்தியுடை ய பொருள் 3. திசை.

கழி.=1. கொம்பு 2. கழித்துப்போடு 3. கடற் ஜலம் நிற்கும் நீரோடை 4. செலவழித்தல்

கொள்ளி.=1. நெருப்புபற்றிய கட்டை 2 ஆண் குழந்தை 3. காந்தும் தன்மை 4. ஓர் வகை மச்சம்.

திரி.=1. மூன்று 2. முறுக்கு 3. விளக்கிலிடும் நூல் 4. பேதப்படு.

இவர்.=1. இந்த மனிதன் 2. செறிந்த.

நாழி.=1. ஓர் அளவு 2. ஒரு கடிகை நேரம் 3. அற்பமான ஓர் இனம்.

குன்று.=1. மலை 2. குறைவுபடுதல்.

இல்.=1. வீடு 2. இடத்தில் 3. இல்லாத.

வாய்=1. ஓர் அவயவம் 2. வழி 3. வாய்ப்பு 4. வருமானம்.

47. பின்வரும் தொடர்களில் கீறிட்ட வார்த்தைகளுக்கர்த்தமென்ன.

1. a. பொருளுடைய மனிதனைப்புகழ்வர்.
   b. அவனைத்தடி உடைய அடித்தான்.
2. a. மானமழிந்தபின் வாழாமை முன்னினிது.
   b. குளத்தில் வாழாமை மிகப்பெரிது.
3. a. அவர் சற்றார் முன்வாய் திறக்கார்.
   b. கல்வி கற்றார் அகமடைவார்.

வி. 1. a. இருக்கிற b. ஒடிந்துபோக.
2. a. ஜீவித்திருக்காமை b. வசிக்கும் ஆமை.
3. a. கோபிகள் b. படித்தவர்.

48. பின் வரும் பதங்களுக்கு அர்த்த பேதமென்ன?

கரை, கறை; உரை, உறை; அரம், அறம்; கூரு, கூறு; நிரை, நிறை; இரங்கு, இறங்கு; அரி, அறி;

புரம், புறம்; மாரி; மாறி; வலம், வளம்; பரி பறி; கூரு, கூறு; பூங்கை, பூக்கை; குரை, குறை; தீங் கனி தீக்கனி; புனை, புணை; அளி, அழி, அலி; இரை, இறை.

வி. கரை=ஓரம் கறை=குற்றம், அழுக்கு.
உரை=கூடு; உறை=சொல்லு, தேய்.
அரம்=ஓர் ஆயுதம்; அறம்=தருமம்.
கூரு=நுங்கியமுனை; கூறு=சொல்லு.
கிரை=ஓர் அளவு; நிறை=மிகுதியான.
இரங்கு=தயைகூர்; இறங்கு=கீழேவா.
அரி=அறுக்கப்பட்டது; அறி=தெரிந்துகொள்.
புரம்=வெளியே; புறம்=பக்கம்.
மாரி=மழை; மாறி=திரும்பி.
வலம்=வலதுபக்கம்; வளம்=செழிப்பு.
பரி=மீன்வைக்கும் கூடை; பறி=பிடுங்கு.
குரை=நாயிடும் சப்தம், குறை=கொஞ்சமாகுதல்.
பூங்கை=மலர்போன்றகை; பூக்கை=புஷ்பித்தல்.
தீங்கனி=மதுரமானகனி; தீக்கனி=கெட்டகனி
புனை=சேர்; புணை=தெப்பம்.
அழி=கெடு; அளி=கொடு; அலி=ஆணும் பெண்ணுமற்றது.
இரை=ஆகாரம்; இறை=தீர்வை, கப்பம்.

49. பின்வரும் வாக்கியங்களில் என்[illegible] தின் அர்த்தமென்ன.

1. இது என் புத்தகம்.
2. இதற்கு நீர் என் செய்வீர்.
3. இது வேங்கை யென்மர.

4. நீர் தூங்குவது என்.

வி. 1. என்னுடைய 2. என்னை 3. என்ற 4. ஏன் (அல்லது) என்ன காரணம்.

50. பின்வரும் வார்த்தைகளுக்கு வேறு ரூபம் கற்பி. கீர்த்தி, கூற்று, வஞ்சம், வீசும், பட்சி, சாக்ஷி, குவி, ஆகாசம், தவம், சந்தோஷம், புயம், மனிதன், குலை, விருட்சம், விசயம், பக்கம், அயல், சக்தி, ரத்தம்.

வி. கீர்த்தி—கிர்த்தி.	புயம்—புஜம்.
கூற்று—கூத்து.	மனிதன்—மனுஷன்.
வஞ்சம்—வஞ்சகம்.	குலை—குலை.
வீசும்—வீயும்.	விருட்சம்—விருச்சம்.
பட்சி—பக்கி, பச்சி.	விசயம்—விடயம், விஷயம்.
சாக்ஷி—சாட்சி, சாச்சி.	பக்கம்—பச்சம்.
குவி—குமி.	அயல்—அசல்.
ஆகாசம்—ஆகாயம்.	ரத்தம்—ரக்தம், இரத்தம்
தவம்—தபம்.	சக்தி—சத்தி.
சந்தோஷம்—சந்தோடம்	

51. 1. பின்வரும் சமஸ்கிருத மொழிகளுக்குச் சரியான தமிழ்மொழி யெழுது.

1 ஷண்பகம்	2 கோகநகம்	3 அஸ்தம்.
4 சக்தி	5 புஸ்தகம்	6 கஷ்டம்.
7 பக்தி	8 ஜலம்	9 ஜெகம்.
10 விரதம்	11 மாதா	12 தபநீயம்.
13 தன்மம்	14 சப்தம்	15 ரூபம்.
16 விஸ்தாரம்	17 பத்மம்	18 புத்திரன்.
19 [illegible]ஸ்வரன்	20 ஜெயம்	21 அனுஷ்டி.
22 பிதா	23 பருவதம்	24 அக்ஷரம்.

வி. 1 சம்பகம்	4 சத்தி	7 பத்தி
2 கோகனதம்	5 புத்தகம்	8 தண்ணீர்
3 அத்தம்	6 கட்டம்	9 உலகம்

10 தவம்	15 உருவம்	20 வெற்றி
11 தாய்	16 [illegible]த்தாரம்	21 அனுட்டி
12 தமநீயம்	17 பர்மம்	22 தகப்பன்
13 தர்மம்	18 குமாரன்	23 மலை
14 சத்தம்	19 ஈசுபரண	24 எழுத்து

52. பதங்களுக்கு எதிர் அர்த்தமுள்ள பதங்கள் எப்படி அமைக்கப்படும்.

வி. (i) எதிரார்த்தமுள்ள வெவ்வேறு பதங்களை உபயோகிப்பதால்.

நன்மை—தீமை.
நல்லது—கெட்டது.
மூர்க்கம்—சாந்தம்.
ஒற்றுமை—வேற்றுமை.
இரைச்சல்—அமைதி.
சந்தோஷம்—துக்கம்.
நெட்டை—குட்டை
பள்ளம்—மேடு.
மெலிவு—தடிப்பு, பருமன்
உத்தரம்—தக்ஷணம்
குணக்கு—குடக்கு
வன்மை—மென்மை
பேதை—மேதை
வாலிபன்—விருத்தன்
இகழ்ச்சி—புகழ்ச்சி
இளமை—முதுமை.

செல்வன்—வறியன்.
வறுமை—செல்வம்.
தோட்டி-தொண்டமான்
வெள்ளை—கறுப்பு.
கொண்டாட்டம்—திண்டாட்டம்.
நேராக—கோணலாக.
இஷ்டன்—சிஷ்டன் பகைஞன்
பரிபாலனம்—நிக்கிரகம்
கீழ்—மேல்
கொஞ்சம்—அதிகம்
இனிது—இன்னா
வெறுப்பு—விருப்பு
நிறைவு—குறைவு
நேர்—கோணல்

(ii) உபசர்க்கங்களை முன்னுக்கு இணைப்பதால்.

களங்கம்—நிஷ்களங்கம்
சுத்தம்—அசுத்தம்
விவேகம்—அவிவேகம்
பலம்—துர்பலம்,
சகுனம்—அவசகுனம்
மானம்—அவமானம்

சவுக்கியம்—அசவுக்கியம்
தர்மம்—அதர்மம்
கிரமம்—அக்கிரமம்
ஆசாரம்—அநாசாரம்
மலம்—நிர்மலம்
அமலம், விமலம்

சேதனம்—அசேதனம்	விசாரம்—நிர்விசாரம்
திசை—அதீனதசை	குணம்—நிர்குணம்
சக்தி—அசக்தி	ஆச[illegible]வு—அ[illegible]சரவு

(iii) எதிரிடைமொழிகளைப் பின்சேர்த்து இணைப்பதால்.

சுகம்—சுகயீனம், சுகமின்மை.	விவேகம்-விவேகமின்மை, விவேகக்குறைவு
சீர்—சீர்தப்பு, சீர்கேடு	சுந்தரம்—சுந்தரமின்மை
கோபம்—கோபமின்மை	மூடம்—மூடமின்மை
சந்தோஷம்—சந்தோஷமின்மை	சக்தி—சக்தியின்மை
புத்தி—புத்தியீனம்	நாணம்—நாணமின்மை, நாணக்கேடு
மதி—மதியீனம், மதிகேடு	திறமை—திறமையின்மை
புத்தி—புத்தியின்மை	நாசம்—நாசக்கேடு
[illegible]கம்—[illegible]பங்கம் —[illegible]யின்மை	உதாரம்—உதாரமின்மை
	அன்பு—அன்பில்லாமை

(iv) ஒரு உபசர்க்கத்துக்குப் பதிலாக எதிரார்த்த முள்ள வேறொரு உபசர்க்கத்தை உபயோகிப்பதால்.

[illegible]த்தி—துற்புத்தி	சுபுத்தி—துற்புத்தி, துஷ்டபுத்தி
துற்கதி—சற்கதி	மந்தகதி—தீட்சணகதி
சுகுணம்—அகுணம், நிர்க்குணம்	ஸ்ரீதேவி—மூதேவி
வல்லினம்—மெல்லினம்	அகடம்—விகடம்
துஷ்டன்—சிஷ்டன்	அநுக்கிரகம்—நிக்கிரகம்
சதர்மம்—அதர்மம்	மேல்லோகம்-கீழ்லோகம்

53. "பட" என்ற பதம் பலபொருள் கொடுக்கும்படி உபயோகித்துக்காட்டு.

வி. பட=1. உண்டாக. அவனுக்குப்பொருள்படச்சொல்லு.

2. கெட. மானம்படவரின் வாழாமை முன்னினிது.

3. பட்டுபோக. அவன் அந்த மரத்தை பட வெட்டினான்.
4. தொட. அது அவன்மேல் படவேயில்லை.
5. பதஷ்டம். அவன் படபட வென்று பேசி கெடுத்துப் போட்டான்.
6. ஓர் ஒலி குறிப்பு. அது படபட வென்று சிறகை அடித்தது.

54. அடியிலுள்ள வாக்கியங்களில் வடமொழிகளுக்குத் தகுந்த தென்மொழியை யமைத்து வாக்கியத்தை எழுது.

1. இப்படியே புபதேசித்த அதிதிக்கு சத்காரம் செய்தான்.
2. சரீரத்துக்கும் குணத்துக்குமுள்ள பேதம்.
3. புத்திமான் அந்நியனிமித்தம் திரவியம் தேடுவான்.
4. அவனுடைய பூர்வஜென்ம கன்மபலனிதுதானே.
5. அஸ்தியில் உபாதியற்றவனே சிரேஷ்டம்.

வி. 1. இப்படியே போதித்த விருந்தினருக்கு உபசரணை செய்தான்.
2. தேகத்துக்கும் குணத்துக்குமுள்ள வித்தியாசம்.
3. புத்திமான் அயலான் நிமித்தம் பொருள் தேடுவான்.
4. அவனுடைய முற்காலப் பிறப்பின் செய்கைக்கு பலனிது தானே.
5. எலும்பில் நோய் இல்லாதவனே முதல்தரம்.

III. புணர்ச்சி யத்தியாயம்.

---

55. புணர்ச்சியாவதென்ன. அது எத்தனைவகைப்படும். விஸ்தரி.

வி. பதங்கள் ஒன்றோடொன்று சேரும்பொழுது முதலாவது நிற்கும் பத[illegible] (நிலை மொழியின்) கடைசி எழுத்தும் பின்வரும் பதத்தின் (வருமொழியின்) முதல் எழுத்தும் சேருகிற சேர்க்கையே புணர்ச்சி.

இப்படி பதங்கள் சேரும்பொழுது, இல்லாத ஒரு எழுத்து தோன்றுதலும், இருக்கிற ஒரு எழுத்து வேறு எழுத்தாக மாறுதலும், இருக்கிற ஒரு எழுத்து கெட்டுப்போகுதலும், யாதொரு மாறுதலில்லாமல் இரண்டு பதங்களும ஒன்றோடொன்[illegible]லபாம்.

பிரிவு. 1. உயிரீற்றுப்புணர்ச்சி.
2. மெய்யீற்றுப்புணர்ச்சி.
3. வடசொற் புணர்ச்சி.
4. உருபுப் புணர்ச்சி.

1. உயிரீற்றுப்புணர்ச்சி.— கடைசியில் உயிரெழுத்து வரும் பதத்தோடு, முதலில் உயிர் வரும் பதமும், முதலில் மெய் வரும் பதமும் புணர்வதாம்.

2. மெய் ஈற்றுப்புணர்ச்சி.— கடைசியில் மெய்யெழுத்து வரும் பதத்தோடு முதலில் உயிர் வரும்பதமும்; முதலில் மெய் வரும் பதமும் புணர்வதாம்.

3. வட சொற் புணர்ச்சி.—கடைசியில் உயிர் எழுத்து வரும் வட சொல் பதத்தோடு, முதலில் உயிர் எழுத்து வரும் வட சொல் பதம் புணர்வதாம்.

4. உரு[illegible] புணர்ச்சி —பெயர் சொற்களோ டும்[illegible]வினைச் சொற்களோடும், வேற்றுமை முத[illegible]பற்பல உருபுகள் புணர்வதாம்.

(கவனிப்[illegible]) இப்புணர்ச்சி, வேற்றுமைப் பு[illegible]ர்ச் [illegible]சி யெனவும்; அல்வழிப் [illegible]ணர்ச்சி யெனவும் இருவகைப்படும்.

56. வே[illegible]ற்றுமை புணர்ச்சியாவதென்ன?

வி. பெ[illegible]ற்சொற்களோடு ஐ, ஆல், கு, இன், அது, கண், என்ற 2-முதல் 7 வேற்றுமை உருபுகளும் மறைந்தாவது வெளிப்பட்டாவது வர, சொற்[illegible]ள் புணர்வதே.

மறைந்[illegible]ந்தால் வேற்றுமைத் தொகையென் றும், வெளி[illegible]டையாயிருந்தால் வே[illegible]ற்றுமைத் தொடர் என்று[illegible] [வேறு விதமாய்[illegible] சொன் னல்] முறையே [illegible]நிலைத் தொடர் என்றும், வேற்றுமை தொகா[illegible]நிலைத் தொடர் என்றும் சொல்லப்படும்.

57. அல்வழிப் புணர்ச்சியாவது யா[illegible]?

வி. வேற்றுமையுருபுகள் தவிர [illegible] மாயாவது பதங்கள் புணர்ந்து நிற்பதே.

(இது 5 தொகைநிலையாகவும் 9 தொகாநிலையா கவும் பிரிக்கப்படும்.)

58. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி இவைகளில் வரும் தொகைநிலை, தொகாநிலையாது.

வி. வேற்றுமைப் புணர்ச்சி.

வேற்றுமை.	தொகைநிலை.	தொகாநிலை.
2-ம்வேற்றுமை	குடம் வனைந்தான்	குடத்தை வனைந்தான்.
3-ம் ,,	கல் எறிந்தான்	கல்லாலெறிந்தான்.

4-ம்	,,	ராமன் மகன்	ராமனுக்கு மகன்.
5-ம்	,,	மலைவீழ் அருவி	மலையிலிருந்து [வீழ் அருவி.
6-ம்	,,	ராமன் கை	ராமனுடையகை
7-ம்	,,	குகை சிங்கம்	குகையின்கண் [சிங்கம்.

அல்வழிப் புணர்ச்சி.

தொகை நிலைத்தொடர் 5.

வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத் தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை.

வினைத்தொகை. இடைநிலை முதலிய உருபுகள் வெளிப்படாமல் மறைந்து நிற்கும் பெயரெச்சங்கள் நிலைமொழியாகவும், வருமொழி பெயராகவும் நின்றுதொடர்வது.

(உ-ம்) விடுகணை, அடுகளிறு, பிடியானை, கொல்வேங்கை.

(கவனிப்பு) 1. விடுகிறகணை, விட்டகணை, விடும்கணை என்றதில் விடுகிற, விட்ட, விடும் என்றபெயரெச்சங்களில் இடைநிலை முதலிய உருபுகள் மறைந்து விடு என்ற பகுதி ரூபம் மாத்திரம் நின்று வருமொழியோடு தொடர்ந்து நிற்றல் அறிக.

2. குன்றியவினைக்கும் குன்றாவினைக்கும் பொது வினையான பகுதியடியான வினைத்தொகை எப்போதும் செய்வினை குன்றியே பொருள் பயக்கும்.

(உ-ம்) இடிசுவர்—இது இடிந்த, இடிகிற, இடியும் சுவரே யன்றி; இடிக்கின்ற, இடித்த, இடிக்கும் சுவர் என வாரா.

பண்புத்தொகை. பண்பைக்காட்டும் ஒருபெயர் நிலைமொழியாகவும் வேறு ஒரு பெயர் வருமொழியாகவும் நின்று,

ஆகிய, உள்ள, ஆன என்ற உருபுகள் மத்தியில் மறைந்து நிற்கத் தொடர் வதாம்;—ஒரு பொருளுக்குரிய சிறப்புப்பெயரும் பொதுப்பெயரும் சேர்ந்து நிற்கத் தொடர்வதுமே.

(இது வண்ணம், வடிவு, அளவு, சுவை, இருபெயரொட்டு என ௫ வகை,

(உ-ம்) வண்ணப்பண்புத்தொகை.— செந்தாமரை, வெண்குதிரை.

வடிவுப்பண்புத்தொகை.—வட்டமேசை, உருண்டைக்கல்.

அளவுப்பண்புத்தொகை.— முக்கோணம், சிலபொருள்.

சுவைப்பண்புத்தொகை.—புளிச்சாறு, துவர்க்காய்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகை.- சாரைப்பாம்பு, நளச்சக்கிரவர்த்தி.

உவமைத்தொகை. நிலைமொழியும் வருமொழியுமாகிய 2 பெயர்கள் தொடர்ந்து நிற்கையில்—போல, ஒப்ப, புரைய, போன்ற, நேர, நிகர, அன்ன, இன்ன, முதலிய உவமை உருபுகளில் ஏதேனும் ஒன்று மறைந்து நிற்க தொடர்வது.

(இது வினை, பயன், மெய், உரு, என ௪ வகைப்படும்.)

(உ-ம்) வினையுவமைத்தொகை.—புலிபாய்ந்தான்.

பயனுவமைத்தொகை.—கற்பகக்கையான்.

மெய்யுவமைத்தொகை.—அத்திமுகத்தான்.

உருபுவமைத்தொகை.—பிறைநுதல்.

உம்மைத்தொகை. நிலைமொழிப்பெயரும் வருமொழிப்பெயரும் தொடரும்பொழுது எண் பொருளில் வரும் உம் உ

ருபு இடையிலும் கடையிலும் தொக்க கிற்பதே.

(இது எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்ற 4 வகையான அளவைப்பற்றியேவரும்.

(உ-ம்) எண்ணலும்மைத் தொகை.— அந்தி சந்தி மத்தியானம்.

எடுத்தலும்மைத்தொகை.—வீசையே அரைக்கால்.

முகத்தலும்மைத்தொகை.—கலனே குறுணி.

நீட்டலும்மைத்தொகை.—கெஜமே சாண்.

அன்மொழித்தொகை. வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை உம்மைத்தொகை ஆகிய இவைகளில்லாமல் வேறுமொழிகள் தொக்கி நிற்க பதங்கள் தொடர்வதே.

(இது வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை ஆகிய இவ்வைந்தின் புறத்துப்பிறக்கும்.

(உ-ம்) வே-தொ-பு-பி-அ-தொகை-பூங்குழல், பொற்காப்பு.

வி-தொ-பு-பி-அ-தொகை-விரிகுழல், சுமைகூலி.

ப-தொ-பு-பி-அ-தொகை-கருங்குழல், குறுங்கழுத்து.

உ-தொ-பு-பி-அ-தொகை-துடியிடை, தேன்மொழி.

உம்-தொ-பு-பி-அ-தொகை-உயிர்மெய், சூரியசந்திரர்.

தொகாநிலைத்தொடர் 9.

எழுவாய்த்தொடர், விளித்தொடர் பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலை

வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத் தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர்.——— இவைகளில் எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலை வினைமுற்றுத்தொடர், குறிப்பு வினைமுற்றுத்தொடர், உரிச்சொற்றொடர் ஆகிய 7 தொடர்களும் முறையே, எழுவாய்— விளியடைந்த பெயர்-பெயரெச்சம்—வினையெச்சம்— தெரிநிலை வினைமுற்று—குறிப்பு வினைமுற்று-உரிச்சொல்-ஆகிய இவைகளுக்கும் இவைகளை முடிக்கும் சொற்களுக்குமிடையில், யாதொரு உருபாவது, சொல்லாவது தொகுத்து நிற்காமல் நிற்பதாம்.

(உ-ம்) எழுவாய்த்தொடர்—சாத்தன் போனான்.
சாத்தன் நின்றான்.

விளித்தொடர். பொன்னு செய்; செங்கா போ.

பெயரெச்சத்தொடர். வந்த மன்னன்;
ஓடும் குதிரை.

வினையெச்சத்தொடர். உண்டு வந்தான்; உழுதுவருவான்.

தெரிநிலைவினைமுற்றுத்தொடர். உடையான் வந்தான்; பெரியன் வருவான்.

உரிச்சொற்றொடர். மிகப்பேதை; சாலவந்தான்.

இடைச்சொற்றொடர். இடைச்சொற்கள் ஒன்றோடொன்று யாதேனும் உருபாவது சொல்லாவது இடையில் தொகுத்திராமல் தொடர்ந்து நிற்பதே.

(உ-ம்) அது கொல்: மற்று என்.

அடுக்குத்தொடர். விரைவினாலாவது, கோபத்தினாலாவது, விருப்பத்தினாலாவது, பயத்தினா

லாவது, துன்பத்தினுலாவது, அசைநிலையி னுலாவது, இசைநிறைபினுலாவது ஒரு சொல் திரும்பத் திரும்பத் தொடர்ந்து வருவதே.

(உ-ம்) விரைவினுல்	ஓடு ஓடு:	செய் செய்.
கோபத்தினுல்	போ போ :	மிதி மிதி.
விருப்பத்தினுல்	வாருங்கள்	வாருங்கள்.
பயத்தால்	பாம்பு பாம்பு:	தீத்தீ.
துன்பத்தால்	செத்தேன்	செத்தேன்.
அசை நிலையால்	அன்றே	யன்றே.
இசை நிறையால்	நம்பொருது மெய், நம்பொருது மெய்.	

59. நிலைமொழியீறும் வருமொழி முதலும் உயிராயிருக்குமாயின் எவ்வாறு புணரும்.?

வி. ௧. இ, ஈ, ஐ என்ற உயிர்களுக்குப்பின் உயிர்வந்தால் நிலைமொழிக்கும் வருமொழிக்கு மிடையில் ய் என்ற எழுத்து தோன்றும்.

(யகர உடன்படுமெய்தோன்றும்.)

(உ-ம்) மணி + அடி = மணியடி.
ஈ + எங்கே = ஈயெங்கே.
மலை + ஆண்டி = மலையாண்டி.

௨. ஏ, என்ற உயிருக்குப்பின் வருமொழி முதலில் உயிர்வந்தால் யகர ஒற்று தோன்றும்.

(உ-ம்) ஏ + அழகு = ஏயழகு.
அவனே + உண்டான் = அவனேயுண்டான்.

௩. அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ என்ற எழுத்துகளுக்குப்பின் வருமொழி முதலில் உயிர்வந்தால் வகர ஒற்று தோன்றும்.

(உ-ம்) மன + ஊக்கம் = மனவூக்கம்.
பலா + அருமை = பலாவருமை.
கொசு + எங்கே = கொசுவெங்கே.
பூ + உலகம் = பூவுலகம்.
எ + அன் = எவன்.
கோ + அருமை = கோவ்வருமை.

கோ + ஏறு = கோவேறு.
கௌ + அழகு = கௌவழகு.

d. சுட்டெழுத்துகளுக்குப்பின்னும் எகர வினாவெழுத்துக்குப் பின்னும் வருமொழிமுதலில் உயிர்வந்தால் வகர ஒற்றுத்தோன்றும்.

(உ-ம்) அ + உயிர் = அவ்வுயிர்.
இ + ஈட்டி = இவ்வீட்டி.
உ + அன் = உவன்.
எ + ஆள் = எவ்வாள்.

(பெரும்பாலும் அந்த ஒற்றெழுத்துகள் நிலைமொழி தனிக்குறிலாயிருக்குமாயின் இரட்டிக்கும். சிறுபான்மை இரட்டியாது.)

e. குற்றியலுகரத்துக்குப் பின் வருமொழியில் உயிர்வந்தால் அந்தஉகரம்கெட்டு அதுஏறிய மெய்யில், வந்த உயிர் ஏறும்.

(உ-ம்) நாடு + ஆண்டான் = நாடாண்டான்.

f. குற்றியலுகரம் வடமொழியானால் வருமொழி உகரம் கெடாமல் வகர ஒற்றுத்தோன்றும்.

(உ-ம்) சம்பு + ஐந்து = சம்புவைந்து.

g. முற்றியலுகரத்துக்குப்பின் வருமொழியில் உயிர்வந்தால் வகரஒற்றுத் தோன்றும்.

(உ-ம்) பசு + அழகு = பசுவழகு.
மடு + ஆழம் = மடுவாழம்.
மிகு + ஆவல் = மிகுவாவல்.
அது + எங்கே = அதுவெங்கே.
பு + அன் = புவ்வன்.
அறு + அடை = அறுவடை.

h. உயிர்த்தொடர், நெடிற்றொடராகிய டகர, றுகர ஈறுகளையுடைய குற்றியலுகரத்துக்குப் பின் வருமொழிமுதலில் உயிர்வந்தால் உகரம கெட்டு, உகரமேறியமெய் இரட்டித்து அதின் மேல் வந்த உயிர் ஏறும்.

(உ-ம்) வீடு + ஈரம் = வீட்டீரம்
கயிறு + ஆட்டம் = கயிற்றாட்டம்.

i. உயிர்த்தொடர் நெடிற்றொடராகிய டகர றகர ஈறுகளையுடைய குற்றியலுகரங்கள் 2-ம், 7-ம் வேற்றுமைத்தொகையாயிருந்து வருமொழிமுதலில் உயிர்வந்தால், உகரங்கெட்டு மெய் இரட்டிக்காமல் வந்தஉயிர் அந்த மெய்யின்மேல் ஏறும்.

(உ-ம்) நாடு + ஆண்டான் = நாடாண்டான். } 2-ம் வேற். தொகை.
முசறு + ஈந்தான் = முசறீந்தான்.
காடு + ஆறு = காடாறு. } 7-ம் வேற். தொகை.
ஆறு + ஆண்டி = ஆறாண்டி.

(ஆனால் 2-ம் 7-ம் வேற்றுமை விரியாயிருந்தால் உகரம் கெட்டு மெய் இரட்டித்தே வரும்.)

(உ-ம்) நாடு + ஆண்டான் = நாட்டை ஆண்டான்
முசறு + ஈந்தான் = முசற்றையீந்தான்.
(2-ம் வேற்றுமை விரி.)
காடு + ஆறு = காட்டில் ஆறு.
ஆறு + ஆண்டி = ஆற்றில் ஆண்டி.
(7-ம் வேற்றுமை விரி.)

j. உயிர்த்தொடர் நெடிற்றொடராகிய டகர றகர ஈறுகளையுடைய குற்றியலுகரங்கள் 6-ம் வேற்றுமைத் தொகையாயிருந்தாலும் விரியாயிருந்தாலும், வருமொழிமுதலில் உயிர்வந்தால் உகரம் கெட்டு, மெய் இரட்டித்து, அந்தமெய்யில் வந்த உயிரேறும்.

(உ-ம்) ஆடு + ஆள் = ஆட்டாள். (தொகை)
= ஆட்டினது ஆள். (விரி)
முசறு + அண்டம் = முசறண்டம் (தொ)
= முசிற்றினது அண்டம் (விரி)

k. குறு, சிறு, நடு, புது, வெறு என்னும் பண்படிகளின்பின் உயிர்வந்தால் உகரங்கெட்

௪. உகரமேறிய மெய் இரட்டித்து அதன்மேல் வந்த உயிர் ஏறும்.

(உ-ம்) குறு + உயிர் = குற்றுயிர்.
சிறு + ஆமை = சிற்றாமை.
நடு + ஆறு = நட்டாறு.
புது + ஊர் = புத்தூர்.
வெறு + இலை = வெற்றிலை.

௫. பண்புப்பெயர் நிலைமொழியாயும், வருமொழி முதலில் உயிராயுமிருந்தால்—நிலைமொழியின் ஈறும், இடையிலுள்ள உகரமும் கெடுதலும், ஆதிநீடலும், இடையிலுள்ள ஒற்று வேறுஒற்றாக மாறுதலும், இரட்டித்தலுமான, ஒன்றும் பலவுமான மாறுதல் பெற்று வருமொழியோடு புணரும்.

(உ-ம்) செம்மை + ஆடு = செவ்வாடு.
செம்மை + ஆம்பல் = சேதாம்பல்.
கருமை + ஆடு = காராடு.
பசுமை + ஆடு = பைந்நாடு.
வெண்மை + ஆடு = வெள்ளாடு.

60. நிலைமொழியீறு உயிரெழுத்தாயும் வருமொழிமுதல் மெய்யெழுத்தாயுமிருந்தால் எப்படி புணரும்.

வி. ௧. எ, என்ற வினவெழுத்துக்குப்பின்னும், அ, இ, உ, என்ற சுட்டெழுத்துக்குப்பின்னும் வருமொழிமுதலில் மெய்யெழுத்துவந்தால் அந்தந்தமெய்யெழுத்தே தோன்றும்.

ஆனால் யகரம் வந்தால் வகரம் தோன்றும்.

(உ-ம்) எ + காளை = எக்காளை.
அ + நாள் = அந்நாள்.
இ + வலி = இவ்வலி.
உ + காவல் = உக்காவல்.
எ + யானை = எவ்யானை.
அ + யாழி = அவ்யாழி.

b. டுகர றுகர ஈறுகளையுடைய உயிர்த்தொடர், நெடிற்றொடர் குற்றியலுகரங்களுக்குப்பின் வருமொழி முதலில் மெய்யெழுத்து வந்தால் உகரம் கெடாமல் அவ்வுகரம் ஏறிய மெய் இரட்டும்.

(உ-ம்) காடு + கழுதை = காட்டுக்கழுதை.
வயிறு + வலி = வயிற்றுவலி.

c. டுகர, றுகர ஈறுகளையுடைய நெடித்தொடர் உயிர்த்தொடர் குற்றியலுகரங்கள் பண்புத்தொகையாயிருந்தால் அதற்குப்பின் மெய் வந்து புணரும்பொழுது அந்த உகரம் கெடாமல் அவ்வுகரமேறிய மெய் இரட்டும்.

(உ-ம்) மூடு + பூச்சி = மூட்டுப்பூச்சி.
வயிறு + நோய் = வயிற்றுநோய்.

d. டுகர, றுகர ஈறுகளையுடைய நெடித்தொடர், உயிர்த்தொடர் குற்றியலுகரங்கள் 2-ம், 7-ம் வேற்றுமை தொகையாயின் அதற்குப்பின் மெய் வர குற்றியலுகரங்கள் இயல்பாகவேயிருக்கும்.

(உ-ம்) காடு + விண்டான் = காடுவிண்டான்.
வயிறு + வெந்தான் = வயிறுவெந்தான்.

e. டுகர, றுகர ஈறுகளையுடைய நெடித்தொடர் உயிர்த்தொடர் குற்றியலுகரங்கள் 6-ம் வேற்றுமைதொகையிலும் விரியிலும் மெய்யெழுத்துவர இரட்டும்.

(உ-ம்) மாடு + கன்று = மாட்டுக்கன்று. (தொகை)
= மாட்டினது கன்று. (விரி)
முசறு + முட்டை = முசற்றுமுட்டை. (தொகை)
முசற்றினது முட்டை. (விரி)

f. நிலைமொழி ஒரு தனி நெட்டெழுத்தாயும், ஒரு குற்றெழுத்தும் ஒரு நெட்டெழுத்தும் சேர்ந்ததாயுமிருந்தால் அதோடு புணரும் மெய் முதல் வருமொழியின் முதல் எழுத்து வல்லினமானால் இரட்டிக்கும். மற்றது இரட்டாது.

(உ-ம்) நீ + பிடித்தது = நீப்பிடித்தது (இரட்டித்தது)
தரு + தழை = தருத்தழை ,,
பூ + நாகம் = பூநாகம் (இரட்டியாதது)
பலா + வீச்சம் = பலாவீச்சம் ,,

g. உயிரீற்று சிலவினைமுற்றின் பின்னும், பெயரெச்சத்தின் பின்னும், வருமொழி முதலில் மெய்வரின் இயல்பாம்.

(உ-ம்) ஓடு + கொற்றா = ஓடுகொற்றா.
உண்டது + கழுதை = உண்டதுகழுதை.
சென்றன + மாடுகள் = சென்றனமாடுகள்.
செய்க + கொற்றா = செய்ககொற்றா.
செய்தன + வேந்தா = செய்தனவேந்தா.
உண்ணு + மைந்தா = உண்ணுமைந்தா.
செய்த + வேலை = செய்தவேலை.

h. குறு, வெறு, நெடு, பெரு, அரு, கரு, என்ற பண்படி நிலைமொழிகளுக்குப்பின் வருமொழி வல்லினமானால் இனவெழுத்துத் தோன்றும். (சிறு என்ற பண்படிமட்டும் இயல்பாம்.)

(உ-ம்) குறு + கழுத்து = குறுங்கழுத்து.
வெறு + பொய் = வெறும்பொய்.
நெடு + கயிறு = நெடுங்கயிறு.
பெரு + காடு = பெருங்காடு.
அரு + பிரயாசம் = அரும்பிரயாசம்.
கரு + குதிரை = கருங்குதிரை.
சிறு + கன்று = சிறுகன்று.

i. நிலைமொழி ஈறுகெட்ட பெயரெச்சமாயிருந்தால் வருமொழி முதலின் மெய்யெழுத்து இரட்டும்.

நடவா + கன்று = நடவாக்கன்று.
செய்யா + பேதை = செய்யாப்பேதை.

j. உயிரெழுத்தாகிய நிலைமொழி ஈற்று சில மரப் பெயருக்குப்பின் மெய்யெழுத்து வந்தால் இன எழுத்து தோன்றும். (சில இடங்களில்

மெய் தோன்றும்.) (சில இடங்களில் சாரியை தோன்றும்.)

(உ-ம்) மா + காய் = மாங்காய். (இன எழுத்து)
விளா + காய் = விளாங்காய். ,,
களா + காய் = களாக்காய். (மெய்)
அத்தி + காய் = அத்திக்காய். ,,
புளி + காய் = புளியங்காய். (சாரியை)

k. ஐகார ஈறாகிய மரப்பெயர் முன் மெய் வரின் ஐ கெட்டு அம் சாரியை தோன்றிப்புணரும்.

(உ-ம்) எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்.
ஆவிரை + விதை = ஆவிரம்விதை.
பனை + சாறு = பனஞ்சாறு.

l. திசைப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்க, வருமொழி திசைப்பெயராகவும், பிறப்பெயராகவும் நின்றால்.

1. நிலைமொழியின் ஈறுகெடுதலும்.
2. நிலைமொழியின் ஈறும், ஈற்றயல் ககரமும் கெடுதலும்.
3. நிலைமொழி ஈறுகெட்டு ஈற்றயல் றகரம் னகரமாகவும், லகரமாகவும் திரிதலும்.
4. சில இடங்களில் ஈறுகெட்டு, ஈற்றயல் றகரம் லகரமாகி ஐகாரச்சாரியை தோன்றலும்.
5. சில இடங்களில் ஈறும், ஈற்றயல் ககரவொற்றும் அகரமும் கெட்டு, ஆதி நீடலும்.
6. சில இடங்களில், ஈறு, அயல்ககரஒற்று, அகரம் முதலிய கெட்டு ஆதி நீண்டு அதோடு ஐகாரச்சாரியை பெறுதலுமாம்.

(உ-ம்) 1. மேற்கு + திசை = மேல்திசை. பிற-பெ.
தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு திசை-பெ
2. வடக்கு + மேற்கு = வடமேற்கு திசை-பெ
வடக்கு + கோடி = வடகோடி. பிற-பெ

3. தெற்கு+மேற்கு=தென்மேற்கு. திசை-பெ
தெற்கு+கோடி=தென்கோடி. பிற-பெ
மேற்கு+ஊர்=மேலூர். பிற-பெ
4. மேற்கு+திசை=மேலைதிசை. பிற-பெ
5. கிழக்கு+திசை=கீழ்திசை பிற-பெ
6. வடக்கு+காற்று=வாடைக்காற்று பிற-பெ

m. எண்ணுப்பெயர்.

1. நிலைமொழி ஒன்றாகவும், வருமொழி எண்பெயராகவும் பிறப்பெயராகவுமிருந்தால்;

i. நிலைமொழிமுதல் எழுத்துதவிர மற்றவைகள் கெட்டு வகர ஒற்று தோன்றும்.

(உ-ம்) ஒன்று+ஒன்று=ஒவ்வொன்று. எ-பெ.

ii. நிலைமொழி ஈறுகெட்டு, னகரம் ரகரமாகி உகரச்சாரியை பெறும்.

(உ-ம்) ஒன்று+பத்து=ஒருபத்து. எ-பெ.
ஒன்று+கலம்=ஒருகலம். பி-பெ.

iii. நிலைமொழி ஈறுகெட்டு, னகரம் ரகரமாகி முதல் நீளும்.

(உ-ம்) ஒன்று+பத்து=ஓர்பத்து. எ-பெ.
ஒன்று+ஆயிரம்=ஓராயிரம். எ-பெ.
ஒன்று+கலம்=ஓர்கலம். பி-பெ.

2. நிலைமொழி இரண்டாகவும் வருமொழி எண்பெயராகவும் பிறப்பெயராகவுமிருந்தால்,

i. நிலைமொழி முதல் எழுத்துதவிர மற்றவைகள் கெட்டு வகரஒற்றுத்தோன்றும்.

(உ-ம்) இரண்டு+இரண்டு=இவ்விரண்டு. எ-பெ

ii. நிலைமொழி முதலும் ரகர ஒற்றும் தவிர மற்றவை கெட்டு உகரச்சாரியை பெறுதலும்.

(உ-ம்) இரண்டு+மூன்று=இருமூன்று. எ-பெ.
இரண்டு+கலம்=இருகலம். பி-பெ.

ii. நிலைமொழிமுதலும் ரகர ஒற்றும் தவிர மற்றவை கெட்டு முதல் நீளும்.

(உ-ம்) இரண்டு + ஆயிரம் = ஈராயிரம் எ-பெ.
இரண்டு + உயிர் = ஈருயிர். பி-பெ.

3. நிலைமொழி மூன்றாகவும், வருமொழி எண்பெயராகவும், பிறப்பெயராகவுமிருந்தால்.

1. நிலைமொழிமுதல் எழுத்துதவிர மற்றவை கெட்டு வகரஒற்றுத்தோன்றும்.

(உ-ம்) மூன்று + ஆயிரம் = மூவாயிரம் எ-பெ.
மூன்று + அரசர் = மூவரசர் பி-பெ.

2. நிலைமொழிமுதல் குறுகி, அந்தஎழுத்துத்தவிர மற்றது கெட்டு, வருமொழி [illegible]தோன்றும்.

(உ-ம்) [illegible] + மூன்று = மும்மூன்று எ-பெ.
மூன்று + காலம் = முக்காலம் பி-பெ.

3. நிலைமொழி ஈறுகெட்டு னகரம் நகரமாகத்திரிந்து முதல்குறுகும்.

(உ-ம்) மூன்று + நாழி = முந்நாழி பி-பெ.
மூன்று + நான்கு = முந்நான்கு எ-பெ.

4. நிலைமொழி நான்காகவும் வருமொழி எண்பெயராகவும் பிறப்பெயராகவு மிருந்தால்.

1. நிலைமொழி ஈறுகெட்டு முதல்குறுகி வருமொழி நகரம் னகரமாகத்திரியும்

(உ-ம்) நான்கு + நான்கு = நன்னான்கு எ-பெ.

2. நிலைமொழி ஈறுகெட்டு னகரம் லகரமாகத்திரியும்.

(உ-ம்) நான்கு + ஆயிரம் = நாலாயிரம் எ-பெ.
நான்கு + ஆடு = நாலாடு பி-பெ.

3. நிலைமொழி ஈறுகெட்டு னகரம் லகரமாகத்திரிந்து உகரச்சாரியைபெறும்

(உ-ம்) நான்கு + மனிதர் = நாலுமனிதர் பி-பெ.
நான்கு + எட்டு = நாலெட்டு எ-பெ.
(நாலு + எட்டு)

4. நிலைமொழி ஈறுகெட்டு னகரம் றகரமாகத்திரியும்.

(உ-ம்) நான்கு+பத்து=நாற்பது எ-பெ.
நான்கு+பக்கம்=நாற்பக்கம் பி-பெ.

5. நிலைமொழி ஐந்தாகவும் வருமொழி எண்பெயராகவும் பிறப்பெயராகவு மிருந்தால்.

i. நிலைமொழி முதல் எழுத்துதவிர மற்றதெல்லாம்கெட்டு வகரஒற்றுதோன்றும்; அந்தமுதலும் போலியாகமாறும்; அப்போலியிலும் முதல்தவிர மற்றதுகெடும்.

(உ-ம்) ஐந்து+ஐந்து=ஐவைந்து.
=அய்வைந்து.
=அவ்வைந்து.

ii. நிலைமொழி முதல் எழுத்துதவிர மற்றதுகெட்டு யகர ஒற்றுந்தோன்றும்.

(உ-ம்) ஐந்து+ஆயிரம்=ஐயாயிரம் எ-பெ.
ஐந்து+ஆண்டு=ஐயாண்டு பி-பெ.

iii. நிலைமொழி முதல்எழுத்துதவிர மற்றதுகெட்டு வருமொழிமுதல் மெய்தோன்றும்.

(உ-ம்) ஐந்து+நான்கு=ஐந்நான்கு எ-பெ.

iv. நிலைமொழி முதல்தவிர மற்றது கெட்டு வருமொழிமுதல் மெய்க்கு இனஎழுத்து தோன்றும்.

(உ-ம்) ஐந்து+கலம்=ஐங்கலம் பி-பெ.

6. நிலைமொழி ஆறாகவும் வருமொழி எண்பெயராகவும் பிறப்பெயராகவுமிருந்தால்,

i. நிலைமொழியின் ஈற்றுகரம் கெட்டு நிற்கும்.

(உ-ம்) ஆறு+ஆயிரம்=ஆறாயிரம் எ-பெ.
ஆறு+ஆண்டி=ஆறாண்டி பி-பெ.

ii. நிலைமொழிமுதல் குறுகும்.

(உ-ம்) ஆறு + பத்து = அறுபது — எ-பெ.

ஆறு + கலம் = அறுகலம் — பி-பெ.

iii. ஈறுகெட்டு முதல்குறுகி வகரவொற்று தோன்றும்.

(உ-ம்) ஆறு + ஆறு = அவ்வாறு — எ-பெ.

7. நிலைமொழி ஏழாகவும் வருமொழி எண்பெயராகவும் பிறப்பெயராகவுமிருந்தால்

i. நிலைமொழி ஈறுகெட்டு முதல் குறுகி வகரவொற்று தோன்றும்.

(உ-ம்) ஏழு + ஏழு = எவ்வேழு — எ-பெ.

ii. [illegible] உகரம் கெடும்.

(உ-ம்) ஏழு + ஆயிரம் = ஏழாயிரம் — எ-பெ.

ஏழு + அப்பம் = ஏழப்பம் — பி-பெ.

iii. நிலைமொழி முதல் குறுகும்.

(உ-ம்) ஏழு + பத்து = எழுபது — எ-பெ.

ஏழு + பாண்டம் = எழுபாண்டம் — பி-பெ.

iv. நிலைமொழி இயல்பாகவே நிற்கும்.

(உ-ம்) ஏழு + பணம் = ஏழுபணம் — பி-பெ.

8. நிலைமொழி எட்டாகவும் வருமொழி எண்பெயராகவும் பிறப்பெயராகவுமிருந்தால்,

i. நிலைமொழி முதல்தவிர மற்றது கெட்டு வகர ஒற்றுத்தோன்றும்.

(உ-ம்) எட்டு + எட்டு = எவ்வெட்டு. — எ-பெ.

ii. நிலைமொழி ஈறுகெட்டு, டகரம் ணகரமாக மாறும்.

(உ-ம்) எட்டு + ஆயிரம் = எண்ணாயிரம் — எ-பெ.

எட்டு + ஆண்டு = எண்ணாண்டு — பி-பெ.

iii. நிலைமொழி ஈற்றுகரம் கெடும்.

(உ-ம்) எட்டு + ஆயிரம் = எட்டாயிரம் — எ-பெ.

எட்டு + ஆடு = எட்டாடு — பி-பெ.

iv. நிலைமொழி இயல்பாய் நின்று வரு

மொழி முதல் ஒற்று இரட்டித்தலு
மாம்.

(உ-ம்) எட்டு+கட்டளை=எட்டுக்கட்டளை பி-பெ.

9. ஒன்பது+ஒன்று=பத்து. இதில் ஒன்றுக்கு ஈறு குறைந்து "ஒன்" என்றும்; பத்து இடைகுறைந்து "பது" என்றும் மாறி இரண்டும் ஒன்றாய் சேர்ந்து ஒன்பது என்றாகிறது. (ஒன்பது= ஒன்று குறைந்த பத்து.)

நிலைமொழி ஒன்பதாயும் வருமொழி ... பெயராகவும் பிறப்பெயராயும் இருந்தால்.

i. நிலைமொழிமுதல் தவிர மற்றது கெட்டு வகர ஒற்று தோன்றும்.

(உ-ம்) ஒன்பது+ஒன்பது=ஒவ்வொன்பது, எ-பெ.

ii. நிலைமொழியில் பது கெட்டு னகரம் ணகரமாகி முதலெழுத்தோடு தகர ஒற்றுசேர்ந்து வருமொழி பத்து நூறாக திரியும்.

(உ-ம்) ஒன்பது+பத்து=தொண்ணூறு எ-பெ.

iii. நிலைமொழியில் பது கெட்டு னகரம் ளகரமாய் திரிந்து முதலோடு தகரவொற்று சேர்ந்து வருமொழி நூறு ஆயிரமாகும்.

(உ-ம்) ஒன்பது+நூறு=தொளாயிரம் எ-பெ.

iv. நிலைமொழி ஈற்றுகரம் கெட்டு வருமொழியோடு சேரும்.

(உ-ம்) ஒன்பது+ஆடு=ஒன்பதாடு பி-பெ.

v. நிலைமொழி யாதொரு மாறுதலு மில்லாமல் நிற்கும்.

(உ-ம்) ஒன்பது+கலம்=ஒன்பதுகலம் பி-பெ.

10. நிலைமொழி பத்தாயும் வருமொழி எண்பெயராயும் பிறப்பெயராயுமிருந்தால்

i. நிலைமொழி தவிர மற்றது கெட்டு பகர ஒற்று தோன்றும்.

(உ-ம்) பத்து+பத்து=பப்பத்து எ-பெ.

ii. நிலைமொழி ஈற்றுகரங் கெட்டு தகரம் னகரமாக மாறும்.

(உ-ம்) பத்து+இரண்டு=பன்னிரண்டு எ-பெ.

iii. நிலைமொழி ஈற்றுயிர் மெய் கெட்டு இன் சாரியை தோன்றும்.

(உ-ம்) பத்து+நான்கு=பதினான்கு எ-பெ.
வ+கலம்=பதின் கலம் பி-பெ.

iv. நிலைமொழி ஈற்றுயிர் மெய் கெட்டு இற்று சாரியை தோன்றும்.

(உ-ம்) பத்து+பத்து=பதிற்றுப்பத்து எ-பெ.

(n) நிலைமொழியில் இரண்டுமுதல் எட்டு ஈறாகிய ஏழு எண்களும் நிற்க வருமொழியில் பத்து வந்தால்,

நிலைமொழிமேலே சொன்ன விதிகளின்படி மாறுவதும் தவிர, வருமொழியின் இடை தகர ஒற்று கெடும்.

(உ-ம்) இரண்டு+பத்து=இருபது
மூன்று+பத்து=முப்பது
நான்கு+பத்து=நாற்பது
ஐந்து+பத்து=ஐம்பது
ஆறு+பத்து=அறுபது
ஏழு+பத்து=எழுபது
எட்டு+பத்து=எண்பது

இருபது முதல் எண்பது முதலிய எண்கள் நிலைமொழிகளாக நிற்க.

a. வருமொழியில் எண்பெயர்கள் வந்தால் நிலைமொழி ஈற்றுக்கயலில் தகர ஒற்றுத் தோன்றும்.

b. வருமொழியில் பிறபெயர்கள் வந்தால் நிலைமொழி இயல்பாம்.

c. வருமொழியில் ஆயிரம் வந்தால் இடையில் இன் சாரியை தோன்றும்.

(உ-ம்) a. இருபது + மூன்று = இருபத்துமூன்று எ-பெ
முப்பது + நான்கு = முப்பத்து நான்கு எ-பெ.
நாற்பது + ஐந்து = நாற்பத்தைந்து எ-பெ.
ஐம்பது + ஆறு = ஐம்பத்தாறு எ-பெ
அறுபது + ஏழு = அறுபத்தேழு எ-பெ.
எழுபது + எட்டு = எழுபத்தெட்டு எ-பெ.
எண்பது + ஒன்பது எண்பத்தொன்பது எ-பெ

b. இருபது + காய் = இருபதுகாய் பி-பெ.
முப்பது + சாடி = முப்பது சாடி பி-பெ.
(மற்றதுமிவ்வாறே.)

c. இருபது + ஆயிரம் = இருபதினாயிரம்
முப்பது + ஆயிரம் = முப்பதினாயிரம்,
(மற்றதுமிவ்வாறே.)

o. ஒன்று முதலாகிய எண்கள் நிலைமொழி யாகவும்; வீசம்; (மாகாணி) அரைக் கால்; கால்; முக்கால், என்ற குறைந்த எண்கள் வருமொழியாகவும் வந்தால் இடையில் ஏகாரச் சாரியை தோன் றும்.

(உ-ம்) இரண்டு + வீசம் = இரண்டேவீசம்.
இரண்டு + மாகாணி = இரண்டே மாகாணி.
ஐந்து + அரைக்கால் = ஐந்தேயரைக்கால்.
ஒன்று + கால் = ஒன்றேகால்.
இருபது + முக்கால் = இருபதேமுக்கால்.

ஆனால் அரை என்ற குறைந்த எண் வரின் சாரியை பெறாது.

(உ-ம்) மூன்று + அரை = மூன்றரை.

p. உயிரீற்று நிலைமொழியின் பின் மெய் முதல் வருமொழிவந்தால் சில இடங் களில் அன், இன், அல், இற்று, அம்.

ஏ, ஐ, ஆம், என்ற சாரியைகள் இடையில் வரும்.

(உ-ம்)	உண் + ஆன் = உண்டனன்	அன்.
	பசு + நெய் = பசுவின்னெய்	இன்.
	வினை + காப்பு = வினையல்காப்பு	அல்.
	பத்து + பத்து = பதிற்றுப்பத்து	இற்று.
	புளி + காய் = புளியங்காய்	அம்.
	காளி + கூளி = காளியேகூளி	ஏ.
	பண்டு + நாள் = பண்டைநாள்	ஐ.
	கூழை + பன்றி = கூழாம்பன்றி	ஆம்.

௯. பண்புப்பெயர் நிலைமொழியாயும், வருமொழி மெய்யாயுமிருந்தால், ஈறு கெடுதலும், இடைஉகரம் இகரமாதலும், ஆதிநீடலும், இடைஒற்று வேறு ஒற்றாகத்திரிதலுமான (ஒன்றும் பலவுமான மாறுதல் பெற்று) வருமொழியோடு புணரும்.

(உ-ம்) கருமை + காடு = கருங்காடு.
பசுமை + நிறம் = பாசிநிறம்.
பசுமை + கிளி = பைங்கிளி.
செம்மை + நெல் = செந்நெல்.
வெம்மை + நிறம் = வெண்ணிறம்.

61. நிலைமொழி ஈறு மெய்யெழுத்தாயும் வருமொழிமுதல் மெய்யெழுத்தாயுமிருந்தால் எவ்வாறு புணரும்.

வி. ௧. நிலைமொழி ஈறு, ண், ன் என்ற எழுத்துகளில் முடிந்தால் வல்லின மெய் நிற்று வருமொழிமுன் :

1. இயல்பாயும்.
2. நிலைமொழி ணகரம் டகரமாகவும் றகரமாகவும்,
3. வருமொழி தகரம் டகரமாகவும் றகரமாகவும் திரியும்.

(உ-ம்) 1. மண் + சிறிது = மண்சிறிது.
பொன் + கடிது = பொன்கடிது.

2. மண் + குடம் = மட்குடம்.
பொன் + குடம் = பொற்குடம்.

3. மண் + தீது = மண்டீது.
பொன் + தீது = பொன்றீது.

b. தனிக்குறிலைச்சார்ந்த நிலைமொழி ஈறு ண், ன், என்ற எழுத்துக்களில் முடிந்தால் மெல்லின இடையினத்தால் துவக்கும் வருமொழிமுன் இயல்பாகவே வரும். ஆனால் வருமொழி நகரம் மாத்திரம் நிலை மொழி ஈற்றெழுத்தாகவே திரியும்.

(உ-ம்) மண் + மாண்டது = மண்மாண்டது.
மண் + ஞாலம் = மண்ஞாலம்.
மண் + யானை = மண்யானை.
மண் + ரொட்டி = மண்ரொட்டி.
கண் + வாந்தர் = கண்வாந்தர்.
கண் + வெண்மை = கண்வெண்மை.
பொன் + ஞெண்டு = பொன்ஞெண்டு.
பொன் + மாடம் = பொன்மாடம்.
பொன் + யானை = பொன்யானை.
பொன் + ரொட்டி = பொன்ரொட்டி.
பொன் + லாடம் = பொன்லாடம்.
பொன் + வண்டி = பொன்வண்டி.
மண் + நீலம் = மண்ணீலம்.
பொன் + நீறு = பொன்னீறு.

c. தனிக்குறிலைச்சாராத நிலைமொழி ஈற்று ண், ன், என்ற எழுத்துகள்; வருமொழியில் நகரம் வரின் ணகரமாயாவது, னகரமாயாவது திரிந்தால் கெடும்.

(உ-ம்) சாண் + நீளம் = சாணீளம்.
அரசன் + நல்லன் = அரசனல்லன்.

d. நிலைமொழி ஈற்று ண், ன், களுக்குப்பின் வல்லினத்தால் துவக்கும் வருமொழி களின் இயல்பாகவும் வரும்; வேறு பட்டும் வரும்.

(உ-ம்) பாண் + குடி = பாண்குடி.
புன் + புலால் = புன்புலால். } இயல்பு.
மண் + கலம் = மட்கலம்.
நன் + காடு = நற்காடு. } வேறுபாடு.
முன் + தோன்று = முற்றோன்று.

e. நிலைமொழிஈறு மகரஒற்றாயிருந்து வருமொழிமுதலில் மெய்வந்தால்,

i. நிலைமொழியின்ஈறு கெட்டு, உயிருக்குபின் மெய்வரின் எப்படி புணருமோ அப்படி புணரும்.

(உ-ம்) வட்டம் + வாழி = வட்டவாழி.
விட்டம் + வாசல் = விட்டவாசல்.
மரம் + வேர் = மரவேர்.

ii. நிலைமொழியின் ஈறு கெடாமல் இன எழுத்தாகமாறும்.

(உ-ம்) விடும் + கணை = விடுங்கணை
எம் + தலை = எந்தலை.
பணம் + சோறு = பணஞ்சோறு.

iii. நிலைமொழி யாதொரு விகாரமின்றி புணரும்.

(உ-ம்) நம் + பாடு = நம்பாடு.
எம் + புலவர் = எம்புலவர்.
குளம் + யாது = குளம்யாது.
செல்வம் + யானை = செல்வம் யானை.

iv. தனிகுறிலோடு சேர்ந்த மகர ஈற்று நிலைமொழி வருமொழியின் துவக்கத்தில் ஞ, ந, வந்தால் அதே எழுத்தாகத்திரியும்.

(உ-ம்) செம் + நெல் = செந்நெல்.
உம் + நீட்சி = உந்நீட்சி.
அம் + ஞானம் = அஞ்ஞானம்.
உம் + ஞாலம் = உஞ்ஞாலம்.

v. நிலைமொழி ஈறு வேற்றுமை உருபு ஏற்றால் ஈறு கெட்டு அற்று, அத்து, இன், சாரியை பெற்றுவரும்.

(உ-ம்) எல்லாம் + கு = எல்லாவற்றுக்கு.
மரம் + ஐ = மரத்தை.
ஈரம் + கண் = ஈரத்தின்கண்.

f. லகர, ளகர ஈற்று நிலைமொழிகள் தனிக்குறிலை யடுத்திருந்தால் அவைகளுக்கு பின்

1. தகரம் வந்தால்.

a. லகரமும் தகரமும் றகரமாகமாறும்

(உம்.) கல் + தாழை = கற்றாழை.

b. ளகரமும் தகரமும் டகரமாகமாறும்

(உ-ம்) முள் + தீது = முட்டீது.

c. லகரம் ஆயுதமாகவும் தகரம் றகரமாகவும் திரியும்.

(உ-ம்) கல் + தீது = கஃறீது.

d. ளகரம் ஆயுதமாகவும் தகரம் டகரமாகவும் திரியும்.

(உ-ம்) முள் + தீது = முஃடீது.

2. மற்ற வல்லின எழுத்துக்கள் வந்தால்.
லகரம் றகரமாகவும்
ளகரம் டகரமாகவும் திரியும்.

(உ-ம்) கல் + குன்று = கற்குன்று.
கல் + சாடி = கற்சாடி.
பால் + டப்பி = பாற்டப்பி.
பால் + பானை = பாற்பானை.
கள் + குடம் = கட்குடம்.
எள் + சாறு = எட்சாறு.

என் + டப்பா = எட்டப்பா.
கன் + பானை = கட்பானை.

g. லகர ளகர ஈற்றுநிலைமொழிகள் தனிக்குறிலைச் சாராததாயிருந்து அவைகளுக்குப்பின் வல்லினம் வந்தால லகரம் றகரமாகவும் ளகரம் டகரமாகவும் திரியும்.
(வருமொழி தகரம் திரிந்த இடத்து கெடும்.)

(உ-ம்) பால் + கன்று = பாற்கன்று.
பால் + சாடி = பாற்சாடி.
பால் + டப்பி = பாற்டப்பி
பால் + பானை = பாற்பானை
மகள் + காப்பு = மகட்காப்பு
மகள் + சேலை = மகட்சேலை
மகள் + டப்பி = மகட்டப்பி
மகள் + பெட்டி = மகட்பெட்டி.
வேல் + திடன் = வேறிடன்
வேள் + தீது = வேடீது.

h. லகர ளகர ஈற்று நிலைமொழிகளின் பின் மென்மினம் வந்தால்,

i. லகரம் னகரமாகவும, ளகரம் ணகரமாகவும் திரியும்.

(உ-ம்) கால் + மடிந்தது = கான்மடிந்தது
கல் + ஞெண்டு = கன்ஞெண்டு
கள் + மெலிவு = கண்மலிவு
அருள் + ஞாயிறு = அருண்ஞாயிறு.

ii. நிலைமொழி தனிக்குறிலணைந்ததாறல் வருமொழி நகரம் லகரத்துக்குப்பின் னகரமாயும் ளகரத்துக்குப் பின் ணகரமாயும் திரியும்.

(உ-ம்) கல் + நன்று = கன்னன்று
புள் + நீண்டது = புண்ணீண்டது.

iii. லகர ளகரங்களுக்குப்பின் வருமொழியில் வரும் நகரம் திரிந்தும், நிலைமொழி ஈறு கெட்டும் வரும்.

(உ-ம்) பொருள் + நன்று = பொருணன்று
வேல் + நீண்டது = வேனீண்டது.

i. லகர ளகர ஈற்று நிலைமொழிகளின் பின் இடையினம் வந்தால் இயல்பாம்.

(உ-ம்) கல் + யாது = கல்யாது
விரல் + வலிது = விரல்வலிது
வாள் + வெட்டு = வாள்வெட்டு
அருள் + யானை = அருள்யானை.

j. தனிக்குறிலைச் சார்ந்த யகர ஈற்று நிலைமொழியின் பின் வல்லினம் வந்தால்,

i. இயல்பாக இருக்கும்.

(உ-ம்) செய் + சிறிது = செய்சிறிது
செய் + கை = செய்கை

ii. வருமொழி முதல் ஒற்று இரட்டிக்கும்.

(உ-ம்) பொய் + செல்வம் = பொய்ச்செல்வம்
செய் + கலயம் = செய்க்கலயம்

k. தனிக்குறிலைச் சார்ந்த யகர ஈற்று நிலைமொழியின் பின் மெல்லினம் வந்தால் இரட்டும்.

(உ-ம்) மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்
செய் + நன்றி = செய்ந்நன்றி
பொய் + மாட்சி = பொய்ம்மாட்சி.

l. தனிக்குறிலைச் சார்ந்த யகர ஈற்று நிலைமொழியின் பின் இடையினம் வரின் இயல்பாம்

(உ-ம்) செய் + யாது = செய்யாது.
மெய் + வாழி = மெய்வாழி.

m. தனிக்குறிலைச் சாராத யகர ஈற்று நிலைமொழியின் பின் (a) வல்லினம் வந்தால் வருமொழி முதல் இரட்டித்தும், இரட்டியாமலும் புணரும்.

(உ-ம்) போய் + கொண்டான் = போய்க்கொண்டான்.
வேய் + தோள் = வேய்த்தோள்
நாய் + கால் = நாய்க்கால்
வேய் + குறிது = வேய்குறிது
பேய் + பூதம் = பேய்பூதம்.

b. யகரம் வந்தால் கெடும். மற்ற இடையினம் வந்தால் இயல்பாம்.

(உ-ம்) வேய் + யாப்பு = வேயாப்பு
காய் + யாது = காயாது
வேய் + வீழ்ச்சி = வேய்வீழ்ச்சி
பேய் + ராட்டு = பேய்ராட்டு
நாய் + லாந்தர் = நாய்லாந்தர்,

c. மெல்லினம் வந்தால் இயல்பாம்.

(உ-ம்) வேய் + ஞான்றது = வேய் ஞான்றது.
வேய் + நீலம் = வேய் நீலம்.
வேய் + மூறடு = வேய் மூறடு.

n. நிலைமொழியின் ஈற்றில் ழ், ர், வந்து,

a. வருமொழி முதலில் வல்லினம் வரில் வருமொழிமுதல் ஒற்று இரட்டித்தும்; இரட்டியாமலும் வரும்.

(உ-ம்) பாழ் + கொல்லை = பாழ்க்கொல்லை.
இதழ் + கால் = இதழ்க்கால்.
கார் + பருவம் = கார்ப்பருவம்.
மலர் + தாமரை = மலர்த்தாமரை. } இரட்டித்தல்
காழ் + பெரிது = காழ்பெரிது
இகழ் + புகழ் = இகழ் புகழ்
வேர் + கள் = வேர்கள்.
தேர் + செய்தான் = தேர் செய்தான். } இயல்பாதல்

b. மெல்லினம்
c. இடையினம் } வரில் இயல்பாம்.

(உ-ம்) வேர் + நீண்டது = வேர்நீண்டது.
பார் + ஞண்டு = பார்ஞண்டு.
சூழ் + நிறம் = சூழ்நிறம்.
தோழ் + ஞண்டு = தோழ்ஞண்டு.
கார் + யானை = கார்யானை.
தேர் + ராட்டிணம் = தேர்ராட்டிணம்.
நேர் + வடக்கு = நேர்வடக்கு.
கூர் + லாடம் = கூர்லாடம்.
சீழ் + யாது = சீழ்யாது.
பாழ் + ராட்டு = பாழ்ராட்டு.
வீழ் + வேர் = வீழ்வேர்.
சூழ் + லட்டு = சூழ்லட்டு.

62. நிலைமொழி ஈறு மெய்யெழுத்தாயும் வருமொழிமுதல் உயிரெழுத்தாயுமிருந்தால் எவ்வாறு புணரும்.

வி. a. நிலைமொழி ஈறு மெய்யாயும் வருமொழி முதல் உயிராயுமிருந்தால் அந்த மெய்யின்மேல் வந்த உயிர் ஏறும்.

(உ-ம்) மனம் + அற்றது = மனமற்றது.
கோல் + ஆட்டம் = கோலாட்டம்.

b. நிலைமொழிஈறு, தனிகுற்றெழுத்தோடு சேர்ந்த மெய்யெழுத்தாயும் வருமொழி முதல் உயிராயுமிருந்தால அந்தமெய் இரட்டிக்கும்.

(உ-ம்) மண் + அருமை = மண்ணருமை
கல் + ஆட்டம் = கல்லாட்டம்

c. நிலைமொழிகள் என், தன் என்ற வார்த்தைகளாயும் வருமொழி ஆறும் வேற்றுமை உருபாகவுமிருந்தால் சில இடங்களில் நிலைமொழி ஈற்று மெய் இரட்டிக்கும். (சில இடங்களில் இரட்டியாது.)

(உ-ம்) தன் + அது = தனது } மெய் இயல்பு.
என் + அது = எனது

தன் + உடைய = தன்னுடைய } மெய்
என் + உடைய = என்னுடைய } இரட்டி.

63. வடமொழி சந்தியாவதென்ன?

வி. நிலைமொழி ஈற்றில் உயிர் எழுத்தும வருமொழிமுதலில் உயிர் எழுத்தும்பெற்ற வார்த்தைகள் சமஸ்கிருதத்திலுள்ள வார்த்தைகளாயிருந்தால் அவைகள் சமஸ்கிருதவிதிகளையே அநுசரித்து வரும். ஆதலால் அவைகளுக்கு வடமொழி சந்தி என்று பெயர்.

அவையாவன.

a. நிலைமொழி ஈற்று (1) அ; ஆவுக்குப்பின் வருமொழிமுதலில் அ; ஆவும,
(2) இ; ஈக்கு பின் இ; ஈயும.
(3) உ; ஊவுக்கு பின் உ; ஊவும் வந்தால், நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட்டு முறையே ஆகாரம், ஈகாரம், ஊகாரமாகும்.

(உ-ம்) 1. யுத்த + ஆரம்பம் = யுத்தாரம்பம்
தேசா + அதிபதி = தேசாதிபதி
யுத்த + அதிபதி = யுத்தாதிபதி
தேசா + ஆசாரம் = தேசாசாரம்.

2. முனி + இந்திரன் = முனீந்திரன்
முனி + ஈசுவரன் = முனீசுவரன்
யதி + இந்திரன் = யதீந்திரன்
யதி + ஈசன் = யதீசன்.

3. குரு + உபதேசம் = குரூபதேசம்
குரு + ஊர்ச்சிதம் = குரூர்ச்சிதம்
வது + உத்தமி = வதூத்தமி
வது + ஊர்ச்சிதம் = வதூர்ச்சிதம்.

b. நிலைமொழி அகர ஆகார ஈற்றுச் சொற்களுக்குப் பின் (1) இகர ஈகாரமும;

(2) உகர ஊகாரமும்; வந்தால் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட்டு முறையே ஏகாரமும ஓகாரமும் தோன்றப் புணரும்.

(உ-ம்) 1. தேவ + இந்திரன் = தேவேந்திரன்
தேவ + ஈசன் = தேவேசன்
தயா + இந்திரன் = தயேந்திரன்
தயா + ஈசன் = தயேசன்.

2. ஜீவ + உற்பத்தி = ஜீவோற்பத்தி
ஜீவ + ஊற்சிதம் = ஜீவோற்சிதம்
மிக + உசிதம் = மிகோசிதம்
மிக + ஊர்ச்சிதம் = மிகோர்ச்சிதம்.

C. நிலைமொழி அகர, ஆகார ஈற்றுச சொற்களுக்குப்பின் (1) ஏகார ஐகாரமும்; (2) ஓகார, ஔகாரமும் வந்தால்—நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட்டு முறையே ஐகாரமும் ஔகாரமும் தோன்ற புணரும்.

(உ-ம்) பரம + ஏகன் = பரமைகன்
சதா + ஏகன் = சதைகன்
ஜன + ஐக்கியம் = ஜனைக்கியம்
சதா + ஐக்கியம் = சதைக்கியம்
பரம + ஓடம் = பரமௌடம்
தயா + ஓடதி = தயௌடதி
பரம + ஔடதம் = பரமௌடதம்
மகா + ஔஷதம் = மகௌஷதம்.

64. பின்வருபவைகளைப் புணர்த்தி விதிகூறு,
புது + ஊர்; சே + அழகு; பத்து + பத்து ;
வந்த + குதிரை; ஆறு + தூண்; ஆறு + ஆயிரம்;
இரும்பு + உருண்டை; அன்று + போனான்;
எழு + கடல்; அப்படி + செய்தான்;
நீர் + குடித்தான்; மரம் + வேர்.

வி. புது + ஊர் = 1. புத்தூர். சிறு, வெறு, குறு, கடு, புது, என்னும் பண்புடிக

ளின் பின் உயிர்வந்தால் உகரம் கெட்டு அவ்வுகாமேறிய மெய் இரட்டித்து அதில் வந்த உயிர் ஏறும்.

2. புதூர். உ, ஊவுக்குபின் உ, ஊவரில் நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் கெட்டு ஊகாரமாகத் திரியும்.

3. புதுவூர். அ, ஆ; உ, ஊ; ஒ, ஔ; என்ற உயிர்களுக்குப்பின உயிர் வந்தால் இடையில் வகர ஒற்று தோன்றும்.

சே + அழகு = 1. சேவழகு. ஓரெழுத் தொருமொழியாகிய ஏ, சே, தே என்னும் பெயர்ச் சொற்களுக்குப் பின் உயிர் வந்தால் வகரம் உடன்படு மெய்யாக வரும்.

2. சேயழகு. பண்புச் சொல்லின் விகாரமாகிய சேமுன் உயிர் வந்தால் யகரம் உடன்படு மெய்யாக வரும். (சில இடங்களில் வகரமும் வரும்.)

பத்து + பத்து = 1. பப்பத்து. பத்து என்ற எண் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் நின்று புணரில் நிலைமொழியின் முதலெழுத்து தவிர மற்றதெல்லாம் கெட்டு வருமொழி மெய் இரட்டும்.

2. பதிற்றுப்பத்து. எண்பெயர்கள் நிலைமொழியாகவும் வருமொழியாகவும் நின்று புணரில் நிலைமொழி கடை குறைந்து சாரியை சேர்ந்து வருமொழி புணரும்.

வந்த + குதிரை = 1. வந்தக்குதிரை. உயிரீற்று நிலைமொழிக்குப் பின் வல்லினம் மிகும்.

2. வந்த குதிரை. பல வகையான வினைமுற்றின் பின்னும், பெயரெச்சத்தின் பின்னும், வினைத்தொகையின் பின்னும், ஒற்றெழுந்து இரட்டாது.

ஆறு + தூண் = 1. ஆற்றுத் தூண். தனிக்குறில் இணையாத நிலைமொழி ஈற்று டு, று, வேற்றுமை வழியில் பெரும்பான்மையும் அல்வழியில் சிறுபான்மையும் இரட்டித்து வருமொழியோடு புணரும்.

2. ஆறு தூண். மென் தொடர், இடைத்தொடர், ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர், உயிர்த்தொடர், குற்றியலுகரங்களுக்குப் பின் வல்லினம் வந்தால் அல்வழியில் மிகாது.

ஆறு + ஆயிரம் = ஆறாயிரம். 1. குற்றியலுகாத்துக்குப்பின் உயிர் வந்தால் அந்த உகரம் கெட்டு அது ஏறிய மெய்யில் வந்த உயிரேறும்.

2. ஆறு என்றும் எண் வருமொழியோடு சிலஇடங்களில் குறுகாமல் இயல்பாகவேநின்று புணரும்.

இரும்பு + உருண்டை = 1. இரும்புருண்டை. குற்றியலுகரத்துக்குப்பின் உயிர்வந்தால் அது கெட்டு வந்த உயிர் அந்த மெய்யில் ஏறும்.

2. இருப்புருண்டை. சில மென்தொடர் குற்றியலுகரத்துக்குப்பின் உயிர்வரின் அம்மென்றொடர் வன்றொடராதலுமுண்டு.

அன்று + போனான் = 1. அன்று போனான். மென்றொடர், இடைத்தொடர், குற்றியலுகரங்களுக்குப்பின் வல்லினம் வந்தால் அல்வழியில் மிகாது.

2. அன்றைப் போனான். அன்று, இன்று, என்று என்னும் மென்றொடர் வருமொழியோடு புணரும் பொழுது உகரம் கெட்டுஇடையில் ஐகாரச் சாரியை தோன்றும். 7

ஏழு + கடல் = 1. ஏழு கடல். 2. எழு கடல். ஏழு என்னும் எண்ணுப் பெயரின்பின் பிறப்பெயர்கள் வந்தால் நிலைமொழிமுதல் இயல்பாதலும், குறுகுதலும் இயல்பாம்.

அப்படி + செய்தான் = 1. அப்படிச்செய்தான். படி யென்னும் இடைச்சொல் சுட்டை யடுத்து வந்தால் வருமொழி வல்லினம் இரட்டிக்கும்.

2. அப்படி செய்தான். படி யென்னும் இடைச்சொல் சுட்டை யடுத்து வந்தால் வருமொழியோடு இயல்பாயும் புணரும்.

நீர் + குடித்தான் = 1. நீர் குடித்தான். இரண்டாம் வேற்றுமைத் தொகைக்குப் பின்வரும் வல்லினம் இரட்டாது.

2. நீரைக்குடித்தான். நிலைமொழி இரண்டாம் வேற்றுமை விரியாயின் அதற்குப் பின் வல்லினம் இரட்டும்.

மரம் + வேர் = 1. மாவேர். மகர வீற்றுப்பெயர்ச் சொற்களுக்குப்பின் மெய்யெழுத்துவரில் நிலைமொழி இறுதிமகரம் கெட்டுநிலை மொழியோடு புணரும்.

2. மரத்து வேர். மகர வீற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமை வழியில் வருமொழியோடு புணரும்போது ஈறுகெட்டு; முதல் குறைந்த அத்து சாரியை பெற்று வருமொழியோடு புணரும்.

65. பின் வருபவைகளை இரண்டு விதமாய்ப் பிரிக்கக்கூடும். எப்படி? பொருளென்ன?

சென்றுதைக்கும், சிறுவரம்பு, அவர்கடலை, புத்தெருக்கு, தென்னடு, மண்டெரி, வட்டவாழி, எட்டு வயல், இருப்படியும், அஞ்ஞானம்.

வி. சென்றுதைக்கும் 1. சென்று + உதைக்கும் = போய் மிதிக்கும்.

2. சென்று + தைக்கும் = போய்தாக்கும்.

சிறுவரம்பு 1. சிறு + வரம்பு = சிறுகோடு.

2. சிறுவர் + அம்பு = [illegible]வர்கள் உபயோகிக்கும் அஸ்திர[illegible]

அவர்கடலே 1. அவர்[illegible] + தலை = அவர்களுடைய தலை.

2. அவர் + கடலை = அந்த மனித[illegible]டைய கடலை.

புத்தெருக்கு 1. புது + எருக்கு = புதிதாகிய எருக்கஞ்செடி.

2. புத்து + எருக்கு = புத்தில் முளைத்த எருக்கஞ்செடி.

தென்னாடு 1. தென் + காடு = தெற்கேயுள்ள காடு.

2. தெற்கு + ஆடு = தெற்கேயுள்ள ஆடு.

மண்டெரி 1. மண்டு + எரி = மண்டி எரிகிற நெருப்பு.

2. மண் + தெரி = மண்ணானது பார்வைக்குத் தெரிகிறது.

வட்டவாழி 1. வட்டம் + வாழி = விருத்த வடிவமான வாழி என்ற காதணி.

2. வட்ட + ஆழி = விருத்தவடிவமான கடல்.

எட்டுவயல் 1. எள் + துவயல் = எள்ளினால் அரைத்த துவயல்.

2. எட்டு + வயல் = இருநான்கு வயல் நிலம்.

இரும்படியும் 1. இரும் + படியும் = உட்காரும் வாசியும்,

2. இரும்பு + அடியும் = இரும்பு என்ற லோகத்தை காய்த்து அடியும்.

அஞ்ஞானம் 1. அம் + ஞானம் = அழகிய ஞானம்.

2. அ + [illegible]ணம் = ஞானமில்லாமை.

66. பெரு + [illegible]; சிறு + அப்பன்; நாகு + இருண்டது; நாடு + [illegible]; நாடு + ஆண்டான்; கூடு + ஓட்டம்; இன்று + கு; சடு + ஆக்கை; அது + கடிது; எழு + க[illegible]ல்; கரு + ஆடு; பெரு + மூச்சு; கொக்கு + கால்; மூன்று + கம்பு; இரண்டு + கால்.

மேலே காட்டிய உகர ஈற்று நிலைமொழிகளோடு வருமொழிகளைப் புணர்த்தி விதிகூறு.

வி. பெரு + ஆவல் = பேராவல் }
கரு + ஆடு = காராடு. } பெரு அரு கரு என்னும் பண்படிகளுக்குப்பின் உயிர் வந்தால் நிலைமொழி ஈற்று உகரம் கெட்டு முதல் நீண்டு அந்த ஒற்றோடு வருமொழி உயிரேறும்.

சிறு + அப்பன் = சிற்றப்பன். சிறு, வெறு, குறு, கடு, புது என்னும் பண்படிகளின் பின் உயிர் வந்தால் உகரம் கெட்டு உகரமேறிய மெய் இரட்டித்து வந்த உயிரோடு கூடும்.

நாகு + இருண்டது = நாகிருண்டது. குற்றியலுகரத்துக்குப் பின் உயிர்வந்தால் அந்த குற்றியலுகரங் கெட்டு வந்த மெய்யின்மேல் வந்த உயிரேறும்.

நாடு + பாம்பு = நாட்டுப்பாம்பு. டகர, றகர, ஈறுகளையுடைய நெடித்தொடர் குற்றியலுகரங்கள் பண்புத்தொகையில் அவ்வுகரமேறிய மெய் இரட்டித்து புணரும்.

நாடு + ஆண்டான் = நாடாண்டான். டகர, றகர, ஈறுகளையுடைய நெடித்தொடர் குற்றியலுகரங்கள். இரண்டாம் ஏழாம் வேற்றுமை தொகையில் உகரங்கெட்டு மெய் இரட்டாமல் வந்த உயிரோடு கூடும்.

கூடு + ஓட்டம் = கூட்டோட்டம். நெடிற்றொடர் குற்றியலுகரத்துக்குப் பின் வேற்றுமை வழியில்; உயிரும், வல்லின, மெல்லின,

இடையினங்களும் வந்தால் உகரங்கெட்டு உகரமேறிய மெய் இரட்டித்து அம் மெய்யில் வந்த உயிர் ஏறும்.

ஒன்று + து = இன்றைக்கு. ஒன்று, இன்று, என்று, என்னும், மென்தொடர் குற்றியலுகரங்கள் வேற்றுமை உருபேற்கும்போது உகரம்கெட்டு ஐகாரச் சாரியை தோன்றிப்புணரும்.

கடு + ஆக்கை = கடுவாக்கை. முற்றியலுகரத்துக்குப்பின் உயிர்வந்தால் அவ்வுகரம் கெடாமல் வகர உடன்படு மெய் தோன்றும்.

அது + கடிது = அதுகடிது உயிரீற்றுச்சுட்டுப்பெயர் முன் வல்லினம் மிகாது.

எழு + கடல் = எழுகடல் விகாரப்பட்ட உகரஈற்று எண்ணுப்பெயர்முன் வல்லினம் மிகாது.

பெரு + மூச்சு = பெருமூச்சு குறு, வெறு, செறு, பெரு, அரு, என்னும் பண்படிகள் முன் மெல்லின இடையினங்கள் வந்தால் இயல்பாம்.

கொக்கு + கால் = கொக்குகால் வன்தொடர் குற்றியலுகரத்திற்குப்பின் வேற்றுமை வழியிலும் அல்வழியிலும் வல்லெழுத்து இரட்டிக்கும்.

ஒன்று + கம்பு = ஒருகம்பு ஒன்று என்னும் எண்ணுப்பெயர் வருமொழியோடு புணர்ந்தால் ஈறுகெட்டு னகரம் ரகரமாகமாறி அதன்பேரில் உகரச்சாரியை பெற்று புணரும்.

இரண்டு + கால் = இருகால் இரண்டு என்னும் எண்ணுப்பெயர் வருமொழியோடு புணரும்பொழுது ரகர ஒற்றுத்தவிர மற்ற உயிர்மெய்கள் கெட அதன்மேல் உகரச்சாரியை பெற்று புணரும்.

2. இரண்டேகால் உயர்ந்த எண்ணோடு தாழ்ந்த எண் புணரில் ஈற்றுகரம்கெட்டு ஏகாரச் சாரியை தோன்றும்.

67. பின்வரும் வார்த்தைகளைப் பிரித்து அவைகளின் அர்த்தத்துக்கும் அவ்வார்த்தைகளின் பகுபத உறுப்புகளின் அர்த்தத்துக்கும் பேதமுண்டு எனக்காட்டு.—சிந்திப்போம், பூலோகம், சுபாவம், அபாண்டம், காந்திமதி, அவதானம், பிரபஞ்சம், வரும்படி.

வி. **சிந்திப்போம்**=யோசிப்போம்.
சிந்தி+போம் (போகும்) : சிந்தி=கவிழ்த்து+போம்=போகும்.=கவிழ்த்து போகும்.

பூலோகம்=பூமி.
பூ+லோகம் : பூ=பூமி + லோகம்=தாதுப்பொருள்.=பூமியிலுள்ள தாதுப் பொருள்.

சுபாவம்=குணம்.
சு+பாவம் : சு=நல்ல+பாவம்=தோஷம்.=நல்லதோஷம்(=நூறுதோஷம்.)

அபாண்டம்=பொய்.
அ+பாண்டம் : அ=அந்த+பாண்டம்=பாத்திரம்.=அந்த பாத்திரம்.

காந்திமதி=ஒரு பெண்ணின் பேர். (நெல்லையப்ப சுவாமியின் ஸ்திரீ.)
காந்தி+மதி : காந்தி=பிரகாசிக்கின்ற+மதி=சந்திரன்.=பிரகாசமுள்ள சந்திரன்.

அவதானம்=தொழில் அல்லது மாறும்ரூபம்.
அவ+தானம் : அவ=கேவலமான+தானம்=இடம்.=கேவலமான இடம்.

பிரபஞ்சம்=உலகம்.
பிர+பஞ்சம் : பிர=அந்நிய+பஞ்சம்=வறுமை.=அந்நியமான வறுமை.

வரும்படி=வரவு, வருமானம்.
வரும்+படி : வரும்=வருகின்ற+படி=நாழி.=வருகின்ற நாழி.

68. பின் வருபவைகளைப் பிரித்து புணர்ச்சி விதிகூறு.

கல்லாட்டம், மேற்புறம், கன்மாடம், கற்றீது, தினோதயம், கோலேற்றம், இத்தர்க்கம், குதிரைக்காய்ச்சல், காராடு, புளியங்காய், விளாங்காய், களாக்காய்.

வி. (கல்லாட்டம் = கல் + ஆட்டம்)—தனிக்குறிலைச்சேர்ந்த மெய்யின்முன் உயிர்வந்தால் அந்த மெய் இரட்டும்.

மேற்புறம் = 1. மேல் + புறம்.—லகர, ளகர ஈற்று நிலைமொழியின் பின் வல்லினம் வரின் வேற்றுமைவழியில் லகரம் றகரமாகத் திரியும்.

(2) மேற்கு + புறம்—மேற்கு பிறப்பெயர்களோடு புணரும்போது நிலைமொழியின் ஈறுகெட்டு இயல்பாகவும்; லகரம் றகரமாகத் திரிந்தும் புணரும்.

கன்மாடம் = கல் + மாடம்—லகர ளகர ஈற்று நிலைமொழியின்பின் மெல்லினம் வரின் முறையே னகர, ணகரமாகத் திரியும்.

கற்றீது = கல் + தீது—லகர ஈற்று நிலைமொழியின் பின் தகரம் வரின் நிலைமொழி ஈறும் வருமொழிமுதலும் றகரமாம்.

(கவனிப்பு) சில சமயங்களில் ஒரு றகரம் கெடும். பால் + தீது = பாறீது.

தினோதயம் = தின + உதயம்.—வடமொழியாகிய நிலைமொழி அகர ஆகாரத்துக்குப்பின் உகர ஊகாரம் வந்தால் இரண்டும் கெட்டு ஓகாரமாம்.

கோலேற்றம். = கோல் + ஏற்றம். }
காராடு. = கார் + ஆடு. } ஒற்றெழுத்துக்குப் பின் உயிர் வந்தால் அந்த உயிர் மெய்யோடு கூடும்.

இத்தர்க்கம் = இ + தர்க்கம்.— சுட்டெழுத்துக்குப் பின் வல்லின மெல்லின இடையினங்கள் வந்தால் அந்தந்த ஒற்றுத்தோன்றும்

குதிரைக்காய்ச்சல் = குதிரை + காய்ச்சல், — உயி
ரையும் மெய்யையும் ஈற்றிலுடைய அஃ
றிணைப் பெயருக்குப் பின் வேற்றுமை
வழியில் வல்லினம் இரட்டிக்கும்.

புளியங்காய் = புளி + காய் — இகர ஈற்று மரப்பெ
யர்களுக்குப்பின் வல்லினம் வந்தால்
இடையில் அம்சாரியைதோன்றும்.

விளாங்காய் = விளா + காய் — உயிரீற்று சிலமரப்
பெயர்முன் வல்லினம் வந்தால் இன
எழுத்துத்தோன்றும்.

களாக்காய் = களா + காய் — உயிரீற்று சிலமரப்
பெயர்முன் வ்வல்லினம் வந்தால் இன
எழுத்துத்தோன்றாமல் அந்தந்த மெய்
இரட்டிக்கும்.

69. பின் வருபவைகளைச் சேர்த்து விதி
கூறு.

புன்னை + காய்; பனை + காய்; மலை +
ஆண்டான்; நானே + அடித்தேன்;
சாலை + பாம்பு; சில + பொம்மை;
மணி + அடி; கோ + அருமை; தே +
உடைமை; தீ + உரிமை; எ + கால்; இ
+ நாட்டு; ராமா + கொடு; உண்டது
+ கழுதை; அன்றி + போனான்; நட
வா + ஆமை; நடவா + குதிரை.

வி. புன்னை + காய் = புன்னைக்காய் நிலை
மொழியீற்று ஐகாரத்துக்குப்பின் வல்லி
னம் மிகும்.

பனை + காய் = பனங்காய் ஐகாரஈற்று சில மரப்
பெயர்முன் வல்லினம் வந்தால், ஐ
கெட்டு அம்சாரியைத்தோன்றும்.

மலை + ஆண்டான் = 1. மலையாண்டான் ஐகாரத்
துக்குப் பின் உயிர் வந்தால் யகரம்
உடம்படுமெய்யாக வரும்.

2. மலையையாண்டான் வேற்றுமைத் தொ
கையாயின் விரிந்தேநின்று புணரும்.

நானே + அடிந்தேன் = நானேயடிந்தேன் இடைச்சொல் ஏகாரத்துக்குபின் உயிர்வந்தால் யகர ஒற்றுத்தோன்றும்.

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு இருபினைப்பண்புத்தொகையின் பின்னும் வல்லெழுத்து இரட்டிக்கும்.

சில + பொம்மை = சிலபொம்மை சில, பல, என்னும் பண்படிகளின்பின் வல்லினம் இரட்டியாது.

மணி + அடி = மணியடி நிலைமொழியீற்றில் வரும் இ, ஈ, ஐ யென்னும் எழுத்துக்களுக்குப்பின் உயிர்வந்தால் யகரம் உடம்படுமெய்யாகவரும்.

கோ + அருமை = கோவருமை.—நிலைமொழி ஈற்று அ, ஆ; உ, ஊ; ஓ; ஔ; இவ்வாறு உயிருக்குப் பின்னும் உயிர்வந்தால் இடையில் வகரஒற்று தோன்றும்.

தே + உடமை = தேவுடமை.— ஓரெழுத்தொருமொழியாகிய ஓ, சே, தே என்னும் பெயர்ச்சொற்களுக்குப் பின் உயிர்வந்தால் வகரம் தோன்றும்.

அ + உரிமை = அவ்வுரிமை.— சுட்டெழுத்துக்குப் பின் உயிர்வந்தால் வகரம் உடம்படு மெய்யாக வரும்.

எ + கால் = எக்கால்.—எகர வினாவெழுத்தின் பின் வல்லினம், மெல்லினம், இடையினங்கள் வந்தால் அந்தந்த எழுத்துகள் தோன்றும்.

இ + நாட்டு = இந்நாட்டு.—சுட்டெழுத்துக்குப் பின் வல்லின, மெல்லின, இடையினங்கள் வந்தால் அந்தந்த எழுத்துகள் தோன்றும்.

ராமா + கோடு = ராமாகோடு.—உயிர் எழுத்துக்குப்பின் க, ச, த, ப, என்னும் வல்லினங்கள் வந்தால் பல இடங்களில் இரட்டிக்கும். (விளியானால் இரட்டாது.)

உண்டது + குதிரை = உண்டதுகுதிரை.—பல வகையான வினைமுற்றின் பின்னும் ஒற்றெழுத்துகள் இரட்டிக்கா.

அன்றி + போனான் = அன்றிப்போனான்.—அன்றி இன்றி என்னும் எதிர்மறை வினையெச்சங்களுக்குப்பின் வல்லெழுத்து வந்தால் அந்தந்த வல்லெழுத்து இரட்டிக்கும்.

நடவா + ஆமை = நடவாவாமை.—ஈறு கெட்ட எதிர்மறை பெயரெச்சத்திற்குப் பின் உயிர்வந்தால் வகரம் உடம்படுமெய்யாக வரும்.

நடவா + குதிரை = நடவாக்குதிரை.—ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சத்துக்குப் பின் ஒற்றெழுத்து இரட்டிக்கும்.

70. பின் வருவதிலிருக்கும் தொகைகளை எடுத்தெழுதி இன்னின்ன தொகையென்று குறிப்பிட்டு விரித்துக்காட்டு.

தேன்மொழி வந்தாள்; கல் எறிந்தான்; அடு களிறு; பொற்றொடி இவள்; கருநாகம் செத்தது; கொடியிடை மங்கை; கொற்றன் மகன்; கற்பகக் கையனிவன்; விடுகணை ஒடிந்தது; சேரசோழபாண்டியர்கள் வந்தார்கள்.

வி. தேன்மொழி - அன்மொழித்தொகை - தேனைப் போன்ற மொழியையுடைய பெண்ணென விரியும்.

கல்லெறிந்தான் — வேற்றுமைத்தொகை — கல்லால் எறிந்தான் என விரியும்.

அடுகளிறு — வினைத்தொகை — அடுகிற, அட்ட, அடும்களிறு என விரியும்.

பொற்றொடி — அன்மொழித்தொகை — பொன்னால் செய்த ஆபரணத்தைத் தொடுத்தவள் என விரியும்.

கருநாகம் — பண்புத்தொகை — கருமையான நிறமுடைய நாகம் என விரியும்.

துடியிடை — உவமைத்தொகை — துடியின் இடையைப்போன்ற இடையை உடையவள் எனவிரியும்.

கொற்றன் மகன் — வேற்றுமைத்தொகை — கொற்றனு[illegible] மகன் எனவிரியும்.

கற்பகக்கையன் — உவமைத்தொகை — கற்பகத்தைப்போலக் கொடுக்கக்கூடிய கையையுடையவன் எனவிரியும்.

விடுகணை — வினைத்தொகை — விடுகிற, விட்ட விடும் கணை எனவிரியும்.

சேரசோழபாண்டியர் — உம்மைத்தொகை — சேரனும், சோழனும், பாண்டியனும் எனவிரியும்.

IV. சொல்லதிகாரம்.

---

71. சொல்லாவதென்ன? அது எத்தனை வகைத்து.

வி. சொல்லென்றால் மொழியென அர்த்தம். தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி என மூன்றுவகைப்பட்டு இருதிணையிலும் ஐம்பாலிலுமுள்ள பொருட்களை மூன்றுஇடத்திலும் நின்று வெளிப்படையாகவாவது குறிப்பாகவாவது விளக்குவதாம்.

72. தனிமொழி, தொடர்மொழி, பொது மொழி என்றால் என்ன?

வி. தனிமொழி வேறுசொல்லோடு கலவாமல் தனியேநின்று ஒரு பொருளைக்காட்டுவது.

(உ-ம்) மண், கண், நட, படி, மிகு, சிறு, நனி.

தொடர்மொழி பல தனிமொழிகள் சேர்ந்து நின்று ஒரு பொருளைக்காட்டுவது.

(உ-ம்) இராப்பகல்; செங்கல்; சேரசோழபாண்டியர்; அக[illegible]க்கட்டி[illegible].

பொதுமொழி சில இடங்களில் தனிமொழி போலவும் சில இடங்களில் தொடர் மொழிபோலவும்நின்று பல பொருட்களைக் காட்டுவது.

(உ-ம்) வேங்கை—சிந்திப்போம்.

{வேங்கை = ஒரு மிருகம். } தனி
{சிந்திப்போம் = யோசிப்போம். } மொழி.
{வேங்கை = வேகும் கை.
{சிந்திப்போம் = கவிழ்ந்துபோகும்.

73. சொற்கள் வேறெந்த வகுப்பினதாயுமிருக்கிறது. அவைகளை விஸ்திரி?

வி. சொற்கள்; பெயர்ச்சொல், வினைச்சொல் இடைச்சொல், உரிச்சொல், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், ஒன்றொழி பொதுச்சொல், வெளிப்படைச்சொல், குறிப்புச்சொல், வடசொல், உவமைச் சொல், இரட்டைச்சொல், அடுக்குச் சொல், இசைநிறைச்சொல், அசைநிலைச் சொல், மீமிசைச்சொல், சிலேடைச் சொல், தனிமொழி (அதாவது இசைக்கும்) சொல், வியப்புச்சொல், என (20) வகையாய் பிரிக்கப்படும்.

பெயர்ச்சொல்—யாதாமொன்றின் பெயரைக் காட்டுவது.

(உ-ம்) மண், காட்சி, செய்கை, சிறப்பு செய்பவன்.

வினைச்சொல்— யாதாமொரு பொருளின் தொழிலை யுணர்த்துவது.

(உ-ம்) வா, போ, செய், நிற்கிறாய், வரோன்.

இடைச்சொல்— தனியேநின்று வழங்காமல் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் அடுத்து நிற்பது.

(உ-ம்) அவனும் இவனல்ல, ராமனே.
(உம், ஏ, இடைச்சொற்கள்.)

உரிச்சொல்— பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் தழுவி அவைகளுக்குரிய குணத்தைக்காட்டுவது.

(உ-ம்) நல்ல, நன்றாய்,
நல்ல மனிதன் பெயருரி.
நன்றாய் செய்தான் வினையுரி.

இயற்சொல்—தமிழ்பாஷையின் பிறப்பிடமாகிய பாண்டிய நாட்டாரால் பேசப்பட்டு, படித்தவர்களாலும் படியாதவர்களாலும் பொருள் அறியக்கூடியவைகளே.

(உ-ம்) மண், கல், மரம் ... பெயர்ச்சொல்.
கட, படி, செய் ... வினைச்சொல்.
ஐ, ஆல், கு, ... இடைச்சொல்.
நல்ல, கெட்ட, விரைவாய் உரிச்சொல்.

திரிசொல்—பாண்டியநாட்டு தமிழ்வார்த்தைகளாயிருந்தபோதிலும் ஒரு பொருளை காட்டும் பல சொல்லாகவும், பல பொருளைக்காட்டும் ஒரு சொல்லாகவும் நின்று படித்தவர்களால் மாத்திரம் பொருள் படக்கூடியது.

(உ-ம்) க. கிள்ளை, சுகம், தத்தை கிளியென்னும் ஒரு பொருள் குறித்த பலபெயர் திரிசொல்.
வாரணம். யானை, சங்கு, கோழி, யென்னும் பலபொருள்குறித்த ஒரு பெயர் திரிசொல்.
உ. ஏகினன், படர்ந்தான், சென்றான், போனான் என்னும் ஒரு பொருள்குறித்த பலவினைத்திரிசொல்.
வரைந்தான், நீங்கினன், கொண்டான், எழுதினன் என்னும் பல பொருள் குறித்த ஒருவினை திரிசொல்.
ங. சேரும், [illegible]தும் இவைகளில் அம், தும், என்[illegible]லை, [illegible]மை, புன்மையென்ற

ஒரு பொருள்குறித்த பல இடைத்திரிசொல்.

கோல். அசை நிலை, ஐயம், என்னும் பல பொருள் குறித்த ஒரு இடைத்திரிசொல்.

1. சால, நனி, கூர், உறு, கழி மிகல் என்னும் ஒரு பொருள் குறித்த பல உரிதிரிசொல்.

கடி. விரைவு, மணம், அச்சம், கூர்மை, என்னும் பல பொருள்குறித்த ஒரு உரிதிரிசொல்.

திசைச்சொல்—செந்தமிழ் நாடாகிய பாண்டிய நாட்டின் வார்த்தைகளாயிராமல் மற்ற தமிழ்பேசப்படும் நாடுகளிலிருந்து தங்கள் தங்கள் அர்த்தத்தோடு தமிழ் வார்த்தையாகவே ப[illegible]க்கப்பட்டு வழங்கிவரும் வார்த்தைகளாம்.

(உ-ம்) 5-ம் கேள்வியைப்பார்.

ஒன்றொழி பொதுச்சொல். உயர்திணை ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவான பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும், ஆண்பால், பெண்பால்களில் ஒன்றை ஒழித்து மற்றதைக் காட்ட உபயோகிக்கப்படுவதாம்.

(உ-ம்) ஆயிரம் மக்கள் போர் புரிந்தார்கள். இதில் "மக்கள்" "புரிந்தார்கள்" என்ற பொதுப்பெயரும் பொதுவினையும், "போர்" என்ற குறிப்பால் பெண்பாலை நீக்கி ஆண்பாலைக்காட்டினது.

2. பெருந்தேவி கருவுயிர்த்த கட்டிலின்கீழ் மக்கள் மூவர் உளர். இதில் "மக்கள்" "உளர்" என்ற பொதுப்பெயரும் பொதுவினையும் "கருவுயிர்த்த" என்ற குறிப்பால் ஆண்பாலை நீக்கிப் பெண்பாலைக் காட்டினது.

வெளிப்படைச்சொல். யாதாமொரு கஷ்டமில்லாமல் படித்தவர்கள், படியாதவர்கள் அனைவராலும் பொருள் அறியப்படும் சொற்கள்.

(உ-ம்) கல், நீர், நிலம், வீடு, காடு மலை, நதி [illegible].

குறிப்புச்சொல். யாதாமொரு கருத்தை ஒருவன் தெரிவிக்க எத்தனிக்கையில் அதனை நேராக வெளிப்படுத்தாமல் முன் பின்னுள்ள சொற்களின் சம்பந்தத்தைக் கொண்டு தெரிவிப்பதாம்.

(உ-ம்) 1. பலர் யுத்தம் செய்தார்கள். இதில் யுத்தமென்ற குறிப்பால் செய்தவர்கள் ஆண்கள் என்றும்.

2. ஆத்தி சூடி படித்தான். இதில் படித்தான் என்ற குறிப்பால் ஆத்தி சூடி என்பது ஒரு நூல் என்றும்.

3. பறவாக்கொக்கு. இதில் [illegible] பறவா என்ற குறிப்பால் கொக்கு என்பது குதிரை என்றும்.

4. வீட்டுப்புலி. இதில் வீடு என்ற குறிப்பால் புலி பூனையென்றும்.

5. குந்தியோடு ஐவர் [illegible]க்தார். குந்தியோடு என்றதால் பாண்டவர் என்றும் பொருள் படுதலறிக.

வடசொல். தமிழ் பாஷையில் அருகி வந்து வழங்குகிற சமஸ்கிருதவார்த்தைகளே.

(உ-ம்) 6-ம் கேள்வியைப்பார்.

உவமைச்சொல். ஒரு பொருளை வேறொரு பொருளோடு ஒப்பிட்டுப் பேச உபயோகிக்க[illegible] உதவும் உருபுகளான, போல, ஒ[illegible], நேர, நிகர, புரைய, உறழ, [illegible]ன்ன, [illegible]ப்ப, இயைய, ஏய்ப்

ப, அன்ன, இன்ன, அனைய, படி, என்பவற்றைப் போன்றதே.

(உ-ம்) அதைப் போல இது
அவனை ஒப்ப இவன்
இப்பிறைக்கு நேர இ[illegible]ன் கதிர்
பேசுவதில் பிள்ளைக்கு நிகர் மைனா
{ தள்ளையைப் புரைய தாதி. }
{ தகப்பனைப் புரைய தனவான் }
சக்கரத்தை உறழ விருத்தமிட்டான்
என் சொல் மான அதைச்செய்
நுதல் கடுப்ப புத்தியையுடையான்
கட்டளை இயைய இட்டிகை
எள் ஏய்ப்ப கொடுத்தான்
வார்த்தையை அன்ன செயல்
கற்பகமின்ன கையன்
மின்னலனைய வேகம்
அதன்படி இது.

இரட்டைச்சொல். தனித்தனியாய் உபயோகித்தால் யாதொரு பொருள் கொள்ளாத சிலமொழிகள் ஒன்றோடொன்று சேர்ந்து யாதாமொரு பொருளைக்கொடுக்கையில் அவைகள் இரட்டைச்சொற்களாம்.

(உ-ம்.) சுறுசுறுப்பு, கணகணப்பு, சலசலப்பு, கலகலப்பு, முணுமுணுப்பு.

அடுக்குச்சொல். ஒரு சொல் விரைவு, கோபம், உவப்பு, அச்சம், துன்பம், அசைநிலை, இசைநிறை, முதலிய காரணங்களால் ஒன்றின்பின் ஒன்றாக அடுக்கி வருவதே.

(உ-ம்) போ போ, விரைவு.
மிதி மிதி, கோபம்.
வாழேன் வாழேன், துன்பம்.
இருங்கள் இருங்கள், உவப்பு.

தீத்தீ ... ... அச்சம்
பாடேன் பாடேன் ... துன்பம்
அன்றேயன்றே ... அசைநிலை
நம்பொருதுமெய் நம்பொருதுமெய் ...
[இசைநிறை.

இசைநிறைச்சொல்.— பாட்டில் ஓசைகுன்றிய இடத்தில் அளபெடை விதிக்குமிஞ்சின இடங்களில் யாதாமொரு அர்த்தங் கொடுக்காமல் ஓசைநிறைப்பதற்குமாத் திரம் வரும் இடைச்சொற்களே.

(உ-ம்) தயாநிதியே ஏ, ஏ, ஏ, ஏ; இந்த ஏகாரங்
[கள் ... இசைநிறை.

அசைநிலைச்சொல்.— பாட்டுகளில் ஒரு அசை குறைந்த இடத்தில் அதனை பூர்த்திசெய் ய வரும் ஒரு வார்த்தையே.

(உ-ம்) கற்றதனாலாயபயன் என்கொல்.
வெம்மைகூர் நரகுய்க்கினுமெய்மையே
[விடேமால்.

மீமிசைச்சொல்.—ஒரேபொருளுள்ள பலசொற் கள் செவிக்கின்பத்தை யுண்டாக்க, தொடர்ந்து வரின் அது மீமிசைச் சொல்லாம்.

(உ-ம்) அவன் கண்டான், பார்த்தனன், கண்ணுற்
[றான்.
பள்ளக்குழி மடுவின் தண்ணீர்.

சிலேடைச்சொல்.—இரண்டு அல்லது பல அர்த் தங்கள் கொடுக்கத்தக்கதாக சொற்கள் தொடர்ந்து வருவது.

(உ-ம்) அங்கே பலகை காணப்பட்டது.
பலகை = (1) கனம் குறைச்சலாய் அறுக் கப்பட்ட மரம்.
(2) அநேக கைகள்.

ஐயா இரும்படியும்,
இரும்படியும் = (1) உட்காரும் வாசியும்.
(2) இரும்பை உலையில் காய்த்து சுத்தியால் அடியும்.

இணைமொழி (அல்லது) இசைத்தும்சொல். — இரண்டு அல்லது பல பெயர்களையாவது, இரண்டு அல்லது பல வினைகளையாவது இரண்டு அல்லது பல வாக்கியங்களையாவது இணைக்கும்படியாகவரும் சொற்களாம்.

(உ-ம்) ராமனும், கோவிந்தனும் வந்தார்கள். ராமனுடன் கோவிந்தன வந்தான்.
ராமன் வந்ததும் பேசினதும் உண்டு. ராமன் போவதோடு வெட்டுவான்.
ராமன் வந்தான், அன்றியும் இதைப் பேசினான்.
குளம் நிறைந்திருக்கும் ஏனென்றால் மழை பெய்திருக்கிறது.

இது — கூட்டு, பிரிப்பு, விரோதம், காரணம், தீர்மானம் என 5 பொருளில் வரும்.

(உ-ம்) கூட்டு — தம்பி வந்தான் பின்னும் வீட்டை கட்டினான்.
தம்பி வந்ததுமல்லாமல் இதையும் சொன்னான்.

பிரிப்பு — கோவிந்தன் மருந்து சாப்பிடுவான் அல்லது சாவான்.
கோவிந்தன் மருந்து சாப்பிடுவானே சாவானே.

விரோதம் — கோபால் வருவான் ஆனால் இதைச் செய்யான்.
கோபால் வருவானே யன்றி இதைச் செய்யான்.

காரணம்—அவன் தேறுவான் ஏனெனில் நன்றாய் படித்தான்.
அவன் தேறாததேதெனில் நன்றாய் படிக்கவில்லை.
தீர்மானம்—மழை பெய்திருக்கிறது ஆதலால் குளம் நிறைந்திருக்கிறது.
மழை பெய்திருப்பதால் குளம் நிறைந்திருக்கிறது.

வியப்புச்சொல்.— துன்பம், இன்பம், விருப்பு, வெறுப்பு, இரக்கம், கோபம், கவனம், விளித்தல், சரசம், முதலிய 9 காரணங்களைப்பற்றி ஆச்சரியத்தை உண்டாக்க உபயோகிக்கும் சொற்களே.

(உ-ம்) துன்பம்—அப்பா, அப்பப்பா, அப்பாடே, அம்மா, ஐயோ &c.,
இன்பம்—ஆகா, அடடா, அம்மம்மா.
விருப்பு—சரி, நல்லது, ஆகா, கெட்டிகெட்டி, சபாஸ்.
வெறுப்பு—அப்படியா, பத்திரம், ஜாக்கிரதை, உஜார்.
இரக்கம்—பாவம், பரிதாபம், ஐயோ, ஐயோசாமி.
கோபம்—சீ, சிச்சீ, போப்போ...
கவனம்—சப், உஷ், கவனம், ...தோ, இதோ, பார்.
விளித்தல்—ஓய், இந்தா, என்ன, அடே, காணும்.
சரசம்—சேத்திசேத்தி, பப்பளபளபளா, கெட்டிகெட்டி.

74. வழக்காவதென்ன? எத்தனை வகைப்படும், என்னென்ன பொருளை அமைத்துவரும்.

வி. தமிழ் பேசுவோர் தமிழ் பாஷையை வழங்கும் விதம் வழக்காம். இது இயல்புவழக்கு, தகுதிவழக்கு என இருவகைப்படும்,

இயல்புவழக்கு.—இயல்பாய் அமைந்த சொற்களால் பொருளைத்தெரியப்படுத்துவது.

அதில் :—

(1) இலக்கணவிதிக்கு யாதொரு பேதமின்றி வழங்குவதைத் இலக்கணமுடையது என்றும்,

(உ-ம்) நிலம், நீர், காற்று, தண்ணீர்.

(2) இலக்கண விதிக்கு ஒத்திராவிட்டாலும் இலக்கணவிதிக்கு ஒத்திருப்பதுபோல வழங்குவதை இலக்கணப்போலி என்றும்,

(உ-ம்) இல்முன் என்பதற்கு முன்றில் என்றும்; நகர்புறம் என்பதற்கு புறநகர் என்றும்; கடைபுறம் என்பதற்கு புறக்கடை என்றும் வழங்குவது;

(3) இலக்கண விதிகள் வழக்கத்தினால் சிதைந்து மருவிமாறி பின்னைப்பட்டு வழங்குவதை மரூஉ வென்றும்,

(உ-ம்) அருமருந்தன்னபிள்ளையென்பது, அருமருந்தபிள்ளையென்றும், பின்பு அருமந்த பிள்ளையென்றும் கடைசியாக அருமாந்தபிள்ளையென்றும் வழங்குவதும்— திருச்சின்றாப்பள்ளியென்பது, திருச்சிராப்பள்ளி யென்றும், கடைசியாக (திருச்சி) யென்றும் வழங்குவதும்— என் ஒப்பம்போல வென்பது (எப்பம்போல) என்று வழங்குவதுமே.

தகுதிவழக்கு.— ஒருபொருளை இயல்பாய் வழங்கும் சொல்லால் அதை உபயோகியாமல் அதற்குத்தகுதியான வேறொரு சொல்லால் இழிவு—துக்கம்—வெளிப்படை ஆகிய மூன்று காரியங்களையும் மறைத்து அதனை வழங்குவதற்கு தகுதி வழக்கு என்று பேர்.

அதில் :—

(1) இழிவான காரியத்தை மறைத்து இழிவற்ற வார்த்தையைக்கொண்டு பேசுவது இடக்கரடக்கல் என்றும்.

(உ-ம்) கால் கழுவி வந்தேன் = மலோபாதை செய்து வந்தேன்.
பவ்வீ (அல்லது) அன்னசாணி = பீ, மலம்.
நீரல்லீரம் = மூத்திரம்.
கொல்லைக்குப்போகிறேன் = மலோபாதை ஜலோபாதைக்குப் போகிறேன்.
காலைக்கடன் கழித்து வந்தான் = மலோஜலோபாதைக்குப் போய்வந்தானென்று வழங்குவதும்,

(2) துக்கமான காரியத்தை மறைத்து சந்தோஷமான வார்த்தையைக்கொண்டு பேசுவது மங்கலம் என்றும்,

(உ-ம்) நன்காடு = இடுகாடு (அல்லது) சுடுகாடு.
தாலி பெருகிவிட்டது = தாலி அறுந்து போய்விட்டது.
விளக்கு நின்றுவிட்டது = விளக்கு அணைந்து விட்டது.
வெள்ளாடு = கறுப்பு நிறமான ஆடு.
நல்ல பாம்பு = கொடியவிஷபாம்பு என்று வழங்குவதும்,

(3) வெளிப்படையாக யாவருக்கும் வழங்கும் காரியத்தை மறைத்து அதனை மறைபொருளாய் ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரம் விளங்கப் பேசுவது குழூஉக்குறியென்றும்,

(உ-ம்) சொல் விளம்பி = கள்.
பறி = பொன்.
கம்பி நீட்டிவிட்டான் = ஓடிவிட்டான்.
வெள்ளைக்குதிரை ஏறினான் = கள் குடித்தான்.
தற்குறி ஆசான் = படிப்பில்லாமுட்டாள்,

என்று வழங்குவதுமாம்.

75. அடியிற்கண்ட திசைச்சொற்களுக்குச் சரியான செந்தமிழ் சொற்களெவை.

சவுக்கு, சொக்காய், பிகு, தள்ளை, அச்சன், ஆயி, பெற்றம், செய், கிழார், எலுவன், வெள்ளம், அம்மாஞ்சி, அந்தோ, பாண்டில், கொக்கு, பாழி, எகின், கையர்.

வி.

சவுக்கு = சாட்டை	எலுவன் = தோழன்
சொக்காய் = சட்டை	வெள்ளம் = தண்ணீர்
பிகு = இறுக்கம்	அம்மாஞ்சி = அம்மான்
தள்ளை = தாய்	அந்தோ = ஐயோ.
அச்சன் = தகப்பன்	பாண்டில் = எருது
ஆயி = தாய்	கொக்கு = மாமரம்
பெற்றம் = பசு	பாழி = சிறுகுளம்
செய் = வயல்	எகின் = புளி
கிழார் = தோட்டம்	கையர் = வஞ்சகர்.

76. இரட்டைச்சொல்லுக்கும் அடுக்குத் தொடருக்கும் பேதமென்ன.

வி. (1) இரட்டைச்சொல் சப்தத்தின் மாதிரியை, அல்லது, செய்கையின் சாடையைமாத்திரம் காட்ட உபயோகிக்கப்படும் தொடர்பதங்களே.

(ஆனல்) அடுக்குத்தொடர் விரைவு, கோபம், விருப்பு, பயம், இசைநிறை, அசைநிலை முதலியவற்றால் பதங்கள் இரட்டித்துத்தொடர்வதாம்.

(2) இரட்டைச்சொற்களுக்கு தனித்தனியே யாதொரு அர்த்தமுமிராது.

(ஆனல்) அடுக்குத்தொடருக்கு தனித்தனியே அர்த்தமுண்டு.

77. உனக்குத்தெரிந்த சிலமிருகங்கள் பறவைகளின் சப்தத்தைக்குறிக்கும் மொழிகளை உனக்குத் தெரிந்தவாறு எழுது.

வி. மனிதன்—பேசுகிறான்
ஆடு—கத்தும்
மாடு—கதறும்
நாய்—குலைக்கும்
பூனை—சீறும்
எலி—கீச்சிடும்
யானை—பிளிறும்
மயில்—ஏங்கலிடும்.
சிங்கம்—கர்ச்சிக்கும்
புலி—சீறும்
நரி—ஊளையிடும்
காகம்—கரையும்
குருவி—பாடும்
குயில்—கூவும்
ஆந்தை—அலறும்
—கிளைகூட்டும்
அடைக்கலான்-கீச்சிடும்
பன்றி—உறுமும்
கரடி—உறுமும்
ஓநாய்—ஊளையிடும்
பாம்பு—சீறும்
தவளை—கத்தும்
குதிரை—கனைக்கும்
புறா—கூவும்
கழுதை—கத்தும்
குரங்கு—கீச்சிடும்.
வண்டு—இரையும்
தேனீ—இரையும்
சேவல்—கூவும்
கூகை—குறுகுறுக்கும்.

V. பெயரத்தியாயம்.

---

78. பெயர்ச்சொற்கள் எத்தனை பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவைகளை லட்சணி.

வி. இடுகுறிப்பெயர், காரணப்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், இடைச்சொல்லடியாகப்பிறந்தபெயர், தொழிற்பெயர், பொருட்பெயர், குணப்பெயர், பண்புப்பெயர், சுட்டுப்பெயர், வினாப்பெயர், வினையாலணையும் பெயர், ஆகுபெயர், என 14 பிரிவாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

இடுகுறிப்பெயர்.—யாதொரு நிமித்த காரணமின்றி ஒரு பொருளுக்கு இயல்பாய் வழங்கிவரும் பெயரே.

(உ-ம்) மரம், கல், மனிதன்.

காரணப்பெயர்—யாதாமொரு காரணத்தையிட்டு ஒரு பொருளுக்கு வழங்கிவரும் பேரே.

(உ-ம்) ஒருவனை குரும்பு செய்வதால் குரும்பன் என்றும், திருடுவதால் திருடன் என்றும், படித்துத்தேறினதால் படிப்பாளி என்றும், சொல்வனபோல் வரும்.

இடப்பெயர்.— ஏதாவது ஒரு இடத்துக்கு அழைக்கப்படும் பேரே.

(உ-ம்) பட்டணம், காடு, மலை, கடல், கரூர்.

காலப்பெயர்.—யாதாமொருகாலத்தைக் குறிப்பிட உபயோகிக்கும் பேர்.

(உ-ம்) நாளை, வருஷம், துன்முகி, மாசி, புதன்.

சினைப்பெயர்.— யாதாமொரு அவயவத்துக்கு இடப்பட்ட பேர்.

(உ-ம்) கால், கண், குடல், வால், முடி.

இடைச்சொல்லடியாய் பிறந்தபெயர்.—இடைச்சொல்லோடு பெயர் பகுபத விதிகள் சேர்ந்து உண்டாகும் பேர்களே.

(உ-ம்) மற்றவன், பிறர்.

தொழில்பெயர்.—யாதாமொரு தொழிலைக் காட்டும் பெயரே.

(உ-ம்) போர், படித்தல், செயல், செய்கை.

பொருட்பெயர்.— யாதாமொரு பொருளின் பேரைக் குறிப்பிடும் பேரே.

(உ-ம்) கல், மண, வேலி.

குணப்பெயர்.— யாதாமொரு குணத்தின் அல்லது தன்மையின் பேரைக் குறிப்பிடுவதே.

(உ-ம்) பெருமை, செம்மை, வெள்ளை, வட்டம்.

பண்புப்பெயர்.—குணப் பெயரொன்றாலும் இதுவே.

சுட்டுப்பெயர்.— சுட்டெழுத்தடியாகப் பிறந்த யாதாமொன்றைக் குறிப்பிடும்பெயரே.

(உ-ம்) இது, அவன், உக்கொற்றன்.

வினாப்பெயர்.—ஏதாவது ஒன்றை வினவ உபயோகிக்கும் பெயரே.

(உ-ம்) யார், எவன்.

வினையாலணையும் பெயர்.—வினையின் அடியாகப் பிறந்து காலங்காட்டும் இடைநிலையையும் பெயர் விகுதிகளையும் ஏற்று நிற்கும் பெயர்களே.

(உ-ம்) வந்தவன், போகிறவள், செய்வது.

ஆகு பெயர்.—பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், நாலுவகையான அளவு, சொல், தானி, கருவி, காரியம், கர்த்தன் ஆகிய பொருட்களில் ஒரு பொருளின் இயல்பான பெயர் அப்பொருளுக்கிசைந்த வேறொரு பொருளுக்கு தொன்று தொட்டு வழங்கிவருமாயின் ஆகுபெயராம்.

(உ-ம்)	செண்பகம் போன்ற முகம்	(பொருள் ஆ. பெ)
	வீடடங்கிற்று	இடம் ஆ. பெ
	காரறுத்தது	கால் ஆ. பெ
	வெற்றிலை நட்டான்	சினை ஆ. பெ
	வெள்ளை வந்தது	குண ஆ. பெ
	வற்றலுண்டான்	தொழில் ஆ. பெ
	காலாலே நடந்தான்	எண்ணல் } அளவை ஆ. பெ
	இப்புளி வீசை	எடுத்தல் } அளவை ஆ. பெ
	நாழி யுடைந்தது	முகத்தல் } அளவை ஆ. பெ
	இவ்வீடு 30 அடி	நீட்டல் } அளவை ஆ. பெ
	அவன் சொல்லை யறிந்தான்	சொல் ஆ. பெ
	விளக்கொழிந்தது	தானி ஆ. பெ
	திருவாசகம் படித்தான்	காரண ஆ. பெ
	இந்நூலலங்காரம்	காரிய ஆ. பெ
	திருவள்ளுவர் படித்தான்	கர்த்தா ஆ. பெ

வெற்றிலை கட்டான் அடையடுத்த ஆ. பெ.
(கோடிட்டவைகள் ஆகு பெயர்கள்.)

79. தொழில் பெயர் எத்தனை பிரிவுடையது. அவைகளின் விகுதிகள் யாது.

வி. 1. முதனிலையுள்ள தொழில் பெயர்.
2. முதனிலையில்லா தொழில் பெயர்.
3. முதனிலை திரிந்த தொழில் பெயர்.
4. விகுதி பெற்றுவந்த தொழில் பெயர்.
5. விகுதிபெறாது வந்த தொழில் பெயர்
(என 5 வகையாம்.)

(உ-ம்) 1. நடத்தல், உண்ணல், இதில் நட, உண் என்ற முதனிலையோடு தொழில்பெயர் விகுதிகள் சேர்ந்து தொழில்பெயராயிற்று.

2. முதனிலையில்லா தொழில் பெயர் பகுதியடியாகப் பிறவாமல் பகுக்கக்கூடாத இயல்பிலையுடையதாய் செயலை உணர்த்துகிறது. கலியாணம், பட்டினி, வேட்டை, சண்டை, ஆசை &.,

3. கேடு, வீடு, பாடு, இவைகளின் முதனிலைகளாகிய கெடு, விடு, படு, என்பவைகள் திரிந்து தொழில் பெயராயிற்று.

4. கெடுதல், விடல், பாடுகை, இவைகளில் முதனிலைகளோடு தல், அல், கை, என்ற தொழில் பெயர் விகுதிகள் சேர்ந்து தொழில் பெயராயிற்று.

(குறிப்பு-இதை முதனிலையுள்ள தொ. பெ. எனவும் கூறலாம்.)

5. வினை, கலை, உணா, இவைகள் தொழில் பெயர் விகுதிகள் ஏற்காமலிருந்தும் தொழிலின் தன்மையைக்காட்டுவதால் தொழிற் பெயர்கள்.

விகுதிகள். 35-ம் கேள்வி ஐயைப்பார்.

80. பண்புப்பெயர் எத்தனை வகைத்து அதின் விகுதியாது.

வி. வண்ணம், வடிவு, சுவை, அளவு, பரிசம், நாற்றம், இருபெயரொட்டு என 6 வகைப்படும்.

(உ-ம்)	செம்மை, பசுமை, இனிமை	வண்ணம்
	வட்டம், சதுரம், கோணல்	வடிவு
	புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு	சுவை
	நெடுக்கு, ஐந்து, முழம்	அளவு
	நொய்மை, வன்மை, மிருது	பரிசம்
	நற்கந்தம், துற்கந்தம், வெடிப்பு	நாற்றம்
	சாரைப்பாம்பு, கம்பகவி ராமக்குறவன்	இருபெயரொட்டு.

விகுதிகள். 35-ம் கேள்வி f யைப் பார்.

81. சுட்டுப்பெயர் எத்தனை வகைப்படும்.

வி. அகச்சுட்டுப் பெயர், புறச்சுட்டுப் பெயர் என இருவகைப்படும்.

(சுட்டெழுத்தை அந்தப் பெயரிலிருந்து பிரித்தபின் அந்த சுட்டெழுத்து போக மற்றது யாதாமொரு பொருளைக் காட்டினால் அது புறச்சுட்டென்றும்— அப்படி பிரித்தபின் யாதொரு பொருளும் கொடாதது அகச்சுட்டென்றும் பெயர்படும்.)

(உ-ம்)	அக்கொற்றன், இம்மனிதன், உவ்வீடு	புறச்சுட்டு.
	அவன், இவன், உவன்	அகச்சுட்டு.

82. வினாப்பெயர் எவ்வாறு வரும்.

வி. வினாவெழுத்துகளாகிய ஆ, எ, ஏ, ஓ, யா, என்னும் எழுத்துகளுடன்

1. பெயர்ச்சொல் விகுதிகள் சேர்ந்தும்.
2. பெயர்கள் சேர்ந்தும்.

வினாவுதலாகிய பொருளைக் காட்டும் சொற்களை.

(இவைகளும் மேலே 81ல் சொல்லியபடி அகவினு, புறவினு, என இருவகைப்படும்.)

(உ-ம்) 1. ஆ, எ, ஏ, ஓ, யா, என்ற வினுவெழுத்துகளோடு தனித்தனியே இருதிணை பெயர் விகுதி சேர்த்து, ஆர், எது, எவர், ஏது, யாது, யாவர், யாவன், எவன், எவை, ஆவனே என உண்டாகிறது (அகவினு.)

2. எம்மனிதன், எக்காரியம், மனிதனே, &c., என உண்டாகிறது (புறவினு.)

83. பெயர்ச்சொல்லில் எத்தனை காரியங்களைக் கவனிக்க வேண்டும்.

வி. 1. திணை, 2. பால், 3. இடம், 4. வேற்றுமை, என 4 காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

84. திணையாவதென்ன. அதின் கூறுபாடு என்ன.

வி. திணையென்றால் குலம் என்றர்த்தமாம். இது 2 வகைப்படும். உயர்திணை, அஃறிணை.

உயர்திணை. — பகுத்தறியும் தன்மையுடைய பூலோக வாசிகளும், பரலோக வாசிகளும், நரலோகவாசிகளும் இதிலடக்கம.

(உ-ம்) மக்கள், தேவர், நரகர்.

அஃறிணை.—பகுத்தறிவற்ற பிராணிகளும், உயிரற்ற பொருட்களும், இதிலடக்கம்.

(உ-ம்) மாடு, மீன், கல், மரம்.

85. பாலென்றாலென்ன. எத்தனை, எவ்வாறு பிரிக்கப்பட்டிருக்கிறது.

வி. பால் என்றால் பங்கு அல்லது பிரிவு. பூலோகத்தில் வழிபடும் பொருளாதிகளெல்லாம் 5 வகுப்பாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. அவ்வைந்தையும் இரண்டு வகையாய்ப் பிரிப்பார் ஆசிரியர்.

i. திணைப்பிரிவு ; ii. எண்பிரிவு.

I. திணைப்பிரிவு.

உயர்திணை. { ஆண்பால் — மனிதன்.
பெண்பால் — மனுஷி.
பலர்பால் — மனிதர்கள்.

அஃறிணை. { ஒன்றன்பால் — மாடு.
பலவின்பால் — மாடுகள்.

II. எண்பிரிவு.

ஒருமை. { ஆண்பால் — பையன்.
பெண்பால் — பெண்.
ஒன்றன்பால் — கன்று.

பன்மை. { பலர்பால் — அரசர்.
பலவின்பால் — கற்கள்.

86. இடமாவதென்ன? அதனைப்பிரித்துக் காட்டு.

வி. பெயர்ச்சொற்கள் வாக்கியத்தில் பொருட்படுவதில் அவைகளின் ஸ்தானத்தைக்காட்டுவது.

அவை. தன்மை, முன்னிலை, படர்க்கை, என் மூவிடமாகப்பிரிக்கப்பட்டிருக்கிறது.

தன்மையிடம்.—தன்னை அல்லது தங்களைகுறித்துக்காட்டுவது.

(உ-ம்). நான்—படிக்கிறேன்.
நாங்கள்—படிக்கிறோம்.

முன்னிலையிடம்.—முன்னிற்கும் ஆட்களைக்குறித்துக்காட்டுவது.

(உ-ம்) நீ—படித்தாய்.
நீர்—படித்தீர்.
நீங்கள்—படித்தீர்கள்

படர்க்கையிடம்.—தன்மையிடத்தையும், முன்னி

லையிடத்தையும் ஒழித்து வேறே ஆட்களைக் குறித்துக்காட்டுவது.

(உ-ம்) அவன்—படித்தான்.
அவள்—படித்தாள்.
அவர்கள்—படித்தார்கள்.
அது—படித்தது.
அவை—படித்தன.

87. வேற்றுமையாவதென்ன? அவைகள் எத்தனை வகைப்படும்? அவைகளின் பேர், உருபு, சொல்லுருபு, அவைகளை ஏற்கும் வார்த்தை வருமிடம், கொடுக்கும் பொருள் என்ன?

வி. பெயர்ச்சொற்கள் வாக்கியத்தில் உபயோகிக்கப்படுகையில் அதன்பொருள் பலவாறாக வேறுபட்டுநிற்கும்நிலையே வேற்றுமை.

(அவ்வாறு வேறுபட்டு நிற்கும் நிலை [எட்]டு வகைப்படும்.)

பேர். 1-ம் வேற்று.—எழுவாய் பொருள் வேற்.
2-ம் „ —செயப்படுபொருள் „
3-ம் „ —கருவிப்பொருள் „
[4-ம்] „ —கொடைப்பொருள் „
5-ம் „ —நீக்கப்படுபொருள் „
6-ம் „ —கிழமைப்பொருள் „
7-ம் „ —இட[ப்]பொருள் „
8-ம் „ —விளிப்[பொ]ருள் „

உருபு. 1-ம் வேற்றுமை—திரி[பில்லா]த பெயரே.
2-ம் „ —ஐ.
3-ம் „ —ஆல், ஆன், ஒடு, ஓடு.
4-ம் „ —[illegible]
5-ம் „ —இல், இன்.
6-ம் „ —அது, ஆது, அ.
7-ம் „ —கண், கால், கடை, இடை, தலை, வாய்,

திசை, வயின், முன்,
சார், வலம், இடம்,
கீழ், மேல், புடை,
முதல், பின், பாடு,
அளை, தேம், உழை,
வழி, உழி, உளி, இல்,
அகம், புறம், உள்.

8-ம் ,, —1. பெயரின்ஈறு திரிதல்
—2. ,, கெடுதல்
—3. ,, மிகுதல்
—4. ,, இயல்பாதல்
—5. ,, ஈற்றுக்கு அயல்
எழுத்து திரிதல்.

சொல்லுருபு 1-ம் வேற்றுமை.— என்பவன், என்பவள், என்பவர்கள், என்பது, என்பவை, ஆனவன் ஆனவள், ஆ[illegible]கள், ஆனது, ஆனவை.

2-ம் வேற்.— சொல்லுருபு இல்லை.
3-ம் வேற்.— உடன், கொண்டு, பற்றி, [illegible]து.
4-ம் வேற்.— பொருட்டு, நிமித்தம், ஆக.
5-ம் வேற்.— நின்று இருந்து, காட்டிலும், பார்க்கிலும், விட.
6-ம் வேற் — இன், உடைய.
7-ம் வேற்.— இடத்தில்.
8-ம் வேற்.— சொ[illegible]லுருபில்லை.

பொருள் 1-ம் வேற்.—தன்வினையின் சுதந்தரமுடைய கர்த்தாப்பொருள்.

(உ-ம்) மனிதன் வந்தான்.
ராஜாவான[illegible]கிறார்.

2-ம் வேற்.—ஆக்க[illegible], அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்[illegible]ல், உடைமை.

(உ-ம்) குடத்தை வனைந்தான்—ஆக்கல்.
வீட்டை இடித்தான்—அழித்தல்.

ஊரைச் சேர்ந்தான்—அடைதல்.
நாட்டைத் துறந்தான்—நீத்தல்.
புலியை ஒத்தான்—ஒத்தல்.
பொன்னை உடையான்—உடைமை.

3-ம் வேற்.—கருவி, கர்த்தா, உடனிகழ்ச்சி.

(உ-ம்) தண்டசக்கரத்தால் வனைந்தான்— துணை | கருவி
மண்ணால் குடத்தை வனைந்தான்—முதல் |

தச்சனால் கட்டப்பட்டவீடு—இயற்றுதல் | கர்த்தா
ராஜனால் கட்டப்பட்டவீடு—ஏவுதல் |

தந்தையோடு மகன்வந்தான்—உடனிகழ்ச்சி

மண்ணைக்கொண்டு குடத்தை வனைந்தான்
மண்கொண்டு குடத்தை வனைந்தான்

தண்டசக்கரங்கொண்டு வனைந்தான்
தறியைக்கொண்டு நெய்தான்

மகனைப்பற்றி } தந்தை பேசினான்
மகனைக்குறித்து }

4-ம் வேற்.—கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, நிமித்தம், பொருட்டு, அதுவாதல், முறை, சுட்டு, எல்லை, சிறப்பு, வீரம், உவமை, குறிப்பு.

(உ-ம்) ஏழைகளுக்குக் கொடுத்தான்—கொடை.
மூக்கறையனுக்கு கண்டபகை— பகை.
அவனுக்கு நேசன் இவன் — நேர்ச்சி.
அரசனுக்குரியது செங்கோல் — தகுதி.
கூலிக்கு வேலைசெய்தான் — நிமித்தம்.
பொரிக்கு நெல் — அதுவாதல்.
சாத்தனுக்குத் — முறை.
இச்சொத்து பொருளிது — சுட்டு.
கருநகத்து உரைகல் 5 மைல் — எல்லை.
அவனுக்குப் பெரியன் இவன் } சிறப்பு.
ராமனுக்கு இளைஞன் கோபால் }

இவன் போருக்குப் புலிதான் — வீரம்.
அரசருக்கு உவன் அமைச்சன் — உவமை.
மழைக்கு மின்னல் — குறிப்பு.

5-ம் வேற்.—நீக்கல், ஒப்பு, எல்லை, ஏது.

(உ-ம்) காமத்தில் பற்றுவிட்டான் — நீக்கல்.
பாலின் வெளிது கொக்கு — ஒப்பு.
கருரின் கிழக்கு வெரூர் — எல்லை.
இகழ்ச்சியிற் கெட்டான் — ஏது.

6-ம் வேற்.—கிழமைப் பொருள் இதில் பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், திரிபினாக்கம், (ஆகிய 5 தற்கிழமையும்) பொருள், இடம், காலம், (ஆகிய 3 பிறிதின் கிழமையும்) உரிமை, பாத்தியம், சம்பந்தம், உடைமை, முதலியது பற்றி நிற்றலாம்.

(உ-ம்) சாத்தனது வரவு — பண்பு.
மதனது கை — உறுப்பு.
காகத்தின் கூட்டம் — ஒன்றன்கூட்ட
பறவைகளுடைய கூட்டம் — பலவி [னீட்ட
மஞ்சளது பொடி — திரிபினாக்க. } தற்கிழமை

மூக்கனது மாடு — பொருட்
ராக்கனுடைய வீடு — இடப்
போக்கனது நாள் — காப் } பிறிதின் கிழமை.

7-ம் வேற்.—இடப்பொருள் (அதாவது) பொருள், இடம், காலம், சினை, குணம், தொழிலாகிய 6 பொருளும் தற்கிழமையிலும், பிறிதின் கிழமையிலும் இடமாய் நிற்றலே.

(உ-ம்) மணியில் ஒளி — த — கி } பொருளிடமாயிற்று.
பனையில் பட்சி — பி — கி }

சத்திரத்தில் வீடு—த—கி	இடயிட மாயிற்று.
ஆகாயத்தில் பருந்து—பி—கி	
நாளில் நாழிகை—த—கி	காலயிட மாயிற்று.
சித்திரையில் பாதிரிப்பூத்தது—பி—கி	
தலையில் முடி—த—கி	சினை இடமா யிற்று.
தலையில் கிரீடம்—பி—கி	
கறுப்பில் அழகு—த—கி	குணயிடமாயிற்று.
இன்மையில் செல்வம்—பி—கி	
ஆட்டத்தில் அபிநயம்—த—கி	தொழிலிடமாயிற்று.
ஆட்டத்தில் பாட்டு—பி—கி	

8-ம் வேற்.—படர்க்கைப்பொருளை முன்னிலையில் அழைத்தலாம்.

(உ-ம்) அம்மா, பிள்ளாய்—ஈறுதிரிதல்.
அரச, மக—ஈறுகெடுதல்.
மகனே, தம்பீ—ஈறுமிகுதல்.
தம்பி, அப்பன்—ஈறுஇயல்பு.
மக்காள்—ஈற்று அயல்திரிபு.

உருபு ஏற்கும் வார்த்தைகள் வரும் இடம்.

1-ம் வேற்.—வினைக்கு முன்னும் பின்னும்வரும்.

(உ-ம்) ராஜன் வருவார்—வினைக்குமுன்.
வருவார் வாங்கலரசன்—வினைக்குப்பின்.

2-ம் வேற்.—எழுவாய்க்கு பின்னும், எழுவாய்க்கு முன்னும், பயனிலைக்குப் பின்னும், பயனிலைக்கு முன்னும் வரும்.

(உ-ம்) குயவன் குடத்தை வனைந்தான்—எழுவாய்க்கு பின்னும்—பயனிலைக்கு முன்னும் வந்தது.
குடத்தைக் குயவன் வனைந்தான்—எழுவாய்க்கு முன்வந்தது.
குயவன் வனைந்தான் குடத்தை—வினைக்கு பின்வந்தது.

3-ம் வேற்.— எழுவாய், செயப்படுபொருள், வினைமுற்றுகளுக்கு முன்னும் பின்னும் வரும்.

(உ-ம்) 1. தண்டசக்கரத்தால் குயவன் வனைந்தான்—எழுவாய்க்கு முன்வந்தது.

2. குயவன் தண்டசக்கரத்தால் குடத்தை வனைந்தான் — எழுவாய்க்கு பின்னும்,— செயப்படுபொருளுக்கு முன்னும் வந்தது.

3. குடத்தைக்குயவன் தண்டசக்கரத்தால் வனைந்தான்—வினைமுற்றுக்கு முன் வந்தது.

4. குடத்தைவனைந்தான் குயவன் தண்டசக்கரத்தால் — எழுவாய், செயப்படுபொருள், வினைமுற்றுக்குப்பின் வந்தது.

4-ம் வேற்.—எழுவாய்க்கு முன்னும் பின்னும் பயனிலைக்கு முன்னும் பின்னும் வரும்.

(உ-ம்) வீட்டிற்கு நீ போ—எழுவாய்க்கு முன் வந்தது.

நீ வீட்டிற்கு போ—பயனிலைக்குமுன் —எழுவாய்க்கு பின் } வந்தது

நீ போ வீட்டிற்கு—பயனிலைக்கு பின்

5-ம் வேற்.—பெயரைத்தழுவினால் அப்பொருக்கு முன்னும் பின்னும், வினையைத்தழுவினால் அவ்வினைக்கு முன்னும் பின்னும் வரும்.

(உ-ம்) மன்னனில் கற்றோன் சிறப்புடையோன்—பெயருக்குமுன்வந்தது.

கற்றோன் மன்னனில் சிறப்புடையான்—பெயருக்குப்பின் வந்தது.

கற்றோன் சிறப்பில் வாழுவான்—வினைக்குமுன் வந்தது.

சத்ருேன் வாழுவான் சிறப்பில்—வினைக்கு பின்வந்தது.

6-ம் வேற்.—எப்பொழுதும் பெயருக்குமுன்னே யே நிற்கும்.

(உ-ம்) சாத்தன தகை. ராமனுடைய பெட்டி } பெயருக்குமுன் வந்தது.

7-ம் வேற்.—பெயருக்கு முன்னும் வரும் பின்னும் வரும்.

(உ-ம்) நீரிலே மீன் இருக்கிறது—பெயருக்குமுன். மீன் நீரிலே இருக்கிறது—பெயருக்குபின்.

8-ம் வேற்.—வாக்கியத்தின் முதலிலும், இடையிலும், கடையிலும் வரும்.

(உ-ம்) ராமா இதைச்செய்—முதலில்.
இதை ராமா செய்—இடையில்.
இதைச்செய் ராமா—கடையில்.

38. பின் வருபனவற்றிற்கு பேதமென்ன?

(1) எழுவாய்பெயர்—எட்டாம்வேற்றுமை. இயல்புஉருபு ஏற்ற பெயர்.
(2) முதற்கருவி—துணைக்கருவி.
(3) ஏவுதல் கர்த்தா — இயற்றுதல் கர்த்தா.
(4) முதலாம் வேற்றுமை கர்த்தா—மூன்றாம் வேற்றுமை கர்த்தா.
(5) தற்கிழமை—பிறிதின் கிழமை.

வி. (1) எழுவாய்பெயர்.—(1) பயனிலையைக் கொண்டு முடியும்.
(2) எட்டு வேற்றுமைகளையும் ஏற்கும்.
(3) முக்காலத்து வினையையும் கொள்ளும்.

இயல்புநபேற்ற விளிபெயர்.—1. பயனிலையைக் கொண்டு முடியாது. (தம்பி, வா= தம்பி, நீ வா என்று நின்று; வா என்ற முன்னிலைவினைக்கு எழுவாய் தொகுத்து நின்றது என அறிக.)

(2) முதற்கருவி.—இது எப்போதும் செய்பொருளை விட்டு நீங்காததாயிருக்கும்,

(உ-ம்) குசவன் மண்ணால் வனைந்தான்—மண்செய்பொருளாக அமைந்து நீங்காதிருக்கிறது.

துணைக்கருவி.—இது செய்பொருள் முடிந்தவுடன் நீங்கிப்போய்விடுகிறதாயிருக்கும்.

(உ-ம்.) குசவன் தண்டசக்கரத்தால் வனைந்தான்—இதகுடம் வனையப்படும் வரை இருந்து குடமாகிய பொருள் ஆன்பின் நீங்கிவிடுகிறது.

(3) ஏவுதல் கர்த்தா.—தானே செய்யாமல் மற்றவர்கள் செய்ய ஏவுகிறவன்.

இயற்றுதல் கர்த்தா.—மற்றவர்களின் ஏவுதலைப் பெற்று நிற்பதோடுதானே தொழிலை செய்கிறவன.

(4) 1-ம் வேற். கர்த்தா.—(1) எப்பொழுதும் செய்வினையையேகொண்டு முடியும்.
(2) ஏவுதல் இயற்றுதல் என இருபிரிவுளதல்ல.

3-ம் வேற். கர்த்தா.—(1) எப்பொழுதும் செயப்பாட்டு வினையைக்கொண்டு முடியும்.
(2) ஏவுதல் இயற்றுதல் என இருபிரிவுளதாயும், இருவகைக்கர்த்தாவும் ஒரேவாக்கியத்தில் வரும்போது இயற்றுதல் கர்த்தா

இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்று 3-ம் வேற்றுமை சொல்லுருபாகிய "கொண்டு" என்பதைப் பெற்று வரும்.

(உ-ம்) அரசனால் தச்சனைக்கொண்டு ரதம் செய்யப்பட்டது.

(5) தற்கிழமை.—தன்னோடும், தன்னோடு ஒற்றுமையான பொருளோடும் சம்பந்தப்பட்டதாயிருப்பன.

பிறிதின்கிழமை.— தன்னுடன் ஒற்றுமையில்லாதுவேறாகிய பொருட்களோடு சம்பந்தப்பட்டதாயிருப்பன.

89. முடிபிடம் என்றாலென்ன? என்னென்ன வேற்றுமைகளை யேற்றபேர்கள் எதெதைக் கொண்டு முடியும்.

வி. 1 முதல் 8 வரை வேற்றுமைகளை ஏற்கும் பெயர்களில் அதது தன்பொருளின் முடிவைக் காட்டவரும் சொற்களே முடிபிடமாம.

அவை வருமாறு.

1-ம் வேற்.—வினை, பெயர், வினா, சுட்டு முதலியதைக்கொண்டு முடியும்.

(உ-ம்) சாத்தன் வந்தான்—வினை.
சாத்தன்நல்லவன்—பெயர்.
ராமன் யார்—வினா.
கம்மான் இவன்—சுட்டு.

2-வேற்.—வினை கொண்டு முடியும்.

(உ-ம்) வீட்டைக்கட்டினான்.

3-வேற்.—வினை கொண்டு முடியும்.

(உ-ம்) வாளால் வெட்டினான்.

4-வேற்.—பெயரையும், வினையையும், கொண்டு முடியும்.

(உ-ம்) கொற்றனுக்கு மகன் — பெயர்.
கூலிக்கு செய்தான் — வினை.

5-வேற்.—பெரும்பாலும் வினையையும், சிறுபான்மை பெயரையும் கொண்டு முடியும்.

(உ-ம்) ஊரின் நீங்கினான் — வினை.
மதுரையின் வடக்கு — பெயர்.

6-வேற்.—பெயரை கொண்டு முடியும்.

(உ-ம்) கொல்லனது வீடு.

7-வேற்.—பெயரையும் வினையையும் கொண்டு முடியும்.

(உ-ம்) மணியின்கண் ஒளி — பெயர்.
ஊரின்கண் இருந்தான் — வினை.

8-வேற்.—வினையைக்கொண்டு முடியும்.

(உ-ம்) ராமா இதைச் செய்.

90. ஆண்பால் பெயர்ச்சொற்கள் பெண்பால் பெயர்ச்சொற்களாவதெப்படி.

வி. 1, ஆண்பால் விகுதிக்குப் பதிலாக பெண்பால் விகுதி சேர்வதால்.

அமைச்சன்—அமைச்சி
அவன்—அவள்
அதிகாரி—அதிகாரிச்சி
அம்மான்—அம்மாஞ்சி
அத்தை
அனுஜன்—அனுஜை
அரசன்—அரசி
அண்ணன்—அண்ணி
அடியான்—அடியாள்
அழகன்—அழகி
ஆயன்—ஆயள்
ஆண்டி—ஆண்டிச்சி
இராயன்—இராக்கினி
இராக்கத்தி
இராஜன்—இராணி

இடும்பன்—இடும்பி
இந்திரன்—இந்திராணி
ஈரன்—ஈரி
ஈசுபரன்—ஈசுபரி
உபாத்தி—உபாத்தினி
உபாத்திச்சி
உடுக்கன்—உடுக்கி
ஊமையன்—ஊமைச்சி
ஊரான்—ஊராள்
எஜமான்—எஜமாட்டி
எலும்பன்—எலும்பி
ஐயங்கார்—ஐயங்கச்சி
ஒட்டகம்—ஒட்டை
ஓடன்—ஓடதி
ஔடதன்—ஔடதி

கரியன்—கரியள்
கருப்பன்—கருப்பி
கள்ளன்—கள்ளி
காந்தன்—காந்தை
காமன்—காமி
காதலன்—காதலி
காட்டான்—காட்டாள்
கிறுக்கன்—கிறுக்கி
கிழவன்—கிழவி
கிழடன்—கிழடி
குருடன்—குருடி
குமாரன்—குமாரத்தி
குமாரி
குமரன்—குமரி
குலாலன்—குலாலி
குழையன்—குழையள்
குணவான்—குணவாட்டி
கூனன்—கூனி
கூத்தன்—கூத்தி
கெட்டவன்—கெட்டவள்
கெடுகோலன்—கெடுகோலி
கேடன்—கேடி
கொடியன்—கொடியள்
கொழுந்தன்—கொழுந்தி
சக்கரவர்த்தி—சக்கரவர்த்தினி
சிறுகன்—சிறுகி
சிவன—சிவை
சிறுவன்—சிறுவி
சிகப்பன்—சிகப்பி
சிறுமன்—சிறுமி
சீராளன்—சீராளி
சீமான்—சீமாட்டி
செம்பூரான்—செம்பூராள்
செம்பூராட்டாதி
செவிடன்—செவிடி

சேயன்—சேயி
சேவகன்—சேவகத்தி
தயாளன்—தயாளி
தமயன்—தமக்கை
தலைவன்—தலைவி
தலையன்—தலைச்சி
தனவான்—தனவாட்டி
திருடன்—திருடி
திம்மன்—திம்மி
தீயன்—தீயள்
துடுக்கன்—துடுக்கி
துரை—துரைசானி
தூயன்—தூயள்
தேவடியான்—தேவடியாள்
தொம்பன்—தொம்பி
தொம்பச்சி
தோட்டி—தோட்டிச்சி
தோழன்—தோழி
நடனன்—நடனி
நிமலன்—நிமலி
நிர்த்தேரன்—நிர்த்தேரி
நீலன்—நீலி
நீசன்—நீசி
நூதலன்—நூதலி
நலன்—நலள்
நெடியன்—நெடியள்
நெட்டையன்—நெட்டையள்
நேயன்—நேயள்
நேசன்—நேசி
பண்டிதன்—பண்டிதனி
பட்டாளத்தான்—பட்டாளத்தாள்
பாட்டன்—பாட்டி
பாலன்—பாலி, பாலிகை
பாம்பன்—பாம்பி

பாலகன்—பாலகி
பிச்சைக்காரன்—பிச்சைக்காரி
பிக்ஷுக்கன்—பிக்ஷுக்கி
பீதாம்பரன்—பீதாம்பரி
புத்திரன்—புத்திரி
புனிதன்—புனிதி
புட்டாகரன்—புட்டாகரத்தி
புண்ணியவான்—புண்ணியவாட்டி
பூரணன்—பூரணி
பூபாலன்—பூபாலி
பெருமான்—பெருமாட்டி
பேயன்—பேச்சி
பேரன்—பேத்தி
ரங்கன்—ரெங்காய்
வாலன்—வாலி
விமலன்—விமலி
வேடன்—வேடி, வேடிச்சி
வேலைக்காரன்—வேலைக்காரி
வையகத்தான்—வையகத்தாள்
வைத்தியகாரன்—வைத்தியகாரி
பொல்லாதவன்—பொல்லாதவள்

மணவாழன்—மணவாழி
மருடன்—மருடி
மடையன்—மடைச்சி
மச்சினன்—மச்சினச்சி
மனிதன்—மனுஷி
மாணாக்கன்—மாணாக்கி
மாமன்—மாமி
முனிவன்—முனி, முனிவி
மூடன்—மூடி
மைத்துனன்—மைத்துனி
மைமலன்—மைமலி
மொட்டையன்—மொட்டைச்சி
மோகன்—மோகி
மௌட்டியன்—மௌட்டிகி
யாவன்—யாவள்
ராஜன்—ராணி
ராமன்—ராமாய்
வைப்பாளன்—வைப்பாட்டி
விருத்தாப்பியன்—விருத்தாப்பி
விரத்தன்—விரத்தி
வீரன்—வீரி
விருத்தன்—விருத்தி
வேடனார்—வேடியார்

வருணத்தாரின் பேர்கள்.

அம்பட்டன்—அம்பட்டச்சி
அகம்படியன்—அகம்படிச்சி
அனவன்—அனவி
இடையன்—இடைச்சி

ஈழவன்—ஈழவத்தி
உடையான்—உடையாள்
ஐயன்—ஆச்சி
ஓட்டன்—ஓட்டச்சி
கணியான்—கணியாத்தி
கடையன்—கடைச்சி

கன்னான் — கன்னாத்தி
கள்ளன் — கள்ளச்சி
கவுண்டன் — கவுண்டச்சி
கம்மாளன் — கம்மாளச்சி
குயவன் — குயத்தி
குசவன் — குசத்தி
குறவன் — குறத்தி
குருவன் — குருவத்தி
குருவச்சி
கைக்கோளன் — கைக்கோளச்சி
கொல்லன் — கொல்லத்தி
கோமுட்டி கோமுட்டிச்சி
கோனான் — கோனிச்சி
சக்கிலியன் — சக்கிலிச்சி
சத்திரியன் — சத்திரிச்சி
சாணான் — சாணாத்தி
சூத்திரன் — சூத்திரிச்சி
செம்படவன் — செம்படத்தி
சேணியன் — சேணிச்சி
சேடன் — சேடிச்சி
சௌராஷ்டிரன் — சௌராஷ்டிரி
டொம்பன் — டொம்பி
டொம்பச்சி
தச்சன் — தச்சத்தி
தட்டான் — தட்டாத்தி
துலுக்கன் — துலுக்கச்சி
நாடான் — நாடாத்தி
நாசுவன் — நாசுவத்தி
கட்டுவன் — கட்டுவச்சி
பழிஞ்சன் — பழிஞ்சி
பள்ளன் — பள்ளி
பள்ளச்சி
பரதன் — பரத்தி
பறையன் — பறைச்சி
பட்டாணி — பட்டாணிச்சி
பார்ப்பான் — பார்ப்பினி
பார்ப்பாத்தி
பாணன் — பாணத்தி
பிராமணன் — பிராமணத்தி
புலவன் — புலத்தி
புலையன் — புலைச்சி
மராட்டியன் — மராட்டிச்சி
மறவன் — மறத்தி
யாவுகன் — யாவுகத்தி
ரெட்டி — ரெட்டிச்சி
லம்பாடி — லம்பாடிச்சி
வடுகன் — வடுகச்சி
வலையன் — வலைச்சி
வண்ணான் — வண்ணாத்தி
வன்னியன் — வன்னிச்சி
வாணியன் — வாணிச்சி
வெள்ளாளன் — வெள்ளாளச்சி
வெள்ளாட்டி
வேட்டுவன் — வேட்டுவச்சி
தொட்டியன் — தொட்டிச்சி

2. பெண்பாலுக்கே உரிய வேறு பெயர்கள் வருவதால்.

(உ-ம்) ஆம்படையான் — மனைவி
ஆண்குதிரை — பெண்குதிரை

ஐயர்—ஆச்சி
எருது—எருமை
கடா—ஆடு
புருவை
களிறு—பிடி
காளை—பசு, கடாரி
குண்டு—கோளி
சேவல்—பேடு, பெட்டை
தகப்பன்—தாய்
தம்பி—தங்கை
தந்தை—தாய்

தாலம்—வேலம்
பிதா—மாதா
பையன்—பிள்ளை
புருஷன்—ஸ்திரீ; மனைவி
விரத்தன், பிரமச்சாரி — கன்னி, கன்னியாஸ்திரி, விரத்தி
நாதன்—நாதி
அண்ணன்—அக்காள்
தாரமிழந்தவன்—விதவை

91. அடியில் வருவதில் பெயர்ச்சொற்களை எடுத்தெழுதி வேற்றுமை கற்பி.

(1) சொக்கன் மகன் காக்கன் வண்டி ஓடவில்லை.

(2) அவன் மரம் வெட்ட ராமநாதபுரம் ஜமீன் அவ[illegible] [illegible]த்தார்.

வி.	1.	சொக்கன்	4-ம் வேற்றுமை.
		மகன்	1-ம் ,,
		காக்கன்	6-ம் ,,
		வண்டி	1-ம் ,,
	2.	அவன்	1-ம் ,,
		மரம்	2-ம் ,,
		ராமநாதபுரம்	7-ம் ,,
		ஜமீன்	1-ம் ,,
		அவனை	2-ம் ,,

92. "மகன்" "தந்தை" இவ்விரண்டையும் எட்டு வேற்றுமைகளிலும் உபயோகப்படுத்தி ஒரு வாக்கியம் எழுது.

மகனால் மகனுக்கு புத்திவர மகனுடைய ம[illegible] மகனிடத்திலிருந்து வந்த மகனை மகனேயென்று அழைத்து மகனிடம் கண்ட குற்றத்துக்காக அடிக்க, அவன் தந்தையைக் கண்டு தந்தையால் கிடைக்கும் தந்தையின் தண்டனைக்கு தந்தையிடத்திலிருந்து தந்தைக்கு இடங்கொடாமல் தந்தையே

என்று கூவி தந்தையிடமே ஒண்டிக்கொண்டதைத் தந்தை கண்டான்.

93. "அக்காளை" கண்டது எப்போ வருவதற்காக.

"முதலை" கெடுத்தது மிகவும் கஷ்டம்.

யார் தான் இந்தக் "கடலை" வாங்குவார்.

"அக்காளை" "முதலை" "கடலை" இவைகளை முதலாம், இரண்டாம் வேற்றுமைகளில் உபயோகப்படுத்தி பொருள்பேதத்தைக்காட்டு.

வி. "அக்காளை" 1-ம் வேற். அ + காளை = அந்த மாடு.
2-ம் வேற். அக்காள் + ஐ = தமக்கையை.

"முதலை" 1-ம் வேற். ஒரு [illegible]
2-ம் [illegible]. [illegible] + ஐ = மூலதனத்தை.

"கடலை" 1-ம் வேற். ஓர் வகை தானியம்.
2-ம் வேற். கடல் + ஐ = சமுத்திரத்திலும் சிறிதாகிய ஓர் நீர்நிலை.

94. இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவான பெயர்களெவை.

வி. 1. தன்மைப்பெயர். நான், நாம், [illegible]ங்கள். என், எம், எ[illegible]ள்.
2. முன்னிலைப்பெயர். நீ, நீர், நீவிர், [illegible]ங்கள்.
3. பொதுப்பெயர். தான், தாம், த[illegible]ங்கள்.
4. சிலபண்புப்பெயர். செவிடு, குரு[illegible], ஊமை, கொ[illegible], மூடம், கெட்டை[illegible]டை, முதலிய.
5. சிலஉயர்வு சிறப்பு இழிவு சிறப்புபெயர்கள். } துரை, மூ[illegible]ன், கழுதை.

(உ-ம்) அவன் துரை. (முட்டாள் கழுதை)
அவன் துரை. (முட்டாள், கழுதை)

அவர்கள் துரை. (முட்டாள், கழுதை)
அது துரை. (முட்டாள், கழுதை)
அவை துரை. (முட்டாள், கழுதை)

95. எட்டாம்வேற்றுமையில் கவனிக்கத்தக்கவைகள் எவை.

வி. 6-காரியங்கள்.

1. உருபு. a. ஈறு திரிதல்.
b. ஈறு கெடுதல்.
c. ஈறு மிகுதல் (ஏ, ஓ, ஈ, மிகும் எழுத்துகள்)

(உ-ம்) ராஜமணி—ராஜமணியே.
ராஜமணியோ.
ராஜமணீ.

d. ஈறு இயல்பாதல்.
e. ஈற்று அயல் திரிதல். (திரியும் ... ஆ.

(உ-ம்) மக்கள்—மக்காள்.

2. பொருள். விளிப்பொருள் (அதாவது) அழைக்கப்படு பொருள்.

3. பிரிவு. a. அண்மைவிளி தம்பி அண்ணன்.
b. சேய்மைவிளி அம்மா, அப்பனே, தம்பீ.
c. புலம்பல்விளி அம்மாவோ, தாயே.

4. உருபேற்ற பெயர்வருமிடம்.
a. முதலில் தேவா என்னைக்கா.
b. இடையில் என்னை தேவாக்கா.
c. கடையில் என்னைக்கா தேவா.

5. ஏற்காதபெயர்கள்,
a. வினாப்பெயர். எவன், யாவன்.
b. சுட்டுப்பெயர். இது, அவர்கள்.
c. தன்மைப்பெயர். நான், நாம்.
d. முன்னிலைப்பெயர். நீ, நீர், நீங்கள்.
e. பொதுப்பெயர். தான், தாம்.

6. குறிப்பு. வியப்பு இடைச்சொல் ரூபத்தில் எட்டாம் வேற்றுமைபோலக் கா

ணப்படும் ஆனால் பொருளில் பெறப்படும்.

(உ-ம்) 1. அடா! எங்கள் குருவுக்கு நிகரில்லை.

2. அம்மா! இப்புண்ணியவதிக்கு ஈடு யார்.

96. 1. சாத்தூர் ராஜன் மகள் சித்திரம் வரைந்தாள்.

2. எமன் விருப்பம் மரணத்தில் முடிவு பெறும்.

இவைகளில் பெயர்ச் சொற்களுக்கு அதனதன் வேற்றுமை உருபுகளைச் சேர்த்து பொருள் விளங்க எழுது.

வி. 1. சாத்தூரின் ராஜனுக்கு மகளானவள் சித்திரத்தை வரைந்தாள்.

2. எமனுடைய வி[illegible]னது மரணத்[illegible] முடிவைப்பெறும்.

97. பன்மை விகுதிகளாகிய "அர்" "கள்," இவைகளை எப்படி உபயோகிப்பாய்.

வி. 1. பெயர்ச்சொற்கள் அர் விகுதிபெற்றிருந்தால் வினைமுற்றிலும் "அர்" விகுதி சேர்க்க வேண்டும்.

(உ-ம்) மனிதர் வந்தனர்; அவர் போயினர்.

2. பெயர்ச்சொற்கள் "கள்" விகுதி பெற்றிருந்தால் வினைமுற்றிலும் "கள்" விகுதி சேர்க்க வேண்டும்.

(உ-ம்) பையன்கள் வந்தார்கள்.

3. சில பெயர்ச்சொற்கள் "அர்" விகுதிபெற்றிருந்தாலும் வினைமுற்று "கள்" விகுதி பெற்று வரும்.

(உ-ம்) மனிதர் வந்தார்கள்.

4. ஒருமைப்பெயர்கள் இணைக்கும் மொழியால் சேர்க்கப்பட்டால் "அர்" விகுதியும் "கள்" விகுதியும் வினைமுற்றோடு சேர்ந்துவரும்.

(உ-ம்) அரசனோடு மந்திரியும் வந்தனர்.
ராமனும் கோவிந்தனும் வந்தார்கள்.

98. நான் என்றதின் பன்மைகளாகிய "நாம்" "நாங்கள்" "எம்" "எங்கள்" இவைகளின் உபயோகத்தில் பேதமென்ன?

வி. "நாம்" என்பது தன்மையிடத்தையும் முன்னிலையிடத்தையும் சேர்த்து குறித்து நிற்கும்.

(உ-ம்) நாம் கற்றவர் என்று ராமன் சொன்னான்.
(படர்க்கையை நீக்கி தன்மை முன்னிலை இடங்களை மாத்திரம் குறிக்கிறது.)

"நாங்கள்" "எம்" "எங்கள்" என்பவை தன்மையிடத்தை மாத்திரம் குறித்து நின்று பொருள்படும்.

(உ-ம்) 1. "நாங்கள்" கற்றவர்கள் என்று ராமன் சொன்னான்.
2. "எம்" அறிவு பெரிதென நீ சொன்னாய்,
3. "எங்கள்" செல்வம் கணக்கிடாதது உங்கள் செல்வமும் அவர்கள் செல்வமும் அப்படிக்கில்லை.
(முன்னிலை, படர்க்கை இடங்களை நீக்கி தன்மை இடத்தை மாத்திரம் குறிக்கிறது.)

99. தொழில் பெயருக்கும், வினையாலணையும் பெயருக்கும் பேதமென்ன?

வி. 1. தொழில்பெயர். வினைப்பகுதிகளோடு தல், அல், கை, மை, ஆமை, உ, டு, பு, தி, சி, வி, உள், காடு, பாடு, து, அம், முதலிய விகுதிகள் சேர்ந்து தொழில்பெயர் ஆகும்.——————ஆனால்

வினையாலணையும் பெயர். வினைப்பகுதிகளோடு
1. முக்காலத்துக்குரிய இடைநிலைகள்,
2. எச்ச விகுதிகள்.

3. ஐம்பால் விகுதிகள் முதலிய சேர்ந்து வினையால் அணையும் பெயர் ஆகும்.

2. தொ—பெயருக்கு. வினைக்குறிய தன்மை மாத்திரமிருக்கும். ———— ஆனால்
வி—அ—பெயருக்கு. வினைக்குறிய தன்மையும் பெயருக்குறிய தன்மையுமிருக்கும்.

3. தொ—பெயர். அஃறிணையாய் மாத்திரமிருக்கும். ———— ஆனால்
வி—அ—பெயர். உயர்திணையாகவுமிருக்கும்.
அஃறிணையாகவுமிருக்கும்.

(உ-ம்) முறையே.

1. படித்தல், செயல், வீடுதி. (தொ—பெயர்)
படி + கிற + அ + அன் = படிக்கிறவன் (வி-அ-பெயர்)

2. நான் வருதல் வே[illegible](எழுவாய்)(தொ-பெ:)
சாத்தன் வருவதைப்பார் (வி-அ-பெ)
"வருவது." சாத்தான் என்ற எழுவாய்க்கு பயனிலையாயும்; பார்என்ற பயனிலைக்கு செயப்படுபொருளாயும் நின்றபெயர் வினைகளின் தன்மையைக் குறிக்கிறது.

3. வருதல். கல்லது. (அஃறிணை) தொ-பெயர்.
நேற்று வந்தது இம்மனிதன்
வந்தது = வந்தவன் (உயர்திணை) வி-அ-பெ

100. வீடு, நான், செவிடன், பசு, மகுடம் இவைகளை முறையே 6-ம், 4-ம், 5-ம், 2-ம், 3-ம், வேற்றுமைகளில் எல்லா உருபும் ஏற்க வேற்றுமைப்படுத்து.

வி. வீடு. 6-ம் வேற்றுமை.—வீட்டினது, வீட்டினாது, வீட்டின, வீட்டினுடைய, வீட்டின்.

நான். 4-ம் வேற்றுமை.—எனக்கு, எனக்காக, என்னிமித்தம், என்பொருட்டு.

செவிடன். 8-ம் வேற்றுமை.—செவிடா, செ
விடனே, செவிடன்,
செவிடாவோ.

பசு. 2-ம் வேற்றுமை.—பசுவை, பசுவினை.

மகுடம். 3-வேற்றுமை.—மகுடத்தால், மகு
டத்தான், மகுடத்தொடு,
மகுடத்தோடு, மகுடத்து
டன், மகுடங்கொண்டு,
(மகுடத்தைக்கொண்டு.)

101. பின் வரும் பகுதிகளிலிருந்து பெயர்ச் சொற்கள் கற்பி.

படி, செல், வா, தேய், மேய், போ, சிரி,
குறுகு, உண், நில், நை, பேசு.

வி. படி—படிப்பு, படித்தல், படிப்பன், படிப்பாளி,
[illegible]ம்.

செல்—செல்லல், செல்லுதல், செலவு, செலா
வ[illegible].

வா—வருகை, வரவு, வரத்து, வருதல், வருகிற
வன்.

தேய்—தேய்வு, தேய்ப்பு, தேய்த்தல், தேய்ப்
போன்.

மேய்—மேய்தல், மேய்ச்சல், மேய்ப்பு, மேய்ப்
பன்.

போ—போதல், போக்கு, போகிறவன்.

சிரி—சிரித்தல், சிரிப்பு, சிரிக்கிறவன்.

குறுகு—குறுகல், குறுக்கு, குறுமன், குறைவு.

உண்—உணவு, ஊண், உண்ணுதல், உண்ணல்,
உண்டை, உண்போன்.

நில்—நிற்றல், நிற்கல், நிலை, நிலைப்பு, நிற்பவன்.

நை—நைதல், நையல், நைப்பு, நைக்கிறவன்.

பேசு—பேசல், பேசுதல், பேச்சு, பேசுகை,
பேசுவோன்.

102. னகர ஈற்று பெயர்கள் எட்டாம் வேற்றுமையை ஏற்கும்போது எவ்வாறு மாறும்.

வி. 1. ஈறு கெடுதல் அப்பன்—அப்ப.
2. ஈறு கெடுதலோடு ஈற்றயல் நீளுதல் [அப்பா.
3. நீண்டதோடு ஓகாரம் சேருதல்—அப்பாவோ.
4. நீண்டதோடு ஏகாரம் சேருதல்—அப்பாவே.
5. ஈறு இயல்பாதல் அப்பன்.
6. ஈறு இயல்போடு ஏகாரம் சேருதல் [அப்பனே.
7. ஈறுகெட்டு ஈற்றயல் அகரம் ஏகார [மாக மாறுதல் அப்பே.

103. பெயரைக்கொண்டு முடியும் சொற்களெவை?

வி. 1. 1-ம், 4-ம், 5-ம், 6-ம், 7-ம், வேற்றுமை உருபுகளை ஏற்ற பெயர்கள்.

(உ-ம்) வந்தவன் ராமன். 1-ம் வேற்.
கொற்றனுக்கு மகன். 4-ம் ,,
கல்வியில் பெரியவன் கம்பன். 5-ம் ,,
சாத்தனது வண்டி. 6-ம் ,,
சித்திரையில் பாதிரி பூத்தது. 7-ம் ,,

2. பெயரெச்சங்கள்.
(உ-ம்) பார்த்த மனிதன், படிக்கிற பையன், படிக்கும் பிள்ளை.

3. பெயருரிச்சொற்கள்.
(உ-ம்) விரைவான குதிரை, அழகான பட்சி.

4. புறச்சுட்டு.
(உ-ம்) அம்மனிதன், இவ்வீடு.

5. புறவினா.
(உ-ம்) எவ்வீடு.

104. துணைக்கருவி, உடனிகழ்ச்சி, பலவினீட்டத்தற்கிழமை, என்னும் பொருட்களில் வரும் உருபுகளெவை?

வி. துணைக்கருவி, ஆல்—தண்டசக்கரத்தால் வனைந்தான்.

கொண்டு—தண்டசக்கரங்கொண்டு வனைந்தான்.

உடனிகழ்ச்சி. ஒடு— மந்திரியொடு அரசன் வந்தான்.

ஓடு—வேலைக்காரனோடு எஜமான் வந்தான்.

உடன்—பிள்ளையுடன் தாய் வந்தாள்.

பலவினீட்டத்தற்கிழமை. அது—படைகளது தொகுதி.

105. என்னென்ன சொற்கள் எழுவாயாக உபயோகிக்கப்படும்.

வி. 1. பொருட்பெயர் கல் விழுகிறது.
2. இடப்பெயர் மதுரை அழிந்தது.
3. காலப்பெயர் சென்ற வருடம் நல்லது
4. சினைப்பெயர் கால் ஒடிந்தது
5. குணப்பெயர் வெண்மை நல்லது
6. தொழிற்பெயர் சண்டை ஓய்ந்தது
7. சுட்டுப்பெயர் அவன் ஓடுகிறான்
8. எண்ணுப்பெயர் மூன்று போயிற்று
9. [illegible]ருப்பெயர் எவன் கண்டான்
10. வினையாலணையும் [பெயர் வந்தவன் நல்லவன்
11. பண்புப்பெயர் வில் வானத்தில்விழுந்தது
12. பொதுப்பெயர் ஊமை வந்தான்
13. வினைத்தொகை கொல்யானை செத்தது
14. பண்புத்தொகை கருங்குதிரை ஓடிவிட்டது
15. இருபெயரொட்டுப் பண்புத்தொகை { சாரைப்பாம்பு அகப்பட்டது
16. உவமைத்தொகை மதிமுகம் வாடிற்று
17. உம்மைத்தொகை இராப்பகல் ஒழிந்தது
18. அன்மொழித்தொகை பொற்றொடி வந்தான்
19. எழுவாய் வேற்றுமை நீக்கிய பிறவேற்றுமைப்பெயர்கள்.

(a) 3-ம் வேற்றுமை தச்சனால் கட்டப்பட்டது.

(b) 4-ம் வேற்றுமை அவநந்த முடியும்.

(c) 6-ம் வேற்றுமை என் வரவு.

கவனிப்பு.—பொருளினால் எழுவாயாகும் பெயர்கள் 3-ம், 4-ம், 6-ம் வேற்றுமைகளை ஏற்கும்.

106. பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபை ஏற்கும்போது என்னென்ன மாறுதலடையும்.

வி. 1. முதனிலையோடு சாரியை சேர்ந்தும், சேராமலும், வேற்றுமை உருபை ஏற்கும்.

(உ-ம்) சேர்ந்து. "மரம்" மரத்தை (மரம் + அத்து + ஐ)

சேராமல். "மலை" மலையை, மலையால், மலைக்கு.

2. முதனிலையின் ஒற்று எழுத்து இரட்டித்து வேற்றுமை உருபு ஏற்கும்.

(உ-ம்) "ஆடு" ஆட்டை, [illegible]

"கயிறு" கயிற்றை, கயிற்றுக்கு.

3. முதனிலை திரிந்து வேற்றுமை உருபுகளை ஏற்கும்.

1. தன்மைப்பெயர், யான், யாம், நான், நாம்.

(உ-ம்) யான்—என்னை, என்னால், எனக்கு.

யாம்—எம்மை, எம்மால், எமக்கு.

நான்—என்னை, என்னால், எனக்கு.

நாம்—நம்மை, நம்மால், நமக்கு.

2. முன்னிலைப்பெயர் நீ, நீர்.

(உ-ம்) நீ—நின்னை, நின்னால், நினக்கு.

உன்னை, உன்னால், உனக்கு.

நீர்—நும்மை, நும்மால், நுமக்கு.

உம்மை, உம்மால், உமக்கு.

3. பொதுப்பெயர் தான், தாம்.

(உ-ம்) தான்—தன்னை, தன்னால், தனக்கு.

தாம்—தம்மை, தம்மால், தமக்கு.

கவனிப்பு.—பெரும்பாலும் பெயர்கள் முதனிலை மாறுதல் அடையாமலே வேற்றுமை உருபை ஏற்கும்.

(உ-ம்) மனிதன்—மனிதனை, மனிதனால், மனிதனுக்கு.

107. எட்டாம் வேற்றுமை உருபை ஏற்காத பெயர்கள் எவை?

வி. 1. வினாப்பெயர் எவன், யாவர், எவை.
2. சுட்டுப்பெயர் அவன், இது, உவன்.
3. தன்மைப்பெயர் நான், நாம், நாங்கள்.
4. முன்னிலைப்பெயர் நீ, நீர், நீங்கள், நுமர்.
5. பொதுப்பெயர் தான், தாம், தாங்கள்.

108. ஒரு வேற்றுமைச் சொற்கள் வேறு வேற்றுமைகளின் உருபை ஏற்று வருமோ? உதாரணங்கொடு.

வி. ஆம், பொருளை நோக்கி ஒரு வேற்றுமைப் பெயராக வருவது தொடரை நோக்கி வேறு வேற்றுமை உருபை ஏற்கும்.

1-ம் வேற்.—அவர் செய்தார். இதில் அவர் என்ற 1-ம் வேற்றுமை அவரால் செய்யப்பட்டது என 3-ம் வேற்றுமையிலும்.
நான் கேட்கிறேன். இதில் நான் என்ற 1-ம் வேற்றுமை எனக்குக்கேட்கிறது, என 4-ம் வேற்றுமையிலும்,
நான் போகுதல் சிறந்தது. இதில் நான் என்ற 1-ம் வேற்றுமை என்னுடைய போக்கு சிறந்தது என 6-ம் வேற்றுமையிலும் வரும்.

2-ம் வேற்.—இத்தோட்டத்தை நான் கொடுத்தேன். இதில் தோட்டத்தையென்ற 2-ம் வேற். இத்தோட்டம் நான் கொடுத்தது என 1-ம் வேற்றுமையிலும்,

கல்லை எறிந்தான். இதில் கல்லை என்ற 2-ம் வேற்றுமை கல்லால் எறிந்தான் என 3-ம் வேற்றுமையிலும்,

இந்தப் பாதையை விரும்பினார். இதில் பாதையை என்ற 2-ம் வேற். இந்த பாதைக்கு விருப்பம் வைத்தார் என 4-ம் வேற்றுமையிலும்,

வெள்ளியை இன்னம் செய்தான். இதில் வெள்ளியை என்ற 2-ம் வேற். வெள்ளியில் இன்னம் செய்தான் என 5-ம் வேற்றுமையிலும்,

பசுவைப் பால் கறந்தான். இதில் பசுவை என்ற 2-ம் வேற். பசுவினது பால் கறந்தான் என 6-ம் வேற்றுமையிலும்,

தூணை முட்டினான். இதில் தூணை என்ற 2-ம் வேற். தூணில் முட்டினான் என 7-ம் வேற்றுமையிலும் வரும்.

3-ம் வேற்.—கோப்பை ஓர் மண்ணால் செய்யப்படும். இதில் மண்ணால் என்ற 3-ம் வேற். கோப்பை செய்வது ஓர் மண் என 1-ம் வேற்றுமையிலும்,

காதால்கேட்ட காரியம். இதில் காதால் என்ற 3-ம் வேற். காதுக்கு கேட்ட காரியம் என 4-ம் வேற்றுமையிலும்,

பொன்னால் செய்த நகை. இதில் பொன்னால் என்ற 3-ம் வேற். பொன்னில் செய்தநகை என 5-ம் வேற்றுமையிலும்,

கம்பனால் செய்யப்பட்ட காவியம். இதில் கம்பனால் என்ற 3-ம் வேற். கம்பனுடைய காவியம்என 6-ம் வேற்றுமையிலும் வரும்.

4-ம் வேற்.—பயிரை நட்டவனுக்கு பலன் கிடைக்கும். இதில் நட்டவனுக்கு என்ற 4-ம் வேற். பயிரை நட்டவன் பலனை அடை-

வான் என 1-ம் வேற்றுமையிலும்,

குதிரைக்கு தண்ணீர் காட்டினான். இதில் குதிரைக்கு என்ற 4-ம் வேற். குதிரையை தண்ணீர் காட்டினான் என 2-ம் வேற்றுமையிலும்,

சொக்கன் பின்னுக்கு போனான். இதில் பின்னுக்கு என்ற 4-ம் வேற். சொக்கன் பின்னாலே போனான் என 3-ம் வேற்றுமையிலும்,

கோபாலுக்கு அவன் மூத்தவன். இதில் கோபாலுக்கு என்ற 4-ம் வேற். கோபாலனிலும் அவன் மூத்தவன் என 5-ம் வேற்றுமையிலும்,

அவனுக்கு வாய்ப்பேச்சு இத்திப்பு. இதில் அவனுக்கு என்ற 4-ம் வேற். அவனுடைய வாய்ப்பேச்சு இத்திப்பு என 6-ம் வேற்றுமையிலும்,

வந்ததுக்கு நான் செய்யக்கூடியதொன்றுமில்லை. இதில் வந்ததுக்கு என்ற 4-ம் வேற். வந்ததில் நான் செய்யக்கூடியதொன்றுமில்லை என 7-ம் வேற்றுமையிலும் வரும்.

5-ம் வேற்.—சிதம்பரத்தினின்று நீங்கினான். இதில் சிதம்பரத்தின்று என்ற 5-வேற். சிதம்பரத்தை நீங்கினான் என 2-ம் வேற்றுமையிலும்,

மண்ணில் செய்த குடம். இதில் மண்ணில் என்ற 5-ம் வேற். மண்ணினால் செய்த குடம் என 3-ம் வேற்றுமையிலும்,

கரூரின் கிழக்கே நெரூர். இதில் கரூரின் என்ற 5-ம் வேற். கரூருக்கு கிழக்கே நெரூர் என 4-ம் வேற்றுமையிலும் வரும்.

6-ம் வேற்.—என்னுடைய வருகை நல்லது. இதில்

என்னுடைய என்ற 6-ம் வேற். நான் வருதல் நல்லது என 1-ம் வேற்றுமையிலும்,

கிறமத்தின் அரசாட்சி நல்லது. இதில் கிருமத்தின் என்ற 6-ம் வேற். கிறமத்தை அரசாளுதல் நல்லது என 2-ம் வேற்றுமையிலும்,

பொன்னின் குடம். இதில் பொன்னின் என்ற 6-ம் வேற். பொன்னால் செய்த குடம் என 3-ம் வேற்றுமையிலும்,

அண்ணனுடைய புத்திரன். இதில் அண்ணனுடைய என்ற 6-ம் வேற். அண்ணனுக்கு புத்திரன் என 4-ம் வேற்றுமையிலும்,

இது மரக் கோடுதான். இதில் மரம் என்ற 6-ம் வேற். மரத்தினின்று நீங்கின கோடென 5-ம் வேற்றுமையிலும்,

வெயிலின் உணர்வு அவனுக்குண்டோ. இதில் வெயிலின் என்ற 6-ம் வேற். வெயிலின்கண் உணர்வு என 7-ம் வேற்றுமையிலும் வரும்.

7-ம் வேற்.—தூணில் விட்டம் தொட்டது. இதில் தூணில் என்ற 7-ம் வேற். தூண் விட்டம் தொட்டது என 1-ம் வேற்றுமையிலும்,

தூணில் சாய்ந்து நின்றான். இதில் தூணில் என்ற 7-ம் வேற். தூணைச்சாய்ந்து நின்றான் என 2-ம் வேற்றுமையிலும்,

ராமன் ஊரில் வந்தான். இதில் ஊரில் என்ற 7-ம் வேற். ராமன் ஊருக்கு வந்தான் என 4-ம் வேற்றுமையிலும்,

முத்தன் மரத்தில் ஏறினான். இதில் மரத்தில் என்ற 7-ம் வேற். முத்தன்

மரத்தின் மீது ஏறினன் என 6-ம் வேற்றுமையிலும் வரும்.

109. உருபு மயக்கமென்றாலென்ன? அதனைப் பொருள் படுத்தி வேற்றுமை கூறுவதெப்படி?

வி. பெயர்ச்சொற்கள் வேற்றுமை யுருபுகளை ஏற்று வருகையில் ஒரு வேற்றுமையின் உருபுக்குப் பதிலாக வேறொரு வேற்றுமையின் உருபு நின்று பொருள் கொடுப்பதாம்.

இப்படி வரும்பட்சத்தில் உருபை சற்றும் கவனியாமல் பொருளைக் கவனித்து அது எந்த வேற்றுமையின் பொருளோ அதே வேற்றுமையையே அதற்குச் சாட்டவேண்டும்.

(உ-ம்) கள்வனை அஞ்சினன்—4-ம் வேற். பொருளில் வந்த 2-ம் வேற்றுமை உருபு மயக்கம். (கள்வருக்கு அஞ்சினன் என்பது துணிவு)
மன்னைக்கீன்ற மாங்கொட்டை 7-ம் வேற். பொருளில் வந்த 4-ம் வேற்றுமை உருபு மயக்கம். (மண்ணில் ஈன்ற மாங்கொட்டை என்பது துணிவு.)

110. பொருள் மயக்கமென்றாலென்ன. உதாரணத்தால் விஸ்தரித்துக் காட்டு.

வி. பெயர்ச்சொற்கள் அவையேற்கும் வேற்றுமைஉருபு தொகுத்து நிற்கும் இடங்களில் 2 முதல் 7 ஈறாகப் பொருள் படுவதால், அப்படி தொகுத்த ரூபங்களுக்குப் பொருள் மயக்கம் என்று பேர்.

(உ-ம்) 1. தெய்வவணக்கம்.
a. தெய்வத்தை வணங்கும் வணக்கம்.
b. தெய்வத்துக்கு வணக்கம்.
என 2 பொருள் கொடுத்தது.
2. பால்காப்பி.
a. பாலையுடைய காப்பி.

b. பாலொடு கூடிய காப்பி.
c. பாலும் காப்பியும்.
என 3 பொருள் கொடுத்தது.

3. சொல்லிலக்கணம்.
a. சொல்லினது இலக்கணம்.
b. சொல்லுக்கு இலக்கணம்.
c. சொல்லின் இலக்கணம்.
d. சொல்லினது இலக்கணம் சொன்ன நூல்.
என 4 பொருள் கொடுத்தது.

4. பொன்மணி.
a. பொன்னாலாகிய மணி.
b. பொன்னாகிய மணி.
c. பொன்னினிடத்தில் மணி.
d. பொன்னோடு சேர்ந்த மணி
e. பொன்னும் மணியும்.
என 5 பொருள் கொடுத்தது.

5. மரவேலி.
a. மரத்தைக் காக்கிற வேலி.
b. மரத்துக்கு வேலி.
c. மரத்தினது வேலி.
d. மரத்தின் புறத்துவேலி.
e. மரத்தாலாகிய வேலி.
f. மரமாகிய வேலி.
என 6 பொருள் கொடுத்தது.

6. சொற்பொருள்.
a. சொல்லினது பொருள்.
b. சொல்லாலறியப்படுகிற பொருள்.
c. சொல்லுக்குப் பொருள்.
d. சொல்லின்கண் பொருள்.
e. சொல்லும் பொருள்.
f. சொல்லாகிய பொருள்.
g. சொல்லானது பொருள்.
என 7 பொருள் கொடுத்தது.

111. இலக்கணையாவதென்ன?
வி. உயர்திணைப் பொருட்களின் செயல் மு

தவியதை அஃறிணைப்பொருட்கள் செய்வதாகப் பாவித்து அவ்வஃறிணைப் பொருட்களை உயர் திணைப்பொருட்களாக ஏப்பிட்டு நடத்துவதாம்.

(உ-ம்) 1. வானமே! நீ கேள், தானமே! செவிகொடு
2. தன்மனதே தன்னைச் சுடும்
3. இந்த மரம் எனக்குச் சாட்சி சொல்லும்
4. இந்த பாதை கரூருக்குப் போகும்
5. நிலத்தியல்பு வானமுறைத்தாவிடும்
6. கள்ளி வயிற்றில் அகில் பிறக்கும்
7. பணம் பாதாளம் மட்டும் குத்தும்
8. அடுத்தது காட்டும் பளிங்கு
9. இக்கல்லுகளே பேசும்
10. கழுதை புத்தி கற்பிக்கும்.

112. பின் வரும் தொழில் செய்வோரை எப்படி அழைப்பாய்.

1. வேதநூல்களை கற்று ஓதுபவர்கள்
2. பொன் முதலிய லோகங்களில் வேலை செய்வோர்
3. சித்திரவேலை திறமாய்ச் செய்வோன்
4. கடலில் கப்பல் நடத்துவோன்
5. யுத்தத்தை நடத்தும் திறலோன்
6. பலகாரியங்களை அறிந்து புஸ்தகம் எழுதுபவன்
7. வியாதிகளை யறிந்து பரிகாரம் செய்வோன்
8. பலவித்தைகளை ஆசிரியனிடம் கற்போன்
9. பாட்டுகளிசைக்க வல்லோன்
10. உயிர்களை வருத்திக்கொல்கிறவன்
11. தேசங்களை ஆளச்சட்டம் ஏற்படுத்துவோன்
12. சோரம் போகாதபடி ஒன்றை பாதுகாப்போன்.

வி. 1. வேதியர்
2. தட்டார்
3. சிற்பி
4. மாலுமி
5. படைத்தலைவன் சேனைவீரன்
6. நூலாசிரியன்.
7. வைத்தியன்

8. வித்தியார்த்தி
9. பாவலன்
10. கொலையாளி
    கொலைஞன்
11. சட்டநிருபணன்
12. காவலாளன்

113. பெயர்ச் சொற்களுக்கு இலக்கணம் கூறுவதெப்படி.

வி. பெயர்ச்சொல்.

1. இடுகுறிப்பெயர் (அல்லது) காரணப்பெயர்.
2. (காரணப் பெயராயின்) பண்புப் பெயர் (அல்லது) தொழிற் பெயர் (அல்லது) வினையாலணையும் பெயர்.
3. உயர்திணை (அல்லது) அஃறிணை.
4. ஆண்பால் (or) பெண்பால் (or) பலர்பால் (or) ஒன்றன்பால் (or) பலவின்பால்.
5. தன்மையிடம் (or) முன்னிலையிடம் (or) படர்க்கையிடம்.
6. இன்ன பொருளில் வந்த இத்தனாம் வேற்றுமை.
7. இதனைக் கொண்டு முடிந்தது.

114. "கை" யென்ற ஒரு மொழிப் பெயர் வேறு பதங்களுடன் சேர்ந்து வந்தால் எவ்வாறு பொருள் படும்.

வி. கை + பெட்டி = சிறியபெட்டி = சிறுமை
கை + கோடு = உதவிகோடு = உதவி
கை + தேர் = கைதேர்ந்தான் = பழகுதல்
கை + வா = கைக்குவந்தது = அனுபவம்
கை + விரல் = கரத்திலுள்ள விரல் = கரம்
கை + ஆடு = இதைக்கையாடு = உபயோகம்
கை + பார் = கைபார்த்துசொன்னார் = நாடி
(or) நாது
கை + பற்று = அதைக்கைப்பற்றிக்கொள் = சுவா
[தினம்
கை + பிடி = அவன் கைபிடித்தான் = விவாகம்
(செய்தான்

கை + சரக்கு = கைச்சரக்கில்லாததால் அவனுக் [குப்பயமில்லை = திருட்டு

கை + ஊறு = கை ஊறாகும் குற்றம் தமதே = [அடைதல்

கை + சோர் = அவன் கைசோர்ந்தது = பலம்.

கை + விரி = தம்பி கை விரிக்கமாட்டான் = [பணமில்லையெனல்

கை + மிஞ்சல் = அவன் கை மிஞ்சவில்லை = பக் [கம், பட்சம்

கை + கை = உன்கையே கையப்பா = பலம்

கை + கூடு = அவனுக்கு கைகூடும் = அநுகூலம்

115. பின் வரும் பெயர்களுக்குப் பொருள் கூறி அப்பொருள் விழங்க வாக்கியத்திலமைத் துக் காட்டு.

குற்றேவல்	இசை	இ[illegible]
ஒறுத்தல்	எச்சம்	மா[illegible]டம்
கொளல்	நுணல்	பிறர்
குதலை	சுற்று	பொச்சாப்பு

வி. குற்றேவல் = சிறுவேலை. — தன்னை குடிகெடுக்கும் நெஞ்சிற்கு குற்றேவல் செய்தல் கெடுதி.

ஒறுத்தல் = நீக்குதல். — கோபத்தை ஒறுத்தல் மிகச் சிறந்தது.

கொளல் = கொள்ளுதல். — ராமனை வேண்டிக் கொளல் லட்சுமணன் கடமை.

குதலை = மழலைச்சொல். — குழந்தைக் குதலைச் செவிக் கின்பயக்கும்.

இசை — கீர்த்தி. — அவன் எண்டிசையும் நல்லிசை நாட்டினான்.

எச்சம் = பிள்ளை. — கருமிகள் எச்சம் இழந்து வாழ்வார்.

நுணல் = தவளை. — மணலில் கிடக்கும் நுணலும் தன் வாயால் கெடும்.

கற்று = கறவைப்பசு.—எத்துணையு மாற்றலினி தென்பப்பால்படும் கற்றுவுடையான் விருந்து.

திரு = பரிசுத்தம்.—அவனை திருமுகத்தி லடித்தான்.

மாடம் = உயர்ந்த கட்டிடம்.— அவ்வூரில் அனேக மாடமாளிகைகளுண்டு.

பிதிர் = முன்னோர்.—இது என் பிதிர்களின் சம்பாத்தியம்.

பொச்சாப்பு = மறதி.—பொச்சாப்புமிகக்கெடுதி

116. பின் வரும் வாக்கியங்களில் பெயர்ச்சொற்களுக்கு வேற்றுமை கூறு.

1. கடுக்கன் விலை அதிகமென்று செட்டி மகன் ராமன் வாய் திறந்து சொன்னான்.

2. இங்கிலாந்து விலக்கரியில் ஜலவாயு அதிகமுண்டு.

3. தசரதன் வாழ்வு போர்புரிந்த நாளே விழங்கிற்று.

4. என் அக்காள் மகன் காப்பு செம்புக் கட்டை வைத்தது.

5. புஸ்தகம் வாயிலில் கிடக்க சுப்பன் கையில் ராமன் கண்டானோ.

வி. 1.	கடுக்கன்	6-ம் வேற்.	மகன்	1-ம் வேற்.
	விலை	1-ம் வேற்.	ராமன்	1-ம் வேற்.
	அதிகம்	1-ம் வேற்.	வாய்	2-ம் வேற்.
	செட்டி	4-ம் வேற்.		
2.	இங்கிலாந்து	7-ம் வேற்.	ஜலவாயு	1-ம் வேற்.
	விலக்கரியில்	5-ம் வேற்.		
3.	தசரதன்	6-ம் வேற்.	போ[ர்]	2-ம் வேற்.
	வாழ்வு	1-ம் வேற்.	நாள்	5-ம் வேற்.
4.	என்	4-ம் வேற்.	காப்பு	1-ம் வேற்.
	அக்காள்	4-ம் வேற்.	செம்பு	3-ம் வேற்.
	மகன்	6-ம் வேற்.	கட்டை	2-ம் வேற்.

5. புஸ்தகம் 1-ம்வேற். கையில் 7-ம் வேற்.
வாயிலில் 7-ம்வேற். ராமன் 1-ம் வேற்.
சுப்பன் 6-ம்வேற்.

117. அடைமொழியென்றாலென்ன?

வி. எழுவாய், பயனிலை, செயப்படு பொருளாகிய இம்மூன்றையும் சார்ந்து வருவது அடைமொழியாம்.

(உ-ம்) செந்தாமரை மலர்ந்தது, இதில்தாமரை என்ற எழுவாயைச்சார்ந்த அடைமொழி செம் என்பது.

ராமன் வாளால் வெட்டினான் இதில் வெட்டினான் என்ற பயனிலையைச்சார்ந்த அடைமொழி வாளால் என்பது.

சைவர் விஷ்ணுவின் நற்றாள் தொழார். இதில் தாள் என்ற செயப்படுபொருளைச் சார்ந்தது நல் என்ற அடைமொழி.

118. எழுவாய்க்கு அடை மொழிகளாக வரும் சொற்களெவை?

வி. 1. பெயர்ச் சொற்கள்.—இதில்
1. பண்புப்பெயர்.
2. அளவுப்பெயர்.
3. தொகைப்பெயர்.
4. 6-ம் வேற்றுமைப்பெயர்.
5. 7-ம் வேற்றுமைப்பெயர்.
6. சினைப்பெயர்..............அடங்கும்.

(உ-ம்) 1. பண்புப்பெயர்.
வெள்ளைக்கொடி பறந்தது பண்புப்பெயர்
நாகப்பாம்பு கடித்தது இருபெயரொட்[டு பண்பு-பெ.

2. அளவுப்பெயர்.
இரண்டு பெயர் வந்தார்கள் எண்ணல் அளவு-பெயர்
வீசை வெல்லம் கிடைத்தது எடுத்தல் அளவு-பெயர்.

கலம் நெல் குறைந்தது முகத்தல் அ-பெ
ஏக்கர் நிலம் விற்றான் நீட்டல் அ-பெ
மாடுகள் எல்லாம் வந்தது முழுமை [அளவு-பெ
துரை மாத்திரம் வந்தார் தனிமை அ-பெ
மாணாக்கர் சிலர் தேறினார்கள் குறைவு [அளவு-பெயர்.

3. தொகை.
கோல் யானை செத்தது வினைத்தொகை
மண் குடம் உடைந்தது வேற்றுமைத் [தொகை.

4. 6-ம் வேற்றுமை உருபேற்றபெயர்.
ஆட்டுக்கால் ஒடிந்தது 6-ம் வேற்றுமைத் [தொகை.
ஆட்டினது கால் ஒடிந்தது 6-ம் வேற்று [மை விரி.

5. 7-ம் வேற்றுமை உருபேற்றபெயர்.
மரங்களில் ஒன்று சாய்ந்தது 7-ம் வேற்று [மை விரி.

6. சினைப்பெயர் செங்கால் நாரை விழுந்தது [சினைப்பெயர்.

II. பெயரெச்சம்.
ஓடின மான் பிடிபட்டது தெரிநிலைபெய [ரெச்சம்.
அந்த ஆள் போய்விட்டது குறிப்பு பெய [ரெச்சம்.

III. பெயரெச்சத்தொடர்மொழி.
தோட்டத்திலிருந்த நெட்டை [மரம் சாய்ந்தது.
கிணற்றில் தவறிவிழுந்த [பிள்ளை பிழைத்தது.
} பெயரெச்சத் தொடர்மொழி.

IV. இடைச்சொற்கள்.
அப்புஸ்தகம் இருந்தது—சுட்டாகியஇடை.
எம்மனிதன் ஓடினான்—வினாவாகியஇடை.
அவன் தான் செய்தான்—தேற்றப்பொரு [ளாகிய இடை.

V. பெயருரிச்சொல்.

சிவப்புசாயம் போய்விட்டது இயல்பு }
செந்தாமரை மலர்ந்தது விகார } [illegible]

VI. மேலே சொல்லப்பட்டவைகளில் பல
து சேர்ந்தும் வரும்.

பிள்ளையைக் கடித்த கருநாகப் பாம்பு
[செத்தது.

உலர்ந்த அந்த மஞ்சள் கிழங்கு இடிபட்
[டது.

119. பின்வரும் பெயர்ச்சொற்றொடர்களுக்கு அர்த்தபேதமென்ன ?

1.	மோதிரவிரல்	விரல்மோதிரம்
2.	கடைப்பக்கம்	பக்கக்கடை
3.	வண்ணான்துறை	துறைவண்ணான்
4.	கறுப்புச்சாயம்	சாயக்கறுப்பு
5.	காட்டுமயில்	மயில்காடு
6.	வீதிக்கிணறு	கிணற்றுவீதி
7.	பெண்பள்ளி	பள்ளிப்பெண்
8.	விறகுக்கட்டு	கட்டுவிறகு
9.	கரும்புஆலே	ஆலைக்கரும்பு
10.	கோயில்மாடு	மாட்டுக்கோயில்
11.	குதிரைவண்டி	வண்டிக்குதிரை
12.	விளக்குத்தண்டு	தண்டுவிளக்கு.

வி. 1. மோதிரத்தை அணிகின்ற விரல்
விரலில் போடத்தக்க மோதிரம்

2. கடைகளிருக்கப்பட்ட திசை
சமீபத்திலிருக்கப்பட்ட கடை

3. வண்ணான் வெளுக்குமிடம்
துறையிலிருக்கப்பட்ட வண்ணான்

4. கறுப்பு நிறத்தைக் கொடுக்கிற சாயம்
சாயத்தை உண்டாக்கும் கறுப்பு

5. காட்டிலே வாசம் செய்கிற மயில்
மயில் வாசம் செய்கிற காடு

6. வீதியிலே வெட்டப்பட்டிருக்கிற கிணறு
கிணற்றுக்குப் போகிற வீதி
7. பெண்கள் படிக்கிற பள்ளிக்கூடம்
பள்ளிக்கூடத்தில் படிக்கிற பெண்
8. விறகுகளைச் சேர்த்துக் கட்டிய கட்டு
கட்டாகக்கட்டி வைத்திருக்கிற விறகு
9. கரும்பை ஆட்டுகிற ஆலை
ஆலையில் ஆட்டக்கூடிய கரும்பு
10. கோயிலுக்கென்று விடப்பட்ட மாடு
மாடுகளை பலி செலுத்துங் கோவில்
11. குதிரை கட்டி இழுக்கப்படும் வண்டி
வண்டியில் கட்டக்கூடிய குதிரை
12. விளக்கு வைக்கிற தண்டு
தண்டில் வைக்கக்கூடிய விளக்கு.

120. அடியில் வருவன சரியா? நியாயஞ் சொல்லு.

1. ராஜாத்தி ஒருவனை ஏற்படுத்தியிருக்கிறார்.
2. கோபம் ஒரு சண்டாளன்.
3. சூரியன் காந்தியாய் பிரகாசிக்கிறான்.
4. நிலவு ஒரு சீதேவி தான்.
5. இங்கிலாந்து மிகவும் செழிப்பானவன்
6. அவன் ஒரு பெண்.
7. தையலில் அவள் மகாதீரன்.
8. காற்று மகா பராக்கிரமசாலி.
9. மீனாட்சி என்ற கப்பல் ஓட்டத்தில் கெட்டிக்காரி.
10. கங்கையெங்குமிருக்கிறான்.

வி. 1. உயர்திணையிலே பெண்பாலை ஆண்பாலாக உபயோகித்திருப்பதால் சரி.
2 & 3 சிறப்பினாலே அஃறிணையை உயர்திணையாகவும் ஒன்றன்பாலை ஆண்பாலாகவும் உபயோகித்திருப்பதால் சரி.

4. மகிழ்ச்சியினாலே ஒன்றன்பாலை பெண்பாலாக உபயோகித்திருப்பதால் சரி.
5. சிறப்பாலே அஃறிணையை உயர்திணையாவும் ஒன்றன்பாலை பெண்பாலாகவும் உபயோகித்திருப்பதால் சரி.
6. பழிப்பினாலே ஆண்பாலை பெண்பாலாக உபயோகித்திருப்பதால் சரி.
7. உயர்வினாலே பெண்பாலை ஆண்பாலாக உபயோகித்திருப்பதால் சரி.
8. சிறப்பினாலே அஃறிணையை உயர்திணையாக உபயோகித்திருக்கிறதால் சரி.
9. 5வதுக்குச் சொல்லிய நியாயமே.
10. மகிழ்ச்சியாலே அஃறிணை உயர்திணையாக உபயோகித்திருப்பதால் சரி.

121. பின்வருவதில் வேற்றுமைகளை பொருள் பேதமில்லாமல் மாற்றி யெழுது.

1. ராமன் மாமரம் வெட்டினான்.
2. காமன் சோமனுடைய மகன்.
3. சொக்கனால் கட்டப்பட்டவீடு.
4. மதுரைக்கு வடக்கேபோனால் சிதம்பரம் பார்க்கலாம்.
5. ஸ்ரீகாமன் கண்ணாடி உடைந்துவிட்டது.
6. அதை மேசைக்குப் பக்கத்தில் வை.
7. ராமா என்று கூவி சொன்னான்.

வி. 1. மாமரம் ராமனால் வெட்டப்பட்டது.
2. காமன் சோமனுக்கு மகன்.
3. சொக்கன் கட்டின வீடு.
4. மதுரையின் வடக்கே போனால் சிதம்பரத்தைப் பார்க்கலாம்.
5. ஸ்ரீகாமனுடைய கண்ணாடிக்கு உடைவு நேரிட்டது.
6. அதை மேசையின் பக்கத்தில் வை.
7. ராமனைக் கூவிச் சொன்னான்.

122. பின்வருவதைத் திருத்தி நியாயங்கூறு

1. அவன் மெத்தக் கெட்டிக்காரி.

2. காமாட்சி காசு வைத்திருக்கிறாள் ஆனால் அதுக்கு உன்கையில்கொடுக்கமனமில்லை.
3. நேற்றுவந்தவன் மகாதிருடு.
4. மலைக்கு நதி ஓட்டம் சகஜம்.
5. கொற்றனுடைய மகன் ராமன்.
6. ராமனும், கோபாலும், கோவிந்தனும், தோட்டத்திலோடினான்.

வி. 1. "அவன் மெத்த கெட்டிக்காரன்."
எழுவாயோடு பயனிலை பால், இடம், முதலியதில் ஒத்திருக்கவேண்டும்.

2. "காமாட்சி காசு வைத்திருக்கிறாள். ஆனால் அவளுக்கு உன் கையில் கொடுக்க மனமில்லை."
பெயர்ச்சொல் எத்திணையோ அத்திணையிலேயே அதைக் குறிப்பிடும் பதிற் பெயருமிருக்கவேண்டும்.

3. "நேற்று வந்தவன் மகா திருடன்."
பால் வெளிப்படையாயிருக்கையில் ஐம்பால் பொதுப்பெயரைக்கொண்டு பயனிலை கொள்ளல் தகுதியன்று.

4. "மலையிலிருந்து நதி ஓட்டம் சகஜம்."
4-ம் வேற்றுமைக்கு நீக்கல் பொருளில்லை. ஆதலால் 5-ம் வேற்றுமை உருபு ஏற்பது தகுதி.

5. கொற்றனுக்கு மகன் ராமன்.
6-ம் வேற்றுமைக்கு முறைப்பொருளில்லை யாதலின் 4-ம் வேற்றுமை உருபேற்று உபயோகிப்பது தகுதி.

6. ராமனும், கோபாலும், கோவிந்தனும் தோட்டத்தில் ஓடினார்கள்.
பல எழுவாய்கள் ஒரு மொழியால் இணைக்கப்பட்டுபொதுத்தன்மையை காட்டுகையில் பயனிலை பன்மையாகவே யிருக்கவேண்டும்.

123. ஓடு, ஓட்டு, பிய், பிடி, குவி, சேர்,

தேறு, வார், அமை, புசி, வீசு, ஏறு, இப்பகுதிக ளிலிருந்து பெயர்ச்சொல் கற்பி.

வி. ஓடு—ஓடுதல், ஓடுகை, ஓடம், ஓடுபவன்.
ஓட்டு—ஓட்டுதல், ஓட்டுகை, ஓட்டம், ஓட்டுகிற வன்.
பிய்—பிய்த்தல், பிய்ப்பு, பிய்ப்பது.
பிடி—பிடித்தல், பிடிப்பு, பிடை, பிடிக்கிறவன்.
குவி—குவித்தல், குவியல், குவிப்பு, குவிப் பவன்.
சேர்—சேர்தல், சேர்க்கை, சேரி, சேர்ப்பவன்.
தேறு—தேறுதல், தேற்றல், தேற்றம், தேற்சி தேறுகிறவன்.
வார்—வார்ப்பு, வார்த்தல், வார்க்கிறவன், வாரி.
அமை—அமைதல், அமைதி, அமைப்பு, அமைச் சு, அமைக்கிறவன், அமைச்சன்.
புசி—புசித்தல், புசிப்பு, புசிக்கிறவன், பூசை.
வீசு—வீசுதல், வீசுகை, வீச்சம், வீசுகிறவன்.
ஏறு—ஏறுதல், ஏற்றம், ஏற்பது, ஏற்பவன்.

124. அடியில் வருவது சரியா? பிழையா னல் திருத்து? ஒவ்வொன்றுக்கும் நியாயம் சொல்லு.

1. ஒருவனைப் பார்த்து 'அவர் வந்தார்.'
2. பசுவைப் பார்த்து 'என் அம்மை வந்தாள்'.
3. 'குசவன் வனைந்தான் குடம்'
4. சாகாத ஒருவனைப்பற்றிப்பேசுகையில் 'அவன் செத்தான்' என்பது.
5. ஒரு மனிதனை 'கழுதை வந்தான்' என்பது.
6. 'என் தாயே உன்னை அன்றி நாதன் வேறில்லை' என்பது.
7. 'சுடுகாட்டை நன்காடு' என்பது.
8. ஆத்திச்சூடி படித்தான்' என்பது.
9. 'திருவள்ளுவர் படித்தான்' என்பது.
10. பசுவின் கன்றை 'மாட்டுப்பிள்ளை' என்பது.

வி. 1. சிறப்பினால் ஒருமையை பன்மையாய் உபயோகித்திருப்பதால் சரி.

2. அருமை, மகிழ்ச்சிமுதலிய ஏதுக்களால் அஃறிணையை உயர்திணையாக உபயோகித்ததால்சரி.

3. 2-ம் வேற்றுமை உருபு வினைமுற்றுக்குப் பின் தொகுத்து வரலாகாது ஆதலால் 'குசவன் வனைந் தான் குடத்தை' என்பது திருத்தம்.

4. பழிப்பினாலும், சினத்தினாலும் நடவாதக் காரியத்தை நடந்ததாகச் சொல்வது இயல்பாதலின் சரி.

5. இழிவினால் உயர்திணையை அஃறிணையாகப் பேசப்பட்டதால் சரி.

6. சிறப்பினால் பெண்பாலை ஆண்பாலாக உபயோகித்ததால் சரி.

7. துக்கத்தை மறைக்கும்பொருட்டு தகுதி வழக்காய் உபயோகித்ததால் சரி.

8. தகுதிபற்றி இப்பேனை காப்பினுடைய நூலுக்கு குறிப்பாகச் சொல்லப்படுவதால் சரி.

9. படித்தான் என்னும் குறிப்பால் திருவள்ளுவர் இயற்றிய நூலை குறிப்பிடுவதால் சரி.

10. பெரியோர் எதேதை எப்படி எப்படி அழைத்தார்களோ அப்படியே அழைத்தல் தகுதியாதலின் மாட்டுப்பிள்ளை யென்பது தப்பு 'மாட்டுக் கன்று' என்பது திருத்தம்.

VI. வினையத்தியாயம்.

125. வினைச்சொல்லாவதென்ன?

வி. ஒருபொருளின் (பெயரின்) அசைவால் காட்டப்படும் தொழிலை உணர்த்துவது.

(உ-ம்) அவன் வந்தான்.
குயவன் வனைந்தான்.

இதில், அவன், குயவன், என்ற எழுவாயின் செய்கையை காட்டுகிற வந்தான் வனைந்தான் என்பவை வினைகளாம்.

126. வினைச்சொல்லில் எத்தனை காரியங்களை அறியவேண்டும்.

வி. வினைச்சொல்லில் செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செயப்படு பொருள் ஆகிய 6 காரியங்களை அறியவேண்டும். ஆனால் செயப்படுபொருள் குன்றிய வினையில் செயப்படுபொருள்மட்டும் தோன்றாது.

(உ-ம்) வனைந்தான், இதில் குயவனாகிய செய்பவனும் மண், தண்டசக்கரமுதலிய கருவிகளும் கடந்தநேரமாகிய காலமும், வனைந்த இடமாகிய நிலமும், வனைதலாகிய செயலும், பாண்டமாகிய செய்பொருளும் என 6 காரியங்கள் விழங்குகிறது.

(ஆனால்) செயப்படுபொருள் குன்றியவினையாகிய 'இருந்தான்' என்பதில் இருந்தவனாகிய செய்பவனும், இருத்தலுக்குரிய ஆசனமாகிய கருவியும், ஆசனம் போடப்பட்ட இடமாகிய நிலமும் இருத்தலாகிய செயலும், இருந்த நேரமாகிய காலமும், தோன்றுகிறது. (இருத்தலாகிய செயலில் யாதொரு செய்பொருளுமில்லாததால் அதுமாத்திரமிலது.)

127. வினைச்சொற்கள் எத்தனைவகையாய்ப் பிரிக்கப்படும்.

வி. தெரிநிலைவினை—குறிப்புவினை என்ற 2 பெரிய பிரிவுகளாகவும்,—முற்றுவினை, எச்சவினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, செயப்படுபொருள் குன்றியவினை, செயப்படுபொருள் குன்றாவினை, விதிவினை or உடன்பாட்டுவினை, மறைவினை or எதிர்மறை வினை, வியங்கோள்வினை, ஏவல்வினை, துணைவினை, தொடர்வினை, பொதுவினை என 15 சிறு பிரிவுகளாகவும் பிரிக்கப்படும்.

128. உனக்கு தெரிந்தவாறு வினைகளை எழுதி லட்சணி.

(1) 1. தெரிநிலைவினை. ஏவல் பகுதியில் தோன்றி செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய் பொருளாகிய 6 காரியங்களும் வெளிப்படையாக நிற்பது.

(உ-ம்) வணைந்தான்.

2. குறிப்பு வினை. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற 6 பொருளில் ஏதாவது ஒன்றை முதனிலையாகக் கொண்டு தோன்றி விகுதியால் செய்பவினை மாத்திரம் வெளிப்படையாகக்காட்டி, மற்ற விஷயங்களைக்குறிப்பாகக் காட்டுவது.

(உ-ம்) பொன்னன்—பொருளடியாகப்பிறந்த கு-வி.
காட்டான்—இட ... ... கு-வி.
சித்திரையான்—கால ... கு-வி.
மூக்கன்—சினை ... ... கு-வி.
வெள்ளையன்—குண ... ... கு-வி.
உழியன்—தொழில் ... ... கு-வி.

இவைகளை பொன்னையுடையவனாயினான், ஆகிருன், ஆவான் என விரித்து வினைக்குறிய இலக்கணங்களை உணர்த்துக.—மற்றவைகளுமிவ்வாறே.

3. முற்றுவினை. பால்காட்டும் விகுதிகளை ஏற்றினுடையதாய் தன் எழுவாயாகிய பெயரைக்கொண்டு முடிவதாம்.

(உ-ம்) வணைந்தான், செய்தான், இருக்கிறது.

4. எச்சவினை. தன் எழுவாயின் தொழிலை முடிவுபெருமல் வேறொருவினையை அல்லது வினையோடுகூடியபெயரைக்

குறித்துநிற்கும் வினைகளாம்.

(உ-ம்) படித்து—செய்து—செய்தால்.
செய்த—படிக்கிற—முடிக்கும்.

5. தன்வினை. தன் எழுவாயின் தொழிலை யுணர்த்தி நிற்க உபயோகப்படும் வினையே.

(உ-ம்) நடந்தேன், செய்தேன்.

6. பிறவினை. தன் எழுவாயின் தொழிலை யுணர்த்தாமல் வேறு எழுவாயின் தொழிலை யுணர்த்திநிற்கஉபயோகப் படும் வினையே.

(உ-ம்) நடப்பித்தேன், செய்வித்தேன்.

7. செய்வினை. ஒரு எழுவாய்தானே ஒன்றை செய்வதாகவாவது அல்லது வேறு ஒரு ஆளை ஏவிச்செய்வதாகவாவது தொழிலை உணர்த்திநிற்க உபயோகப் படும் வினையே.

(உ-ம்) நடந்தான், நடத்தினான், நடத்துவித்தான்.

8. செயப்பட்டுவினை. செய்வினைப் பகுதி யோடு படு, உண், தின், என்ற உருபு கள் சேர்ந்து வேறு ஒரு எழுவாயின் தொழிலை அடைந்துநிற்பதைஉணர்த்த உபயோகப்படும் வினையே.

(உ-ம்) அடியுண்டேன், பிடிபட்டான், உதைதின் றான்.

9. செயப்படுபொருள்குன்றியவினை. வினைக் குறியபொது விஷயங்களாகிய செய் பவன் முதலிய 6 காரியங்களில் செ யப்படு பொருள் மட்டும் ஒழிந்து நிற் பதே.

(உ-ம்) இருந்தான்—தூங்கினேன்.

10. செயப்படுபொருள் குன்றாவினை. வினைக்

குறிய 6 பொது லட்சணங்களுப்
தோன்ற நிற்கும் வினைகள் செயப்படு
பொருள் குன்றா வினையாம்.

(உ-ம்) வளர்ந்தான், கொன்றான்.

11. விதிவினை. (அல்லது) உடன்பாட்டுவினை வினையின் தொழிலை உண்டு என உணர்த்துவதாம்.

(உ-ம்) வளர்ந்தான், தூங்கினேன், அடிபட்டேன்.

12. மறைவினை (அல்லது) எதிர்மறை வினை வினையின் தொழிலை மறுத்து அது நடக்கவில்லையென்றுணர்த்துவதாம்.

(உ-ம்) வரவில்லை, வரேன், செய்யான்.

13. வியங்கோள்வினை, மரியாதையாய் ஏவவும், வாழ்த்தவும் உபயோகிக்கப்படும் வினைகளாம்.

(உ-ம்) செய்வீராக, வாழக்கடவன்.

14. ஏவல்வினை. பகுதியடியாய் நின்றும் பகுதியோடு ஆய், மின், என்ற விகுதிகள் புணர்ந்தும் முன்னிலையிலிருப்பவருக்குக் கட்டளை கொடுக்க உபயோகிக்கப்படும வினையே.

(உ-ம்) நட, படி; நடவாய், படிப்பாய்; நடமின், படிமின்.

15. துணைவினை. தன் தொழிலை உணர்த்தாமல் வேறு வினைகளின் கடைசியில் சேர்ந்து தான் சேர்க்கப்பட்ட வினையின் பொருளை மாத்திரம் காட்டும் வினைகள்.

(உ-ம்) படித்திருக்கிறேன், என்பதில்—இரு.
எழுதிக்கொண்டான், என்பதில்—கொள்.
பேசிக்கொண்டிருக்கிறான், என்பதில் —
கொண்டிரு.

வந்துவிட்டான், என்பதில்—விடு.
சனம் ஆறிப்போயிற்று, என்பதில்—போ.

(இப்படிப்பட்ட—இரு, கொள், கொண்டிரு, விடு, போ, போடு, வை, இடு, அருள், உண், வா, வரு, முதலியவைகள் துணைவினைகள்.)

16. தொடர்வினை. இரண்டு வினைகள் ஒன்றுகச்சேர்ந்து ஒரேபொருளைக்கொடுக்குமாயின் அவைகள் தொடர்வினைகளாம்.

(உ-ம்) கொண்டுபோ—வைத்துவை.
எடுத்துக்கொள்—பிடித்துவிடு.

17. பொதுவினை. தன்மை, முன்னிலையிடத்து ஒருமை, பன்மை வினைமுற்றுகளும், வியங்கோள் வினைமுற்றுகளும், வேறு, இல்லை, உண்டு என்ற குறிப்புமுற்றுகளும் இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவாய் வரக்கூடியதால் பொதுவினைகளாம்.

(உ-ம்) படித்தனென், படித்தேன்.
படித்தனன், படித்தனம்.
படித்தாம், படித்தோம்.
படிக்கும், படித்தும்.
படித்தனை, படித்தாய்.
படித்தனிர், படித்திர். &c.,

(இவைகள் இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவான வினையாதலின் பொதுவினைகளாம்.)

ஆயினும்;—வழக்கில் சில வினைகள்.

1. தன் வினைக்கும்—பிற வினைக்கும்
2. குன்றிய வினைக்கும்—குன்றா வினைக்கும்
3. செய் வினைக்கும்—படு வினைக்கும்

4. விதி வினைக்கும்— மறை வினைக்கும்.

பொதுவாய் வழங்குமாதலின் அவைகளை பொது வினையெனக் கொள்ளலும் மாண்பே.

(உ-ம்) 1. 'தேற்றிக்கொடுத்தான்' தன்னைத்தேற்றிக்கொடுத்தான் என்றபோது தன்வினையும் பிறனைத் தேற்றிக்கொடுத்தான் என்றபோது பிறவினையுமாகப் பொருள்பட்டு பொதுவினையாயிற்று.

2. 'வெளுத்தான்' வெளுரிப்போனான் எனப் பொருள் கொடுக்கும்போது குன்றியவினையும் துணியைவெளுத்தான எனப்பொருள் கொடுக்கும்போது குன்றுவினையுமாகப் பொருள்பட்டு பொதுவினையாயிற்று.

3. 'செய்யான்' நிலத்தையுடையவன் எனப்பொருள் கொடுக்கும் போது விதி வினையாகவும் செய்யமாட்டான் எனபொருள் கொடுக்கும் போது மறை வினையாகவும் பொருள்பட்டு பொதுவினையாயிற்று.

(செய்=வயல்)

4. 'விண்ட' என்ற பதத்துடன் 'கமலம்' என்றது சேர்ந்து விண்டக்கமலம் என ஆகி விரிந்த மலர் என பொருள்கொடுத்து செய்வினையாகவும், 'காய்' என்றது சேர்ந்து விண்டக் காய் என ஆகி விரிக்கப்பட்டகாய் எனப்பொருள் கொடுத்து செயப்பாட்டுவினையாகவும் பொருள் பட்டு பொதுவினையாயிற்று.

129. வினைச்சொல்வில் எத்தனை காரியங்களைக் கவனிக்கவேண்டும்.

வி. பகுதி, விகுதி, மூவிடம், ஐம்பால் முக்காலம், எச்சம், ஏவல், வியங்கோள், தொழிற்பெயர் எதிர்மறை ஆகியவைகளைக் கவனிக்கவேண்டும்.

130. பகுதி, விகுதி, மூவிடம், ஐம்பால், ஏவல், வியங்கோள், தொழிற்பெயர், எதிர்மறை இவைகளைப்பற்றி உனக்குத் தெரிந்ததென்ன?

வி. பகுதி 34-ம் கேள்வியைப்பார்.
விகுதி 35-ம் கேள்வியைப்பார்.
மூவிடம் 36-ம் கேள்வியைப்பார்.
ஏவல்
வியங்கோள் } 128-ம் கேள்வியைப்பார்.
எதிர்மறை
தொழிற்பெயர் 78-ம், 79-ம், கேள்வியைப்பார்

131. முக்காலங்கள் எவை?

வி. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமென 3 பிரிவுகளாகி பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும் இடைநிலைகளாலும், இடைநிலையில்லாத சமயங்களில் காலங்காட்டும் விகுதிகளாலும் குறிக்கப்படுவதேயாம்.

132. காலங்காட்டும் இடை நிலைகளையும், விகுதிகளையும் குறிப்பிடு.

வி. இடை நிலைகள் 36ம் கேள்வி b யை பார்.
விகுதிகள் 35ம் கேள்வி g யை பார்.

133. மூன்று காலங்களில் ஏதேனும் தன் இயல்பான காலத்தை விட்டு வேறு காலத்தையும் காட்டுமோ?

வி. ஆம், காட்டும்.

1. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் இவைகளில் இடைவிடாது நடக்கும் காரியத்தை எப்பொழுதும் நிகழ்காலத்திலேயே கூறவேண்டும்.

(உ-ம்) வனம் அடர்ந்திருக்கிறது.
தெய்வம் பார்க்கிறார்.
நதி ஓடுகிறது.

2\. வினாவினுலே எதிர்காலம் நிகழ்கால மாக உபயோகிக்கப்படும்.

(உ-ம்) "சாப்பிட்டாயா" என்று சாப்பிடப்போகிற வனைக்கேட்க அவன் சாப்பிட்டேனே சாப் பிட்டாயிற்று என மறுமொழி சொல்வது.

3\. நிச்சயத்தினுலே எதிர்காலம் இறந்தகால மாகவும் நிகழ்காலமாகவும் உபயோ கிக்கப்படும்.

(உ-ம்) நீ நஞ்சை சாப்பிட்டால் செத்தாய்.
(சாவாய் என்ற எதிர்காலத்துக்குப் பதிலாக நிச்சயத்தினுலே செத்தாய் என்ற இறந்தகாலம் வந்தது.)
நீ நஞ்சை சாப்பிட்டால் சாகிருய்.
(சாவாய் என்ற எதிர்வுக்குப்பதிலாக சாகிருய் என்ற நிகழ்வு வந்தது.)

4\. மிகுதியினுலே எதிர்காலம் இறந்தகால மாகவும் நிகழ்காலமாகவும் உபயோகி க்கப்படும்.

(உ-ம்) இந்த பள்ளியில் படித்தால் தேறினுய்
இந்த பள்ளியில் படித்தால் தேறுகிருய்.
(முறையே எதிர்வுக்குப்பதிலாக இற ப்பும், நிகழ்வும் வந்தது.)

5\. இயல்பினுலே இறந்தகாலம் எதிர்காலமா வும் நிகழ்காலமாகவும் உபயோகிக் கப்படும்.

(உ-ம்) முன்னே அங்கே போவேன்.
(போனேன் என்ற இறப்பு முன்னே என்றதால் எதிர்வைக்காட்டுகிறது.)
நான் போன வருஷம் படிக்கிறது இந்தப் பள்ளி.
(படித்தது என்ற இறப்பு போனவரு ஷம் என்றதால் நிகழ்காலத்தைக் காட்டிற்று.)

6. 'ஆ' விகுதியை ஏற்ற எதிர்மறைகள் மூன்று காலத்தையும் காட்டும்.

(உ-ம்) அவன் செய்யா நின்றான்—இறப்பு.
... ... நிற்கிறான்—நிகழ்வு.
... ... நிற்பான்—எதிர்வு.

134. எச்சங்களவை? அவைகளைப் பற்றி உனக்குத் தெரிந்ததை விபரமாய்க் கூறு.

வி. பெயரெச்சம், வினையெச்சம இவைகள் இரண்டும் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

பெயரெச்சம். பகுதியால் செயலையும், இடைநிலையால் அல்லது காலங்காட்டும் விகுதியால் காலத்தையும், வெளிப்படையாகக்காட்டி ஈற்றிலே அ, உம், என்ற விகுதிகளைப்பெற்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருளாகிய 6 பெயருள் ஏதாவது ஒன்றைக்கொண்டு முடிந்து நிற்பதாம்.

(இப்படி நிற்பது உடன்பாட்டு பெ-எ.)

(உ-ம்) உண்டமனிதன் ... இறப்பு.
உண்கிறவீடு ... நிகழ்வு.
உண்ணும்சோறு ... எதிர்வு.

வினைப்பகுதியோடு எதிர்மறை ஆகார விகுதியும் பெயரெச்ச விகுதிகளில் அகரமும் சேர்ந்து வருவது.

(இப்படி நிற்பது எதிர்மறை பெ-எ.)

இது சில இடங்களில் ஈறுகெட்டும் வரும்.

(உ-ம்) நடவாத, படியாத (ஈறு கெடாதது.)
நடவா, படியா, செய்யா (ஈறு கெட்டது.)

(பெயரெச்ச வாய்ப்பாடு)

செய்த	...	இறந்தகால	பெயரெச்ச வாய்ப்பாடு.
செய்கிற	...	நிகழ்கால	
செய்யும்	...	எதிர்கால	

வினையெச்சம். பகுதியால் செயலையும் இடைநிலையால் காலத்தையும் வெளிப்படுத்தி அ, இ, உ, ய், கு, றி, இன், ஆல், கால், முதலிய விகுதிகளில் ஏதாவது ஒன்றை ஏற்று வினைச்சொற்களில் ஒன்றைக் கொண்டு முடியும் சொற்களாம். (இப்படி நிற்பது தான் உடன்பாட்டு வினையெச்சம்.)

(உ-ம்)
நடந்து—வந்தான்
ஓடி—வந்தான்
} இறந்தகாலம்.

போய்—வந்தான்
பொன்றி—போனான்
} இறந்தகாலம்.

போக—போகிறான் நிகழ்காலம்.

நடக்கின்—வருவான்
நடந்தால்—வருவான்
நடந்தக்கால்—வருவான்
நடத்தற்கு—வருவான்
} எதிர்காலம்.

வினைப்பகுதியோடு எதிர்மறை ஆகாரவிகுதியும் அதோடு மல், மை, மே, து, என்னும் எச்ச விகுதிகளில் ஏதாவது ஒன்றும் புணர்ந்துவருவது (எதிர்மறை வினையெச்சம்.)

(உ-ம்)
நடவாமல்
நடவாமே
நடவாமை
நடவாது
} வந்தான் வருகிறான் வருவான்

(வினையெச்ச வாய்பாடு.)

செய்து—இறந்தகால
செய—நிகழ்கால
செயின்—எதிர்கால
} வினையெச்ச வாய்பாடு.

(எச்சவாய்பாடுகளும் உதாரணமும்)

செய்தவனெச்சம்—செய்த, படித்த, உண்ட.
செய்கிறவனெச்சம்—செய்கிற, படிக்கிற, உண்கிற.
செய்யுமெனெச்சம்—செய்யும், படிக்கும், உண்ணும்.
} பெயரெச்ச வாய்பாடுகள்.

செய்தெனெச்சம்—செய்து, படித்து, நின்று.
செயவெனெச்சம் — செய, படிக்க, நிற்க.
செயினெனெச்சம்—செயின், படிக்கின், நிற்கின்.
} வினையெச்ச வாய்ப்பாடுகள்.

135. எச்சமென்றாலென்ன. தமிழ்ப்பாஷையில் எத்தனைவகை எச்சம் உண்டு. அவை[illegible]ணி. உதாரணங்கொடு.

வி. எச்சம் = குறைவு. (அதாவது) வினை அல்லது பெயரின் குறைவு இருக்கிறதாகவும் அதன் அர்த்தத்தைப் பூர்த்திப்படுத்த முறையே ஒருவினையோ, பெயரோ தேவையெனவும் காட்டுகிறது.

பிரிவு. வினையெச்சம், பெயரெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலையெச்சம், எனவெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம், முற்றெச்சம், என 11 வகைத்து.

I. வினையெச்சம்: தன்னுடைய அர்த்தம் பூரணப்படத்தக்கதாக ஒரு வினையை வேண்டி நின்று பகுதியால் செயலையும் இடைநிலையால் காலத்தையும் காட்டி உ, இ, ய், அ, கு, இன், ஆல், கால், முதலிய உடன்பாட்டு விகுதிகளையும் ஏற்றுநிற்பதாம்.

உருபு. உ, இ, ய், அ, கு, இன், ஆல், கால்.

(உ-ம்) உ— செய்து—வந்தான்.
இ— பாடி—பிரசங்கித்தான்.
ய்— போய்—வருவான்.
அ— செய்யப்—போனான்.
கு— செய்யற்கு—வந்தான்.
இன்— படிக்கின்—கெட்டிக்காரனாவான்.
ஆல்— கூடினால்—வாழுவான்.
கால்— வந்தக்கால்—தேடுவான்.

தொழில். கர்த்தா அல்லது எழுவாயின் தொழில், காலம், பால், முதலியவைகளை வெளிப்படுத்தி வினைமுற்றை எதிர்பார்த்து நிற்பதாம்.

பிரிவு. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என 3 பிரிவாய் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் பிரிக்கப்பட்டு—இறந்தகாலம் செய்தென்னும் வாய்ப்பாடாகவும், நிகழ்காலம் செயவென்னும் வாய்ப்பாடாகவும், எதிர்காலம் செயின் என்னும் வாய்ப்பாடாகவும் பிரிக்கப்படும்.

முடிவு. இறந்தகால வினையெச்சம் தன் எழுவாயின் வினையைமாத்திரம்கொண்டு முடியும்.

(உ-ம்) நான் செய்து வந்தேன்.
அவன் ஓடிப்போனான்.

நிகழ்கால வினையெச்சம் (a) தன் எழுவாயின் வினையையும் (b) பிற எழுவாயின் வினையையும்கொண்டு முடியும்.

(உ-ம்) a. பையன் படித்தால் தேறுவான்.
b. பையன் தேறினால் வாத்தியாயர் சந்தோஷப்படுவார்.

எதிர்கால வினையெச்சம் (a) தன்எழுவாயின் வினையையும் (b) பிறஎழுவாயின் வினையையும் கொண்டு முடியும்.

(உ-ம்) a. ராமன் தேறப் பிரயாசப்படுவான்.
b. ராமன் தேற உபாத்தியாயர் பிரயாசப்படுவார்.

உருபுகள் காட்டும் காலம்.

உ, இ, ய்,—இறந்தகாலம்.
அ—நிகழ்காலம்.
இன், ஆல், கால்—எதிர்காலம்,

2. பெயரெச்சம். தன்னுடைய அர்த்தம் பூரணப்பட்டதாக ஒருபெயரை வேண்டிநின்று பகுதியால் செயலையும், இடைநிலையால் விகுதியால் காலத் அல்லது காலங்காட்டும்

ளையும் வெளிப்படையாகக் காட்டி ஈற்றி
லே அ, உம், என்ற விகுதிகளைப்பெற்று நிற்
பதாம்.

உருபு. அ, உம்.
(உ-ம்) அ—உண்ட } சாத்தான்.
உண்கிற }
உம்—உண்ணும் சாத்தான்.

தொழில். செயலையும் காலத்தையும் வெளிப்படுத்
தி செய்பவன், கருவி, நிலம், செயல்,
காலம், செய்பொருளாகிய அருவகைப்
பொருளில் ஏதாவது ஒன்றை எதிர்பார்த்
து நிற்பதாம்.

பிரிவு. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
என 3 பிரிவாய் பிரிக்கப்பட்டு, இறந்த
காலம் செய்தவென்னும் வாய்ப்பாடாக
வும், நிகழ்காலம் செய்கிறவெனும் வாய்ப்
பாடாகவும், எதிர்காலம் செய்யுமெனும்
வாய்ப்பாடாகவும் பிரிக்கப்படும்.

உருபுகள் காட்டும் காலம்.
அ—இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும்,
உம்—எதிர்காலத்தையும் காட்டும்.

ஒற்றுமை. எதிர்காலப் பெயரெச்சமும் எதிர்
கால அஃறிணைபடர்க்கை வினைமுற்றும் ரூபத்
தில் ஒரேமாதிரியாக இருக்கும்.

பேதம். பெயரெச்சம் ஐம்பால் பெயரையும்
ஏற்கும்.

(உ-ம்) உண்ணும்—அவன்.
—அவள்.
—அவர்கள்.
—அது.
—அவை.

(ஆனல்) வினைமுற்ருக உபயோகப்படும்போது
பலர்பால் பெயரைமட்டும் ஏற்காது

(உ-ம்) அவன்
அவள்
அது
அவை } உள்ளனும்.

3. உம்மையெச்சம். ஒரு தனிவாக்கியத்தின் எழுவாயோடு 'உம்' என்ற இடைச் சொல் சேர்ந்துவந்தால் அது வெளிப்படையான கர்த்தாதவிர பின்னும் சிலதைக் குறிப்பாய் விளக்குவதால் அதனை உம்மையெச்சமெனக் கொள்வதாம்.

(உ-ம்) சாத்தனும் வந்தான்—இதில் 'உம்' என்பது பின்னும் சிலர் வந்ததைக் குறிப்பிடுகிறது.

4. சொல்லெச்சம். 'சொல்' என்னும் வார்த்தையானது தொக்கி நிற்பதாம்.

(உ-ம்) அவன் அழகப்பன் என்ருன்—இதில் என்ருன் என்பது என்று சொன்னான் என பொருள்பட்டு அதில் 'சொல்' என்ற பதத்தை மறைத்து நிற்கிறது.

5. பிரிநிலையெச்சம். ஒன்றை வெளிப்படையாய்க் காட்டுவதால் மற்றதை மறைப்பதாம்.

(உ-ம்) சாத்தனே கொண்டான்—இதில் சாத்தனே என்பதால் மற்றவர்கள் அல்லவென்பது தெளிவாகிறது.

6. எனவெச்சம். குறிப்புச் சொல்லோடிசைந்த "என" என்னும் சொல் இசைந்தே வருவது.

(உ-ம்) கட்டெனப் பேசினான். இதில் கட்டென என்பதில் 'என' என்பதுக்கு 'என்று' என அர்த்தங்கொள்ளலாம்,

7. ஒலியிசையெச்சம். ஒன்றைக் காட்டுவதால் அதன் பின்னிலைமை அல்லது கருத்து இன்னதென்று காட்டுவதாம்.

(உ-ம்) 'ஆயிரம் பேருக்கு அன்னமிட்டகை.' என்றதால் இப்போது வருமை தசையடைந்து அன்னமிடக்கூடாததாயிருக்கிறது என்று காட்டுகிறது.

'பார்க்கவா வந்தான்' என்றதால் பார்க்கவல்ல உழவு அறியவந்தான் என்று அர்த்தங்கொள்ளுகிறது.

8. எதிர்மறையெச்சம். வினையின் தொழிலை மறுத்து நிற்கும் எச்சமாம். இது ஒரு தொழிலை இல்லையென்றும்; ஒரு தொழிலை இல்லையென்று மறுப்பதுடன் வேறு ஒன்று உண்டு என்றும் காட்டுவதுமாய் பொருள் பட்டு எதிர்மறை பெயரெச்சமெனவும் எதிர்மறை வினையெச்சமெனவும் இருவகைப்படும்.

a. எதிர்மறைபெயரெச்சம்—வினைப்பகுதியும், எதிர்மறை ஆகாரவிகுதியும், அதுடன் பெயரெச்சவிகுதிகளில் அகரமும், சேர்ந்து நின்று தன் பொருள் முற்றுப்பெற பெயரைநோக்கி நிற்பதாம்.

(உ-ம்) நடவாத—குதிரை,
(சிலசமயங்களில் ஈறுகெட்டுவரும்.)
ஓடா—குதிரை,
கூடா—சினேகம்,

b. எதிர்மறை வினையெச்சம்—வினைப் பகுதியும், எதிர்மறை ஆகாரவிகுதியும், மல், மே, மை, து, றி என்ற எதிர்மறை எச்சவிகுதிகளில் எதாவது ஒன்றும் சேர்ந்து தன் பொருள்கொண்டு முடியும்வினையை நோக்கி வருவதாம்.

(உ-ம்) செய்யாமல்—இல்லை.
செய்யாமே—இல்லை.

நடவாமை—இல்லை.
நடவாது—இல்லை.
மழையின்றி—இல்லை.

9. இசையெச்சம். மறைந்து நிற்கும் பல சொற்களைக் குறிப்பிடுவது.

(உ-ம்) கற்றதினால் ஆயபயன் என்கொல். இதில் கற்றதினால் என்றதினால் 'பலநூல்கள், பல வித்தைகள், பலகலைக்கியானங்கள், பலமந்திரங்கள், பற்பலதொழில்கள் என்றபொருட்களைக் கற்றதினால் என்று அதுடன் இசைந்து பலபொருட்களை அமைத்துக்காட்டுகிறது.

10. குறிப்பெச்சம். ஒன்றை வெளிப்படையாய்ச் சொல்லி அதனால் மற்றதைக் குறிப்பாய்க் காட்டுவது.

(உ-ம்) கல்லைக்கடிக்க நன்றாய் சமைத்தாய். இதில் கல்லைக்கடிக்க என்றதால் நன்றாய் சமைக்கவில்லையென்றும், பறவாக்கொக்கு இதில் பறவா என்பதால் கொக்கென்ற பறவையல்லவென்றும் குறிப்பாய்க் காட்டுகிறது.

11. முற்றெச்சம். எவ்வகையான வினைமுற்றாவது பெயரைக் கொள்ளாமல் வினையைக் கொண்டு, பொருள் படுத்தும்போது வினையெச்சமானால் அவைகளை முற்றெச்சமெனக் கொள்வதாம்.

(உ-ம்) ஆடினான், பாடினான், ஓடினான். இதில் ஆடினான், பாடினான், என்பது ஆடிபாடி என எச்சமாகி ஆடிப்பாடி ஓடினான் என்று வருவதால் ஷை ஆடினான், பாடினான் என்ற வினைமுற்றுகள் முற்றெச்சமாம்.
வந்தார் உட்கார்ந்து பேசினார் = வந்து உட்கார்ந்து பேசினார். இதில் 'வந்தார்' 'உட்கார்ந்தார்' என்பது முற்றெச்சங்களாம்.

136. எதிர்மறை குறிப்பு பெயரெச்சமும் வினையெச்சமும் எவ்வாறு வரும்.

வி. எ-கு-பெயரெச்சம். அல், இல், என்ற எதிர்மறைபண்படிகள் ஆகாரச்சாரியையும் தகர ஒற்றும் அதன்மேல் அகரவிகுதியும்சேர்ந்து வருதலால் உண்டாகும். (இது ஈறுகெட்டும் வரும்.)

(உ-ம்) இல்லாத, அல்லாத—செயல்.
இல்லா, அல்லா—வரவு.

எ—கு—வினையெச்சம்.—அல், இல், என்ற எதிர்மறைபண்படிகள் ஆகாரச்சாரியையும், மல், மே, மை, து, என்ற எதிர்மறை விகுதிகளையும் புணர்ந்துவரும்.—பின்னும் அப் பண்படிகள் 'றி' விகுதிமாத்திரம் பெற்றும் வரும்.

(உ-ம்) அல்லாமல், அல்லாமை, அல்லாமே, அல்லாது, இல்லாமல், இல்லாமை, இல்லாமே, இல்லாது, இன்றி, அன்றி.

137. தெரிநிலைவினை, செய்வினை, இவைகளின் பிரிவு என்ன.

வி. தெரிநிலைவினை. தன்வினை; பிறவினை; செயப்படுபொருள் குன்றியவினை; செயப்படுபொருள குன்றாவினை; செய்வினை; செயப்பாட்டுவினை முதலிய அடக்கம்.

சேய்வினை. தன்வினை; பிறவினை; செயப்படுபொருள் குன்றியவினை; செயப்படுபொருள் குன்றாவினை முதலிய அடக்கம்.

138. தன்வினை பிறவினை யாவதெப்படி ?

வி. 1. தன்வினைப் பகுதிகளோடு வி, பி, து, சு, நு, டு, பு, று, ; என்ற விகுதிகள் சேர்வதனாலும்.

(உ-ம்) வா—வருவி
நட—நடப்பி
தாழ்—தாழ்த்து
பாய்—பாய்ச்சு
போ—போக்கு
உருள்—உருட்டு
எழு—எழுப்பு
பயில்—பயிற்று.

2. தன்வினைப் பகுதியோடு வி, பி, து, சு, டு, பு, று; என்ற விகுதிகளில் ஏதாவது ஒன்று கூடி ஓர் பகுதியாகி நின்றதுடன் வேறொருவிகுதி கூடுவதாலும்.

(உ-ம்) எழு—எழுப்பு—எழுப்புவி

3. சில தன்வினைப் பகுதிகளின் இடையிலிருக்கும் மெல்லொற்று வல்லொற்றாகத் திரிதலாலும்.

(உ-ம்) இயங்கு—இயக்கு.
திருந்து—திருத்து.
திரும்பு—திருப்பு.

4. சில தன்வினைப் பகுதிகளின் நடுவில் ஓர் ஒற்றெழுத்து தோன்றுவதாலும்.

(உ-ம்) உருகு—உருக்கு.
பெருகு—பெருக்கு.

5. பிறவினையாகப்பட்ட மொழியோடு வேறு ஒரு பிறவினை விகுதி சேர்வதாலும்.

(உ-ம்) திருந்து—திருத்து—திருத்துவி.
உருகு—உருக்கு—உருக்குவி.
பெருகு—பெருக்கு—பெருக்குவி.

139. செய்வினை செயப்பாட்டு வினையாக மாறுவதெப்படி?

வி. 1. செய்வினைப் பகுதியோடு படு, உண், தின். என்ற சொற்கள் சேர்வதாலும்.

(உ-ம்) அடி—அடிபடு.
மிதி—மிதியுண்.
உதை—உதைதின்.

2. நிகழ்கால வினையெச்சத்தோடு படு, உண், தின், என்ற சொற்கள் சேர்வதாலும் செயப்பாட்டு வினையாக மாறும்.

(உ-ம்) அடிக்கப்போனான்—அடிக்கப்படப்போனான்
அடிபடப்போனான்.
மிதிக்கவந்தான்—மிதியுண்ண வந்தான்.
உதைக்கச்செல்கிறான்—உதைதின்னச் செல்கிறான்.

140. விதிவினை மறைவினையாவதெப்படி?

வி. 1. விதிவினைப் பகுதியோடு எதிர்மறை ஆகாரவிகுதியும், மல், மே, மை, து, என்ற விகுதிகளும் சேர்வதாலும்.

(உ-ம்) உண்—உண்ணாமை.
உண்ணாமல்.
உண்ணாமே.
உண்ணாது.

2. சில விதிவினைகளின் மத்தியில் மறைவினை விகுதி சேர்வதாலும்.

(உ-ம்) போகுதல்—போகாதல்.
உண்ணுதல்—உண்ணாதல்.
உண்டவன்—உண்ணாதவன்.

3. சில விதிவினைகளின் மத்தியில் எதிர்மறை ஆகாரவிகுதி சேர்ந்து ஒரு விகுதிக்குப்பதிலாக வேறொரு விகுதி சேர்வதாலும்.

(உ-ம்) உண்ணல்—உண்ணாதல்.
—உண்ணாமை.
—உண்ணாமே.
—உண்ணாது.

(குறிப்பு.) இரண்டு மறைவினைகள் சேர்ந்தால் ஒரு விதிவினையாகும்.

(உ-ம்) தூங்காமல் இராத பையன் = தூங்கின பையன்.

141. செயப்படுபொருள் குன்றிய வினைகள் செயப்படுபொருளை ஏற்குமோ.

வி. சில சமயங்களில் அந்த வினையின் பகுதியடியாகப் பிறந்த சில பெயர்கள் வருதலுமுண்டு.

(உ-ம்) அவன் ஒரு நகை நகைத்தான்.
அவள் ஒரு சிரிப்பு சிரித்தாள்.
ராமன் அயர்ந்த தூக்கம் தூங்கினான்.
கோவிந்தன் ஒரு நடை நடைந்தான்.
மூதேவி ஒரு இருப்பு இருந்தாள.

142. ஒரு எழுவாய் இரண்டு அல்லது பல பயனிலைகளைக்கொண்டு முடிந்தால் எவ்வாறும்.

வி. 1. ஒரு எழுவாய் உடன்பாடான 2 அல்லது பல பயநிலையைக்கொண்டால் கடைசி வினைமுற்றைத்தவிர மற்றவைகளையெல்லாம் எச்சமாக்கிக் கொள்ளவேண்டும்.

(உ-ம்) ராமன் வந்தான், இருந்தான், உண்டான், போனான்—ராமன் வந்து இருந்து உண்டு போனான்

2. ஒரு எழுவாயுடன் பல உடன்பாட்டு வினைமுற்றுகளும் ஒரு எதிர்மறை வினைமுற்றும் சேர்ந்து வந்தால் வாக்கியத்தை ஒன்றில் சொன்னபடி முடித்து அதன் பொருளை எதிர்மறையாகவேக் கொள்ளவேண்டும்.

(உ-ம்) கோபாலன் வந்தான், இருந்தான், உண்டான், இல்லை— = கோபாலன் வந்து இருந்து உண்டானில்லை, (அல்லது) கோபாலன் வந்து இருந்தும் உண்கவில்லை.

143. பல எழுவாய்கள் ஒரு பயனிலையைக் கொண்டு எவ்வாறு முடியும்.

வி. 1. உயர்திணையாகிய பல எழுவாய்கள் வந்தால் பயனிலை பலர் பாலாகவே இருக்கும்.

(உ-ம்) ராமனும் தேவதத்தனும் பத்மினியும் வந்தார்கள்.

2. அஃறிணையாகிய பல எழுவாய்கள் வந்தால் பயனிலை பலவின்பாலாகவே யிருக்கும்.

(உ-ம்) மாடுகளும் குதிரைகளும் வந்தன.

3. உயர்திணைப்பெயரும் அஃறிணைப்பெயரும் வந்தால் பயனிலை உயர்திணைபலர்பால் வினைமுற்றாகவேயிருக்கும்.

(உ-ம்) சாத்தனும் காத்தனும் குதிரையும் போனார்கள்.

4. தன்மையிடத்துப்பெயரும் முன்னிலையிடத்துப்பெயரும் வந்தால் பயனிலை தன்மை பன்மை வினைமுற்றாகவே வரும்.

(உ-ம்) நானும் நீயும் போனோம்.

5. தன்மையிடத்துப்பெயரும் படர்க்கையிடத்துப் பெயரும் வந்தால் பயனிலை தன்மை பன்மை வினைமுற்றாகவே வரும்.

(உ-ம்) நானும் அவனும் போனோம்.

6. தன்மையிடத்துப்பெயரும் முன்னிலையிடத்துப் பெயரும் படர்க்கையிடத்துப் பெயரும் வந்தால் பயனிலை தன்மை பன்மை வினைமுற்றாகவே வரும்.

(உ-ம்) நானும் நீயும் அவனும் போனோம்.

7. முன்னிலையிடத்துப்பெயரும் படர்க்கையிடத்துப்பெயரும் வந்தால் பயனிலை முன்னிலை பன்மை வினைமுற்றாகவே வரும்.

(உ-ம்) நீயும் அவனும் போனீர்கள்.

8. உயர்திணை ஒருமைச்சொற்களும் பன்மைச் சொற்களும் அஃறிணை ஒருமைச்சொற்களும் பன்மைச்சொற்களும் தன்மை முன்னிலை படர்க்கை ஒருமைச்சொற்களும் பன்மைச்சொற்களும் சேர்ந்து வந்தால் பயனிலை உயர்திணை பலர்பால் வினைமுற்றாக வரும்.

(உ-ம்) ராமனும் குடிகளும் நானும் நீயும் அவர்களும் குதிரைகளும் வண்டிகளும்போனோம்.

144. முற்று வினைக்கும் முற்றெச்சத்துக்கும் பேதமென்ன.

வி. 1. மு-வி. எப்போதும் பயனிலையாகவே நிற்கும்.

மு-எ. ரூபத்தில் வினைமுற்றைப்போலிருந்தாலும் பொருளில் வினையெச்சமாகமாறி பொருள் கொடுக்கும்.

(உ-ம்) ராமன் படித்தான் — முற்றுவினை.

ராமன் படித்தான் வந்தான். இதில் படித்தான் என்பது படித்து என வினையெச்சமாக ராமன்படித்து வந்தான் என வாக்கியத்தில் மாறுவதால்—முற்றெச்சம்.

2. மு-வி. பெயரையே கொண்டு முடியும்.

மு-எ. பெயரையல்ல வினையைக்கொண்டு முடியும்.

(உ-ம்) சாத்தன் வந்தான். இதில் வந்தான் என்பது சாத்தன் என்னும் எழுவாயைத் தழுவி நிற்கிறது—முற்றுவினை.

சாத்தன் புசித்தான் வந்தான் இதில் புசித்தான் என்பது புசித்து என மாறி, வந்தான் என்னும் வினையைத் தழுவி நிற்கிறது—முற்று எச்சம்.

145. இடைப்பிறவரலென்றாலென்ன.

வி. ஒரு வாக்கியத்தில் வேற்றுமை உருபுகள், வினைமுற்றுகள், பெயரெச்சங்கள், வினையெச்சங்கள், ஆகிய இந்நான்குக்கும் இவற்றை முடிக்குஞ் சொல்லுக்குமிடையில் அவ்விடத்துக்குப்பொருந்தினவாய் அதன் சிறப்பைக் காட்டும் வேறு சொற்கள் வந்தால் அவைகள் இடைப்பிறவரலாம்.

(உ-ம்) அறத்தை அழகு பெறச் செய்தான்.
சாத்தன் வயிறார உண்டான்.
நேற்றுவந்த வடகாசி மன்னன் இவன்தான்
ராமன் வந்து அவனூருக்குப் போனான்.

இவைகளில் அழகுபோற, வயிறா, வட காசி, அவனூருக்கு என்ற வார்த்தைகள் முறையே வேற்றுமை உருபு, வினைமுற்று, பெயரெச்சம் வினையெச்சங் களைத் தழுவி அதன் சிறப்பையுணர்த்த வந்த இடைப்பிறவரல்.

146. ஏவல் வினைமுற்றுக்கும் முன்னிலை வினைமுற்றுக்கும் பேதமென்ன.

வி. 1. ஏ-வி. பகுதி ரூபமாகவே இருக்கும்

மு-வி. பகுதி ரூபத்தோடு காலங்காட்டும் இடைநிலைகளும் முன்னிலை விகுதியும் சேர்ந்து இருக்கும்.

2. ஏ-வி. ஒன்றைச் செய்ய ஏவுவதாயிருக்கும்.

மு-வி. ஒன்றை ஏவாமல் முன்னிலையிடத்துப் பெயரின் தொழிலை மாத்திரம் உணர்த்துவதாக இருக்கும்.

(உ-ம்) ஏ-வி நீ செய்.
மு-வி நீ செய்கிறாய்.

147. வினையைக் கொண்டு முடியும் சொற்களெவை.

a. 1-ம், 2-ம், 3-ம், 4-ம், 5-ம், 7-ம், 8-ம், வேற்றுமைகளை ஏற்ற பெயர்கள்.

(உ-ம்) 1-ம் வேற். மனிதன் வந்தான்.
2-ம் வேற். பெட்டியைச் செய்தான்.
3-ம் வேற். கத்தியால் வெட்டினான்.
4-ம் வேற். சாத்தனுக்குக் கொடுத்தான்.
5-ம் வேற். ஊரின் நீங்கினான்.
7-ம் வேற். வண்டியில் வந்தான்.
8-ம் வேற். ராமா இங்கே வா.

b. வினையெச்சங்கள்.

(உ-ம்) வந்துபோனான்.

c. வினையுரிச்சொற்கள்.
(உ-ம்) செவ்வையாய்ச் செய்தான்.
d. சுட்டுப்பெயர்.
(உ-ம்) இவன் வருகிறான்.
e. வினாப்பெயர்.
(உ-ம்) எவன் வருவான்.

148. பயனிலைக்கு அடைமொழிகளாக வரும் சொற்களெவை.

வி. 1. வினையெச்சம்.
(உ-ம்) ராமன் வந்து போனான்.
2. இடைச்சொல்.
(உ-ம்) பால் வெளுப்பே.
3. வினையுரி.
(உ-ம்) சாலப் பேசினான், (இயல்புவினையுரி) வித்தை லாபமாய் இருக்கும் (சிறப்புவினையுரி.)
4. வேற்றுமை உருபேற்றிய பெயர்.
(உ-ம்) அவன் கிணற்றில் விழுந்தான்.
5. வேற்றுமைத்தொடர்.
(உ-ம்) சிறுமை தன்னை வியந்து அணியும்.

149. வா, நட, போ, பாய், உருள், புரள், தாழ், எழு, துயில், இயங்கு, திருந்து, திரும்பு, உருகு, இவைகளை பிறவினைப்பகுதியாக்கு.

வி. வா—வருவி	தாழ்—தாழ்த்து
—வருவிப்பி	எழு—எழுப்பு
நட—நடப்பி	துயில்—துயிற்று
போ—போக்கு	இயங்கு—இயக்கு
பாய்—பாய்ச்சு	திருந்து—திருத்து
உருள்—உருட்டு	திரும்பு—திருப்பு
புரள்—புரட்டு	உருகு—உருக்கு.

150. செய், அடி, பிடி, உண், கரை, அழி, மதி, இவைகளைச் செயப்பாட்டுப்பகுதிகளாக்கு

வி. செய்—செய்யப்படு	களை—களையுண்ணு
அடி—அடிபடு	—களைப்படு
—அடியுண்ணு	அழி—அழிபடு
—அடிதின்னு	—அழியுண்ணு
பிடி—பிடிபடு	மறி—மறிபடு
—பிடியுண்ணு.	—மறியுண்ணு.
உண்—உண்ணப்படு	

151. இருதிணை ஐம்பாலுக்கும் பொதுவான வினைகளாவன:—

1. வியங்கோள் வினைமுற்றுகள்.

(உ-ம்) அவன் / அவள் / அவர்கள் / அது / அவை } வாழ்க, செய்ய, போக, முதலிய.

2. தன்மை வினைமுற்றுகள்.

(உ-ம்) வந்தேன்.
வந்தோம்.

3. முன்னிலை வினைமுற்றுகள்.

(உ-ம்) வந்தாய்—வந்தீர்கள்.

4. பெயரெச்சங்கள்.

(உ-ம்) வந்த—(அவன், அவள், அவர்கள், அது, அவை.)

5. வினையெச்சங்கள்.

(உ-ம்) (அவன், அவள், அவர்கள், அது, அவை)—வந்து.

6. குறிப்பு வினைமுற்றுகள்.

(உ-ம்) வேறு, இல்லை, உண்டு, அன்று, இன்று, அல்ல.
(அவன், அவள், அவர்கள், அது, அவை) வேறு &c.

152. 1. அங்கிருப்பது மாயில்லை } [illegible]
2. அங்கிருப்பது மரமன்று }

வி. 1. மரமில்லையென்று இல்லாமையை மாத்திரம் தெரிவிக்கிறது.

2. மரமல்ல வேறொரு பொருளிருக்கிற தென்று ஒருபொருளை மறைத்து அதற்கிணையான வேறொரு பொருளைக் குறிப்பிடுகிறது.

குறிப்பு. இன்மை—இல்லாமையையும்,
அன்மை—ஒன்றை மறுத்து வேறொன்று இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

153. அடியில் வரும் வினாக்கள் பொருள் வேறுபடத்தக்கதான விடைகள் ஏற்குமெனக் காட்டு.

1. அவன் அதைச் செய்வானோ?
2. நான் நன்மை செய்யவா வந்தேன்.
3. அவன் அப்படி செய்வது நன்மையா.
4. அப்படியா உத்தரவு சொல்கிறது.

வி. 1. a. உடன்பாடு—ஆம்—அதைச்செய்வான்.
b. எதிர்மறை — இல்லை — அதைச்செய்ய மாட்டான்.
2. a. உ—ஆம்—நன்மை செய்யத்தான் தேன்.
b. எ—இல்லை—நன்மை செய்யவாவில்லை.
3. a. உ—ஆம்—நன்மைதான்.
b. எ—இல்லை—நன்மையல்ல.
4. a. உ — ஆம் — அப்படித்தான் உத்தரவு சொல்கிறது.
b. எ—அல்ல—அப்படி அல்ல உத்திரவு சொல்கிறது. வேறு மாதிரியாய்ச் சொல்லவேண்டும்.

154. பின்வருபனவுக்கு எழுவாய் பயனிலை கற்பி.

1. கார் மேகத்தின் நிறம் கறுப்பாக இருக்கும்.
2. சகாராவில் ஜலம்போல் அவசியமானது வேறொன்றுமில்லை,

3. இன்சொல் இடர்ப்படுப்பதில்.
4. கல்வியினுக்கில்லை சிற்றுயிருக்குற்றதுணை
5. கற்றறிந்தோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.
6. அந்த வனாந்தரத்து மணலை ஒத்திருக்கும் அதன் நிறம்.
7. இப்புத்தகத்தை படித்தேன்யான்.
8. நிறை குடம் நீர்ததும்பவில்.
9. குருடனானவனுக்கு விளக்கால் பிரயோஜனமில்லை.
10. டில்லியைப் பிடிக்க உதவிசெய்தவர்கள் இவர்கள்தான்.
11. பரீட்சை தேறப்பிரயாசப்படுவோர்கள்.
12. தீமை நன்மை செய்தாலோ விளையும்.

வி. எழுவாய்.	பயனிலை.
1. நிறம்.	இருக்கும்.
2. வேறொன்றும்	இல்லை.
3. இடர்படுப்பது	இல்.
4. துணை	இல்லை.
5. சிறப்பு	உண்டு (தோன்று)
6. நிறம்	ஒத்திருக்கும்.
7. யான்	படித்தேன்.
8. ததும்பல்	இல்.
9. பிரயோஜனம்	இல்லை.
10. செய்தவர்கள்	இவர்கள்தான்.
11. அவர்கள் (தோன்று)	பிரயாசப்படுவோர்கள்.
12. தீமை	விளையும்.

155. வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், இவைகளுக்கு எப்படி இலக்கணங் கூறலாம்.

வி. வினைமுற்று. 1. இன்னவினை. 2. திணை. 3. பால். 4. இடம். 5. முடிபு.
வினையெச்சம் 1. இன்னவினையெச்சம். 2. காலம். 3. முடிபு.

பெயரெச்சம். 1. இன்னபெயரெச்சம்.
2. காலம். 3. முடிபு.

(உ-ம்) படித்த நல்லமனிதன் விரைவாய்ச் செய்து வருவானே.

வருவான். தெரிநிலை வினைமுற்று, உயர்திணை, ஆண்பால் படர்க்கையிடம் மனிதனை என்னும் எழுவாயைத் தழுவியது.

செய்து. செய்தென்னும் வாய்ப்பாட்டு தெரிநிலை வினையெச்சம் (இறந்தகாலம்) வந்தான் என்ற வினைமுற்றைத் தழுவியது.

படித்த. செய்தவென்னும் வாய்ப்பாட்டு தெரிநிலை பெயரெச்சம் (இறந்தகாலம்) மனிதன் என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.

156. படி, செல், வா, தேய், மேய், போ, சிரி, குறு, உண், நில், தை, பேசு, இவைகளுக்கு இறந்த காலப் பெயரெச்சம்; எதிர்காலவினையெச்சம்; நிகழ்கால வியங்கோள் வினைமுற்று எழுது.

வி. பகுதி.	இறந்தகால பெயரெச்சம்.	எதிர் கால வினையெச்சம்.	வியங்கோள் வினைமுற்[illegible]
படி	படித்த	படித்தால்	படியன்ம[illegible]
செல்	சென்ற	சென்றால்	செல்வாயா[illegible]
வா	வந்த	வந்தால்	வருக
தேய்	தேய்த்த	தேய்த்தால்	தேய்ப்பாய[illegible]க
	தேய்ந்த	தேய்ந்தால்	தேய்வாயாக
மேய்	மேய்ந்த	மேய்ந்தால்	மேயன்மின்
	மேய்த்த	மேய்த்தால்	மேய்ப்பாயாக
போ	போன	போனால்	போமின்
சிரி	சிரித்த	சிரித்தால்	சிரிப்பாயாக
குறு	குறுகின	குறுகின்	குறுகன்மின்
உண்	உண்ட	உண்டக்கால்	உ[illegible]பாயாக
நில்	நின்ற	நின்றால்	நி[illegible]க
தை	தைத்த	தைத்தால்	தைப்பாயாக
பேசு	பேசின	பேசினால்	பேசுக
			பேசுவாயாக

குறிப்பு. படித்தால், படிக்கின், படித்தக்கால், எனக் கொளலும் சரியே.

157. "ஏகாதிபத்திய அரசாட்சி நன்றன்று" இந்த வாக்கியத்தில் எழுவாய் பயனிலை இன்னதெனக் காட்டு.

அரசாட்சி (எழுவாய்) நன்றன்று பயனிலை)

நன்று (எழுவாய்) அன்று (பயனிலை)

158. நட, படி, உண், இப்பகுதிகளைக்கொண்டு பிறக்கும் வினைமுற்றுகளை, உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் இருதிணை ஐம்பால் மூவிடம் முக்காலம் அலங்க எழுது.

வி. 1. உடன்பாடு—நட.

நடந்தேன்	—	நடந்தோம்.
நடக்கிறேன்	—	நடக்கிறோம்.
நடப்பேன்	—	நடப்போம்.
நடந்தாய்	—	நடந்தீர்கள்.
நடக்கிறாய்	—	நடக்கிறீர்கள்.
நடப்பாய்	—	நடப்பீர்கள்.
நடந்தான், நடக்கிறான், நடப்பான், நடந்தாள், நடக்கிறாள், நடப்பாள்	—	நடந்தார்கள், நடக்கிறார்கள், நடப்பார்கள்.
நடந்தது	—	நடந்தன.
நடக்கிறது	—	நடக்கின்றன.
நடக்கும், நடப்பது	—	நடப்பன, நடப்பவை.

படி.

படித்தேன்	—	படித்தோம்.
படிக்கிறேன்	—	படிக்கிறோம்.
படிப்பேன்	—	படிப்போம்.
படித்தாய்	—	படித்தீர்கள்.

படிக்கிறாய் — படிக்கிறீர்கள்.
படிப்பாய் — படிப்பீர்கள்.

படித்தான்
படிக்கிறான்
படிப்பான்
படித்தாள்
படிக்கிறாள்
படிப்பாள்
} — { படித்தார்கள், படிக்கிறார்கள், படிப்பார்கள்.

படித்தது — படித்தன.
படிக்கிறது — படிக்கின்றன.
படிக்கும், படிப்பது — { படிப்பன, படிப்பவை

உண்:

உண்டேன் — உண்டோம்.
உண்ணுகிறேன் — உண்ணுகிறோம்.
உண்ணுவேன், உண்பேன் — { உண்ணுவோம், உண்போம்
உண்டாய் — உண்டீர்கள்.
உண்ணுகிறாய் — உண்ணுகிறீர்கள்
உண்ணுவாய், உண்பாய் — { உண்ணுவீர்கள், உண்பீர்கள்

உண்டான்
உண்ணுகிறான்
உண்ணுவான்
உண்பான்
உண்டாள்
உண்ணுகிறாள்
உண்ணுவாள்
உண்பாள்
} — { உண்டோம், உண்ணுகிறோம், உண்ணுவோம், உண்போம்.

உண்டது — உண்டன.
உண்ணுகிறது — உண்ணுகின்றன.
உண்ணும், உண்ணுவது, உண்பது — { உண்பன, உண்பவை

2. எதிர்மறை. கட.

(எதிர்மறை வினைமுற்று முக்காலத்துக்கும் ஒரே மாதிரியாய் நின்று காட்டும்.)

ஒருமை		பன்மை.
நடவேன்	—	நடவோம், நடவேம்.
நடவாய்	—	நடவீர், நடவீர்கள்.
நடவான்	—	நடவார் } கள்
நடவாள்	—	நடவார் } கள்
நடவாது	—	நடவா.
	படி.	
படியேன்	—	படியோம், படியேம்.
படியாய்	—	படியீர், படியீர்கள்.
படியான்	—	படியார் } கள்
படியாள்	—	படியார் } கள்
படியாது	—	படியா.
	உண்.	
உண்ணேன்	—	உண்ணோம், உண்ணேம்.
உண்ணாய்	—	உண்ணீர், உண்ணீர்கள்.
உண்ணான்	—	உண்ணார் } கள்
உண்ணாள்	—	உண்ணார் } கள்
உண்ணாது	—	உண்ணா.

159. ஏவுதல் வினைப்பகுதியினின்று பிறக்கும்.

வி. 1. வினைமுற்று — 158 ஐப்பார்.
2. வினையெச்சம் — நடந்து.
3. பெயரெச்சம் — நடந்த.
4. வினையாலணையும் பெயர் — நடக்கிறவன்.
5. தொழிற் பெயர் ... — நடத்தல்.

160. வியங்கோள் வினைமுற்றுகள் ஏவுதல் விகுதிகளை ஏற்கும்.

வி. உடன்பாட்டில். க. இ. இய. இயர். அல். ஆக.

(உ-ம்) வாழ்க — வாழியர்.
வாழி — வாழல்.
வாழிய — வாழ்வாயாக.

எதிர்மறையில். அற்க. ஆக.

(உ-ம்) வாழ் + அற்க = வாழற்க,
வாழாதிருப்பாய் + ஆக = வாழாதிருப்பா
[யாக

161. வினையெச்சங்கள் முக்காலத்துக்கும் பொதுவாய் வருமோ.

வி. தன் கர்த்தாவின் வினையோடும், பிறகர்த்தாவின் வினையோடும் பொருந்தி நிற்கும் சில வினையெச்சங்கள் முக்காலத்துக்கும்பொதுவாய் வருதலும் இயல்பே.

அவை வருமாறு.

1. வினைப்பகுதிகளோடு அகர விகுதி புணர்வதாலும்.

(உ-ம்) காட்டு + அ = காட்ட.

த—க—வி.

காட்ட—நான் காட்ட வந்தேன்.
நான் காட்ட வருகிறேன்.
நான் காட்ட வருவேன்.

பி—க—வி.

நான் காட்ட அவன் வந்தான்.
நான் காட்ட அவன் வருகிறான்.
நான் காட்ட அவன் வருவான்.

2. வினைப்பகுதிகளோடு "க்க" என்ற விகுதி புணர்வதாலும்.

(உ-ம்) பிடி + க்க = பிடிக்க.

த—க—வி.

பிடிக்க—நான் பிடிக்க வந்தேன்.
நான் பிடிக்க வருகிறேன்.
நான் பிடிக்க வருவேன்.

பி—க—வி.

நான் பிடிக்க அவன் வந்தான்.
நான் பிடிக்க அவன் வருகிறான்.
நான் பிடிக்க அவன் வருவான்.

3. தல், அல், என்ற விகுதிகளேற்ற வினைப் பகுதிகளோடு "கு" விகுதி புணர்வதாலும்.

(உ-ம்) செய் + அல் + கு = செய்யற்கு.
நட + தல் + கு = நடத்தற்கு.
த—க—வி.

செய்யற்கு—நான் செய்யற்கு வந்தேன்.
நான் செய்யற்கு வருகிறேன்.
நான் செய்யற்கு வருவேன்.
பி—க்—வி.
நான் செய்யற்கு அவன் வேண்டினான்.
நான் செய்யற்கு அவன் வேண்டுகிறான்
நான் செய்யற்கு அவன் வேண்டுவான்.

நடத்தற்கு. மேலே காட்டியபடியே உணர்ந்தியறிக.

162. உம்மைத்தொகைக்கும் உம்மையெச்சத்துக்கும் பேதமென்ன?

வி. 1. உ-தொ— இரண்டு அல்லது பலபெயர்கள் தொகுத்து நிற்கையில் "உம்" தொக்கி நிற்பதே.

(உ-ம்) இராவும் பகலும் என்பதற்கு—இராப்பகல் என்பது உ-தொ.

உ-எ— ஒரு பெயரோடு "உம்" சேர்வதால் வேறு பெயர்களையும் காட்டுவது.

(உ-ம்) மனிதனும் வந்தான்: என்பதில் 'உம்' என்றதால் மற்றதும் வந்தது என்பது தொக்கு நிற்கிறது.

2. உ-தொ— உயர்திணை ஒருமைப் பெயர்கள் தொடர்வதில் "உம்" தொக்கி நிற்கில் பலர்பால் விகுதியைப்பெற்று வரும்.

(உ-ம்) ராஜமந்திரி பிரதானிகள்.

அஃறிணை ஒருமைப்பெயர்கள் தொடர்வதில் 'உம்' தொக்கிநின்று பன்மை பன்மை விகுதிபெற்றும் பெறாதும் வரும்

(உ-ம்) ஆடுமாடுகள்.
ஆடுமாடு.
உ-எ— பலபெயர்களும் தொடர்ந்துவராது.
பன்மை விகுதி பெற்றும் வராது.

163. வெல் என்னும் பகுதியடியாகப் பிறந்த

1. தொழிற்பெயர். 2. இறந்தகாலப்பெயரெச்சம்.
3. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.
4. பலவின்பால் இறந்தகாலவினைமுற்று.
5. ஆண்பால் இறந்தகாலவினையாலணையும் பெயர்.
6. எதிர்மறை வியங்கோள் வினைமுற்று.
7. எதிர்மறை பலவின் பால் வினைமுற்று. என்ன?

வி. 1. வெல்லல், வெல்லுதல், வெல்லுகை வெற்றி, வெல்லாமை.
2. வென்ற 3. வெல்லா 4. வென்றன
5. வென்றவன் 6. வெல்லற்க, வெல்லாயாக 7. வெல்லாநின்றன.

VII. இடையத்தியாயம்.

---

164. இடைச்சொல்லாவதென்ன.

வி. தனித்து நின்று வழங்காமல் பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சேர்ந்துபொருள் உணர்த்தும் சொற்களாம்—அது பெயர், வினையாகிய இரு சொற்களுக்கும் முன்னும் பின்னுமாக, ஒன்று அல்லது பல சேர்ந்து நிற்கும்.

(உ-ம்) மனிதனே—ஏ இடைச்சொல்.
மரத்தினை—அத்து, இன், ஐ, இடைச்சொல்
ஏயே இவன்தான்—ஏ, ஏ, இடைச்சொல்.

165. எண்வகை இடைச்சொற்கள்.

வி. 1. வேற்றுமை உருபுகள்—ஐ, ஆல், கு, இன், அது, கண், முதலிய.

2. விகுதிகள்—அன், ஆன், அள், ஆள், அர், ஆர், முதலிய.

3. இடைநிலைகள்—த், ட், ற், இன், ப், வ், கிறு, கின்று, ஆநின்று முதலிய.

4. சாரியைகள்—அன், ஆன், இன், அல், அற்று, முதலிய.

5. உவமை உருபுகள்—போல, ஒப்ப, நேர, நிகர, படி, முதலிய.

6. தத்தம் பொருளைக்காட்டிய சொற்கள்—ஏ, ஓ, ஆ, உம், என, என்று, முன், பின், முதலிய.

7. இசைநிறைக்கிற சொற்கள்—ஏயே (இவன்றான்.)

8. அசைநிலைக்கிற சொற்கள்—ஆம் (செய்வது + ஆம்.)

166. இடைச்சொற்கள் என்னென்ன பொருட்களில் வரும்.

வி.	பிரிநிலை	ஈற்றசை	தேற்றம்
	வினா	இசைநிறை	சிறப்பு
	எண்	ஒழியிசை	எதிர்மறை
	தெளிவு	அசைநிலை	ஐயம்
	எச்சம்	முற்று	ஆக்கம்
	வினை	பெயர்	குறிப்பு (விரைவு)
	பண்பு	உவமை	மிகுதி
	அதிசயம்	பன்மை	ஒலிக்குறிப்பு
	அச்சம்	இரக்கம்	இகழ்ச்சி.

(உதாரணம் பின்வரும் இடங்களில் உணர்க.)

167. தத்தம் பொருளை உணர்த்தும் இடைச் சொற்களெவை?

வி. ஆ, ஏ, ஓ, உம், என, என்று, என்பவன், ஆனவன், என்பது, ஆனது, ஆவது, முன், பின், கீழ்,

மேல், என்றே, எறு, அந்தோ, ஐயோ, மற்று, மன், கொல், தோறு, தொறு, ஆங்கு இன்னும் இவைபோல்வன.

(ஆயினும் ஆ, ஏ, ஓ, உம், என, என்று, மன், மற்று, கொல், முதலியவைகள்தான் அதிகமாய் வழங்குவனவாம்.)

168. ஆகாரம் எத்தனை பொருளில் வரும்.

வி. 1. எச்சம் பெய்யா என்றது—பெய்து
2. எதிர்மறை கருமங்கள் ஆக—ஆகாது
3. வியப்பு ஆ! ஆ!! நல்லகுதிரை
4. வினா வந்தானா

169. "ஏ"காரம் எத்தனை பொருளைத் தரும்

வி. 1. தேற்றம் or நிச்சயம்—ராமனே வந்தான்.
2. எண்—அண்ணனே, தம்பியே, தங்கையே, போங்கள்.
3. வினா—ராமனே தந்தான்,
4. பிரித்தல்—மரங்களில் பனையே உயர்ந்தது.
5. ஈற்றசை—நிறைந்தனவே.
6. இசைநிறை—ஏயே, இக்கல்ல, இங்கல்ல.

170. "ஓ"காரம் எத்தனை பொருளில் வரும்.

வி. 1. பிரித்தல்—ராமனோ சொன்னான்.
2. ஒழியிசை—தூங்கவோ வந்தீர்கள்.
3. எதிர்மறை—மாத்தை நட்டவன் தண்ணீர் இறையானோ.
4. வினா—ராமனோ.
5. தெளிவு—பயமோவன்று நயமோவன்று.
6. சிறப்பு—(உயர்வு) ஓ ஓ எஜமான் வந்தார்.
(இழிவு) ஓ ஓ கூலியான் வந்தான்.
7. அசைநிலை—ஓ ஓ சிறப்பு.
8. கழிதல்—மருந்துண்டாலல்லவோ உயிர் பிழைக்கும்.
9. சந்தேகம்—நாயோ நரியோ நின்றுவிட்டது
10. ஒலிகுறிப்பு—ஓவென்று அழுதான்.

171. "உம்" என்பது எத்தனை பொருளில் வரும்.

வி. 1. எதிர்மறை—சொன்னாலும் கேளான்.
2. எச்சம்—மாப்பிள்ளையும் வந்தார்.
3. முற்று—இரண்டு காலும் ஒடிந்தது.
4. எண்—களவும் கத்தும் அற.
5. சிறப்பு—(உயர்வு) மந்தியும் கொம்பிழக்குமா
(இழிவு) எருமையும் குடியாது.
6. ஐயம்—தகப்பனாயினும் மகனாயினும் வருவான்.
7. ஆக்கம்—ஜலமே அவிழ்தமாயிற்று.
8. தெளிவு—புதிதுமன்று பழையதுமன்று.

172. "என" எத்தனை பொருளில் வரும்.

வி. 1. வினை—கண்டானென ஓடினான்.
2. பெயர்—மதுராபுரியெனக் கண்டான்.
3. எண்—காடென மலையென வனமென அலைந்தான்.
4. இசை—குசு குசுவென பேசினான்.
5. குணம்—கறுப்பெனக் கண்டான்.
6. உவமை—அவனை கரியெனக் கண்டோம்.
7. குறிப்பு—கட்டெனச் சொன்னான்.

173. "என்று" எத்தனை பொருளில் வரும்.

வி. 172-ல் "என" என்பதுக்குப் பதிலாக "என்று" என்பதை வைத்து உபயோகித்துக் கொள்.

174. "மன்" என்பது எத்தனை பொருளைத் தரும்.

வி. 1. ஒழியிசை — கரியதோர் கீறமன் [பயமுண்டாக்கிற்று.
2. அசைநிலை — அதுமன் அகன்றது.
3. ஆக்கம் — கொடியன்மன்.
4. பெயர் — குறுமன்னாடு.
5. மிகுதி — எந்தை எமக்கருள்மன்.

6. கிலேபேறு (பிரிதல்) வையகத்து மன்னரியது
[புரிமே.
7. ஒழியிசை — கூறியதோர்வாள்மன்

175. "மற்று" எத்தனை பொருளை உணர்த்தும்
வி. 1. வினை — மற்றடிகள் செய்யமலர்.
2. பிறிது — மற்றுங்கே பசும்புற் றலைக்
[காண்பரிது.
3. அசைநிலை— அறத்தால் வருவதே மற்
[றின்பம்.

176. "கொல்" எத்தனை பொருளைத்தரும்.
வி. 1. சந்தேகம்— இன்று கொல் அன்று கொல்
2. அசைநிலை ஆசைக்கு மருந்துண்டோ
[கொல்.

177. பற்பல பொருட்களில் வரும் இடைச் சொற்களெவை?
வி. 1. ஒலிக்குறிப்பு.
கடகட, திடுதிடு, முதலியஇரட்டைச் சொற்கள்.
கோ, சோ, தொப், திண், முதலிய சொற்கள்.
(உ-ம்) கட கட வெனப்பேசினான்.
திடு திடுவென்று ஓடிற்று.
கோ வென அழுதேன்.
சோ வென பெய்தது.
தொப் என்று விழுந்தது.
திண் என்று கேட்டது.
2. விரைவுக்குறிப்பு:—பொள்ளென, கட்டென, சரேலென, சட்டென்று.
(உ-ம்) பொள்ளென வந்தான்.
கட்டென பேசினான்.
சரேலென ஓடினான்.
சட்டென்று போனான்.
3. அச்சக்குறிப்பு;—திடுக்கென, துணுக்கென, திண்ணென.

(உ-ம்) திடுக்கென பயந்தான்.
துணுக்கென கலங்கிற்று.
திண்ணென நடுங்கினான்.

4. இரக்கப் பொருள் :—ஐயோ, அந்தோ, ஆஅ, ஓஓ, பாவம்.

(உ-ம்). ஐயோ — ஐயோ ஏழை பிள்ளை.
அந்தோ — இதென்ன கொடுமை அந்தோ.
ஆஅ — செத்துப்போனானே ஆஅ.
ஓஓ — ஓஓ இதென்ன கொடுமை.
பாவம் — அவனுக்கு [illegible] தெரியாது பாவம்

5. இகழ்ச்சிப் பொருள்.
சீ, சீசீ, சீச்சீ, ப்பூ, சை.

(உ-ம்) சீ — சீ நாயே போ.
சீசீ — சீசீ கேவலம்.
சீச்சீ — சீச்சீ நாயே.
ப்பூ — ப்பூ, ரொம்ப சாதித்துவிடுவாய்.
சை — சை என்னை சையென அழைத் [தாய்.

6. அதிசயப் பொருள் :— அடடா, அம்மம்மா, ஆகா,

(உ-ம்) அடடா — அடடா என்ன நேர்த்தி.
அம்மம்மா — அம்மம்மா எத்தப்பெரிது.
ஆகா — ஆகா வானை முட்டுமே.

7. பிறப்பொருள்.
ஆவது, அடிக்கடி, முன், பின், ஒருவேளை, வேளாவேளை, இனி முதலியவைகளே.

(உ-ம்) ஆவது — ஒன்றாவது இரண்டாவது [கொடு.
அடிக்கடி — அடிக்கடி வராதே.
முன் — அதுமுன் அதுமுன் அது [முன் சரணம்.
பின் — வந்தால் தெரியாதா பின்னே
ஒருவேளை — ஒருவேளை பார்க்கலாம்.

வேளா வேளை வேளாவேளை போவேன்.
இனி — இனி இனியென்பது மெய்

வி. இணை மொழிகள். உம் முதலிய.
(உ-ம்) அவனும் இவனும் வந்தார்கள்.

178. பின்வருவதால் அறியப்படுவதென்ன!
பிரித்தல், ஒழிபிசை, இசைநிறை, ஈற்றசை, தேற்றம், ஐயம், குணம்.

வி. பிரித்தல். பலபொருள்களிலிருந்து ஒன்றை பிரிந்து எடுத்தல்.
(உ-ம்) நானே செய்தேன். மற்றவர்கள் செய்யவேயில்லை.

ஒழியிசை. ஒன்றை மறுத்து வேறு ஒரு காரியத்தைக் குறிப்பிடல்.
(உ-ம்) படிக்கவோ போகிறாய்
இல்லை படிக்கவல்ல விளையாடப்போகிறாய்.)

இசைநிறை.—யாதொரு அர்த்தங்கொடாமல் ஓசையைமட்டும் நிறைக்க வருவது.
(உ-ம்) ஏஎ மகனே.

ஈற்றசை.—அர்த்தமின்றி ஓசையை நிறைக்க மட்டும் வார்த்தையின் கடைசியில் வருவது.
(உ-ம்) கொண்டனனே—ஏ.

தேற்றம்.—நிச்சயப்படுத்தல் அதாவது உறுதிப்படுத்திப் பேசுதல்.
(உ-ம்) தேவரீருக்கே மகிமை.

ஐயம்.—சந்தேகத்தை உண்டாக்கும் பொருள்
(உ-ம்) பத்தானாலும் எட்டானாலும் சரி.

குணம்.—பண்புச்சொற்கள்.
(உ-ம்) வெள்ளென விளங்கிற்று.

179. பின் வருபவைகளுக்குப் பேதமென்ன
1. சிறுவிரல் — சிறியவிரல்.
2. கருங்கோழி — கரியகோழி.
3. இவன் படித்தவன் இவன் படிப்பாளி.

வி. 1. சிறுவிரல் — இது சிறப்பாக சுண்டு [விரலைக்காட்டியது.

சிறியவிரல் — இது பொதுவாக [ஏதோ ஒரு சின்ன விரலைக்காட்டியது.

2. கருங்கோழி — கோழி ஜாதியில் ஓர் [பிரிவைக்காட்டியது.

கரியகோழி — கறுப்புநிறமான கோழியைக்காட்டுகிறது.

3. இவன் படித்தவன் இறந்தகாலத்தில் நடந்தஒரு காரியத்தை ஏற்பவனைக்காட்டுகிறது.

இவன் படிப்பாளி இவனிடம் இயற்கையாய்மாறி குடிகொண்டிருக்கும் ஓர் தன்மையைக் காட்டுகிறது.

180. இடைச்சொற்களுக்கு இலக்கணம் எப்படிக் கூறுவாய்.

வி. 1. இன்னவகையைச் சேர்ந்தது.

2. இன்ன பொருளில் வந்தது.

3. இன்ன சொல்லையடுத்து வந்தது.

VIII. உரிச்சொல்லத்தியாயம்.

---

181. உரிச்சொல்லாவதென்ன.

வி. பெயர் வினைகளைத் தழுவி அவைகளின் குணத்தை காட்டி ஒரு பொருள் குறித்த பல சொல்லாயும் பலபொருள் குறித்த ஒரு சொல்லாயும் நின்று பெரும்பான்மையாய் செய்யுளிலும் சிறுபான்மையாய் வாசகத்திலும் வழங்கும் ஓர் சொல்லாம்.

(உ-ம்) 'மிகுதி' என்ற ஒரு பொருளைக்குறித்த பல உரிகள்—சால, உறு, தவ, நனி, கூர், கழி,

[illegible] 'காவல்' 'அச்சம்' என்ற பல பொருளைக்குறித்த ஓர் உரிச்சொல்— கடி.

182. உரிச்சொல்லுக்கும், பண்புப்பெயருக்கும், பண்புத்தொகைக்கும், பேதமென்ன.

வி. பண்புச்சொற்கள் தன்தன்மையை உணர்த்தும்போது பண்புப்பெயர் என்றும்,

பண்புருபுகள் தொகுத்து நின்று பொருளுணர்த்தும்போது பண்புத்தொகையென்றும்

பண்பையுணர்த்தும் உருபுகளின்றி ஒரு பொருளைக்கொடுக்கும்போது உரிச்சொல்லென்றும் பேர் பெறும்.

(உ-ம்) கறுப்பு, சிவப்பு, வெளுப்பு.—பண்புப்பெயர்.
கருங்கோழி, செந்தாமரை—பண்புத்தொகை
கரியகோழி, வெண்மையான நூல்.— [உரிச்சொல்.

183. உரிச்சொல் எத்தனை வகைப்படும்.

வி. அவைகள் தழுவி நிற்கும் வார்த்தைகளைக் கொண்டு, பெயரைத்தழுவியது பெயருரியென்றும் வினையைத்தழுவியது வினையுரியென்றும் இருவகைப்படும்.

(உ-ம்)
நல்ல மனிதன்
கெட்ட பிள்ளை
மேன்மையான வேலை } பெயருரிகள்.

நன்றாய்ச் செய்தான்
கெடுதியாய் முடிந்தது
சாலப் பேசினான் } வினையுரிகள்.

184. பெயருரிகள் எவ்வாறு வரும்.

வி. 1. இயல்பாகவே சில சொற்கள் பெயருரியாக வரும்.

(உ-ம்) பல, சில, புது, இரி.

2. சில பெயர்ச்சொற்கள் வேறொரு பெயரோடு கூடி பெயருரியாக மாறும்.

(உ-ம்) 'பொற்'குடம், ; 'கண்'மாடம், ; 'விரல்'நகம், ;

3. சிலபெயர்கள் வேறொரு பெயரோடு கூடி ஈறு கெட்டு பெயருரியாக மாறும்.

(உ-ம்) "மரக்"கோடு; "செங்"கோல்.

4. சிலபெயர்கள் வேறொரு பெயரோடு ஈறு திரிந்து கூடி பெயருரியாகும்.

(உ-ம்) 'கிணற்று' ஆழம், ; "மாட்டுக்'காலம்.

5. பெயர்ச்சொற்களோடு 'உள்ள,' 'ஆன,' என்னும் பெயரெச்சங்கள் கூடி பெயருரியாகும்.

(உ-ம்) 'நன்மையான' காரியம்.
'வலிமையுள்ள' ராஜன்.

185. வினையுரி எவ்வாறு வரும்.

வி. 1. இயல்பாகவே சில உரிச்சொற்கள் வினையைத் தழுவுவதால் வினையுரிச்சொல்லாக வரும்.

(உ-ம்) 'சால' பேசினான், ; 'நனி' தாழ்ப.

2. சில வினைப்பகுதிகள் இயல்பாக நின்று வினையைத் தழுவி வினையுரியாகும்.

(உ-ம்) 'கழி' பெருகும்.

3. சில பெயரோடு "ஆய்" என்னும் வினையெச்சம் கூடி வினையுரியாகும்.

(உ-ம்) 'விரைவாய்' பேசினான்.
'தாழ்வாய்' இருந்தது.

186. உரிச்சொல் எவ்வாறு நின்று பொருள்படும்

வி. 1. தனித்து நின்று பொருள் கொடுக்கும்.

(உ-ம்) 'கரிய' குதிரை, ; 'வெண்மையான' தாமரை.

2. பலஉரிகள் சேர்ந்து நின்று பொருள்படும்.

(உ-ம்) 'மிகச்சிறிய' நாகம்.
'விரைவான காவிரிசுத்த' தண்ணீர்.

3. பண்பைச்சிறப்பிக்க அடுக்கிவரும்.
கன்னங்கரிய யானை.

(உ-ம்) செக்கச்சிவந்த செந்தாமரை.

IX. வாக்கிய அத்தியாயம்.

187. சொற்கள் எவ்வாறு தொடர்ந்து நிற்கும்.

வி. சொற்கள் இரண்டு முதல் பலவாறாகத் தொடர்ந்து நிற்கும்.

அவைகளை 68-ம் கேள்வியில் கண்டுணர்க.

188. வாக்கியமென்றாலென்ன.

வி. ஒன்று அல்லது பல எழுவாய்களும் அவைகளின் தொழிலை யுணர்த்தும் ஒன்று அல்லது பல பயனிலைகளும் தொகுத்தாவது விரிந்தாவது நின்று ஒருபொருளை முடிவுறப் பெறுவதே வாக்கியம்.

(உ-ம்) 1. வந்தேன் (எழுவாய் தொகுத்தது.)

2. நான் வந்தேன். (எழுவாய்பயனிலை விரிந்தது.)

3. சுகமா? (எழுவாய் பயனிலை யிரண்டும் தொகுத்தது.)

4. அதைச்செய்ததார்? நான். (பயனிலை தொகுத்தது.)

5. நானும் ராமனும் வந்தோம். (பல எழுவாயும் ஒரு பயனிலையும்.)

6. ராமன் வந்தான் பேசினான். (ஒரு எழுவாயும் பல பயனிலைகளும்.)

189. வாக்கியங்கள் எத்தனை வகைப்படும். உதாரணங்கொடு.

வி. தனிவாக்கியம், தொடர்வாக்கியம், சங்கர வாக்கியம், என 3 பிரிவாம்.

தனிவாக்கியம்.—ஒரு எழுவாயும் ஒரு பயனிலையும் தொடுத்து நின்று தன்னிலேயேபொருள் முடிந்து நிற்பதாம்.

(உ-ம்) ராமன் ஓடினான்.

தொடர்வாக்கியம்.—இரண்டு அல்லது பல தனி வாக்கியங்கள் ஒன்றுபட தொடுத்துநிற்பதாம்.

(உ-ம்) பாண்டவர்கள் ஆடிப்பாடினார்கள்.

(பாண்டவர்கள் ஆடினார்கள் + பாண்டவர்கள் பாடினார்கள்.)

சங்கரவாக்கியம்.—ஒரு மூலவாக்கியமும் அந்த மூலவாக்கியத்தோடு சேர்ந்து நிற்கும்ஒன்று அல்லது பல வாக்கியங்களும் கூடி நிற்பதாம்.

(உ-ம்) 1. மழை பெய்தால் குளம் பெருகும்.
2. மழைபெய்து குளம் பெருகினால் நெல் விளையும்.
3. மழை பெய்து குளம் பெருகி நெல் விளைந்தால் பஞ்சம் நீங்கும்.

இவைகளில் முறையே 'குளம் பெருகும்' 'நெல் விளையும்' 'பஞ்சம் நீங்கும்' இவைகள் மூலவாக்கியங்கள்—, 'மழை பெய்து' 'மழை பெய்து குளம் பெருகினால்' 'மழை பெய்து குளம் பெருகி நெல் விளைந்தால்' இவைகள் அந்த மூலவாக்கியங்களைத்தொடர்ந்த வாக்கியங்கள்

190. தனிவாக்கியங்கள் ஐந்து பொருட்களை உணர்த்தும்.

வி. 1. உரைத்தல் a. கல் இருக்கிறது.
b. வெளிச்சம் இல்லை.
2. ஏவல் a. நீ படி. c. நீ வாழி.
b. ஓடாதே. d. நீ வாழ்வாயாக.
3. விழித்தல் a. அப்பா இது அநியாயம்.
b. ராமா இது சரியானதல்ல
c. அம்மா இதைச் செய்ய வேண்டும்
4. வினாதல் a. தேவன் வந்தாரா.
b. பிள்ளை பிழைக்காதோ.
c. சுகமா.

191. வசனகிரமம் எவ்வாறு.

வி. ஒரு வாக்கியத்தில் எழுவாயும் அதை அடுத்துவரும் அடைமொழிகளும்; பின்பு செயப்படுபொருளும் அதை அடுத்துவரும் அடைமொழிகளும்; அப்பால் பயனிலையும் அதை அடுத்துவரும் அடைமொழிகளும் வரவேண்டியது. (ஆனால்)

உபமான உபமேய வாக்கியத்தில் உபமானத்தை முந்தியும் அப்பால் உபமேயத்தை பிந்தி

யும்அமைத்து மேலே காட்டியபடி திருத்தப் படுத்திக்கொள்ளவேண்டும். (பின்னும்) செயப்படுபொருள் வினைமுற்றுக்குப் பின்னால் விளங்கி வருதலும் குற்றமன்று. (மேலும்)

இற்கில விசேஷத்தைதவிர, எழுவாய், பயனிலைக்கு பிந்தியும்; செயப்படுபொருள், எழுவாய்க்கு முந்தியும், பயனிலை, வாக்கியத்தின் ஆரம்பத்திலும் வந்தாலும் தோஷமன்று.

192. எழுவாய், பயனிலை, செயப்படுபொருளென்றுசொன்ன அவைகளை ஒரு வாக்கியத்தில் கண்டு பிடிப்பதெவ்வாறு.

(i). எழுவாய். முதலாம் வேற்றுமையை ஏற்றபெயர்களாயிருந்து வாக்கியத்துக்கு மூலப்பொருளாயிருப்பதே.

(உ-ம்) நான் ராமனை பிரம்பாலடித்தேன்.

இதில் நான், ராமன், பிரம்பு என்ற மூன்று பெயருள் வாக்கியத்துக்கு மூலப்பொருளாகிய 'நான்' என்பது எழுவாய்.

இவ்வெழுவாய் ஒரு வாக்கியத்தில் விரிந்தும் வரும், தொகுத்தும் வரும். தொகுத்து வரும்போது எப்போதும் தன்மை, முன்னிலை, படர்க்கை, இடத்துப் பெயர்களாகிய நான், நாம், நீ, நீர், நீங்கள், அவன், அவள், அவர்கள், அது, அவை, முதலியவைகளில் ஏதாவது ஒன்று விரிக்கில்வரும்.

(உ-ம்) செய்தான். இதில் 'அவன்' தோன்றா எழுவாய்.

பயனிலை. எழுவாயின் செயல் இன்னதென்று காட்டும் சொல்லாம்.

(உ-ம்) சாத்தன் வந்தான். சாத்தனுடைய செயல் வருகையென்று காட்டும், 'வந்தான்' என்பது பயனிலை. (இதற்கு வினைமுற்று என்றும் பெயர்.)

எழுவாயைப்போல பயனிலையும் தொக்கி நிற்கும்.

(உ-ம்) செய்தது யார்? அவன்.

இதில் "அவன் செய்தான்" என்று வரவேண்டிய

வாக்கியத்துக்குப் பதிலாக 'செய்தான்' என்ற பயனிலை நோக்கி நின்று பொருள் கொடுத்தது.

குறிப்பு. சில சமயங்களில் மேலே சொன்ன எழுவாயும் பயனிலையும் தொகுத்து நின்று பொருள் கொடுக்கும்.

(உ-ம்) சுகமா? இவ்வாக்கியம் 'நீ சுகமாயிருக்கிறாயா' என்று தன் பூரண அங்கத்தை விரியச்செய்யும். ஆகலின் 'நீ' என்ற எழுவாயும் 'இருக்கிறாயா' என்ற பயனிலையும் தொகுத்து நின்று 'சுகமா' என ஓர் தனிவாக்கியமாய் நிற்கிறது.

செயப்படுபொருள். 2-ம் வேற்றுமை ஏற்ற பெயராயிருந்து எழுவாயின் செய்கையால் விளைந்த பயனைக்காட்டுகிறதே.

(உ-ம்) ராமன் பெட்டியைச் செய்தான்.

இதில் ராமன் செய்கையால் விளைந்தது 'பெட்டி' என்று காட்டும் உருபே செயப்படுபொருள்.

இந்த செயப்படுபொருளில் 2-ம் வேற்றுமை உருபு தொக்கியும் விரிந்தும் வரும்.

(உ-ம்) 1. ராமன் மரத்தை வெட்டினான். (விரிந்தது)
2. ராமன் மரம் வெட்டினான். (தொக்கியது.)

கண்டுபிடிக்கும்வகை. 1. வாக்கியத்தின் பொருள் எந்த வினைமுற்றால் முடிகிறது என்று பார்த்து அந்த வினைமுற்றையே 'பயனிலை' யெனஸ்தாபி.

2. பயனிலையோடு 'யார்' அல்லது 'எது' என்ற பதங்களை முன்னுக்கு சேர்த்து கேட்கும் கேள்விக்கு வரும் விடைதான் 'எழுவாய்' அந்த எழுவாய் தோன்றினால் அதையே எழுவாயாகக் கொள்க. மற்றப்படி அந்த பயனிலை இன்ன இடத்து ஒருமை, அல்லது பன்மைமுற்று எனக்கண்டு அவ்விடத்து ஒருமை அல்லது பன்மைப் பெயரை 'தோன்றா எழுவாய்' எனக்கொள்க.

3. பயனிலையோடு 'எதை' அல்லது 'யாரை' என்ற வார்த்தைகளைச் சேர்த்து கேட்கும் கேள்விக்கு வரும் விடையே செயப்படுபொருள் என அறிக.

193. எழுவாய் என்னென்ன விஷயங்களில்

பயனிலையோடு இசைந்துவரும்.

வி. திணை, பால், இடம் முதலியவைகளில் எழுவாய் பயனிலையோடு இசைந்து வரும்.

(உ-ம்) அவன்—வந்தான். நீ—வந்தாய்.
அவள்—வந்தாள். நீர்—வந்தீர்.
அவர்கள்—வந்தார்கள். நீங்கள்—வந்தீர்கள்.
அது—வந்தது. நான்—வந்தேன்.
அவை—வந்தன. நாம்—வந்தோம்.

ஆயினும் 'செய்யுமென்னும்' வாய்ப்பாடடைந்த வினைமுற்றுகள் 'பலர் பால்' தவிர மற்ற பால்களுக்கெல்லாம் பயனிலையாய் வருதலுமுண்டு.

(உ-ம்) அவன், அவள், அது, அவை,—வரும்.

194. வினவுதல் எத்தனை வகைப்படும்.

வி. ஒருவன் தான் அறிய விரும்பும் ஒன்றை வெளிப்படுத்தக் கேட்கும் வினாவானது.

1. அறிவினாவென்றும்
2. அறியாவினாவென்றும்
3. ஐயவினாவென்றும் (சந்தேகம்)
4. கொடைவினாவென்றும்
5. கொள்ளல்வினாவென்றும்
6. ஏவல்வினாவென்றும் 6 வகைப்படும்.

(உ-ம்) 1. மாணாக்கா, இக்கணக்கு செய்வதெப்படி (அறிவினா.)

2. ஐயா, இக்கணக்கு செய்வதெப்படி (அறியாவினா) (இது மாணாக்கன் உபாத்தியாயரைக் கேட்டல்)

3. காளையோ கடாரியோ (ஐயவினா)

4. பயறுண்டோ செட்டியாரே (கொள்ளல் வினா)

5. ராமாவுக்கு சோறில்லையோ (கொடை வினா)

6. சாத்தா சாப்பிட்டாயிற்று (ஏவல்வினா)

195. விடையென்றாலென்ன. எத்தனை வகையாய் பொருள் உணர்த்தும்.

வி. ஒருவன்வினவிய பொருள் இன்னதென்று அறிவிப்பதாம்.

இது சுட்டு, எதிர்மறை, உடன்பாடு, ஏவல், வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல்,

இனமொழி, ஆகிய 8 வகைப்பட்டு சுட்டு எதிர்மறை, உடன்பாடு ஆகிய 3-ம் வெளிப் படையாகவும் மற்றைய 5-ம் குறிப்பாகவும் பொருளையுணர்த்தும்.

(உ-ம்) அதைச்செய்ததுயார் என்ற வினவுக்கு 'இவன்' என்பது (சுட்டு)

கோவிந்தா இதைப்படிப்பாயா? என்ற வினவுக்கு

a. படியேன் என்பது (எதிர்மறை)
b. படிப்பேன் என்பது (உடன்பாடு)
c. நீபடி என்பது (ஏவல்)
d. நான் படிப்பேனோ என்பது (வினுதல் [தல்)
e. வருத்தமாயிருக்கிறது என்பது (உற்றதுரைத்
f. வருத்தமாயிருக்கும் என்பது (உறுவது கூறல்)
g. கணக்குச்செய்வேன் என்பது (இன விடை)

196. வழுவென்றாலென்ன. வப்போ வழுவமைதி யாகும்.

வி. சொற்கள் தொடரும்பிடத்து இலக்கண விதிக்கு ஒத்து வராமல், திணை, பால், இடம், காலம், வினு, விடை, மரபு ஆகிய 7 காரியங்களும் மயங்கி வருதல் வழுவாம்.

இவைகளை சான்றோர் அங்கீகரித்தவால் வழுவாயிருந்தபோதிலும் அவைகளைச் சரியென்று ஒப்புக் கொண்டு வழுவமைதி யெனக்கொள்வர்.

வழு.

திணை — அவன் வந்தது, அது வந்தான்.
பால் — அவன் வந்தாள், அவை வந்தது.
இடம் — யான் வந்தான், அவர் வந்தீர்.
காலம் — நாளை வந்தான், நேற்று வருவாய்.
வினு — ஒன்றைக்காட்டி சிறிதோ பெரிதோ என்பது
கறக்கிற பசுவை சினையோ, வரடோ என்பது
விடை — மதுரைக்கு வழியெங்கேயென்றால் செவப்புக்காளை 30ரூ. என்பது

ராமன் வருவானென்று எரிச்
அவன் செத்தான் என்பது

மரபு — மாட்டின் பிள்ளையை 'குட்டி' யென்பது
பானை மேய்ப்போனை 'இடையன்' என்பதுமே
வழுவமைதி.

திணை — பசுவை என் அம்மை வந்தாள் என்பது
என் பொருள் என் மக்களே ,,
இவன் ஒரு பெண் ,,
பால் — ஒருவனை எஜமான் வந்தார்கள் ,,
அம்மா நீதான் என்னைப்பெற்றவன் ,,
மரம் வளர்ந்தன ,,
இடம் — நீயோ அவனோ யார் வந்தார் ,,
தாங்கள் சொன்னீர்கள் ,,
என் தம்பியை அழைத்தேன் ,,
காலம் — தெய்வம் இருக்கிறது ,,
மின்னினால் மழைபெய்தது ,,
அங்கே போனால் செத்தாய் ,,
வினா — ஒரு குளத்தைக் காட்டிப் பெரிதோ சிறிதோ
என கேட்கிறது.
கிணற்றைக்காட்டி ஆழமோ
திட்டையோ என்பது
விடை — மதுரைக்கு வழி யெதுவெனில்
வாயிலே ,,
கருருக்கு இப்படி போகலாமாவெனில்
அப்படிப்போகலாம் ,,
மரபு — அணிற்குட்டியை பிள்ளை ,,
சிறு தென்னமரத்தை தென்னம்
பிள்ளை ,,

197. மரபு ஆவதென்ன? உதாரணங்கொடு.

வி. எந்தப் பொருளை பெரியோர் தொன்று தொட்டு எப்படி எப்படி வழங்கி வந்தார்களோ அப்படி அப்படி அதனை வழங்குதல் மரபாம்.

(உ-ம்) ஆட்டுக்குட்டியை 'மறி' என்றும்
மாட்டுக்குட்டியை 'கன்று' ,,
குதிரைக்குட்டியை 'மறி' ,,
அணிற்குட்டியை 'பிள்ளை' ,,

கீரிக்குட்டியை 'பிள்ளை' என்றும்
வாழைக்குட்டியை 'கன்று'
தென்னைக்குட்டியை 'பிள்ளை'
ஆடு மேய்ப்போனை 'இடையன்'
யானை நடத்துவோனை 'பாகன்'
வண்டி ஓட்டுவோனை 'சாரதி' "

வழங்குவது மரபாம்.

198. பின் வரும் வாக்கியங்களில் காணப்படும் பிழைகளைத் திருத்தி நியாயங் கற்பி.

1. ராமன் மாடத்தியின் புத்திரி.
2. சொக்கனுடைய மகன் சுந்தர ராணி.
3. நாங்கள் நேற்றுவந்தார் என்று அவன்கள் கேள்விப்பட்டார்கள்.
4. தேவதாசிகள் இந்திரலோகத்தில் ஓடி ஒளிந்துகொண்டார் என்று மன்மதன் வியந்தான்.
5. சூரியன் தன் வெப்பங்களைக்கொண்டு அஸ்த கிரியில் ஒளித்தாள்.
6. வானத்தில் நட்சத்திரங்கள் கூட்டம் இருக்கின்றன.

வி. 1. ராமன் மாடத்திக்கு புத்திரன்.
ராமன் ஆண்பாலானதால் பெண்பால் மொழியான புத்திரி தகாது.
மாடத்தியின் இது 6-ம் வேற்றுமை. 6-ம் வேற்றுமைக்கு முறைப்பொருளில்லை ஆதலால் மாடத்திக்கு என்ற 4-ம் வேற்றுமைதான்சரி.

2. சொக்கனுக்கு மகன் சுந்தர ராஜன்.
மகன் ஆண்பாலாதலால் ராணிக்குப்பதிலாக ஆண்பாற் சொல்லே வைக்கவேண்டும். 6-ம் வேற்றுமைக்கு முறைப்பொருளில்லாததால் 4-ம் வேற்றுமையேசரி.

3. நாங்கள் நேற்று வந்தோம் என்று அவர்கள் கேள்விப்பட்டார்கள்.
நாங்கள் தன்மை பன்மையாதலின் வினையும் தன்மைப் பன்மையாகவே யிருக்கவேண்டும். அவன் என்பதின் பன்மை 'அவன்கள்' அல்ல அவர்களே.

4. தேவதாசிகள் இத்திரலோகத்தில் ஓடி ஒளித்துக்[illegible]காண்டார்களென்று மன்மதன் வியந்தான்.

பன்மை எழுவாய் ‘கள்’ விகுதி பெற்றிருந்தால் பயனிலையும் ‘கள்’ விகுதியே பெற்றிருக்க வேண்டும்.

5. [illegible]ரியன் தன் வெப்[illegible]ங்களைக்கொண்டு அஸ்தகிரியில் [illegible]ஒளித்தான்.

வல்லமை பராக்கிரமம் எப்பொழுதும் ஆண்பால் லட்சணமேயாதலின் பயனிலையும் ஆண்பால் முடியாகவே இருக்கவேண்டும்.

[illegible] வானத்தில் நட்சத்திரங்கள் கூட்டமிருக்கின்றது.

எழுவாயான் ‘கூட்டம்’ அஃறிணை ஒருமையாதலின் பயனி[illegible] ஒருமையாகவேயிருக்க வேண்டும்.

199. பின் வருபத[illegible]ங்களை பெயராகவும் வினையாகவும் உன் வாக்கிய[illegible]ங்களில் உபயோகித்துக்காட்டு.

களை, துணி, [illegible]மொழி, தாக்கு, நகை, படை, ஊர், பற்று, [illegible]ல், கலை, இசை, புரி, சதை, கூடு, கடை[illegible], ஓடு, பாய், மடி, கடி, நாடு, ஏறு, உடை, அறை, செய்.

வி. களை பெ. அந்த வயலில் ‘களை’ ஜாஸ்தி.

வி. அவன் கசடரைக் ‘களை’ந்தான்.

துணி பெ. கந்தை ‘துணி’களால் காயிதம் செய்வார்கள்.

வி. இரணியன் சுக்கிரீவன் [illegible]பிற்றை ‘துணி’த்தான்.

மொழி பெ. பல ‘மொழி’கள் சேர்ந்தால் ஓர்வாக்கியம்

வி. அவன் ஒரு பாட்டை ‘மொழி’ந்தான்.

தாக்கு பெ. கள்ளனை ‘தாக்கில்’ போட்டார்கள்.

வி. பருந்து கோழிக்குஞ்சை ‘தாக்கி’க்கொண்டது.

நகை பெ. அவள் கழுத்தில் ‘நகை’ அதிகம்.

வி. அவன் அதைப்பார்த்து ‘[illegible]கை’த்தான்

110

படை பெ. யானையுடைய 'படை'யினிது.
வி. அவன் சாமிக்கு சூடம் சாம்பிராணி 'படை'த்தான்.
ஊர் பெ. இது ஒரு சிறு 'ஊர்'
வி. அந்த புழு தரையில் 'ஊர்'ந்தது.
பற்று பெ. அவன் முகத்தில் 'பற்று' விழுகிறது.
வி. அவன் அதைப் 'பற்றி'க்கொண்டான்.
கல் பெ. இந்தக்'கல்' வானத்திலிருந்து விழுந்தது
வி. நீ முன்னுக்குவர பல நூல்களைக் 'கல்'
கலை பெ. சந்திர'கலை' காந்தியாயிருக்கிறது.
வி. நேற்று எழுதினது இன்று 'கலை'ந்துபோயிற்று.
இசை பெ. புலவனார் ஓர் 'இசை' பாடினார்.
வி. பலமரத் துண்டுகளை தச்சன் 'இசை'த்தான்.
புரி பெ. மதுரா'புரி' பாண்டியன் ராஜதானி.
வி. ராஜன் மிகக் கிருபை 'புரி'ந்தான்.
சதை பெ. அந்த மனிதனுக்கு 'சதை' அதிகம்.
வி. அந்த பட்டையை 'சதை'க்கச்சொல்லு.
கூடு பெ. இது ஒரு கிளிக்'கூடு'தான்.
வி. அமராவதி காவேரியோடு 'கூடு'கிறது.
கடை பெ. கோபாலன் 'கடை'க்குப் போனான்.
வி. மீனாட்சி தயிர் 'கடை'ந்தாள்.
ஓடு பெ. இது ஆண்டி பிச்சை யெடுக்கும் 'ஓடு.'
வி. நதி மலையிலிருந்து கடலுக்கு 'ஓடு'கிறது
பாய் பெ. வருணை 'பாயில்' உட்காரு.
வி. அவன் புலிபோல் 'பாய்'ந்தான்.
மடி பெ. அவன் 'மடியில்' பழம் வைத்திருக்கிறான்
வி. டிப்பு யுத்தத்தில் 'மடி'ந்தான்.
கடி பெ. இது நாய் கடித்த 'கடி'தான்
வி. உபாத்தியாயர் பிள்ளைகளைக் 'கடி'ந்தார்.
நாடு பெ. இது பாண்டியன் 'நாடு.'
வி. அவன் பணத்தை 'நாடு'கிறான்.
ஏறு பெ. காட்டில் ஒரு 'ஏறு' பலமாய்க்கர்ச்சித்தது
வி. வேடர்கள் மரத்தில் 'ஏறி'னார்கள்.

உடை பெ. அது ஓர் 'உடை' மரம் தான்.
வி. அவனுடைய 'உடை' பீதாம்பரம்.
அறை பெ. இந்தப்பெட்டியை 'அறை'யில் வை.
வி. புலி ஆட்டை 'அறை'ந்து கொன்றது.
செய் பெ. குபேரனுக்கு 1000 'செய்' உண்டு.
வி. குபேரனும் வேலை 'செய்'யவேண்டும்.

200. பின் வரும் வாக்கியங்களில் "உம்" என்பதை எடுத்துப்போட்டு பொருள் கெடாமல் வாக்கியத்தை திரும்ப எழுது.

1. ராமனும் கோபாலும் வந்தார்கள்.
2. குருடரும், செவிடரும், மூடவரும், வந்ததால் தானமும் தருமம் வெகுமதியும் கொடுத்தார்கள்.

வி. 1. a. ராமன் வந்ததால் கோபாலன் வந்தான்.
b. ராமன் வந்தான் கோபாலன் அவன் கூட வந்தான்.
c. ராமனோடு கோபாலன் வந்தான்.
d. ராமன் மாத்திரமல்ல கோபாலன் கூட வந்தான்.
e. ராமன் கோபாலன் என்ற இருவர் வந்தார்கள்.
f. ராமன் பின்னாலே கோபாலன் வந்தான்.
2. a. குருடர், செவிடர், மூடவர் வந்ததால் தானம், தர்மம், வெகுமதி முதலியவைகளைக் கொடுத்தார்கள்.
b. குருடரோடு செவிடர் மூடவர் முதலியவர்கள் வந்ததால் தானம் தர்ம, வெகுமதிகளைக் கொடுத்தார்கள்.
c. குருடர் செவிடர் மூடவர் ஆகிய இவர்கள் வந்ததால் தானம், தர்மம், வெகுமதி கொடுத்தார்கள்.

201. அடியில் வரும் வாக்கியங்களில் கோடிட்டவைகளுக்குப்பதிலாக அதன் எதிர்மொழியை அமைத்து பொருள் கெடாதபடி எழுது.

1. ராமன் செய்தது ஒன்று காமன் செய்தது ஒன்று.
2. நரி செய்ததும் திறம். கொக்கு செய்ததும் திறம்.
3. இவனும் தூங்கினான் அவனும் தூங்கினான்.
4. மழை பெய்வதும் நன்மை, பெய்யாததும் நன்மை.
5. அங்கே தீமையும் உண்டு நன்மையும் உண்டு.

வி. 1. ராமன் செய்தது வேறு காமன் செய்தது வேறு.
2. நரி செய்ததும் திறமற்றதல்ல கொக்கு செய்ததும் திறமற்றதல்ல.
3. இவனும் தூங்காதிருந்தலன் அவனும் தூங்காதிருந்தலன்.
4. மழை பெய்வதும் தீமையன்று பெய்யாததும் தீமையன்று.
5. அங்கே தீமையுமிலதில்லை நன்மையுமிலதில்லை.

202. அடியில் வரும் வாக்கியங்களில் ஒவ்வொரு சொல்லுக்கும் சொல்லிலக்கணம் கூறி முடிபு எழுது.

1. கற்றறிந்தவருக்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு.
2. எமன் விருப்பம் மரணத்தில் முடிவு பெறும்.
3. எட்டிச் சுரைக்காய் கறிக்குதவாது
4. இப்புத்தகத்தை யான் படித்தேன்.
5. ஐந்து காரியங்களைக்குறித்து சொல்லும் நூல்.

வி. 1. கற்று இறந்தகால வினையெச்சம் அறிந்தவர் என்ற வினையாலணையும் பேரின் வினைத்தன்மையைக்கொண்டு முடிந்தது.

அறிந்தவருக்கு	வினையாலணையும் பெயர் சிறப்பு என்ற பெயரைக்கொண்டு முடிந்தது.
சென்ற	இறந்தகாலபெயரெச்சம் இடம் என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது
இடம்	இடப்பெயர் எல்லாம்என்ற பெயரைக்கொண்டு முடிந்தது.
எல்லாம்	எண்ணுப்பெயர் உண்டு என்ற தோன்றாப் பயனிலையைக்கொண்டு முடிந்தது.
சிறப்பு	பெயர்ச்சொல் உண்டுஎன்ற தோன்றாப் பயனிலையைக்கொண்டு முடிந்தது.
2. எமன்	பெயர்ச்சொல் விருப்பம் என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது.
விருப்பம்	பெயர்ச்சொல் பெறும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.
மரணத்தில்	பெயர்ச்சொல் பெறும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது.
முடிவு	பெயர்ச்சொல் பெறும் என்னும் வினைமுற்றைக்கொண்டு முடிந்தது
பெறும்	வினைமுற்று விருப்பம் என்னும் எழுவாயைத்தழுவி முடிந்தது.
3. எட்டு	(திரிபுபெற்ற) பெயர்ச்சொல் சுரை என்னும் பண்புப்பெயரைக் கொண்டு முடிந்தது.
சுரை	பண்புப்பெயர் காய்என்ற பெயரை கொண்டு முடிந்தது.
காய்	பெயர்ச்சொல் உதவாது என்ற பயனிலையைக் கொண்டு முடிந்தது.
கறிக்கு	பெயர்ச்சொல் உதவாது என்ற வினையைக் கொண்டு முடிந்தது.
உதவாது	வினைமுற்று காய் என்ற எழுவாயைத் தழுவி முடிந்தது.
4. இ	சுட்டுப்பெயர் புத்தகம் என்ற பெயரைத் தழுவியது.

புத்தகத்தை — பெயர்ச்சொல் படித்தேன் என்ற வினையைக்கொண்டு முடிந்தது.

யான் — தன்மைப்பெயர் படித்தேன் என்ற பயனிலையைத் தழுவியது.

படித்தேன் — வினைமுற்று யான் என்ற எழுவாயைக் கொண்டு முடிந்தது.

ஐந்து — எண்ணுப்பெயர் காரியங்கள் என்னும் பெயரைக்கொண்டு முடிந்தது

காரியங்களை — பெயர்ச்சொல் சொல்லும் என்னும் பெயரெச்சத்தைக் கொண்டு முடிந்தது.

குறித்து — குறிப்பு இடைச்சொல் காரியங்கள் என்ற பெயரைச்சார்ந்து நின்றது.

சொல்லும் — முக்காலத்துக்கும் பொதுவான பெயரெச்சம், நூல்என்ற பெயரைக் கொண்டு முடிந்தது.

நூல் — பெயர்ச்சொல் தோன்றாப் பயனிலையாகிய 'இது' அல்லது 'எது' என்பதைக்கொண்டு முடிந்தது.

203. அடியில் வரும் வாக்கியங்களை தக்க வினைமுற்றால் முடிக்க.

1. தகப்பனும் மகனும்
2. மாடும் கன்றும்
3. அவனும் நீயும்
4. அண்ணனும் நீங்களும்
5. நீயும் நானும் தம்பியும்
6. இடையனும் பசுவும்
7. குதிரையும் நானும்
8. நானும் ராமனும் நீயும் பசுவும் வண்டியும்.

வி.
1. தகப்பனும் மகனும் வந்தார்கள்
2. மாடும் கன்றும் வந்தது
3. அவனும் நீயும் வந்தீர்கள்
4. அண்ணனும் நீங்களும் வந்தீர்கள்
5. நீயும் நானும் தம்பியும் வந்தோம்
6. இடையனும் பசுவும் வந்தார்கள்
7. குதிரையும் நானும் வந்தோம்
8. நானும் ராமனும் நீயும் பசுவும் வண்டியும் வந்தோம்.

(143-ம் கேள்வியைப்பார்)

204. அடியில் வரும் வாக்கியங்களிலுள்ள எதிர்மறை வினைமுற்றை உடன்பாடாக்கி பொருள்கெடாமல் எழுது.

1. பிள்ளைகள் பாடத்தை படியாமல் வரார்
2. யான் அங்கு செல்லாமலிரேன்
3. அவன் எதையும் காணாமல் சொல்லான்
4. மருந்து நோயைத் தீராமலிராது
5. இலக்கணமறியாமல் பண்டிதனாவான்

வி. 1. பிள்ளைகள் பாடத்தை படித்தே வருவார்கள்
2. யான் அங்கு செல்லுவேன்
3. அவன் எதையும் கண்டுதான் சொல்லுவான்.
4. மருந்து நோயைத் தீர்க்கவே தீர்க்கும்
5. இலக்கணமறிந்தால்தான் பண்டிதனாவான்

205. அடியில் வருவதில் செய்வினை வாக்கியங்களை செயப்பாட்டு வினைவாக்கியங்களாகவும், செயப்பாட்டு வினைவாக்கியங்களை செய்வினை வாக்கியங்களாகவும் மாற்றி எழுது.

1. இராமன் இராவணனைக் கொன்றான்
2. தந்தியின்மேல் தங்கிய குருவியைக் கண்டேன்
3. அக்குடங்களைத் தண்ணீரால் நிறைத்தார்கள்
4. அநுமானால் சீதை காணப்பட்டாள்
5. இவ்வாபரணங்கள் சிறந்த ரத்தினங்களால் இழைக்கப்பட்டுள்ளன.

வி. 1. இராமனால் ராவணன் கொல்லப்பட்டான்
2. தந்தியின்மேல் தங்கிய குருவி என்னால் காணப்பட்டது
3. அக்குடங்கள் அவர்களால் தண்ணீரால் நிறையுண்டது
4. அநுமான் சீதையைக் கண்டான்
5. இவ்வாபரணங்கள் சிறந்த ரத்தினங்கள் இழைத்தன

(141-ம் கேள்வியைப்பார்)

206. அடியில் வரும் வாக்கியங்கள் சரியா? இல்லையானால் திருத்து. ஒவ்வொன்றுக்கும் நியாயம் கற்பி.

1. மேலே கல்லெறிந்தால் கீழே விழுகிறது.
2. நெருப்புச் சுவாலை மேல்நோக்கியே எரிந்தது.
3. என் கையில் புஸ்தகங்கள் இருக்கிறது.
4. பூமி உருண்டையாயிருந்தது.
5. இராமனால் சுகத்தை அடையப்பட்டது.
6. கடலில் அலை அடிக்கும்.

வி. 1. மேலே கல்லெறிந்தால் கீழே விழும்.
எதிர்காலத்தை எதிர்கால வினைமுற்றால் முடிக்க வேண்டும்.

2. நெருப்பு சுவாலை மேல்நோக்கியே யெரிகிறது.
முக்காலத்திலும் மாறாதிருக்கும் தன்மையை நிகழ்காலத்திலேயே உபயோகிக்கவேண்டும்.

3. என் கையில் புஸ்தகங்களிருக்கின்றன.
பயனிலை எழுவாயோடு திணை பால் (அல்லது எண்) இடங்களில் இசைந்திருக்கவேண்டும்.

4. பூமி உருண்டையாயிருக்கிறது.
முக்காலத்திலும் இடையறாதிருக்கும் காரியத்தை நிகழ்காலத்திலேயே கூறவேண்டும்.

5. இராமனால் சுகத்தை அடையப்பட்டது.
3ம் வேற்றுமை கர்த்தாப்பொருள் செயப்பாட்டு வினையைக்கொண்டே முடியும்.

6. கடலில் அலை அடிக்கிறது.
4ம் பிரிவின் நியாயமே.

207. பின்வரும் வாக்கியங்களில் மறைந்து விளங்கும் வேறொரு சங்கதியென்ன.

1. கவராார் கடலின் கடு.
2. காட்டெருமை புல்லுக்கிறைப்பரோ போய்.
3. பல்வகிய பண்டங்களை தானேமென்று நாவிற்கு சுவையைத் தரும்.
4. குருடனுக்கு விளக்கால் பிரயோஜனமில்லை.
5. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
6. அகப்பைக்குத் தெரியுமோ அடிசிலின் சுவை.
7. நிறைகுடம் நீர் தளும்பாது.
8. நல்லோர் வரவால் நகைமுகங் கொண்டின்புறீஇ.

9. இருநீர் வியனுலகு ... சொலாலென்றும் மகிழா
10. கடல் தண் ... ன் கதிரால் பொங்கும். [... தே.
11. மழையி ... மாநிலத்தார்க்கில்லை.
12. ராமன் ... திலும் எழுதுவான்.
13. ... ந்தது.
14. அவன் சோ ... ப்பிட்டான்.
15. படித்தவன் ப ... ட்சையில் தேறுவான்.

வி. 1. பால்கடலில் ... ந்து உண்டாகும் அமுதத்தை மாத்திரம் விரும்புவா.
2. காட்டிலுள்ள பயிருக்கே தண்ணீர் இறைப்பர்.
3. பல் தனக்கு சுவையை உண்டாக்காது.
4. கண் தெரிகிறவனுக்குத்தான் விளக்கால் பிரயோஜனம்.
... மாங்கிஷத்தையே தின்னும்.
6. புசிப்பவனுடைய நாவிற்குத்தான் தெரியும்.
7. குறைகுடம் கூத்தாடும்.
8. அல்லோர் வரவால் நடுங்குவார்.
9. இருநீர் வியனுலகு இன்சொலால் என்றும் மகிழும்
10. கடல் வெங்கதிருடைய சூரியகதிரால் பொங்காது.
11. மழையிருந்தால்தான் மாநிலத்தார்க் கெல்லாமுண்டு.
12. ராமன் எழுதாவிட்டாலும் எழுதாமலிருப்பான்.
13. வண்டியும் அதை இழுக்கும் மிருகமும் அதை ஓட்டுகிற மனிதனும் சவாரிசெய்கிறவனும் வந்தார்கள்.
14. சோறும் அதுடன் சேர்ந்த பதார்த்தங்களும் ஜலமும் உண்டான்.
15. படியாதவன் தேறவேமாட்டான்.

208. a. நான் கெட்டவன் என்றான் அவன்.
b. என்னைக் கெட்டவன் என்றான் அவன்.
இவ்விரண்டுக்கும் பேதமென்ன.

வி. a. படர்க்கையிடத்து 'அவன்' என்ற எழுவாயைப் பற்றிச் சொல்லியது.

b. படர்க்கையிடத்து 'அவன்' என்ற எழுவாயைப் பற்றிச்சொல்லாமல் தன்மையிடத்து ஆளைப் பற்றி சொல்லியது.

209. அடியில் வருவது மறைபொருளாகக் காட்டுவ தென்ன.

1. அவன் மூத்தமகனல்ல.
2. ராமன், ஏமன் இவர்களில் ராமன் சாதுவானவன்.
3. காக்கன் மாத்திரம் பிள்ளையற்றவன்.
4. ஆசியாவில் மேடான தேசம் திபெத்து.
5. நன்றாய் பண் படுத்தினவனுக்கு விலம் விளைந்தது.
6. வியாதியஸ்தனுக்கு மருந்து தேவை.

வி. 1. வேறொருவன் மூத்தவன்.
2. ஏமன் கோபி அல்லது துடுக்கன்.
3. மற்றவர்கள் எல்லாரும் பிள்ளையுடையவர்கள்.
4. மற்றதேசங்கள் அதைப்போல் மேடானதல்ல.
5. நன்றாய் பண்டுபடுத்தாதவனுக்கு விலம் விளையாது
6. சுகமுள்ளவர்களுக்கு தேவையில்லை.

210. பாதாரவிந்தம்—அசரீரிவாக்கு—ஆனந்தபாஷ்பம்
பிரத்தியக்ஷம் — பரம்பரை — பிரபஞ்சம்.

இவைகளைத் தகுந்தபடி ஒவ்வொன்றை ஒவ்வொரு வாக்கியத்தில் அர்த்தம் பொருந்த அமைத்துக்காட்டு.

வி. பாதாரவிந்தம் = திருப்பாதம்.
உத்தன் "பாதாரவிந்தம்" கதிசேரோன்.

அசரீரிவாக்கு = ரூபமில்லாது உண்டாகும் சத்தம்.
யாகப்பனுக்கு "அசரீரிவாக்கு" உண்டாயிற்று.

ஆனந்த பாஷ்பம் = சந்தோஷத்தாலுதிர்த்தும் கண்ணீர்.
காணமல்போன மக்களைக்கண்டு "ஆனந்த பாஷ்பம்" தூவினார்கள்.

பிரத்தியக்ஷம் = தெளிவாய்க் காணப்படல்.
நான்குபேர் புத்தனுக்கு தரிசனத்தில் "பிரத்தியக்ஷமா" னார்கள்.

பரம்பரை = தொன்று தொட்டு.
அவன் "பரம்பரை" யாய் வயித்தியம் பார்க்கிறவன்.

பிரபஞ்சம்—உலகம்.

இந்த "பிரபஞ்சத்" தில் பல்லாயிரங்கோடி ஜீவனுண்டு.

211. நான் அங்கேபோய் பாடங்களை படித்துக் கொடுப்பேன்.

இந்த தன்வினை வாசகத்தை பிறவினை வாசகமாக எழுது.

வி. 1. நான் அங்கேபோய் பாடங்களைப் படித்துக் கொடுப்பேன் என்று அவர் சொன்னார்.

2. தான் அங்கே போய் பாடங்களைப் படித்துக் கொடுப்பதாக அவர் சொன்னார்.

212. ஒரு எழுவாய், ஒரு செயப்படுபொருள், 2 பெயருரி, ஒரு வினைமுற்று, ஒரு வினையுரி, ஒருபெயரெச்சம், ஒரு வினையெச்சம், ஒரு இடைச்சொல் வர ஒரு வாக்கியம் எழுது.

வி. நல்ல தச்சன் செய்த மரப்பெட்டியைராமன் பலமாய் மிதித்து உடைத்துவிட்டானே.

எழுவாய் —(தச்சன்)	ராமன்.
செயப்படுபொருள்	பெட்டியை.
பெயருரி	நல்ல; மர.
வினைமுற்று	விட்டான்.
வினையுரி	பலமாய்.
பெயரெச்சம்	செய்த.
வினையெச்சம்	உடைத்து.
இடைச்சொல்	ஏ.

213. வந்தனம், நான், நடந்து, தங்கள், கடைமுன், இங்கிதமான, வந்து, என்றான், சொல்கிறேன், இவ்வார்த்தைகளைக்கொண்டு ஒரு வாக்கியம் அமைத்துக்காட்டு.

வி. நான் தங்கள் கடைமுன் நடந்துவந்து இங்கிதமான வந்தனம் சொல்கிறேன் என்றான்.

214. ஒரே மொழியால் தெரிவிக்கக்கூடிய பல தொடர்களை உனக்குத் தெரிந்தவாறு எழுது.

வி. 1. ஐந்து காரியங்களைச் சொல் } பஞ்சாங்கம்.
ஆம் நூல் }

2. எட்டு திசைக்கும் காவலாக இருக்கப்பட்டவர்	திக்குபாலர்.
3. மூன்று இயற்கையுடைய ஒரே பொருள்	திரியேகதத்துவம்.
4. நாலு வகையான சேனை ...	சதுரங்கசேனை.
5. தேர், யானை, குதிரை, காலாள் ஆகியபடை	ரதகஜதுரகபதாதி.
6. இரண்டாற்றுக்கு இடையிலுள்ள பூமி	தோவாப்.
7. ஏழுவகையான ஜலமுள்ள கடல்	சப்தசாகரம்.
8. ஒன்பது உலகங்கள் ...	நவகண்டம்.
9. புதிதாய் உண்டாக்கப்பட்ட உலகம்	நவலோகம்
10. ஒன்பது வகையான ரத்தினங்கள்	நவரத்தினம்.
11. மூன்று காரியங்களைக் காட்டும் நூல்.	திரியாங்கம்.
12. பலபொருட்கள் சேர்ந்து உண்டாகும் சேர்க்கைப்பொருள்	ரசாயனம்.
13. இமைதட்டி விழிக்கும் நேரம் கைவிரல் நொடிக்கும் நேரம்	மாத்திரை
14. பூமியோடு வானம் ஒட்டியிருக்கும் தோற்றம்	அடிவானம்.
15. யானையை அடக்கும் கருவி ...	அங்குசம்.
16. ஜலத்திலேயே வாழும் ஜெந்துக்கள்	ஜலசரம்.
17. முட்டையிலிருந்து பிறக்கும் பிராணிகள்	அண்டஜம்.
18. கற்பம் திறந்து பிறக்கும் ஜெந்துக்கள்	உத்பிஜம்.
19. வானலோகத்திலுள்ள ஜலம்	மேகம்; ஆகாயகங்கை.
20. இருபுறமும் சத்தமிடும் கருவி ...	மத்தளம்.
21. ஒருபுறம் சத்தமிடும் கருவி ...	நகரா.

22. 1000 தச்சர்கூடி கட்டிய மண்டபம்...தென்கூடு.
23. மூன்றுவிரல்கொண்டு எடுக்கும் அளவு—திரிகடி.
24. இரண்டு விரல்கொண்டெடுக்கும் அளவு } வெறுகடி.
25. மலஜல உபாதிகளை நீக்குதல் ... காலைக்கடன்.
26. மலையடர்ந்த நாடு .... குருஞ்சிம்.
27. கடவுள் செயலால் நடந்த காரியம் } தெய்வாதினம் தெய்வசங்கல்பம்.
28. பூமியின் மத்தியில் வரைந்த கோடு—விரக்ஷரேகை
29. பூமியின் வடகோடி தென்கோடி பாகங்கள் } துருவம்...,
30. உருண்டை வடிவமான பொருள் ... கோளம்.
31. நீளமும் அகலமுமுள்ளது.....................பரப்பு.
32. அகன்று இடமடர்ந்தது........................வெளி.
33. ராஜக்களை அடக்கிஆளும் மன்னன்-சக்கரவர்த்தி
34. தேசத்தை ஆளும் மனிதன் ...... தேசாதிபதி.
35. கிரீடத்தை சிரசில் ஏந்தினவன் ... கிரீடாதிபதி
36. வீரதத்துவங்களை செய்யும் புருஷன்......வீரன்.
37. இரவும் பகலும் கூடிய காலம்...............நாள்.
38. பிள்ளைகள் கூடி கல்விகற்குமிடம் ... பாடசாலை
39. வித்தைகளில் கைதேர்ந்தவன் ... வித்துவான்.
40. எட்டுதிக்கும் சுற்றிவருதல் .... விஜயம்.
41. ஒருதரம் கேட்க அறிந்துகொள்பவன் } ஏகசந்தகிராகி
42. எல்லா பொருட்களையும் பூமி தன்னிடம் இழுக்கும் சக்தி } கிராகியசக்தி, கிராகியம்.
43. மெய், வாய், கண், மூக்கு, செவி ... ஐம்பொறி.
44. முகர்தல், கேட்டல், ருசித்தல், பார்த்தல், பரிசித்தல் ஆகிய குணங்களையுடையது } ஐம்புலன்
45. எழுத்துகளால் செய்யும் கணிதம்...பீஜகணிதம்.
46. இலக்கங்களால் செய்யும் கணிதம் .. அங்ககணிதம்.
47. பாஷையின் எழுத்துகள்......... நெடுங்கணக்கு.
48. பலர் பல காரியங்களைப்பற்றி பேசக் கூடும் கூட்டம் } சபை.
49. துரியோதனர்100பேருக்கும் பொதுப் பேர் } கவுரவர்.

50. பலவியாபாரங்கள் நடக்குமிடம் .... சந்தை.
51. எண்ணெய் எடுக்கும் கருவி .... செக்கு.
52. கரும்புசார் பிழியும் கருவி .... ஆலை.
53. மூன்று லோகத்துக்கும் சுதந்தரவாழி ... திரிபுரர்.
54. ஐந்து நதிகள் பாயும் தேசம் .... பஞ்சாப்.
55. ஆதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன் } ஆதிரையான்.
56. கார்த்திகை நக்ஷத்திரத்தில் பிறந்தவன் } கிருத்திகன்.
57. பூராட நட்சத்திரத்தில் பிறந்தவன் ... பூராடன்.
58. சித்திரை மாதத்தில் பிறந்தவன் ... சித்திரையான்.
59. அபூர்வமான செய்கை .... அற்புதம்.
60. விஷ்ணுவைத் தொழுகிறவனும் ...... வைணவன்.
61. சிவனைத் தொழும் பக்தன் .... சைவன்.
62. கிறிஸ்துவைத் தொழுகிறவன் ...... கிறிஸ்தவன்.
63. புத்துமார்க்கத்தை அனுசரிப்பவன் { பௌத்தன் / புத்தன்.
64. மகமது மார்க்கத்தை அனுசரிப்பவன் - மகமதியன்
65. வீடுவாசல் நீங்கி உயிர்வாழுகிறவன் ...... துறவி.
66. தபோபலத்தால் உற்பவித்துப் பிறந்தவன் } தசரதன்.
67. தபசுசெய்துகொண்டிருப்பவன் .... தபசி.
68. சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தவன் ... சாஸ்திரி.
69. தர்க்க சாஸ்திரத்தில் தேறினவன் ... தார்க்கிகன்.
70. மிருகங்களுக்கு அரசன் .... மிருகேந்திரன்.
71. சந்திரன் அதிகப்படுகிறதும் குறைகிறதுமான மாறுதல் } சந்திரகலை...
72. ஐந்து தனியேகப்பொருள் .... பஞ்சபூதம்.
73. பயங்கரமான சப்தத்தையுடையது ... கோரகர்ஜி.
74. பாட்டுகள் இசைக்க வல்லவன் .... பாவலன்.
75. கவிகள் நவமாய் உண்டாக்குவோன் ... கவிஞன்.
76. வேடிக்கையான விநோதங்களை செய்பவன் } விகடகவி.
77. பகிரதன் தபத்தால் உலகுக்கு வந்தநதி ... பகீரதி.
78. தேவலோக விருக்ஷம் .... கற்பகம்.

79. சூரிய சந்திர நட்சத்திரங்கள்......வான்ஜோதி.
80. வேதம்ஓதும் தொழிலைச் செய்பவன்...வேதியன்
81. பலகண்களையுடைய வாசல்............பலகணி.
82. யாதாமொரு மாசுமறு இல்லாதிருத்தல் } விஷ்களங்கம்.
83. மிகவும் அழகுள்ள ஸ்திரி..................சுந்தரி.
84. மேகத்திலுண்டாகும் முழக்கம் { இடி or மேககர்ச்சனை.
85. பிறருக்கு உபகாரம்செய்யும் புருஷன் } பரோபகாரி.
86. அந்நியதேசத்திலிருந்து வந்தவன்... அந்நியன்.
பிறதேசத்திலிருந்து வந்தவன்........பரதேசி.
87. தேசங்கள்தோறும் யாத்திரை செய்பவன் } தேசாந்திரி.
88. இரண்டு பாஷை பேசவல்லவன்........துபாசி.
89. சேனையை நடத்தவல்லவன்........சேனாபதி.
90. சிற்றரசன் பேரரசனுக்குக் கட்டும்பணம்-கப்பம்.
91. திசை இன்னதெனக் காட்டும் கருவி...சமுக்கா.
92. பாண்டவருக்கும் துரியோதனருக்கும் நடந்த சண்டை } பாரதப்போர்.
93. அக்கினியிலிருந்து தோன்றிய மனிதர் } அக்கினிகுலத்தார்.
94. தாழ்ந்த லோகத்தை உயர்ந்த லோகமாக மாற்றக்கூடியவன் } ரசவாதி.
95. தீமையை உண்டாக்கும் தேவதை......மூதேவி.
96. நன்மையை உண்டாக்கும் தேவதை...சீதேவி.
97. புருஷனுடைய பிரேதத்தோடு ஸ்திரியை தகனித்தல் } சககமனம்.
98. கற்புகெட்ட ஸ்திரிகளுக்கு தலைவி......துக்கை.
99. சத்துருவுக்கு புறங்காட்டியோடல்......தோல்வி.
100. தான் தானாகவே தோன்றியிருப்பது...சுயம்பு.

215. ஜீவகாருண்ணியம்—யௌவனம்—அமைச்சர்—இகபரம்—சண்டமாருதம்—பூஷணம்.
இவைகளின் பொருள் நன்றாய் பொருந்தும்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்திலமைத்துக் காட்டு.

வி. ஜீவகாருண்ணியம்=பிராணிகளின்பேரில் தயை
கடவுள் 'ஜீவகாருண்ணி'யமுள்ளவர்.
யௌவனம்=இளம்பிராயம்.
கேற்றுவந்த 'யௌவன' புருஷனிவர்தாம்.
அமைச்சர்=மந்திரிகள்.
'அமைச்சர்' ஆலோசனை ஆழ்ந்த கருத்துள்ளது.
இகபரம்=இவ்வுலகும் மறுஉலகும்.
கடவுள் 'இகபர' நன்மைகளைக் கொடுப்பவர்.
சண்டமாருதம்=கடுங்காற்று.
அரபியில் 'சண்டமாருதம்' அடிக்கும்.
பூஷணம்=(1) ஆபரணம்.
சிரசுக்கேற்ற 'பூஷணம்' உச்சிப்பிறைதான்.
(2) புளிப்பினால் உண்டாகும் ஓர் வஸ்து.
ஊறுகாய் 'பூஷணம்' பூத்துவிட்டது.

216. அந்த மனிதன் நெட்டை மரத்தைச் சட்டென்று வெட்டி கட்டென்று பேசினான். இந்த வாக்கியத்தில் ஒவ்வொன்றும் என்ன சொல்லென்று கூறி முடிபிலக்கணம் சொல்லு.

வி. அந்த—சுட்டுப்பெயர் மனிதனைத் தழுவியது.
மனிதன்—எழுவாய்ப்பெயர் பேசினான் என்ற
பயனிலையைக்கொண்டு முடிந்தது. (தி.
நெட்டை—பெயருரிச்சொல் மரத்தைத்தழுவிய
மரத்தை—செயப்படுபொருள் வெட்டினான் என்
ற பயனிலையைக்கொண்டு முடிந்தது.
சட்டென்று—குறிப்பிடைச் சொல் வெட்டி
னான் என்ற வினையைத் தழுவியது.
வெட்டி—வினையெச்சம் பேசினான் என்ற வி
னையைத் தழுவியது.
கட்டென்று—குறிப்பு இடைச்சொல் பேசினான்
என்ற வினையைத் தழுவியது.
பேசினான்—பயனிலை மனிதன் என்ற எழுவா
யைத் தழுவியது.

217. அடியில் வருவதை ஒரே வாக்கியமாக எழுது.
1. நான் ஓர் அரசன்.
2. நான் 30 வருஷம் அரசாண்டேன்.

3. என் குடும்பப்பேர் யானையேறி.
4. என் சொந்த ஊர் மதுராபுரி.
5. நான் ஆண்டது கர்நாடகதேசம்.
6. நான் நீதி தவறாமல் ஆண்டேன்.
7. நான் 1258ல் பட்டத்துக்கு வந்தேன்.
8. எனக்குப்பின் 12 பேர் ஆண்டார்கள்.
9. என் ராஜ்யம் 1390ல் அழிந்தது.

வி. யானையேறி குடும்பத்தைச்சேர்ந்த அரசனாகிய நான் 1258ல் மதுராபுரியில் பட்டத்துக்குவந்து நீதி தவறாமல் 30 வருஷம் கர்நாடகதேசத்தை அரசாண்டபின் அதில் 12 ராஜாக்கள் பட்டத்துக்குவந்தும் ராஜ்யம் 1390ல் அழிந்துவிட்டது.

218. அடியில் வருவனவை ஒன்றாகச் சேர்த்தெழுது.

1. மைசூர் மிக உன்னத பூமி.
2. அது சென்னை ராஜதானியிலிருக்கிறது.
3. மைசூர் சுதேச அரசனால் ஆளப்பட்டது.
4. மைசூர் இப்போது அங்கிலேயரால் ஆளப்படுகிறது.
5. அதில் அங்கிலேயக் கமிஷனர் வசிக்கிறார்.
6. அங்கே காவிரி நதி உற்பத்தியாகிறது.

வி. சுதேச அரசனால் ஆளப்பட்டு காவிரி நதி உற்பத்தியாகும் சென்னை ராஜதானியிலுள்ள பீடபூமியாகிய மைசூர் இப்போதங்கிருக்கும் அங்கிலேய கமிஷனரால் ஆளப்படுகிறது.

219. பின் வருவனவைக்கொண்டு ஒரு தொடர் வாக்கியமெழுது.

1. அவர் ஓர் புலவர்.
2. அவர் வாழ்ந்தது மதுரை.
3. அவர் சபை தஞ்சை.
4. அவர் கீர்த்தி சென்னை.
5. அவர் பாடல்கள் ஏடுகளின் பொத்தை.
6. அவர் இறந்தது நடுவீட்டுமெத்தை.
7. அவர் தாய் எனக்கு அத்தை.
8. அவர் பேசுவது மாசிறத்தை.

வி. மதுரையில் வாழ்ந்து தஞ்சையில் சபைவைத்து மாசிறந்தையாய் பேசி பொத்தைபோல் ஏடுகள்பாடி சென்னையில் கீர்த்திபெற்ற எனதத்தை மகனான புலவர் நடுவீட்டு மெத்தையிலிறந்தார்.

220. இராமன் வெகு துரிதமாய் ஓடிவந்ததை நான் கண்டு அவனுக்கு எதிர்கொண்டு போனதற்காய் மெத்தையிலிருந்து கண்ட என் தகப்பனார் என்னைத் தண்டித்தார்.

பல வாக்கியங்களாகப் பிரித்துக்காட்டு.

வி. 1. ராமன் வெகு துரிதமாய் ஓடிவந்தான்.
2. ராமன் ஓடிவந்ததை நான் கண்டேன்.
3. நான் அவனுக்கு எதிர்கொண்டு போனேன்.
4. என் தகப்பனார் மெத்தையிலிருந்தார்.
5. என் தகப்பனார் என்னைக் கண்டார்.
6. என் தகப்பனார் என்னைத் தண்டித்தார்.

221. பின் வருவதை பல தனிவாக்கியங்களாகப்பிரி-

கடவுள் கிருபையையடைந்த ராட்சத வம்சத்தரசன் இலங்காபுரியைபிடித்து 37 வருஷம் அரசாண்டு மகனிடம் ராஜ்யத்தைவிட்டு. விட்டு 1239-ல் காலஞ்சென்றான்.

வி. 1. அரசன் கடவுள் கிருபையை யடைந்தவன்
2. அரசன் ராட்சத வம்சத்தைச் சேர்ந்தவன்.
3. அரசன் இலங்காபுரியை பிடித்தான்.
4. 37 வருஷம் அரசாண்டான்.
5. மகனிடம் ராஜ்யத்தை விட்டுவிட்டான்.
6. அரசன் காலஞ்சென்று போனான்.
7. அரசன் காலஞ்சென்றது 1239ம் வருஷம்.

222. அடியில் கேட்டதற்கு விடைகூறு-

'உன்னத தேவன் இந்நிலத்துதித்தார்'.

1. எழுவாயை பயனிலையாக்கு.
2. தன் வினையை பிறவினையாக்கு.
3. எழுவாய், பயனிலைகூறு.
4. செய்வினையை செய்ப்பாட்டு வினையாக்கு.
5. உடன்பாட்டு வினையை எதிர்மறையாக்கு.
6. ஒருமை எழுவாய்க்கு பன்மை பயனிலை சரியா.

7. இங்கிலத்து எத்தனை வேற்றுமை.
8. உன்னதம் என்ற வார்த்தையை பயனிலையாக்கு.
9. 'உன்னததேவன்' இதை முற்றுவாக்கியமாக்கு.
10. தேவன் இதை 4ம் வேற்றுமையாக்கு.
11. சந்தேகப்பொருளாய் வாக்கியத்தை திருத்தி யெழுது.
12. வாக்கியத்தை தனிவாக்கியங்களாகப் பிரித்துக் காட்டு.

வி. 1. இங்கிலத்துதித்தவர் உன்னத தேவன்.
2. உன்னத தேவன் இங்கிலத்துதிப்பித்தார்.
3. எழுவாய் 'தேவன்' பயனிலை 'உதித்தார்.'
4. உன்னத தேவன் இங்கிலத்தில் உதிக்கப்பட்டார்.
5. a. உன்னத தேவன் இங்கிலத்துதிக்கவில்லை.
b. உன்னத தேவன் இங்கிலத்துதியார்.
6. மரியாதைபற்றி ஒருமை எழுவாய்க்கு பன்மை பயனிலைகொண்டது குற்றமன்று.
7. 7ம் வேற்றுமை (இங்கிலத்தில்)
8. தேவன் இங்கிலத்துதித்தது உன்னதம்.
.9 தேவன் உன்னதமானவர்.
10. இங்கிலத்துதித்தது தேவனுக்கு உன்னதம்.
11. உன்னத தேவன் இங்கிலத்துதித்தாரோ!
12. a. தேவன் உன்னதமானவர்.
b. தேவன் உதித்தார்.
c. தேவன் உதித்தது இங்கிலம்.

223. பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.

இதில் 'கொண்டாட்டம்' என்றதை 1. வினாவாக்கு 2. பெயருரியாக்கு 3. வினையுரியாக்கு 4. வினையாக்கு.

வி. 1. எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டமா.
2. பூனைக்குக் கொண்டாட்டமான காரியம் எலிக்குத் திண்டாட்டம்.

3. பூனைக்குக் கொண்டாட்டமாய் இருக்கிற காரியம் (அல்லது இருப்பது) எலிக்குத் திண்டாட்டம்.
4. அது பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.

224. 'ரூமி அங்கிலேயர் சுகத்துக்காகப் போகுமிடம்' இதை

1. வினா வாக்கியமாக எழுது.
2. எதிர்மறை வாக்கியமாக எழுது.
3. 'ஒன்று' என்று வாக்கியத்தை முடி.
4. 'இதுதான்' என்பதை வாக்கியத்தில் சேர்த்துக் கொள்.
5. பயனிலையை வினையுரியாக்கு.
6. அங்கிலேயர் எத்தனாம் வேற்றுமை? வேற்றுமையைப் பொருள்கெடாமல் மாற்றியெழுது.
7. உறுதிமொழியாய் வாக்கியத்தை அமை.
8. சந்தேகப்பொருளாய் வாக்கியத்தை அமை.
9. 4ம் வேற்றுமையை பொருள்கெடாமல் 2ம் வேற்றுமையாக மாற்று.

வி. 1. ரூமி அங்கிலேயர் சுகத்துக்காகப் போகுமிடமா?
2. ரூமி அங்கிலேயர் சுகத்துக்குப் போகுமிடமல்ல.
3. ரூமி அங்கிலேயர் சுகத்துக்குப் போகுமிடங்களிலொன்று.
4. ரூமி என்ற இதுதான் அங்கிலேயர் சுகத்துக்குப் போகுமிடம்.
5. ரூமி அங்கிலேயர் சுகத்துக்குப் போகுமிடமாயிருக்கிறது.
6. 1ம் வேற்றுமை. 6ம் வேற்றுமையாக உபயோகிக்கலாம். ரூமி அங்கிலேயருடைய சுகத்துக்காக போகுமிடம்.
7. ரூமி அங்கிலேயர் சுகத்துக்காகப் போகுமிடந்தான்.
8. ரூமி அங்கிலேயர் சுகத்துக்காகப் போகுமிடமோ.
9. ரூமி அங்கிலேயர் சுகத்தையடையப் போகுமிடம்.

225. ரத்தினமணி மண்டபங்கட்டினேன்,
இதில் 'ரத்தினமணி' என்பது பலபொருள் கொடுக்க வாக்கியங்கள் எழுது.

வி. 1. ரத்தினமணி என்பவன் மண்டபங்கட்டுகிறான்.
2. ரத்தினமணியால் மண்டபங்கட்டுகிறான்.
3. ரத்தினம்போன்ற மணிகளால் மண்டபம் கட்டுகிறான்.
4. ரத்தினம், மணி, இவைகளால் மண்டபங்கட்டுகிறான்.
5. ரத்தினமணிபோல் பிரகாசிக்க மண்டபங்கட்டுகிறான்.
6. ரத்தினமணியைவைக்க மண்டபங்கட்டுகிறான்.
7. ரத்தினமணி என்றழைக்கப்பட்ட மண்டபங்கட்டுகிறான்.

226. அரசன் மந்திரியை அழைத்து காரியத்தை விசாரித்து உத்தரவு சொன்னான்.

1. தனிவாக்கியங்களாகப் பிரி.
2. 2ம் வேற்றுமையை 4ம் வேற்றுமையாக்கு.
3. 2ம் வேற்றுமையை [illegible]ம் வேற்றுமையாக்கு.

வி. 1. a. அரசன் மந்திரியை அழைத்தான்.
b. அரசன் காரியத்தை விசாரித்தான்.
c. அரசன் உத்தரவு சொன்னான்.
2. காரியத்துக்கு விசாரணைசெய்யும்படி மந்திரிக்கு உத்தரவுகொடுக்க அரசன் அவனை அழைத்தான்.
3. மந்திரி காரியமானது இன்னதென்று விசாரித்து உத்தரவுசொல்ல அரசன் அவனை அழைத்தான்.

227. 'திரித்துவத்தினில் இரண்டாம் ஆள்' இதின்பேரில் கேட்ட கேள்விகளுக்கு ஜவாப் எழுது.

1. எழுவாய் பயனிலை கற்பி.
2. நிச்சயப்பொருளாய் எழுது.
3. சந்தேகப்பொருளாய் எழுது.
4. எதிர்மறையாய் எழுது.
5. வாக்கியத்தின் பொருள் தெளிவாகத் தோன்ற தொகுத்திருப்பவைகளை விரித்தெழுது.
6. '2-ம் ஆள் என' துவக்கி பொருள்கெடாமல் எழுது.
7. 'திரித்துவம்' இதைப்பிரி.
8. 'திரித்துவம்' 'திருத்துவம்' இவைகளுக்குப் பேதமென்ன.
9. வினாவாக்கியமாக எழுது.
10. 'ஆள்' என்பதை வாக்கியத்தில் தொகுத்துவிடு.

வி. 1. 'அவர்' தோன்றா எழுவாய் 'ஆள்' பயனிலை.
2. a. திரித்துவத்தினில் இரண்டாம் ஆள் தான்.
b. திரித்துவத்தினில் இரண்டாம் ஆளே இரண்டாம் ஆள்.
3. திரித்துவத்தினில் இரண்டாம் ஆளோ.
4. திரித்துவத்தினில் இரண்டாம் ஆள் அல்ல.
5. அவர் திரித்துவத்தினில் இரண்டாம் ஆளாயிருக்கிறார்.
6. இரண்டாம் ஆள் திரித்துவத்தினில் அவர்தாம்.
7. திரி + தத்துவம் = மூன்று + தன்மை.
8. திரித்துவம் = மூன்றுதன்மை.
திருத்துவம் = பரிசுத்ததன்மை.
9. திரித்துவத்தினில் இரண்டாம் ஆளா?
10. அவர் திருத்துவத்தில் இரண்டாவதானவர்.

228. 'தாங்தோணி ஒரு சிறு மலை.'
அடியில் கேட்டபடி மாற்றிக்கூறுக.

1. எழுவாய் பயனிலை கற்பி.
2. பொருளை பூர்த்திப்படுத்த தொ[illegible] விரிக்க.
3. வினா வாக்கியமாக எழுது.
4. பயனிலையை எழுவாயாக்கு.
5. 'மலை' இதை 4ம் வேற்றுமையாக்கி பொருள் கெடாமல் எழுது.
6. 'சிறு' இதற்குப்பதிலாய் 'சிறிய' என்று உபயோகித்து வாக்கியத்தை நிச்சயப்பொருளாயெழுது.
7. தாங்தோணி ஒரு மலையோவென்று சந்தேகிக்க வாக்கியத்தை திருத்தியெழுது.
8. எதிர்மறையாக வாக்கியத்தையெழுது.

வி. 1. 'தாங்தோணி' எழுவாய், 'மலை' பெயர் பயனிலை.
2. தாங்தோணி ஒரு சிறு மலையாயிருக்கிறது.
3. தாங்தோணி ஒரு சிறு மலையா?
4. ஒரு சிறுமலை தாங்தோணிதான்.
5. தாங்தோணி மலைக்குச் சிறிது வேறு இல்லை.
6. தாங்தோணி ஒரு சிறிய மலைதான்.
7. தாங்தோணி ஒரு சிறு மலையோ!
8. தாங்தோணி ஒரு சிறு மலையல்ல.

229. 'கல்வியினுமங்கில்லை சிற்றுயிருக்குற்றதுணை' இதில்

1. எழுவாய் பயனிலை இன்னதென்சொல்லு. [ழுது
2. எதிர்மறையை ஒழித்துவிட்டு வாக்கியத்தையெ
3. கல்வியை யெழுவாயாக்கி வாக்கியத்தையெழுது.
4. சிற்றுயிர் என்பதை பிரித்து புணர்ச்சிவிதிகூறு.

வி. 1. 'துணை' எழுவாய்—'இல்லை' பயனிலை.
2. சிற்றுயிருக்குற்றதுணை கல்விதான்.
3. கல்வி சிற்றுயிருக்குற்றதுணை.
கல்வி சிற்றுயிருக்குற்றதுணையாயிருக்கிறது.
4. சிறு + உயிர், 59ம் கேள்வி p யை பார்.

230. 'கற்பகம் தேவலோக விருட்சம்.' இதை
1. தேற்றப் பொருளாய் உரை.
2. எதிர்மறைப் ,,
3. வினாப் ,,
4. ஐயப் ,,
5. துணிவுப் ,,
6. [illegible]ப் ,,

வி. 1. கற்பகமே தேவலோக விருட்சம்.
2. கற்பகம் தேவலோக விருக்ஷமல்ல.
3. கற்பகம் தேவலோக விருக்ஷமா.
4. கற்பகமோ தேவலோக விருக்ஷம்.
5. கற்பகம்தான் தேவலோக விருக்ஷம்.
6. a. ஓ, கற்பகம் தேவலோக விருக்ஷமா.
b. கற்பகமாவது தேவலோக விருக்ஷமாவது.

231. கோடிட்ட இடங்களில் தகுந்த சொல்லைவைத்து வாக்கியத்தை பூர்த்திப்படுத்து.

a. ——செய்த பெட்டி——உடைய ஆணியும்——[illegible]ரனுடைய வேலையும் இல்லாவிட்டால்——பா விகைக்குதவாதென்று——சொல்கிறான்.

b. ——மருந்து——வளர்த்தும்——பிடிக்கி——செய்யாவிடில்——அவனிடம்——வாங்கிக்கொண்டு——அடைய——விராது——சத்தியம்.

வி. a. தச்சன் செய்த பெட்டி கொல்லனுடைய ஆணியும் மிருதக்காரனுடைய வேலையுமில்லாவிட்

டால் அரசர் மாளிகைக்குதவாதென்று சேவகன் சொல்கிருன்.

b. சமுசாரி மருந்துச்செடிகளை வளர்த்தும் வைத்தியன் பிடுங்கி அவிழ்தம் செய்யாவிடில் வியாதியஸ்தர் அவனிடம் மருந்து வாங்கிக்கொண்டு சுகம் அடைய ஏதுவிராது என்பது சத்தியம்.

232. விதிட்ட இடங்களில் தகுந்த சொல்லைக்க.

a. ——அவைகளைச்——க்கையாடித்——கற்றுக்——[illegible]——க்கொண்டால் நமக்குவரக்——வெல்லாப் ——தானே——கூடும்.

b. சீலம்——யிருக்கையில்——அதிகமாய்ப்—— அழிகின்றனவென்று——குண சாஸ்திரிகள்——யுரைக்கிருர்கள்.

c. கோபாலும்——சந்தைக்குப்போக——எதிரேவந்த ——ஊரான——க்கண்டு மாட்டை—— ——விற்ருய் ——கேட்க——56 ரூபாய்க்குத்——என்ருன். ——கேட்டு——விலைக்கு——மாடு 60 ரூ. பெறுமென்று——க்கொண்டோம்.

வி. a. நாம் அவைகளைச் சரியாய்க் கைய[illegible] கற்றுக்கொள்ளுகிறபடி கற்றுக்கொண்டால் நமக்கு வரக்கூடிய வெல்லாப் பயனும் தானே கைகூடும்.

b. சீலம் உஷ்ணமாயிருக்கையில் பதார்த்தங்கள் அதிகமாய்ப் பதம் அழிகின்றனவென்று பதார்த்த குண சாஸ்திரிகள் தெளிவாயுரைக்கிருர்கள்.

c. கோபாலனும் நானும் சந்தைக்குப்போக எங்களுக்கு எதிரே வந்த எங்கள் ஊரான நம்மைக்கண்டு மாட்டை என்ன விலைக்கு விற்ருய் என்று கேட்க, அவன் 56 ரூ. க்குத்தான் விற்றேன் என்ருன். அதைக்கேட்டு அவன் விலைக்கு விற்ற மாடு 60 ரூ. பெறுமென்று சொல்லிக்கொண்டோம்.

233. அடியில் வரும் வாக்கியங்களில் கோடுகிழிக்கப்பட்ட இடங்களில் தகுந்தசொல்லைவைத்து பூர்த்திசெய்.

a. உத்தம தேவர்களைக்——இந்திராணி தன்——தேவேந்திரனை நோக்கி—— ——என வினவ—— ——அம்——சிரோமணியைப் பார்த்து—— ——நமது——வரும்——தேவர்கள்——வியந்து——.

b. ராமாய் காய்கறிக்—ப்போகத்—எதிர்பட்ட — — குப்பியைப்—துட்டுக்கு — — அக்காள் என்று—காசுக்கு மூன்று — — விற்கிறது என்று—அவள் நகைத்து இது—இராக்கி; நேற்று— — ஆக—மாமியார் மூன்று துட்டுக்கு 60—வாங்கினார்கள்—விடை—.

வி. a. உத்தம தேவர்களைக்கண்ட இந்திராணி தன் கணவனாகிய தேவேந்திரனை நோக்கி இவர்கள் யார் என்று வினவ அவள் புருஷன் அம்மாது சிரோமணியைப் பார்த்து இவர்கள்தான் நமது சபைக்கு வரும் உத்தம தேவர்கள் என்று வியந்துபேசினான்.

b. ராமாய் காய்கறிக் கடைக்குப்போகத் தனக்கு எதிர்பட்ட தன் தங்கையான குப்பியைப்பார்த்து துட்டுக்கு எத்தனை வாங்கினாய் அக்காள் என்று வினவ, காசுக்கு மூன்று காயாகத்தான் விற்கிறது என்று சொன்னாள். அவள் நகைத்து இதுமெத்த இராக்கி, நேற்று காசுக்கு ஐந்துஆக என் மாமியார் மூன்று துட்டுக்கு அறுபது காய் வாங்கினார்கள் என விடைபகர்ந்தாள்.

234. 'அவர் அரசாளத்துவக்கி 60 வருஷமாகிறது.'

1. தன் வினையைப்பிறவினையாக மாற்று.
2. '60 வருஷம்' என்று வாக்கியத்தை முடி.
3. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக்கு.
4. '60 வருஷம்' என்று வாக்கியத்தைத் துவக்கு.

வி. 1. அவர் அரசாளத்துவக்கி 60 வருஷமாகிறது.
2. அவர் அரசாளத்துவக்கி இன்று 60 வருஷம்.
3. அவரால் அரசாளத் துவக்கப்பட்டு 60 வருஷமாகிறது.
4. 60 வருஷத்துக்கு முன் அவர் அரசாளத் துவக்கினார்.

235. உருவகமாவதென்ன.

வி. ஒரு பொருளுக்குரிய குணம் தன்மை முதலியவைகளை அதனுடன் ஐக்யப்பட்டிருக்கும் வேறொன்றுக்கு அமைத்து இசைத்துக் கூறுவதாம்.

(உ-ம்) 1. 'செங்கோல்'—இதில் அரசனுடைய நீதி வழுவாகுணம் அவனது கையிலிருக்கும் கோலுக்கு அமைந்தது.

2. சேனுபதியின் 'வீரகட்கம்' வெட்டினது. இதில் சேனுபதியின் வீரத்தனம் அவனது கடகத்துக்கு அமைந்தது.

236. குறிப்புச் சொற்கள் எந்தெந்த பொருட்களை கொடுக்கும் பிரிவுளது;—அவைகளை விஸ்தரி.

வி. 1. ஒன்மொழி பொதுச்சொல்—73ம் கேள்விபார்.
2. விகாரம் —33ம் ,,
3. தகுதி —73ம் ,,
4. ஆகுபெயர் —73ம் ,,
5. அன்மொழித்தொகை —58ம் ,,
6. வினைக்குறிப்பு —73ம் ,,
7. முதற்குறிப்பு —73ம் ,,
8. தொகைக்குறிப்பு —73ம் ,,
9. பிறக்குறிப்பு —73ம் ,,

237. பலபொருட்களைக் கொடுக்கும் சொற்களுக் ... இடத்தில் தகுபொருள் கொடுப்... கண்டு பிடிப்பதெங்ஙனாரி?

வி. 1. அத்தகை சொற்கள் முடிவுபெறும் வினைமுற் றைக்கொண்டு அதன் பொருளை அறியலாம்.

(உ-ம்) 'மா' 1. 'மா' பூத்தது பூத்ததால் மாமென்றும்,
2. காலாள் தேர் பரி'மா' வந்தது. சதுரங் கச் சேனையுடன் வருவதால் குதிரைப் படையென்றும் பொருள் காணலாம்.

2. உச்சரிக்கும் சமயத்தில் அழுந்தக்கூறும் வார்த்தை களால் பொருளை நிதானிக்கலாம்.

(உ-ம் பல 'சிறுவரம்பு' காணப்பட்டது. இதில் 'சிறு வர்' என்பதை அழுந்த உச்சரித்தால் மற்றது 'அம்பு' (அஸ்திரம்) என்றும், 'வரம்பு' என்பதை அழுந்த உச்சரித்தால் மற்றது 'சிறு' (சின்ன) என்றும் பொருள்படும்.

(சிறுவரம்பு=சிறு+வரம்பு
=சிறுவர்+அம்பு.)

238. உபமானம் உபமேயம் என்றாலென்ன.

வி. 'உபமானம்'—தெரியாத யாதாமொரு பொருளுக்கு ஒப்புமையாக உபயோகிக்கப்படும் தெரிந்த பொருளே.

(உ-ம்) பூனையைப்போன்றது புலி. இதில் கண்ணுக்குச் சாதாரணமாய் தென்படாத புலியை, கண்ணுக்குத் தெரியப்படும் பூனையைக்கொண்டு உவமானிப்பதால் 'பூனை' 'புலிக்கு' உபமானம். (இவ்வாறே மற்றதும்.)

'உபமேயம்'— தெரிந்த யாதாமொரு பொருளால் உபமானப்படுத்தப்பட்ட தெரியாத பொருளே உபமேயம்.

(உ-ம்) பூனையைப்போன்றது புலி. இதில் பூனையால் உவமானப்படுத்தப்படுவது புலியாதலின் 'புலி' உபமேயம்.

(மற்றதும் இவ்வாறே.)

239. ஒரு வாக்கியத்தில் முற்றும்மை என்னென்ன வகையான பொருள்களுக்கு உபயோகப்படும்.

வி. 1. ஒன்றின்பொருள் இவ்வளவுதான் என்று இடம்தெரிந்த பொருளை வினையோடு கூட்டிச்சொல்லவும்.

(உ-ம்) தமிழ்நாட்டு மூவரசரும் வந்தனர்.
பஞ்சபாண்டவரும் ஏகினார்கள்.

2. எக்காலத்திலும் எவ்விடத்திலும் இல்லாதபொருளை வினையுடன் சேர்த்துச் சொல்லவும் உபயோகப்படும்.

(உ-ம்) குதிரைக்கொம்பு இடைக்கவும் இடைக்காது.
நாவுக்கெலும்புமில்லை.

240. சொற்கள் தொடர்ந்து நிற்கையில் ஈற்றயல் மாறுவதற்கு உதாரணங்கொடு.

வி. 1. வாசகத்திலும் செய்யுளிலும் வரும் ரகரவீற்றுச் சொற்களின் ஈற்றயல் ஆகாரம் 'ஓகாரமாக' மாறும்.

(உ-ம்) நல்லார் — நல்லோர்
வல்லார் — வல்லோர்
கண்டார் — கண்டோர்.

2. செய்யுளில் ன், ள், ய் என்ற எழுத்துகளில் முடியும் சொற்களின் ஈற்று அயல் ஆகாரம் 'ஓகாரமா'க மாறும்

(உ-ம்) வந்தான் — வந்தோன்
செய்தாள் — செய்தோள்
நின்றாய் — நின்றோய்.

241. பின்வரும் செய்யுள்களை வாசகரூபமாய் எழுது

1. முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉம்
கற்றனெமென்று களியற்க — சிற்றுளியால்
கல்லுந்தகரும் தகராக்கனங் குழாய்
கொல்லுலைக்கூடத் தினால்.

2. வருந்தித்தான் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்து சிலகற்பான் தொடங்கல் — கருந்தனம்
கைத்தலத்த உய்த்து சொரிந்திட்டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள் செய்திடல்.

வி. 1. கனங்குழாய்! கொல்லுலைக்கூடத்தினால் தகராக் கல்லும் சிற்றுளியால் தகரும் (ஆதலால்) முழுவதூஉம் கற்றனெமென்று களியற்க. முற்றுமுணர்ந்தவரில்லை.

2. தான் வருந்திக் கற்றன ஓம்பாது மற்றும் சில பரிந்து கற்பான் தொடங்கல் கைத்தலத்த கருந்தனம் உய்த்துச் சொரிந்திட்டரிப்பரித்து எய்த்து பொருள் செய்திடல்.

242. தமிழ் பாஷையில் வழங்கும் நிறுத்தல் குறிகளெவை

வி. தமிழ் பாஷையில் தொன்று தொட்டு வழங்கிவந்ததாய் பழைய இதிகாசங்களில் காணப்படும் முற்றுப்புள்ளி (—) இச்சிறு கோடுதான். (என்றாலும் தற்காலத்தில் மேல்திசைப் பாஷைகளை அதிகமாய் பழகிவருவதால் அவைகளின் நிறுத்தல் குறிகளையும் மற்ற குறிகளையும் தமிழ் கிரந்தங்களில் பார்க்கலாம்)

(உ-ம்) , கால் புள்ளி.

; அரைப் புள்ளி.

: முக்கால் புள்ளி.

. முழு புள்ளி.

? கேள்விக்குறி.

! ஆச்சரியக்குறி.

243. பின் வரும் வாக்கியங்களில் வினைமுற்றை எதிர்மறையாக மாற்றி வாக்கியத்தை திரும்ப எழுது.

1. அவன் படிப்பான்.
2. துணிகள் நாட்சென்றாலும் கந்தையாகும்.
3. நிரம்பியிருந்த குளத்தில் தண்ணீர் ஓடிற்று.
4. அவன் போவதாகச் சொன்னான்.
5. கோபால் பரீட்சையில் தேறினான்.

வி. 1. அவன் படியான்.

2. துணிகள் நாட்சென்றாலும் கந்தையாகாது.
துணிகள் நாட்சென்றாலும் கந்தையாகவில்லை.

3. நிரம்பியிருந்த குளத்தில் தண்ணீர் ஓடவில்லை.

4. அவன் போவதாகச் சொல்லவில்லை.
அவன் போவதாகச் சொல்லான்.

5. கோபால் பரீட்சையில் தேறவில்லை.

244. பின் வருவதின் பொருளை விரித்து எழுது.

1. கவிகள் எல்லோரும் கம்பரோ!
2. ராஜன் ஏகசந்தக்கிராகியாயிருந்தான்.
3. கற்றோருக்குக் கல்வியே யணிகலம்.
4. காக்கையில் கரிது களம்பழம்.
5. நிறைகுடம் நீர் தளும்பலில்.
6. இரும்பைக் கிரகிப்பது காந்தம்.

வி. 1. பாட்டுக்கட்டும் நாவலர்கள் எல்லாரும் கல்வியில் தேறினவரான கம்பராகமாட்டார்கள்.

2. ராஜன் ஒருதரம்கேட்டவுடன் அவ்வளவையும் தன் மனதில் கவர்ந்துகொள்ளத்தக்க சக்தியுடையவனாயிருந்தான்.

3. படித்தவர்கள் தங்கள் பெருமையைக்காட்ட அவர்களுக்குக் கல்வியைத் தவிர வேறு எந்தவகையான உயர்ந்த நகை, ஆடை முதலியவை வேண்டியதேயில்லை.

4. காகம் என்ற பட்சி மிகவும் கறுப்பானபோதிலும் அதைவிடக் கறுப்பானது களா மரத்தின் பழுத்த பழம்.
5. தண்ணீர் குறைந்திருக்கும் குடம் தூக்கிக்கொண்டுபோகும்போது சப்தித்து தளம்புவதுபோல தண்ணீர் நிறையப்பெற்ற குடமானது சப்தித்து நீர் தளம்பாது.
6. இரும்பு என்ற உலோகத்தை காந்தம் என்ற பொருளானது தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளும்.

245. அன்வயமாவதென்ன. பின்வரும் செய்யுள்களை அன்வயப்படுத்து.

1. தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்குறூஉம்
வெங்குறைதீர் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமேனின்று.
2. பொன்னுடையரேனும் புகழுடையரேனுமற்
றென்னுடைய ரேனுமுடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கை பூநாறுஞ் செய்யவாய்
மக்களை யிங்கில்லாதவர்.
3. சத்தமெஞ்ஞானந் தருக்கஞ் சமயமே
வித்தகர் கண்ட வீடுள்ளிட்டாங்—கத்தகத்
தந்தவிவ்வைந்து மறிவான்றலையாய
சிந்திப்பிற்சிட்டன் சிறந்து.

வி. செய்யுளிலசையில் வசனகிரமம் தப்பி முன் பின்னுமாயிருத்தலை வசனகிரமப்படுத்துவதாம். (அதாவது) எழுவாயும் அதோடு சார்ந்த அடைமொழிகள் முதலிலும், செயப்படுபொருள் அதோடு சேர்ந்த அடைகள் மத்தியிலும், பயனிலை அதோடு சேர்ந்த அடைகள் கடைசியிலுமாகவா கிரமப்படுத்துவதே.

1. திங்கள் கறையிருளை நீக்கக்கருதாதுமேல் நின்று உலகின் நிறையிருளை நீக்கும் (அதுபோல்) விழுமியோர் தங்குறை தீர்வுள்ளார் பிறர்க்குறூஉம் வெங்குறை தளர்ந்து தீர்கிற்பார்.
2. இங்கு இன்னடிசில் புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய் மக்களையில்லாதவர்பொன்

னுடையரோனும், புகழுடையரோனும் மற்றொன்றுடையரோனுமுடையரோ.

3. சித்திப்பின் வித்தகர்கண்ட சத்தம், மெஞ்ஞானம், தருக்கம், சமயம், வீடு உள்ளிட்டுத்தந்த இவ்வைந்தும் அத்தகு அறிவான் நிலையாய சிட்டன்.

APPENDIX.

அநுபந்தம்.

லோயர் செக்கண்டேரி பரீட்சைக் கேள்விகள்.

N. B.—இதில்கண்ட கேள்விகளுக்கே உறிய விடை சில இடங்களில் இன்றெனினும் இதற்கினமான மாதிரி விடைகளிருக்கிறதால் கண்டுணர்க.

1893.

I. a. 'பிணி நிர் நிமித்தமாகத்தானே உற்பத்தியாகிறதென்றும் நம்மில் வெறுப்புள்ள துஷ்ட தேவதைகளால் வருகிறதென்றும் பேதைகள் வெகுபெயர் நினைக்கிறார்கள்.'

ஜீவ வர்க்கங்களிடத்தில் சருவேசுவரன் பரிபூரண காருண்ணியமுள்ளவனென்பதற்கு இதுவே அத்தாட்சியாம்.

மேலே கோடிட்ட சொற்களில் ஆறுக்கு பொருள் (அர்த்தம், பிரதிபதம்) எழுதுங்கள்.

வி. பிணி=வியாதி, நோய்.
நிர்நிமித்தமாக—யாதொரு காரணமின்றி.
உற்பத்தியாகிறதென்றும்=உண்டாகிறதென்றும்.
துஷ்டதேவதைகளால்=கடூரசிந்தையான கடவுள்களால்.
பேதைகள்=அறிவிலிகள், ஞானமற்றவர்கள்.
ஜீவவர்க்கங்களிடத்தில் &c.=பிராணிகளிடத்தில் கடவுள் மிகுந்த
(அத்தாட்சியாம்=ரூபகாரமாம்.)

b. 'நம்முடைய புத்தி க்ஷயமடைவதற்குக் காரணம் அநேகம்.' மேல்வாக்கியத்தை 'அநேக காரணங்களினால்' எனவாரம்பித்து பொருள் [illegible] கெடாமல் வாக்கியத்தை மாற்றி சரியாய் முடித்து எழுதுங்கள்.

